# ஞானாமிர்தம்

விளக்கவுரை

**முனைவர் பழ. முத்தப்பன்**

ஸ்ரீ அகோரசிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை

CSS

# ஞானாமிர்தம்

மூலமும் விளக்கவுரையும்

விளக்கவுரை
முனைவர் பழ. முத்தப்பன்
முதல்வர்
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி
மேலைச்சிவபுரி

ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்
சென்னை - 78

## நூல் விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஞானாமிர்தம்<br>மூலமும் விளக்கவுரையும் |
| உரையாசிரியர் | : | முனைவர் பழ. முத்தப்பன் |
| பொருள் | : | தத்துவ நூல் உரை |
| பதிப்பு | : | முதற்பதிப்பு, 4.10 2002 |
| நூலின் அளவு | : | 21 X 14 செ. மீ. |
| எழுத்து | : | 12 புள்ளிகள் |
| பக்கம் | : | 192 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. **55** |
| அச்சிட்டோர் | : | முத்து அச்சகம்<br>சின்னக்கடை வீதி, பொன்னமராவதி |
| முகப்பு அட்டை | : | ஸ்ரீ விநாயகா ஸ்கிரீன்ஸ்<br>பார்த்தசாரதி தெரு,<br>எஸ். எம். காலனி,<br>மதுரை - 10 |
| வெளியீடு | : | க. கார்த்திகேயசிவம்<br>ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்<br>எண். 17, மா. பொ. சி. தெரு,<br>எம். ஜி. ஆர் நகர்,<br>சென்னை - 78<br>தொலைபேசி : 044 - 4744229 |
| நூல் கிடைக்குமிடம் | : | 1. மீனாட்சி நூலகம்,<br>அரிமாநகர், பொன்னமராவதி.<br>2. சிவநெறிக் கழகம், பிள்ளையார்பட்டி |

# பதிப்புரை

ஓம்
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பூக்கை கொண்டு அறன் பொன்அடி போற்றிலார்
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகி கழிவரே.

ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்:

உலக உயிர்கள் எல்லாவற்றிற்கும் அம்மையும் அப்பனுமாகிய பெரும் பெயர் கடவுள் சிவபெருமானின் துணைகொண்டு 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட் என்ற அமைப்பை நிறுவினோம். அதன் மூலமாக சைவ சமய நூல்களை மறுபதிப்புச் செய்யவும், ஓலைச் சுவடிகளை நூல் வடிவமாக்கவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். அதன் அங்கமாக இன்று கிடைப்பதற்கு மிகவும் அரிதாகி விட்டதும் சைவ சித்தாந்த உண்மைகளை எடுத்துச் சொல்வதுமாகிய ஞானாமிர்தம் என்னும் இந்நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவ்வாறு ஒரு அமைப்பைத் தொடங்க இருந்த எண்ணத்தை எனது குருநாதர்கள் திருப்பரங்குன்றம் சிவாகம சிரோமணி சிவஸ்ரீ K. ராஜாபட்டர் அவர்களிடமும் பிள்ளையார்பட்டி சிவநெறிச்செம்மல் Dr. K. பிச்சை சிவாச்சாரியார் அவர்களிடமும் சென்னை சமஸ்கிருதக் கல்லூரி பேராசிரியர் வியாகரண சிரோமணி சிவஸ்ரீ S. அருண சுந்தர சிவாச்சாரியார் அவர்களிடமும் தெரிவித்தபோது எங்கள் பணி சிறக்க பூரண ஆசிகளையும் நல் ஆதரவையும் மனமுவந்து அளித்தார்கள். அவர்களின் ஆதரவு இல்லையேல் இச்செயல் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட செயல்போல் ஆகி இருக்கும். எங்கள் அமைப்பின் முதல் நூலாக இந்த ஞானாமிர்தம் வெளிவரும் தருணத்தில் அம்மும்மூர்த்திகளின் திருவடிகளையும் வணங்கி மகிழ்கிறேன்.

ஞானாமிர்தம்:

சைவ சித்தாந்த உண்மைகளை உணர்த்தும் அனைத்து நூல்களுக்கும் முதல் நூல்கள் சிவபெருமானால் அருளப்பெற்ற வேதம் சிவாகமம் என்பன ஆகும். அவ்வேத சிவாகமங்களின் ஞானபாத கருத்துக்களை இறைவன் தன் அருள் சக்தியால் சத்நிதிபாதம் என்னும் திருவருள் பதிந்த ஆன்மாக்களுக்கு உணர்த்தியவாறே உணர்ந்து அவற்றைக் கடைத்தேற முயலும் ஆன்மாக்களுக்காக அருளிய நூல்களே சைவ சமய சாத்திர நூல்கள் ஆகும்.

சைவசித்தாந்த சாத்திர நூல்களுள் காலத்தால் மிகவும் முற்பட்ட நூல் ஞானாமிர்தம் ஆகும். இந்நூலாசிரியர் வாகீச முனிவர் அம்பாசமுத்திரம் என்னும் ஊரில் கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் ஆவார். அறியாமையாகிய கடலை ஆகமங்களை மத்தாகவும் அறிவைக் கைகளாகவும் உபதேசங்களைக் கயிறுகளாகவும் கொண்டு கடைந்தபோது வெளிப்பட்டதே இந்த ஞானாமிர்தம் என்று பெயர்க் காரணத்தை விளக்குகிறார் அம்முனிவர்.

நூல் தந்திடும் கருத்துக்கள்:

ஆசிரியர் இந்நூலை சம்மிய ஞானம், சம்மிய தரிசனம், பாசபந்தம், தேகாந்தரம், பாச அநாதித்துவம், பாசச்சேதம், பதிநிச்சயம் பாச மோசம் என்னும் எட்டுப் பகுதிகளாகப் பிரித்து முறையே அனாதியே ஆணவ மலத்தால் கட்டுண்ட ஆன்மாக்களுக்கு இறைவன் அருளால் அறிவுடைப் பொருள், அறிவிலிப் பொருள் பற்றிய தெளிவு உண்டாகுதல், உலக வாழ்க்கையில் உயிரோடு கூடிய உடல் அடையும் ஐவகை நிலை, பாசங்களின் இயல்பு, அவற்றின் வகை, பிறப்பு இறப்புகள், பல்வேறு வகையான பிறவிகள், மும்மலங்கள் அவற்றின் செயல்பாடுகள், பாசத்தைக் களையும் வழி, எங்கும் நிறைந்த இறைவன், உயிர் பாசங்களில் இருந்து விடுதலை அடைந்து இறைவனிடத்தில் இரண்டறக்கலத்தல் ஆகியனவற்றைச் சிறப்புடன் விளக்குகிறார்.

சுருங்கக்கூறின் கசப்பான ஒரு மருந்தை குழந்தைகளுக்குத் தரவேண்டி அவற்றில் சிறிது தேனை குழைத்துத் தருவது யாவரும் கண்ட உண்மை. அதுபோல் பிறவிப் பிணிக்கு

மருந்தாகிய சிவஞானத்தை விரும்பாது மாயா காரியங்களாகிய உலக இன்பங்களில் உழலும் நமக்கு வாகீச முனிவர் அமிர்தம் என்னும் தேனுடன் குழைத்துத் தருகிறார். அப்பெறுதற்கரிய அமுதத்தை நாமும் பருகி நேரறியாத பெருஞ்சுடர் ஜோதியாம் சிவபெருமானின் பேரருளைப் பெற்று உய்வதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறு ஆகும்.

தற்போதைய சமயநிலை:

மனதாலும், வாக்காலும், உடலாலும், மறைகளாலும், மற்ற அளவைகளாலும், கூறொணாதாகி நிற்கும் இறைவனை அவன் அருளாலே அறிந்து தெளியலாம் என்று எல்லாச் சமய நூல்களும் விளக்கிய பின்பும், இன்று மொழியின் பெயரால் தங்களது சுயநலத்திற்காக சமயத்தையும், சமயா தீத, பழம்பொருளையும் வேறுபடுத்திக் கூறுவது மிகவும் வருத்தத்திற்குரிய செயலாகும். அவற்றை நமது சைவ சமயத்தினர்கள் உணர்ந்து கொள்ள இறைவனே அருள் செய்ய வேண்டும். சமயம் என்பது மனிதனை நல்வழிப்படுத்த எழுந்ததேயன்றி இனச்சண்டை புரியவோ, மொழிச்சண்டை புரியவோ இல்லை. நமது ஒரே குறிக்கோள் இறைவனை அடைவதே என்பதை நாம் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும்.

உரையாசிரியர்:

இந்நூலுக்கு உரை எழுத வேண்டும் என்று தெரிவித்தவுடன் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டு நன்றாக செய்து தருகிறேன் என்று தெரிவித்தார் எங்கள் உயர்திரு டாக்டர் பழ. முத்தப்பன் ஐயா அவர்கள். அவரைப்பற்றிச் சொல்வதற்கு எனக்குத் தகுதியும் வயதும் இல்லை. என்றாலும் என் மனநிறைவின் பொருட்டு கூறுகின்றேன். ஐயா அவர்கள் சைவ சித்தாந்த உண்மைகளை நன்றாக உணர்ந்தவர். மற்றவர்களுக்கு உணர்த்தும் வகையில் மிகப்புலமை வாய்ந்தவர். சைவ சித்தாந்த சாத்திரக்கட்டுரைகள், நூல்கள் பலவற்றை இயற்றியவர். சிவஞானசித்தியார் நூலை இறைத்துணையோடு ஆராய்ச்சி செய்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றவர். குன்றக்குடி ஆதீன கர்த்தர் அவர்களால் தமிழாகரர் என்னும் சிறப்புப் பட்டமும் பெற்றவர். அவர் இன்னும் பலப்பல நூல்களை எழுதி சமயப் பணிகளை மேற்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் துணைய்யை வேண்டுகிறேன்.

இந்நூல் எளிய உரையுடன் வெளிவரப் பெரிதும் உதவிய மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க்கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் ஐயா அவர்கட்கும், மிகக் குறுகிய காலத்தில் சிறப்புடன் அச்சிட்டு உதவிய பொன்னமராவதி முத்து அச்சகத்தாருக்கும், ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இந்நூல் வெளிவர பொருளுதவி செய்த சிங்கப்பூர் அருள்மிகு ஸ்ரீ வீரமா காளியம்மன் ஆலயத் தலைவர் திரு N.R. கிருஷ்ணன் அவர்களின் குமாரர், திரு R. செல்வக்குமார் அவர்களின் குடும்பத்தார் அனைவருக்கும்** சகல நலன்களும் உண்டாக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

ஸர்வம் சிவமயம் ஜகத்
க. கார்த்திகேய சிவம்
ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்
எண் 17, மா. பொ. சி. தெரு ,
எம். ஜி. ஆர். நகர்,
சென்னை - 78
தொலைபேசி - 044 - 4744229.

உ

ஸ்ரீ கற்பக விநாயகர் துணை

*K. PITCHAI KURUKAL*
*CHIEF PRIEST*
*SRI KARPAGA VINAYAGAR TEMPLE*
*PILLAYARPATTI 630207, SIVAGANGAI DISTRICT*
*SOUTH INDIA*

# அணிந்துரை

ஞானமே வடிவாகிய இறைவன் ஆன்மாக்கள் இடத்து கொண்ட பெருங்கருணையால் தனு, கரணம், புவனம் அளித்து அவற்றில் உயிர்களைத் தொடர்புபடுத்தி உரிய காலம் வரை வாழ வைத்து ஒடுக்கி போகபோக்கியங்களில் அழுத்தி மறைத்து பின்னர் முக்திப் பேற்றினை நல்கும் ஐந்தொழில்களைச் செய்கிறான்.

உயிர்கள் வாழ்வதற்குப் பொருட்களைப் படைத்துத் தந்த சிவபெருமான் எப்படி வாழவேண்டும் என்பதை அறிந்து கொள்வதற்காக வேதசிவாகமங்களைத் தக்க ஞானாசிரியர்களுக்கு உணர்த்தி அவர்கள் வாயிலாக நமக்கு கிடைக்கும்படிச் செய்தருளினான்.

அவ்வாறு ஞானாசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சிவாகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நாற்பாதங்களை உடையது. தன்னைப் பற்றியும், தன் தலைவனாகிய இறைவனைப் பற்றியும், தன்னை மறைத்துள்ள மலங்களைப் பற்றியும், உயிர் தெளிவதற்கு உரியதே ஞானபாதம், இவ்வரிய ஞானபாதப் பொருளைத் திருமுறைகளாகிய தோத்திர நூல்களும் சிவஞான போதம் முதலிய சாத்திர நூல்களும் தீந்தமிழில் எடுத்தியம்புகின்றன.

கி. பி. 12ம் நூற்றாண்டில் அம்பா சமுத்திரத்தில் வாழ்ந்த வாகீச முனிவரால் இயற்றப்பட்ட " ஞானாமிர்தம் " என்னும் நூல் சாத்திர நூல்களில் முற்பட்டதாகிறது. ஞானபாதப் பொருளை இந்நூல் மிகுந்த பொருட்செறிவுடன் முழுமையாக விளக்குகிறது. ஞானாமிர்தத்தின் பெயர்க்காரணம் ஆசிரியர் விளக்கும் பாங்கு சிறப்பு உடையதாக உள்ளது.

கடவுள் வாழ்த்து, அவையடக்கம் முதலான நூலுக்கேஉரிய முறையில் தொடங்குகின்ற இந்த நூல் பதி, பசு, பாச இயல்புகளைத் தனித்தனியே தெளிவாக விளக்குகிறது. சம்மிய ஞானம், சம்மிய தரிசனம் என்று நூல் எட்டாகப் பகுக்கப்பட்டுள்ளது.

சம்மிய ஞானம் என்ற பகுதியில் மூவகை அவத்தை பற்றியும் அவற்றின் இயல்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

ஆன்மாக்களிடத்து மல சம்பந்தத்தை விளக்கும் போது செம்பிற்குக் களிம்பும், படிகத்திற்குச் சுத்தமும்போல ஆன்மாக்களுக்கு மலமும் சிவத்திற்கு நின்மலமும் அனாதியாகும் என எளிமையாக விளக்குகிறது.

"கலை முதலாகிய நிலைமலி தத்துவத்து" எனத் தொடங்கும் இடத்து, முக்தி பெறுவதற்கே ஆன்மா கலை முதலிய தத்துவங்களில் பொருந்துகின்றது என்பதைத் திறம்படக் கூறுகின்றது இந்நூல்.

அந்தக் கரணம் முதலான கருவிகளை அமைச்சர் முதலாகிய உறுப்பினர்களாகக் கொண்டு ஆன்மா அரசனாக நின்று இயக்குகிறது என்று விளக்குவது இனிமையான பகுதியாகும், மாதவச் சிவஞான முனிவர் தனது சிவஞானமாபாடிய உரையில் இப்பகுதி பாடல் முழுவதையும் எழுதிச் சிறப்பிக்கிறார்.

மேலும் மனம், வாக்கு, காயம் போன்றவைகளினால் நிகழ்த்தும் நல்வினை, தீவனைப் பயன்களையும் ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் போன்றவைகளும் மிக விரிவாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

இந்நூலுக்குத் திரு துரைசாமிப்பிள்ளை போன்றவர்கள் உரை எழுதி உள்ளனர். தற்காலத்திற்கு ஏற்ற மொழி நடையோடு திரு. பழ. முத்தப்பன் ஐயா அவர்கள் செய்துள்ள உரை போற்றுதற்குரியதாகும். இவர் ஞானாமிர்தத்திற்கு புத்துயிர் தருவோராகிறார். தெளிவுரை வரைந்து நாம் புரிந்துகொள்ள விளக்க உரையும் தந்துள்ளார். மேலும் வடமொழி, தமிழ்ப்பதங்களில் கடினமானவைகளுக்கு பொருள் தந்திருப்பது நூலுக்கு அழகு சேர்க்கிறது. இவற்றை எல்லாம் விட நூலாசிரியராகிய வாகீச முனிவரின் வழிநின்று அடிபிறழாமல் நூலுக்குரிய பொருளைத் தந்திருப்பது ப்ராரட்டுதற்குரியதாகும்.

விளக்க உரையில் சிவஞான போதம், சித்தியார் போன்றவைகளை ஒப்பிட்டு விளக்கியமை இவரது சைவ சித்தாந்த புலமையை எளிதில் உணர்த்தும்.

இந்நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருக்கும் அகோர சிவாச்சார்ய டிரஸ்டின் செயலாளர் சிரஞ்சீவி கார்த்திக் சிவத்தின் முயற்சி சைவத்தின்பால் இளைஞர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைப் பிரதிபலிப்பதாகும்.

இந்த ஞானாமிர்தத்தைப் பருகும் அனைவரும் சிவனருளைப் பெற்றிடவும், சிவனடியே சிந்திக்கும் உரையாசிரியர், முனைவர் திரு. பழ. முத்தப்பன் அவர்களும், சிரஞ்சீவி கார்த்திக் சிவமும் எல்லா நலன்களும் பெற்று வாழ்வாங்கு வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகப் பெருமான் திருவடி இணை மலர்களைச் சிந்திக்கிறோம்.

அன்புடன்,

# முன்னுரை

திருமுறைகளே சைவசித்தாந்தம் என்ற அளவிற்குச் சைவத் திருமுறைகளும், சைவசித்தாந்தச் சாத்திர நூல்களும் இணைந்து காணப்பெறுவன ஆகும். தோத்திரப் பனுவல்களாகத் திருமுறைகள் இலங்கிட, தத்துவப் பனுவல்களாகச் சாத்திரங்கள் விளங்குகின்றன. திருமுறைகள் பனிரெண்டாகத் தொகுக்கப்பெற்றது போல், சாத்திர நூல்கள் பதினான்காக வரையறுத்துத் தொகுக்கப் பெற்றன. 14 சாத்திர நூல்களையும் கி.பி. 1866ல் மதுரைநாயகம் பிள்ளை என்பார் பதித்த சைவசித்தாந்தச் சாத்திரப் பதிப்பில் இடம் பெற்ற "உந்தி களிறு" என்று தொடங்கும் வெண்பா குறிப்பிடுகிறது. அப்பதிப்பிலும் பின்னர் தொகுக்கப்பெற்ற அனைத்துச் சாத்திரத் தொகுப்புகளிலும் இடம்பெறாத சாத்திரநூல்களில் காலத்தால் முந்திய ஞானாமிர்தம் சைவத் தத்துவங்களைச் சங்க இலக்கியப் பனுவல் முறையில் தருவதாகும். சாத்திரத் தொகுப்பாளர்கள் மதுரைநாயகம் பிள்ளை முதல் அத்துணை பேரும் ஞானாமிர்தத்தை விடுத்துச் சாத்திர நூல்களைத் தொகுத்தது ஏன் என்று புரிந்தில. சாத்திர நூல்களுக்கு உரையெழுதிய சிவஞான முனிவர் உள்ளிட்ட அத்துணை பேரும் ஞானாமிர்தம் பாடற் பகுதிகளை எடுத்தாண்டுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இன்றைக்கும் சாத்திரக் கட்டுரையாளர்களோ, சொற்பொழிவாளர்களோ ஞானாமிர்தத்தை அதிகம் கையாளுவது மில்லை. இது பெரும் தவக்குறைவே ஆகும்.

சிவஞான முனிவரின் உரைச்சிறப்பை உணரத் தலைப்பட்ட பொழுதும், அருணந்தி சிவாசாரியாரின் நூல்களை முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்யத் தலைப்பட்ட பொழுதும், ஞானாமிர்த நூலை அறிந்துகொள்ள மனத்தகத்தே ஆவல் ஏற்பட்டது. அந்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பாக, சைவப் பெருந்தகை ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்களின் குறிப்புரையோடு 1954ல் முதற்பதிப்பாக வெளிவந்த ஞானாமிர்தப் பதிப்பு மனக்கிடக்கையை நிறைவு செய்தது. கடந்த ஆண்டு அக்டோபரில் (2001) சிங்கப்பூர் சென்றிருந்தபோது அருள்மிகு வீரமாகாளியம்மன் திருக்கோவில் அர்ச்சகர் திரு. க. கர்த்திகேய சிவம் அவர்களிடம் ஞானாமிர்தச் செய்யுட்களைப்

பற்றி உரையாடுகிற வாய்ப்பு ஏற்பட்டது. அந்த வாய்ப்பே இப்பதிப்பு வெளிவருவதற்கு முதற்காரணம் ஆகும். ஔவை. சு.துரைசாமிப்பிள்ளை அவர்களின் பதிப்பையே அடித்தளமாகக் கொண்டு இப்பதிப்பில் செய்யுட்களுக்குப் பொருளும், விளக்கவுரையும் எளிமைப்படுத்தித் தரப் பெற்றுள்ளது.

நூலாசிரியர் :

75 அகவற் பாடல்களையும், பழைய உரையாசிரியரின் 2 கடவுள் வாழ்த்து வெண்பாக்களையும் தன்னகத்துக் கொண்டுள்ள ஞானாமிர்தம் ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் ஆய்வின்படி 12ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகும். இந்நூலுக்கு வரலாறு அறிய முடியாத ஏன் பெயர் கூடத் தெரியாத பழைய உரை ஒன்று நிலவி வர, அதனையே ஔவை துரைசாமிப்பிள்ளை அவர்கள் தம் பதிப்பில் வெளியிட்டுள்ளார்கள். அப்பழைய உரைகாரரின் ஏட்டுச் சுவட்டின்படி இந்நூலை எழுதிய பெருமான் வாகீச முனிவர் என்பது பெறப்படுகிறது. வாகீச முனிவரைப் பற்றிய வரலாறு முழுமையும் அறியப்படவில்லை, ஒன்றிரண்டு செய்திகள் நூலின் அகச்சான்றுகளால் அறியப் படுகின்றன. வாகீச முனிவரின் ஊர்ப் பெயரோ அல்லது அவருடைய பெற்றோர்களின் பெயரோ அறியமுடியவில்லை. ஆனால் இவரின் ஞானாசிரியர் அருண்மொழித்தேவன் என்ற இயற்பெயர்கொண்ட கோடலம்பாகை பரமானந்த முனிவர் ஆவார் என்பது நூலின் அகச்சான்றால் (பாடல்4) தெரியவருகிறது. இவ்வாசிரியர் சென்னையைச் சார்ந்த பழைய கோடலம்பாகையாகிய இன்றைய கோடம்பாக்கத்தில் வாழ்ந்தவர் ஆதலால் அவர் பால் உபதேசம் பெற்ற வாகீச முனிவர் சதுரரான பண்டிதர் என்பார். வாழ்ந்த திருவெற்றியூர் கோளகி மடத்தில் தங்கியிருந்து தம் மாணவர்களுக்குப் பாடம் கூறினார் என்பது திருவொற்றியூர் கல்வெட்டால் அறியப்படுகிறது. மேலும் திருநெல்வேலி மாவட்ட திருவாலீச்சுரத்தில் இருந்த கோளகி மடத்திற்குத் தலைவராகப் பணியேற்று அங்குதான் ஞானாமிர்தத்தை பாடியருளினார் என்பதும் தெரியவருகிறது. திருவொற்றியூரில் வாகீச பண்டிதராக விளங்கிய நூலாசிரியர் திருவாலீச்சுரத்தில் வாகீச முனிவர் என அழைக்கப்பெற்று ஞானாமிர்த ஆசிரியர் என்று சிறப்பிக்கப் பெற்று அவர் வழிவழி சந்தானமும் (பரம்பரை)

தோன்றுகின்ற சிறப்பையும் பெற்றார் என்பதை அவ்வூர் கல்வெட்டு ஒன்றால் அறிய முடிகின்றது. இத்தகைய செய்திகளைத் தவிர நூலாசிரியரைப் பற்றிய வேறு செய்திகள் அறிய முடிந்தில. இது தமிழுக்கே உரிய வரலாற்று குறைச்சிறப்பாம்.

நூற்சிறப்பு :

கிடைக்கப்பெற்றிருக்கின்ற 75 பாடல்களும் சங்க இலக்கிய அமைப்பிலேயே அகவற்பாக்களாக அமைந்துள்ளன. பாடலில் அமைந்த சொற்கள் சங்க இலக்கியச் சொற்கள் போலவே பொருள் பொதிந்த சொற்களாக விளங்குகின்றன. பாடல்கள் முன் பின் தொடர்ச்சியாக அமைந்தில என்றாலும் சைவத் தத்துவங்களின் மூலமான சிவாகமங்களின் ஞானம், யோகம், சரியை, கிரியை என்ற நான்கு வகையான சிவஞானச் செய்திகளை வெளிப்படுத்துகின்ற பாடல்களாகவே காணப்பெறுகின்றன. இந்நான்கு வகையில் வாகீச முனிவர் தன்னுடைய நூலைப் படைத்திருந்தும் இன்று கிடைத்துள்ள 75 பாடல்களும் ஞானபாதப் பகுதியை மட்டுமே கூறுவதாக அமைந்துள்ளன. எஞ்சிய பகுதிகளை ஆசிரியர் படைத்திருந்தும் அவை கிடைக்கப் பெறவில்லை என்பது உரையாசிரியர்களின் குறிப்பால் தெரியவருகிறது. பழைய உரையாசிரியர் 75 பாடல்களை 1 முதல் 7 வரை பாயிரம் என்றும் 8 முதல் 14 வரை சம்மியஞானம் என்றும் 15 முதல் 17 வரை சம்மிய தரிசனம் என்றும் 18 முதல் 26 வரை பாசபந்தம் என்றும் 27 முதல் 28 வரை தேகாந்தரம் என்றும், 29 முதல் 30 வரை பாசனாதித்துவம் என்றும் 31 முதல் 52 வரை பாசச்சேதவியல் என்றும் 53 முதல் 72 வரை பதிநிச்சயம் என்றும் 73 – 75 வரை பாசமோசனம் என்றும் 9 பெருந்தலைப்பாகப் பிரித்து ஒவ்வொரு பாடலுக்கும் தலைப்பிட்டுப் பொருள் எழுதியுள்ளார். இத்தலைப்புக்கள் அனைத்தும் உரையாசிரியராலேயே இடப் பெற்றிருக்கவேண்டும் என்பது ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் முடிவாகும்.

பாடல்கள் அகவற்பாவால் அமைந்தமையால் பாடல்வரிகளின் எண்ணிக்கை ஒரே சீராக அமையவில்லை. பாடல்கள் 4 அடிகள் ( பாடல். 49) முதலாக 55 அடிகள் வரை (பாடல். 16) அமைந்துள்ளன. பாடல்களில் பிற்காலத் தத்துவ ஆசிரியர்கள்

மேற்கொள்ளக் கூடிய பல உவமைகள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கனவாகும். மட்குடம் உவமை, இரும்பு - காந்தம் உவமை, வேட்டுவப் புழு உவமை, சூரியன் - தாமரை உவமை, சூரிய காந்தக்கல் உவமை, செம்பு - களிம்பு உவமை, இரவு - பகல் உவமை, செம்பு பொன்னாகும் உவமை, உயிர் - உடம்பு உவமை, ஊமன் கனவு உவமை, நூல் புடவை உவமை, புகை - தீ உவமை, பாம்பு - நஞ்சு உவமை ஆகியன உவமைகளில் சிலவாகும்.

பாடல்களில்பல மாணவன் வினாக்களை எழுப்ப ஆசிரியன் விடைகூறும் அமைப்பில் காணப்பெறுகின்றன. என்றாலும் பாடலை உட்கருத்தோடு பார்க்கும்போதுதான் வினாவும் விடையும் அறியமுடிகிறது. உரைகளின் துணையில்லாமல் அப்பகுதிகளை அறிவது கடினமாகும். இத்தகைய சிறப்புக்களைப் பெற்று விளங்குகின்ற ஞானாமிர்தத்தின் பெயர்க்காரணத்தையும் நூல் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். தேவர்களும் அரக்கர்களும் திருப்பாற்கடலைக் கடையப் பிறந்த அமிழ்தத்தினைப் போல இறைவன் அருளிய ஆகமத்தை மத்தாகவும், ஞான ஆசிரியனின் அருளுரையை நாணாகவும், அறிவைக் கைகளாகவும் கொண்டு அஞ்ஞானமாகிய கடலைக் கடைவதால் இந்த ஞானாமிர்தம் தோன்றிற்று என்ற நூலின் பெயர்க்காரணத்தைக் (பாடல். 6) கூறுகிறார்.

இந்த ஞானாமிர்த தமிழ் ஆகமத்தைஎளிய விளக்க உரையுடன் பதிப்பிக்க வாய்ப்பளித்த சென்னை ஸ்ரீஅகோர சிவாசார்ய டிரஸ்ட் குழுவினர்க்கும், அதிலும் குறிப்பாக அருமை நண்பர் சிங்கப்பூர் க. கார்த்திகேயசிவம் அவர்கட்கும் என்றும் நன்றிக் கடப்பாடு உடையேன். நூலிற்கு அணிந்துரை வழங்கியதோடு நூல் வெளியீட்டை என் முனைவர் பட்ட ஆய்வுப் பொருளுக்குரிய சித்தாந்த ஞானாசிரியர் அருணந்தி சிவாசாரியாரின் புரட்டாசி பூர நாளில் (4.10.2002) அருள்தரும் பதியாம் பிள்ளையார்பட்டியில் சிறப்புற நடத்தித் தரும் வணக்கத்திற்குரிய திரு. பிச்சை சிவாசாரியார் அவர்கட்கு மனம், மொழிகளால் நன்றியைக் காணிக்கை யாக்குகிறேன்.

நூலிற்கு அழகிய மதிப்புரையைத் தந்துள்ளவர் மதுரை பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் சு. வேங்கடராமன்

அவர்கள். சிறந்த சமயப் புலமையும் நுண்மாண் நுழைபுலமும், ஆழ்ந்த ஆய்வுநோக்கும் கொண்ட அவரின் மதிப்புரை நூலிற்கு அணி சேர்ப்பதாகும். குறுகிய காலத்தில் மதிப்புரை வழங்கி ஆதரவு தந்த பேராசிரியருக்கு நன்றி உரியதாகும்.

பதிப்பை உருவாக்கும் பொழுது வழக்கம்போல் என் திருவளர்செல்வன் முனைவர் மு. பழனியப்பனும், என் வாழ்க்கைத் துணைவி அழகம்மையும் துணைபுரிந்தனர். அன்னவர்களை முறையே மகனாக, துணைவியாகத் தந்த இறையருளுக்கு நன்றி கூறுவதோடு அவ்வன்பு உள்ளங்களுக்கு என்றும் நன்றியுரியதாகும்.

குறுகிய காலத்தில் பதிப்பை அழகுற அச்சிட்டுத் தந்திட்ட, பொன்னமராவதி முத்து அச்சகத்தார்க்கும், அப்பணியில் மிகவும் ஈடுபாட்டோடு விரைந்து செயல்புரிந்த அன்புத்தம்பி கா.முத்துக்கருப்பன் அவர்கட்கும் நன்றி உரியதாகும்.

இப்பதிப்பு வெளிவர எனக்குச் சித்தாந்த அறிவு புகட்டிய ஆசான்கள் மாம்பாக்கம் குருகுலம் அழகரடிகள், முரு. பழ. இரத்தினம் செட்டியார் ஆகியோரின் ஞானத்திருவருளே காரணம். அத்தகைய ஞானாசிரியர்களின் நினைவைப் போற்றி அவர்களின் திருத்தாள்களை மனதில் நினைந்து வழுத்தி - எல்லாம் வல்ல இறையருளையும் போற்றி நிறைவு கொள்வேனாக.

மேலைச்சிவபுரி, பழ. முத்தப்பன்.
4.10.2002

திருச்சிற்றம்பலம்

# மதிப்புரை

முனைவர் சு. வேங்கடராமன்
பேராசிரியர் - துறைத்தலைவர்
இக்கால இலக்கியத் துறை
தமிழியல் புலம்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்
மதுரை - 625021

சைவ சித்தாந்த நூல்களுள் மூல நூலான சிவஞானபோதத்திற்கு முற்பட்ட நூல்களான திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகிய இரண்டிற்கும் முற்பட்ட நூல் ஞானாமிர்தம் ஆகும். இதனைப் பாடி அருளியவர் வாகீச முனிவர். இவருடைய காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டாகும். ஞானாமிர்தத்தின் யாப்பமைதியும், சொல்லமைப்பும் அதன் காலப் பழமையைக் காட்ட வல்லன. மெய்கண்டாருக்குப் பலகாலத்திற்கு முன்னமே சைவ சிந்தாந்தக் கருத்துக்கள் தமிழ் மண்ணில் நன்கு பரவியிருந்தன என்பதற்கு ஞானாமிர்தம் நல்ல சான்று. சைவ சித்தாந்தக் கருத்துக்கள், மாறுபட்ட கொள்கையினரை மறுத்தல் ஆகியவற்றை இந்நூலில் காணலாம். சிவஞான போதத்தின் உரையில், சிவஞான முனிவர் ஞானாமிர்தத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார். ஞானாமிர்தத்தைத் தெளிய ஓதினால் சிவஞான போதத்தின் தெரியாத மறை நிலங்கள் நன்கு தெளியும் என்பது சிவஞானமாபாடிய நூலார் கருத்தாகும். அறியாமைக்கடலை, ஆகமத்தை மத்தாகவும், அறிவைக் கைகளாகவும், உபதேசத்தைக் கயிறாகவும் கொண்டு கடைந்தபோது ஞானமாகிய அமிர்தம் (ஞானாமிர்தம்) வெளிப்பட்டது என்கிறார் வாகீச முனிவர்.

ஞானாமிர்தம் நூலிற்கு உரைவேந்தர் ஔவை. சு. துரைச் சாமிப்பிள்ளை உள்ளிட்ட பெருமக்கள் பலர் உரை எழுதியுள்ளனர். ஆயினும் அவ்உரை எதுவும் இப்போது கிடைப்பது இல்லை. உரை இருந்தாலே விளங்கிக் கொள்ள இடர்ப்படும் காலமிது. சமய இலக்கியங்கள், அவற்றின் உரைகள், சித்தாந்த நூல்கள் என்பவற்றைப்

படிப்பவரும், கருத்துப் பரிமாறிக் கொள்வாரும் அருகிவரும் நிலை இன்றைய கல்வியுலகச் சூழலில் உள்ளது. இந்தச் சூழலில் முனைவர் பழ. முத்தப்பன், ஞானாமிர்தத்திற்கு உரை எழுதி வெளியிடுவது பாராட்டிற்குரிய அரிய செயலாகும். திருமுறைகளையும், சைவ சித்தாந்த நூல்களையும் தமக்குச் சோறாகவும் நீராகவும் வெற்றிலையுமாகக் கொண்டவர் பழ. முத்தப்பன் அவர்கள். திருமுறைகளில் அகக் கோட்பாடு, அருணந்தி சிவாச்சாரியார் நூல்கள் ஆய்வு என்று தோத்திர, சாத்திர நூல்களையே வாசித்தும் உள்வாங்கியும், ஆய்ந்தும் வருபவர். அத்துடன் நானிலமெங்கும் சைவத்தை எளிமையாக, கேட்டார் பிணிக்கும் முறையில் செலச் சொல்லும் நாவீறுடையவர். அவர் ஞானாமிர்தத்திற்கு மிக எளிய முறையில், பாமரரும் மனங்கொள்ளுமாறு உரை வகுத்துத் தந்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் சுருக்கக்குறிப்பு ( முன்பாட்டுடன் இயைபு காட்டுவது ), பொருள், விளக்கவுரை என்ற முறையில் உரையை அமைத்துள்ளார். விளக்க உரைப்பகுதியில் அருஞ்சொற்பொருள் தருகிறார். உரை மிக எளிமையாக அதே போதில் செறிவாக உள்ளது. “ இறைவனது அருளால் அனுபவிக்கப் பெறுதலான் கன்ம, மல போகங்கள், குலவியபோகம் எனப்பட்டது” என்று வரும்பகுதி இதனை விளக்கும். இத்தனை காலமாக உரை ஏதும் கிடைக்காத சூழலில் இந்த நூல் வெளிவருவது வரவேற்கத்தக்கது. நூலிற்குப் புறத்தே, தனியாகத் தனியன் போல அமைந்துள்ள காப்புப் பாடல்கள், வாகீசரால் பாடப்பட்டவை அன்று என ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் விளக்கும் கூர்த்த ஆய்வுத் திறன் போற்றற்குரியது.

இறையருளால் ஆசிரியர் வையம் மன்னியிருந்து, இதுபோன்ற நல்ல நூற்பணிகளைச் செய்து நாளும் தமிழ் பரப்பவேண்டும் என வாழ்த்துகிறேன். ஞானாமிர்தம் போன்ற சாத்திர நூற்களுக்கு என்றும் வரவேற்பு இருக்கும் என்பதால் தமிழகம் இதனை ஏற்றுப் போற்றும் என்பதில் ஐயமில்லை.

மதுரை
28.09.2002

சு. வேங்கடராமன்

# பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25 | 19 | ஒலி | ஒளி |
| 35 | 13 | அத்தானி | அத்தாணி |
| 44 | 32 | மூத்த | முத்த |
| 64 | 20 | அத்தானி | அத்தாணி |
| 83 | 18 | காய்ச்சு | காய்ச்ச |
| 85 | 1 | குடியும் | முடியும் |
| 92 | 26 | அறங்குகூதலே | அறங்கூறுதலே |
| 103 | 15 | குலாளர் | குலாலர் |
| 132 | 6 | அவனைத் | அவனை |
| 143 | 16 | தேக்தோடு | தேகத்தோடு |
| 148 | 23 | சிறய | சிறிய |
| 150 | 1 | பண்டமுறை | பூண்டமுலை |
| 162 | 5 | அரசன் | அரசனின் |
| 168 | 22 | புசித்தாகப் | புசித்ததாகப் |

உ

திருச்சிற்றம்பலம்

வாகீச முனிவர் அருளிய

# ஞானாமிர்தம்

## மூலமும் - உரையும்

### காப்பு

"முக்கண் இருகவுட்டு நால்வாய்த் துரகத்துச்
செக்கர்த் தடித்திடித்த செஞ்சடைத்துப் - பக்கத்துப்
பூதத் தருநடத்துப் பொற்பிற்றென் றுள்ளத்து
நாதத்து நின்ற நலம்" (பாடல்.1)

"மதிபாய் சடைமுடித்து மாசுணப் பைம்பூட்டுச்
சதிபாய் குறுந்தாட்டுத் தான - நதிபாய்
இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தென் னுள்ளம்
உருகவிட்டு நின்ற வொளி" (பாடல்.2)

இவ்விரண்டு வெண்பாக்களும் காப்புச் செய்யுட்களாக விநாயகரைத் துதித்துப் போற்றுகின்றன.

நூலின் தொடக்கத்தில் காப்பு, வெண்பா என்ற தலைப்பில் இரு வெண்பாக்கள் காணப்படுகின்றன. இவ்விரு வெண்பாக்களும் உரையாசிரியரால் பாடப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனென்றால் நூலாசிரியர் தன்னுடைய நூலை ஆசிரியப்பாவால் முழுமையும் எழுதியுள்ளார். இவ்விரு பாக்களும் வெண்பாவில் அமைந்துள்ளன. மேலும் நூலின் இரண்டாவது அகவற்பா விநாயகர் துதியாக அமைந்துள்ளது. இவ்விரு வெண்பாக்களும் விநாயகர் துதியாகப் பாடப் பெற்றுள்ளன. நூலில் இருமுறை விநாய்கர் துதி அமைவது கூறியது கூறலாகும். எனவே இவ்விரண்டு வெண்பாக்களும் உரையாசிரியரால் பாடப்பெற்றவையாக இருத்தல் வேண்டும். மேலும் காப்புச் செய்யுள் என்ற தலைப்பில் பிற இலக்கியங்களுக்கு வேறுபாடாக ஒரே தெய்வத்தை இருபாடல்களால் போற்றியிருப்பதும் சிந்தனைக்குரியது.

பொருள்:

பாடல் 1 : எனது உள்ளத்துள்ளும் நாத தத்துவத்துள்ளும் ஒப்ப நின்ற நன்மையாகிய பொருள் மூன்று கண்களைப் பெற்றுள்ளது. இரண்டு கவுள் ( கன்னங்கள் ) களைப் பெற்றுள்ளது. அகன்ற வாயினைப் பெற்றுள்ளது. பாம்பினை ஆபரணமாகக் கொண்டுள்ளது. மின்னலையும் தோற்கச் செய்யும் சடையினைக் கொண்டுள்ளது. பக்கங்களில் பூதங்களின் திருநடனத்தைக் கொண்டுள்ளது ஆகும்.

பாடல் 2 : என் உள்ளத்தை உருக்கி அதனுள் விளங்கி நிற்கும் பேரொளியானது சந்திரனைக் கொண்ட சடையை முடித்து, பாம்பாகிய ஆபரணத்தைச் சூடி, நடனமாடுகின்ற குறுகிய தாள்களைக் (திருவடி) கொண்டு இரண்டு கன்னங்களையும், மூன்று கண்களையும், அகன்ற வாயினையும் கொண்டு விளங்குவதாகும்.

சொற்பொருள் விளக்கம்:

கவுள் - கன்னம், துரகம் - பாம்பு, செக்கர் - வானம், நாதம் - நாததத்துவம் ( ஓங்கார வடிவம் ), மாசுணம் - பாம்பு, சதி - நடனம், குறுந்தாட்டு - குறுகியதாள், நாதத்து நின்ற நலம் என்பதற்கேற்ப - விநாயகர், பொருள் என்ற எழுவாயாகப் பயன்படுத்தப் பெற்று, அஃறிணை முடிவு கொண்டது. இருபாடல்களும் நடனமாடும் நிலையைக் கூறுவதால் இக்காப்பு நர்த்தன விநாயகர் காப்பு எனப்படும்.

பாயிரம் - கடவுள் வாழ்த்து

பாடல் - 1

“ வெண்திரைக் கருங்கடல் ஏழும் விண்தொட
ஓங்கிய சென்னிச் சிமையமும் வீங்கிய
ஏழிரும் பொழிலும் எண்ணீங்கு உயிரும்
அளவில் அண்டமும் முளையின்றி விளைத்துஅம்
மலரோன் தாதையை வகுத்தும் தளரா
முன்னோ ரில்லா முன்னோன் பின்னும்
இளமையும் அ்.தா இயைந்தோன் வளம்மலி
தோற்றம் ஈறுஒன்று இல்லோன் கூற்றுக்
கிளியே முற்ற ஒளிமாண் திருநகை
அருளின் அம்குழை பரப்பி இருள்தீர்
கருணை மாநனை உயிர்ஞிமிறு அருந்த
மலர்ந்த மாதர் மரகத வல்லி

அந்தி வானத்து அணிநிறம் கவர்ந்து
சிந்தை செல்லாச் செழுங்கிரி ஒருபால்
வளம்கொளப் படர்ந்த வண்ணம் போல
அறவோள் அமர்ந்த பாகன் துறவோர்க்கு
எல்லையாகிய தொல்லோன் தனாஅது
பாமாண் சேவடி பரவ
நாமாண் புளதாம் நலங்கொளச் சிறந்தே"

இது முழுமுதற் கடவுளாம் சிவபரம்பொருளை நினைந்து போற்றியது. கடவுள் வாழ்த்து இருவகைத்து. ஒன்று வழிபடு கடவுளைப் போற்றுவது. மற்றொன்று நூலில் உள்ள பாடுபொருளுக்கு ஏற்பப் போற்றுவது. இக்கடவுள் வாழ்த்து சிவாகமக் கருத்துக்களைப் பாடுவதற்கு ஏற்பப் பரம்பொருளைப் போற்றுகின்றது.

பொருள்:

வெண்மையான திரைகளை உடைய பெரிய கடல் ஏழையும், விண்ணினை எட்டும் ஓங்கிய உச்சியை உடைய மகாமேரு மலையையும், அதனைச் சூழ்ந்த இருநூற்று இருபத்து நான்கு புவனங்களையும், எண்ணற்ற ஆன்மாக்களையும் அளவற்ற அண்டங்களையும் முளையின்றி விளைவித்தும், காத்தும் ஒடுங்குவித்தும்;

பிரமனையும் அவருடைய தந்தையான திருமாலையும் தோற்றுவித்தும், தனக்கு எவ்வித அசைவும் இன்றி நிலைத்திருக்கும் தன்னைவிடப் பழமை இல்லாத பழமையோன்; என்றைக்கும் இளமைத் தன்மை பொருந்தினோன், பாரம்பரியமாய் வருகின்ற தோற்றம், ஈறு இல்லாதவன்;

அருளாகிய இலையை உடையதாய், கருணை வண்டுகள் துய்க்கும் படியான மலர்களை உடையதாய், உள்ள காதலை உடைய ஒரு மரகதக் கொடி - சிவந்தவானத்தின் நிறத்தைக் கவர்ந்து, மனாதிகரணங்களால் அறிவதற்கு அரிய வளமுடைய மலையின் பக்கத்தில் படர்ந்தவாறு போல, இளி என்னும் இசை ஆசைப்படுகின்ற ஒளிமிக்க திருநகையை உடைய அறவோளாம் உமாதேவி கூடிய (படர்ந்த) ஒரு பாகத்தோன்.

துறவோர்க்குப் பரமானந்தம் அருளித் தன் தன்மையைக் கொடுக்கும் முன்னோன் - அத்தகையவனின் அழகுதரும் பாதங்களை வாழ்த்தவே அழகிய நலம்மிக்க என்னுடைய வாக்கானது மாட்சிமை பெறும்.

சொற்பொருள் விளக்கம்:

சிமையம் - மேருமலை, முளையின்றி விளைத்து - அருவமான மாயையில் விளைவித்து, மலரோன் தாதை - நான்முகனின் தந்தை, இளி - இளி என்னும் இசை, ஞிமிறு - வண்டு, கிரி - மலை, பாமாண் சேவடி - பாக்களுக்கு அழகுதரும் திருவடி, நாமாண் - வாக்கு மாண்புடையதாம்.

இப்பாடலில் முழுமுதற் கடவுளின் அருங்குணங்களும், இறைவனின் மாதொரு பாகத் தன்மையும் அழகுறக் கூறப்பெற்றுள்ளன. அந்தி வானத்து நிறத்தைப் பெற்ற மலையில் - ஒரு மரகதக் கொடி படர்ந்திருப்பது போல் - பரம்பொருளின் பக்கத்தில் உமையவள் அமைந்துள்ளமையாக வருணனை செய்யப் பெற்றுள்ளமை சிறப்புடைத்து.

---

விநாயகர் துதி

பாடல் - 2

" திங்கள் கொழுந்தின் அன்ன ஒண்கேழ்
ஒருமருப்பு இருமதக் கடவுள் எண்கழி
ஆண்டுபல நிரம்பினும் இளமையொடு கெழீஇ
ஞான மாமதம் தருக்கி ஆனா
வினையுகச் சீறு நனைகவுள் வேழத்து
அடியினை ஒழிவின்று பழிச்ச
முடிவிலாது எவன் முன்னிய நெறித்தே"

இது விநாயகரை நினைந்து எண்ணியது நிறைவேறிடப் போற்றியது.

பொருள் :

பிறைச் சந்திரனை ஒத்த ஒளியும் வடிவும்கொண்ட ஒரு கொம்பினை உடையவராய்; இரு மதங்களைக் கொண்டவராய், எண்ணப்படுகின்ற ஆண்டுகள் பல கொண்டாலும் என்றைக்கும் இளமையோடு விளங்குபவராய், ஞானமாகிய மதம் கொண்டு ஆன்மாக்களின் அளவற்ற கன்மங்கள் அழியும்படி சீறுகின்றவராய், மத நீரால் நனைகின்ற கன்னத்தை உடையவராய் விளங்கும் யானைமுகத்து விநாயகரின் அடிகளை ஒழிவின்றிப் போற்றிட, நினைத்தவை முடியாதது யாவை? ( ஒன்றுமில்லை)

சொற்பொருள் விளக்கம்

ஒண்கேழ் – ஒண் – ஒளி, கேழ் – வடிவம், மருப்பு – கொம்பு, இருமதம் – மதநீர், வேழம் – விநாயகர், முன்னிய – எண்ணிய.

---

### கலைமகள் துதி
### பாடல் 3

" விரிகதிர் மதியின் கதிர் விரி பொகுட்டுத்
தாதுகுபு அடுத்த பேதகு வெண்மடல்
புழற்கால் சரோருகத்து அளிக்குலம் ஒலிப்ப
விழைவுஅற வெகுண்டோர் விழைய விழைபென
அருள்கதிர் பரப்பி மருள்துயர் அகற்றி
வண்ண மாத்தவி சேறிப் பண்வரக்
கின்ன ராதிகள் அம்முறை தொடங்கப்
பொழுதொடு விப்பிரர் தொழுதனர் நுவல
இமையா மங்கையர் அமையாது பழிச்சத்
தீதற இருந்த ஆதி நாயகி
கலைமகள் கழலிணை கருத
நிலைமை நீடுதல் தலைமையோ வன்றே "

இது யானைமுகனைத் துதித்தபின், ஆசிரியர் கல்விக்கரசி கலைமகளைப் பேரின்பம் பெறத் துதித்தது.

பொருள்:

முழுநிறைச் சந்திரனின் ஒளியை உடைய கொட்டையையும், தேன் சொரிகின்ற அழகிய வெண்மடலையும் உடைய, துளையுடைய தண்டினையும் உடைய வெண்மையான தாமரைப் பூவாகிய தவிசில் (பீடத்தில்) ஏறி;

வண்டுக் குலமெலாம் ஒலிக்க, சுவர்க்க இன்பங்களையும் ஆசை காரணமாக வருகின்ற காம இன்பங்களையும் நீக்கி, விரும்பி வருவோர் விரும்பியதையும் அளித்து, அதனைக் கண்ட ஏனையோரும் யாசிப்பதை ஏற்று அவருக்கும் அருள் அளிக்கும் தன்மை உடையவளாய், தன்னை விரும்பி வருவோருடைய அஞ்ஞானத்தால் ஏற்படும் துக்கங்களை நீக்கியும்,

கின்னரர், கிம்புருடர் முதலாயினோர் பண்ணோடு பாடித் துதிக்க, வேதியர்கள் காலந்தோறும் தொழுது துதிக்க, தெய்வ மகளிர் பலமுறை வணங்கியும் முழுமை பெறாது மேலும் துதிக்க, குற்றமற எழுந்தருளியிருக்கும் ஆதி நாயகியான கலைமகளின் திருவடிகளை நினைத்துத் தியானம் பண்ண, பிரமானந்த நிலையைப் பெறுதல் எல்லார்க்கும் இனிதாம் ( என்றவாறு )

சொற்பொருள் விளக்கம்:

பொகுடு - தாமரைக்கொட்டை, புழல் - துளை, சரோரகம் - தண்டு, அளி - வண்டு, மருள்துயர் - அஞ்ஞானத்தால் வரும் துயர், இமையா மங்கையர் - வானவ மகளிர், பழிச்ச - துதிக்க, நீடுதல் - தங்குதல், தலைமையன்று - ஒரு பொருட்டன்று.

இப்பாடலில் தன்னை விரும்பி வழிபடுவோர் வேண்டியவற்றை வேண்டும்போது அவர்களுக்கு உதவுவதோடு ஏனையோரும் வழிபட்டுப் பெற உதவுகின்ற அருள்தன்மை வியந்து கூறப்பெற்றுள்ளது. வேண்டுதலோடு விரும்புவார், விரும்பாதவர் என்ற இருதிறத்தார்க்கும் துதித்தவர் என்ற அடிப்படையில் அருள் வழங்கும் தன்மை கூறப்பெற்றுள்ளது.

---

ஆசிரியர் துதி
பாடல் -4

"அருளும் அறிவும் இருள்தீர் பொறையும்
வாய்மையும் தவமும் தான மாட்சியும்
மன்உயிர்க்கு இன்பம் தன்மீக் கூர்தலும்
ஒழுக்கமும் விழுப்பமும் அழுக்காறு இன்மையும்
கண்கால் முதலிய பொறியும் பண்பார்
பூணும் துகிலும் பாண்விரி பிணையலும்
புண்ணியம் படைத்து மண்மிசை வந்த
தோற்றத் தன்ன ஆற்றல்எம் குரிசில்
குணப் பொற் குன்றம் வணக்க வாரா
ஐம்புல வேழத்து வெந்தொழில் அவியக்
கருணை வீணை காமுறத் தழீஇச்

சாந்தக் கூர்முள் ஏந்தினன் நிறீஇத்
தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி
பரமா னந்தத்து திருமா முனிவன்
வளமலி சேவடி வழுத்தி
உளமலி உவகை உற்றனம் பெரிதே"

இது ஏற்புடைக் கடவுளைத் துதித்து ஞான அறிவுதந்த அருண்மொழித் தேவர் என்னும் பரமானந்த முனிவரைப் போற்றிப் பரவியது.

பொருள்:

அருளும் ஞானமும் குற்றமற்ற பொறையும், வாய்மையும், தவமும், ஞானக்கொடையும், நித்திய ஆன்மாக்களுக்கு சித்தி - தன்னினும் மிக உண்டாக வேண்டும் என்று எண்ணுகின்ற திருவுளமும், ஒழுக்கமும், சீர்மையும், அழுக்காறின்மையும் ஆகிய பத்துக் குணங்கள் கண், வாய், மூக்கு, செவி, மெய் என்ற ஐந்து புத்தி இந்திரியங்களாகவும், வாய், கை, கால், வாயு, உபத்தம் என்ற ஐந்து கன்மேந்திரியங்களாகவும் அமைய;

மக்கட் பண்பு என்னும் ஜீவகாருண்யத்தால் உண்டான பாச வைராக்கியத்தை ஆபரணமாகவும், குருபத்தியை ஆடையாகவும், ஞான சமாதியை மாலையாகவும் கொண்டு குணத்தில் மகாமேருவை ஒப்போன் ஆவான். அவன் அந்தக்கரணங்களாகிய பாகனால் அடக்க இயலாத யானையை - கருணையாகிய வீணையை விரும்பி இசைத்து - சாந்தம் என்னும் கூரிய தோட்டியைக் கைக்கொண்டு தன்வசமாக்கிக் கொண்ட சைவத்துச் சிகாமணி ஆவான்.

பரமானந்த முனிவன் என்னும் தீட்சா நாமத்தை உடைய மாமுனிவன் ஆவான். அவனுடைய அழகிய சேவடிகளைப் போற்றி, சிற்சத்தியின் கண்ணே முழுமையான மகிழ்ச்சியை மிகவும் பெற்றோம் (என்றவாறு)

சொற்பொருள் விளக்கம்:

தானமாட்சி - அறிவுக்கொடை, தன்மீக் கூர்தல் - தன்னினும் மிகுதியாக உண்டாக வேண்டும் என்ற எண்ணம், பாண்விரி பிணையல் - வண்டுகள் மொய்க்கும் மாலை, குரிசில் - தலைவன்,

(ஆசிரியன்) ஐம்புலவேழம் - பஞ்சேந்திரியமான யானை, கூர்முள் - தோட்டி, புண்ணியம்தான் - தன் ஆசிரியராகப் பூவுலகில் திரு அவதாரம் செய்துள்ளது என்று தன் ஆசிரியரைப் பாராட்டியிருப்பது சிறப்புடைத்து.

---

### அவையடக்கம்
### பாடல் . 5

"உரைசால் .பகுதிப் புரையோர் போலத்
தமிழ்த்துறை நிரம்பாத் தன்மை யேனை
அறத்தின் விருப்புச் சிறப்பொடு நூக்கப்
பாப்புனை பான்மை நோக்கினென் வலித்துழி
எழுதாக் கேள்வியும் கேள்வி பழிவாழ்
ஏனோர் கேள்வியும் கேள்வி மாண
வருதார் தாங்கிய கிளர்தார் அகலத்து
எறிவேல் இளைஞர் போலப் பொறிவாழ்
புலப்பகை தாங்கிப் பிறப்பற எறியும்
அறப்பேர் வாழ்க்கையும் வாழ்க்கை திறப்பட
இம்மையும் பயவாது அம்மையும் உதவாது
செச்சைக் கண்டத்து தொத்தூன் போல
வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கைத் தாவா
ஒருமைத்து அன்றே யாயினுஞ் சான்றோர்க்கு
எம்முடைப் புன்சொல் தம்முடைய சிறப்பே
அதனால்
அவரினும் அளிய மற்றுயாமே கவரா
ஏனோர் அளிக்கும் தான் ஈறுஇன்றே
அவரே
தம்பாடு எய்தல் தம்பாலோர்க்கே
எம்பாடு எய்தல் இருமையும் உடைத்தே
இவ்விரு பகுதியும் எடுத்துச் சொல் யாப்பு
அவ்வயின் உடைத்தே பொருட் பாடின்றே"

இது வணக்கங்களைக் கூறி - இனி நூல் வழங்கும் அவைக்குத் தன் அடக்கம் கூறுவான் தன் எளிவந்த நிலையைக் கூறுவது.

பொருள்:

தமிழ் இலக்கண இலக்கிய மரபு முழுமையும் அறியாத நான் தத்துவ விளக்கங்களை அறிய வேண்டும் என்ற ஆவல் உந்தப் பட்டதால் புகழ் நிறைந்த வேதாகமங்களை உணர்ந்த பெரியோர்களைப் போல, செய்யுட்களால் ஒரு நூல் செய்ய வேண்டும் என எண்ணினேன். ஆயின் என் சிறுமையால் திகைப்பு ஏற்பட்டது. எழுதாக் கேள்வி எனப்படும் வேதங்களும் நூல்தான், ப்ழியோடு வாழும் ஏனையோர் எழுதும் நூலும் நூல்தான்;

பகைவரிடத்து வருகின்ற தூசிப்படையை எதிர்நின்று தடுத்து பகைவர்மேல் வேலினை எறிகின்ற இளைஞர்களைப் போல, ஐம்புலன்களின் பகையைத் தாங்கிப் பிறப்பை அறுத்து வாழுகின்ற ஞானச் செல்வரின் வாழ்க்கையும் வாழ்க்கைதான். இம்மையில் தமக்கும் பிறருக்கும் பயனின்றி மறுமையில் சுவர்க்க இன்பங்களுக்கும் இடமின்றி, ஆட்டின் கழுத்திலே தொங்குகின்ற அசகளத்தம் (தாடி) போல உயிர் வாழ்வோர் வாழ்க்கையும் வாழ்க்கைதான்; இவ்வாறு நல்லது, தீயது ஆகிய பொருள்கள் இரண்டும் உலகில் ஒத்து நிலவுகின்றன.

என்றதால் சான்றோர்க்கு எம்முடைய புல்லிய சொல்லும் அவர்கள் அருளிச் செய்த நூலுக்குரிய சிறப்பையே கொடுக்கும். ஆதலால் யாமும் சான்றோரிடத்து அருளைப் பெறுதல் உடையேன். அதே வேளையில் எம்மைப் போன்ற அஞ்ஞானிகளிடத்தும் யாம் அவர்களுக்கு இனமாதலால் அங்கீகாரம் பெறுதல் அரியது இல்லை. ஆதலால் யாம் இரு திறத்தாரிடத்தும் அனுக்கிரகம் பெறுதல் உடையேன். இவ்விரு திறத்தாரின் அனுக்கிரகம் பெறுதலால் எழுத்து, சொல், யாப்பு, அலங்காரம் என்ற நான்கு அமைப்பைத் தவிரப் பொருட் பாகுபாடு எம்முடையது இல்லை. இந்நூலின் பொருள் இறைவன் அருளிய சிறந்த ஆகமப் பொருள் ஆதலால் அதிலும் குற்றம் வருதல் இல்லை (என்றவாறு).

சொற்பொருள் விளக்கம்;

அறத்தின் - தத்துவ விளக்கத்தின், நூக்க - தூண்ட, பாப்பு - செய்யுள், எழுதாக் கேள்வி - வேதம், வருதார் - தூசிப்படை, அகலம் - மார்பு, வே - வேல், செச்சை - ஆட்டின் கழுத்தில் தொங்கும் அசகளத்தம்.

இப்பாடலில் செய்யுள் இயற்றுதலின் அருமையும், தன் சிறுமையும் நோக்கிடத் தனக்குத் திகைப்பு ஏற்பட்டது என்று கூறுகின்ற ஆசிரியர் அத்திகைப்பிலிருந்து நீங்கிட இரண்டு எடுத்துக் காட்டுக்களைப் பதிவு செய்கின்றார்.

1. வேதவாக்கியமும் நூலாக இருக்கிறது. பாவங்களைச் செய்தவர்கள் எழுதுகின்ற நூல்களும் நூலாக இருக்கிறது.

2. ஐம்புலன்களை அடக்கி வாழ்கின்ற அறவோர்களின் வாழ்க்கையும் வாழ்க்கையாக இருக்கிறது. இம்மைக்கும் மறுமைக்கும் எவ்விதப் பயனும் இல்லாதவர்களின் வாழ்க்கையும் வாழ்க்கையாக இருக்கிறது. இவ்வாறு நல்லதும் தீயதும் உலகத்தில் நிலவுவதால் பெரியோர்களின் நூல்களும் தன்னுடைய நூலும் உலகில் வழங்கலாம் என அமைதி கொள்கிறார். மேலும் நூலின் வடிவுதான் தன்னுடையது, நூலின் பொருளோ இறைவனுடையது. எனவே, சான்றோர் தன்னுடைய புல்லிய சொல்லிற்கு அங்கீகாரம் தருவர் எனக் கூறுவது சிறப்புடைத்து

---

## நூற்பெயர்
## பாடல் .6

"மந்தரம் மத்தென நிறுவி நாண்என
ஐந்தலை அரவு சுற்றி நஞ்சொடு
பணாமணி பிதுங்கப் பற்றி அவுணரொடு
அமரரும் இயக்க ஆற்றா நாள்செல
முகுந்தன் தனாது முழுவலி எறுழ்த்தோள்
வருந்த வாங்குபு வாய்விட்டு அலறி
நுரைத்தலை விரித்துத் திரைப்பெருங் கையெடுத்து
இன்றும் கூப்பிட அன்றுவந்து எழுந்த
உவரி அமிழ்தம் என்ப தமிழ்வளர்
குமுதச்செவ்வாய்க் கோமள வல்லி
இமைய வல்லி அமைவுற விளங்கிய
நுதல்விழி நாட்டத்து ஒருதனிக் கடவுள்
அருளின் கொம்பரொடு அமரரும் முனிவரும்
வெருளின் பிறவி வேர்தனி விமல என்று
ஆனாது அரற்றித் தான் இனிது அருளிய
ஆகமத்தின் அருளின் கோலத்து

ஆசிரியன் அமலன் பாத பங்கயற்
போதுஒளி இலகப் புனைந்து மாதவன்
அருள் உபதே வரும்பொருள் நோன்ஞான்
மதிபாத் தடக்கை கதுமெனப் பூட்டி
முறுக வாங்க மறுகுபு கலுழ்ந்து
வல்வினைத் திண்கை மேலெடுத்து ஒய்யென
அறுவகைப் பித்தை சிறுபுறத் தலையப்
பிறவிப் பேரிடர் அலமந்து ஓலமிட்டு
இரியல் போக அருபுலம் மடிய
அச்சான் ஆழி ஏற்பட எழுதலின்
**ஞானா மிர்தம்** என்ப
ஆனாச் செவ்வி மாநூற் பெயரே"

இது நூலின் பெயரையும் நூலிற் சொல்லப் பெறும் பொருளையும் கூறுவது.

பொருள்:

மேருமலையை மத்தாக நாட்டி, வாசுகி என்னும் ஐந்துதலை நாகத்தை நாணாகப் பூட்டிக் கடைய, பாம்பின் நஞ்சொடு மாணிக்கங்களும் பிதுங்க, அதனால் அசுரர்களும் தேவர்களும் கடையமுடியாது நெடுங்காலம் செல்ல, திருமால் தன்னுடைய தோள் வருந்தும்படிக் கடைதலாலே பாற்கடல் வாய்விட்டு அலறிட (பெரிதாக ஒலித்து) நுரை என்னும் தலையை விரித்து அலை என்னும் பெரிய கையால் வீசியதால் அமிர்தம் கடலிலே எழுந்தது என்று சொல்லுவார்கள்.

தமிழுக்குப் பெருமை கொடுக்கின்ற குமுதம் போன்ற சிவந்த வாயை உடையவளான கோமளக் கொடி போன்ற இமயவல்லியாம் உமாதேவியுடன் விளங்குகின்ற, நெற்றிக்கண் உடைய், தனக்கு உவமை இல்லாத தனிக்கடவுளாகிய சிவனை உமாதேவியும், தேவர்களும், முனிவர்களும் மயக்கத்தைத் தருகின்ற பிறவியை வேரறுக்க வேண்டும் என்று போற்றி வணங்கிட;
( வணங்கினார்கள்)

அவனும் பக்குவ ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு அருளைத் திருமேனியாக உடைய அஞ்ஞானத்தை நீக்குகின்ற

நின்மலனாம் இறைவன், சீர்பாதமாகிய தாமரைப் பூவைச் சிவஞான ஒளி உண்டாகச் சூடிகொண்டு தன்னுடைய சிறந்த ஆகமத்தை மத்தாக நாட்டி, உபதேசம் என்னும் வலிய நாணை, மதி என்னும் மகத்தான கையாலே பூட்டி விரைவாகக் கடைதலால்;

கலங்கித் துன்பப்பட்டு, புண்ணிய பாவமாகிய இரண்டு கைகளை மேலே உயர்த்தி விரைந்து, காம முதலாகச் சொல்லப்பட்ட பகை ஆறாகிய மயிர்கள் முதுகிலே அலைய, பிறவி என்னும் பெரிய துக்கமானது சுழன்று நீங்க, ஐம்புலன்களின் சேட்டைகள் கெட, என்னிடத்திலுள்ள அஞ்ஞானம் என்னும் கடலிலிருந்து ஞானம் தோன்றியதால் இந்த நூலுக்கு ஞானாமிர்தம் என்ற பெயராயிற்று (என்றவாறு).

சொற்பொருள் விளக்கம்

மந்தரம் – மேருமலை, முகுந்தன் – திருமால், உவரி – கடல், இமயவல்லி – உமையவள், கொம்பர் – உமையவள், அறுவகைப் பித்தை – அறுவகைப்பகை.

திருப்பாற் கடலில் வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, பண்டு ஒரு நாள் கடைந்ததால் அமுதம் தோன்றியது போல, இறைவன் அஞ்ஞானமாகிய கடலில் ஆகமத்தை மத்தாகக் கொண்டு, உபதேசத்தினை நாணாகக் கொண்டு மதியென்னும் கையாலே பூட்டிக் கடைந்ததால் இந்த நூலாகிய ஞானாமிர்தம் உண்டாயிற்று. எனக் கூறியிருப்பது சிறப்புடைத்து.

---

## மறைமுறை நான்கு எனல்
## பாடல் .7

"கண்ணுதல் அண்ணல் விண்ணவர் பணியக்
காளம் ஆண்டவாள் அவிர் அங்களத்து
எரிமருள் ஈர்ஞ்சடை மதிமுகிழ் அணிந்த
உம்பர் ஈசர் உம்பன் வெம்புரு
பிறவிப் பேரிடர்க் கறையுறு பகுவாய்
உரகத்து ஆர்எயிறு உறவீழ்ந்து அறவ
அஞ்சினம் அளியம் என அமரரும் முனிவரும்
வெஞ்சினப் பிறவி நஞ்சுக விரித்த
அருமறை எவையும் திருமிகு ஞர்னம்

இலங்கொளி யோக நலங்கினர் கிரியை
சரியை எனஉரை விரிதரு பாதம்
கறையறு மறைமுறை நெறியின்
அறைய மற்றுஅரோ அறிகதில் அமர்ந்தே”

இது நூற்பெயர் கூறி, நூல் தோன்றுவதற்குக் காரணமாயிருக்கும் சிவாகமங்களாம் மறை பற்றிக் கூறத் தொடங்கி, இறைவன் அருளிய மறையானது, ஞானம், யோகம், கிரியை, சரியை என நான்காம் என்று கூறுகிறது.

பொருள்

நெற்றியில் கண்ணை உடைய தலைவனும், தேவர்கள் பணிந்து போற்றியதால் நஞ்சை உண்டு கருமையான கண்டத்தை உடையவனாயினான். அக்கினியின் நிறத்தை மங்கச் செய்யும் சிவப்பை உடைய சடையில் இளம் பிறையையும் அணிந்தான். தேவர்களுக்கெல்லாம் மேலாகிய பிரமன், திருமால் இவர்களுக்கே தலைவன் ஆகிய பரமசிவன்.

பெரிய துன்பமாகிய நஞ்சை உடைய வாயினைக் கொண்ட, வெம்மையான பிறவி என்னும் நாகத்தின் பற்கள் கடித்தலால் நாங்கள் அஞ்சினோம் என்று தேவர்களும் முனிவர்களும் விண்ணப்பம் செய்தலால்,

வெஞ்சினப் பிறவியாம் சர்ப்பத்தின் நஞ்சுகெட, இறைவன் அருளிச்செய்த அரியனவாகிய சிவாகமங்கள், உபஆகமங்கள் பலவற்றிலும் சொல்லப்படுகின்ற செல்வமாகிய ஞானம், பேரொளியை உடைய யோகம், நன்மையைத் தரும் கிரியை - சரியை என்று உரைக்கப்படுகின்ற பேருரைகளாகிய நான்கு பாதங்களாகும். இத்தகைய குற்றமற்ற உபதேச முறைமையை நெறியாகச் சொல்ல அறிதல் வேண்டும் (என்றவாறு).

சொற்பொருள் விளக்கம்:

காளம் - நஞ்சு, உம்பர் - தேவர், இறைவன் அருளிய சிவாகமங்களின் பொருள் ஞானம், யோகம், சரியை, கிரியை என்றாலும் இந்நூலில் ஞானபாதமே கூறப்பெறுகின்றது. மற்றைய மூன்றும் இவ்வாசிரியரால் கூறப் பெற்றிருப்பினும் இப்போது கிடைத்தில

... இவ்ஏழு பாடல்களைக் கொண்ட பாயிரம் நிறைவுற்றது ....

# ஞானபாதம்

## 1. சம்மிய ஞானம் - பசுவின் மூவகை அவத்தை
## பாடல் .8

" பிறழா நிலைமைப் பெரும்பெயர் ஞானக்
கறையறு பாத முறையுறக் கழறிற்
பசுபா சத்தோடு பதியாய் பெற்றி
மதியோர் பசுமூ வகையென மதிப்பீர்
பன்னிற் கேவலற் சகலன் இன்னியல்
சுத்தன் கேவலன் சொற்றிடின் நித்தன்
மெய்த்தகு குணமிலி வியாபி மொய்த்து
மலநனி புணர மறைவோன் இலன்எனைச்
செய்தியும் அறியோன் மையில மூர்த்தன்
வலியிலன் அசேதனன் ஒளிஇலி இறை யலன்
மாயா உதரம் மரீஇத் தேயாப்
போக நினைந்த சகலற்கு எய்திய
முரண்மிகு கூற்றை முரித்த வரன
திருங்கலை யமர விரிந்த இருஞ்சேதனம்
அடையா இச்சை யடையத் தடையில்
விடயப் பகுதி விரவிப் புடையே
பொங்கி யராகம் புணரத் தங்கா
ஆசை எங்கணும் மாசற நிமிர
எல்பிர தானம் ஒற்கமில் குணத்தொடு
புத்தி முதலிய தொத்து இனிதுறழப்
பிணித்தலிற் பிணிப்பினன் பசுமற்று இணைத்த
நியதி முன்னர் இயலிரு வினையிற்
பிறழாது உறழப் பின்னர்க் குறையாக்
காலங் காலத்து அளவைப் பாலிற்
காட்டத் தொழிலொடு போகத்து ஆட்டுண்டு
இரியாத் தத்துவ கலையினில் இவ்வணம்
பரியாப் பந்தம் பந்தித்து ஒருவழி
அறிவு சிறிதமர்ந்து ஆகமாய
பிரியா மோகினிப் பெரும் போகத்தைத்
தானென எண்ணி ஆனா முன்வினைப்
பயன்பல மாந்தி வியந்துறை காலை

வல்வினை எல்லை செல்லாக் காலத்து
ஒல்லென ஒப்பு உயர்பெருஞ் சிவனது
சத்திநி பாதந் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பரனது அருளின் செவ்வி
வம்பறு சம்பிர தாயத் தஞ்சுடர்
உற்ற காலைச் சொல்தொடர்பு அற்றுத்
தேயாதி யாவுமாய் அறிவு அகன்ற
ஆயாச் சிவனது அணிகிளர் சீர்த்தி
நின்மலத்து இயையும் பின்மலத்து இயையான்
அந்தமில் பந்தமற்று இவணஞ்
சிந்துதல் சிந்த தெரியுங் காலே”

இது இறைவன் ஆகமத்தில் செய்தருளிய சதுர்ப் பாதங்களில் ஞானபாதமாவது பசு, பாச, பதி என்ற மூன்றையும் ஆராய்ந்து அறிதலாம் என்றுகூறி, அவற்றில் பசுவினது நிலையாகிய கேவல, சகல, சுத்த அவத்தைகளைப் பற்றிக் கூறுவதாகும்.

பொருள்:

எக்காலத்தும் திரியாத ஒருபடித்தான தன்மையுடைய ஞானம் என்னும் பெரும் பெயரை உடைத்தாகிய குற்றமற்ற பாதத்தில் (மார்க்கத்தில் ) முறைமையை அறியக் கூறின், அது பசு, பாசம், பதி என்ற மூன்றினையும் ஆராயும் முறைமையை உடைத்தாகும்.

ஞானமுடையோர் பசு என்று சொல்லப்பட்ட உயிர்கள் மூன்று அவத்தைகளை உடையவை ஆதலால் அவை மூன்று வகைப்படும் என்பர். அவைகளைக் குறிப்பிட்டுச் சொன்னால் கேவலம், சகலம், இனிய இயல்பையுடைய சுத்தம் என்பதாம்.

இவற்றில் கேவல அவத்தை உடையதாய் நிற்கும் முறைமை பற்றிச் சொல்லின் ஆன்மா நித்தியம் ஆவான். தேகத்துடன் கூடி இருக்கின்ற புத்தி, குணம் எட்டும் இல்லாதோன், சர்வ வியாபியாக இருப்பவன், ஆணவ மலம் மிக்கு இருத்தலால் தச்ரூபம் அறியாது இருப்பவன், தனக்கென எத்தகைய செயலும் இல்லாதோன். அறிவு இல்லாதோன். தேக சம்பந்தம் இல்லாமையால் குற்றமற்ற அருபியாக இருப்பவன், போகத்தில் வலிமை இல்லாதவன், அசேதனம் போன்று இச்சை இல்லாதிருப்பவன், பிரகாசம் அல்லாதவன், ஒன்றுக்கும் தலைமை உடையவன் அல்லன்.

இனி சகலாவத்தை உடையனாய் நிற்கும் முறைமை கூறின், புருடன் மாயையின் காரியமான தேகத்தை உடையவனாய், அளவிறந்த போகத்தைத் துய்க்க நினைப்பவனாய் விளங்குவான். அத்தகைய சகலனை சகலாவத்தை எய்துமாறு கூடும். வலிமிக்க கூற்றுவனை அழித்த பரமசிவனது சக்தியினால் பெரிய கலாதத்துவமானது சிறிது ஞானம் உண்டாகும்படி ஆணவத்தை நீக்க மகத்தான சித்து நிலை விரிந்து பெறுதற்கரிய வித்யா தத்துவம் வந்தடையும்.

அவ்வாறு வந்தடைதலால் தடுத்தற்கு இல்லாத சத்தாதி விஷயங்கள் ஐந்தினையும் விரவும். பக்கமெல்லாம் சென்று அராகதத்துவம் கூடுதலால் தடையில்லாத ஆசை எவ்விடத்தும் குற்றமற நிமிரும். பிரகிருதியிருந்து பிறந்த ஒடுக்கமில்லாத குணதத்துவத்தோடு புத்தி தத்துவம் முதல் பிருதிவி வரை உள்ள தத்துவ வர்க்கங்கள் இனிதாகக் கூடுவதால் புருடன் பந்திப்புடைய (மலக் கட்டுடைய) பசுவாவான்.

பரமசிவன் இணைத்த நியதி தத்துவமாகிய சுத்த தத்துவத்தைக் கூறின் முற்பிறவிகளில் செய்து பக்குவப்பட்ட புண்ணிய பாவங்களால் வரும் போகங்களைப் பிறழாது நியமித்துக் கொடுக்க, பின்பு முடிவில்லாத கால தத்துவம் காலை எல்லைகளை முறைப்படி பகிர்ந்து கொடுக்க, கன்மத்தோடு போகங்களின் ஆசையில் அலைப்புண்டு நீங்காத தத்துவக் கலையில் பந்தத்தைப் பதித்து, ஒரு வழி சிறிது காரண அறிவு கூடி, மாயையினுடைய காரியமாய் வந்த பெரிய போகத்தைத் தான் என்று எண்ணி, அளவில்லாத பூர்வ கன்மங்களைப் புசித்துப் புருடன் பிரியப்பட்டு வாழ்வான்.

எண்ணிறந்த காலத்தில் மலபரிபாகம் பட்டு, இருவினை ஒப்பு நிகழ்ந்த போது, உயர்ந்த பெரும் பரமசிவனது சத்திநிபாதம் உண்டாகும். அவ்வாறு உண்டாதலால் திருமேனிச் சட்டை தாங்கி எழுந்தருளிய ஞானாசிரியன் என்னும் மேலான பரமசிவனின் கிருபைக்குப் பக்குவமாய், ஞானாவதியான தீக்கை என்னும் அழகிய ஒளி பிரகாசமாகும். அக்காலத்தில் இன்னவாறு இருப்பன் என்று சொல்லுதற்கு அறியானாய், அழிவின்றி யாவுமாய் எல்லாவற்றையும் அறிகின்ற பரமசிவனது அளவுடைய கீர்த்தியை உடைய சிவானந்த பரமபோகத்தில் இணைந்திடுவான். பின்னே ஆணவ மலத்தில் கூடான்.

இவ்வாறு அளவில்லாத பாசமுடைய ஆன்மா இயல்பு எப்படி என்று சிந்தித்தல் நலமாம்.

விளக்கவுரை :

உயிர் மாயை, கன்மம் என்பவற்றோடு கூடாது ஆணவ மலத்தோடு மட்டும் இருப்பது, கேவல அவத்தை எனப்படும். கேவலம் என்பதற்குத் தனிமை என்பது பொருள். பின்னர் மாயை, கன்மங்களோடு கூடியிருப்பது - சகலாவத்தை எனப்படும், சகலம் என்பதற்கு கலை (மாயாகாரியம்) யோடு கூடுதல் என்பது பொருள். பின்னர் மும்மலங்களும் நீங்கப்பெற்று இறைவனோடு இரண்டறக் கலப்பது சுத்தாவத்தை எனப்படும். இம்மூன்றையும் இலக்கண நெறியில் இப்பாடல் தருகிறது. பாதம் - மார்க்கம், நெறி. பசு - உயிர், புத்திகுணம் எட்டு - தருமம், ஞானம், வைராக்கியம், ஐசுவரியம், அதருமம், அஞ்ஞானம், அவைராக்கியம், அநைசுவரியம் (உ. வே. சா. உரை) வியாபி - பரவி; இறையலன் - தலைமையில்லாதவன்; கேவலத்தின் இத்தகைய நிலையை,

"அறிவு இலன் அமூர்த்தன் நித்தன் அரகாதி குணங்களோடும்
செறிவு இலன் கலாதியோடும் சேர்வுஇலன் செயல்கள் இல்லான்
குறிஇலன் கருத்த அல்லன் போகத்தில் கொள்கை இல்லான்
பிறிவிலன் மலத்தினோடும் வியாபி கேவலத்தில் ஆன்மா"
(பாடல், சுபக்கம் - 28)

எனச் சிவஞானசித்தியார் தொகுத்துத் தரும். உதரம் - உடம்பு, கூற்று - யமன், துய்க்கும் தோறும் - மேன்மேலும் வளர்வதன்றித் தேயாத காரணத்தால் தேயாப் போகம் என்று கூறப்பெறுகிறது. இருங்கலை - கலாதத்துவம், விச்சை - வித்தியா தத்துவம், அராகம் - அராகதத்துவம், மார்க்கண்டேயனுக்காக யமனை உதைத்த புராண வரலாறு "கூற்றை முரித்த அரன்" என்பதால் பெறப்படுகிறது. கலை, வித்தை , அராகம் என இவற்றின் கூட்டுறவோடு மாயை கலப்பக் குணதத்துவம் தோன்றும் என்பதால் ஒற்கம்இல் குணம் எனப்பட்டது. தத்துவருக்கம் - கரணம், ஞானேந்திரியம், கன்மேந்திரியம், தன்மாத்திரை, பூதம் ஐந்து ஆகியவையாம். நியதி - சுத்தம், குறையாக் காலம் - காலதத்துவம். வல்வினை ஒப்ப - இருவினை ஒப்பு, சம்பிரதாயம் - தீக்கை, ஞானாவதி தீக்கை - குண்டமண்டலம், அக்கி, நெய், சுருக்குச் சுவரும் முதலிய அனைத்தும் மனத்தால் கற்பித்துக் கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்வது.

## உயிர்களின் மல சம்பந்தம்
## பாடல் - 9

"காரணம் கழறலல் வேண்டுவல் ஆரணம்
அறிவோன் அமலன் ஆதற்கு அத்த
பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்கு
அற்றே சொற்றது அனாதி மற்றவர்க்கு
எற்றுஎனில் ஆதி இயையின் குற்றமில்
காரணங் கழறுவல் அம்ம சீருணம்
திகழ்ஒளிப் பளிங்கு போலப் புகழரும்
இறைபுற் கலனுக்கு என்றனன் குறைவின்று
அறைகழல் அருள்ஒளி பரந்த
பொறைவளர் சாரல் கயிலை யோனே"

இது முன்னர் கூறிய சுத்த அவத்தையில் புருடன் மலநீக்கம் பெற்று இறையொடு இரண்டறக் கலக்கும் என்பதால் பதி மலமற்றவன் என்பதற்கும் பசு மலனாதற்கும் காரணம் வினவி – விடை பகர்வதாம்.

பொருள் :

முதல்வனே! வேதங்களால் அறிதற்கு அரிய சிவபெருமான் நின்மலன், (மலமில்லாதவன்). ஆதற்கும், நல்லூழ் இல்லாத ஆன்மா வருத்தும் மலம் உடையனாதற்கும் காரணம் அருளிச் செய்தல் வேண்டும் என்று விண்ணப்பிக்க, (சீடன்)

அங்ஙனம் கேட்கின்ற வினாவிற்குப் பொருள் சொல்லின் அவை இரண்டும் அனாதி ஆகும் என்பதாம். அவ்வாறு அனாதி ஆவதற்குக் காரணம் என்ன எனில், அநாதியாகச் சிவனுக்கும் ஆன்மாவுக்கும் மலமின்மையும், மலமுண்மையும் கூடினமைக்குக் காரணம் முறைப்படி உரைப்போம்.

செம்பிற்குக் களிம்பும், பளிங்குக்குச் சுத்தமும் முன்பின் இல்லாது அநாதியாதல் போல, சிவனுக்கும் ஆன்மாவிற்கும் நின்மலமும் மலமும் அநாதியாகும் என்று தன்னுடைய திருவடிச் சிலம்பின் ஓசை குறைவின்றி ஒலிக்கின்றதால் எல்லா உயிர்களும் குறைவற்று வாழுகின்ற கயிலைமலை உடையானாம் எங்கள் பரமசிவன்· கூறினான் (என்றவாறு).

விளக்கவுரை :

வினாவிடை அமைப்பில் இப்பாடல் அமைந்து பரமசிவனுக்கும் ஆன்மாவுக்கும் மலமின்மையும், மலமுண்மையும் பளிங்குக்குச் சுத்தமும், செம்பிற்குக் களிம்பும் போல அநாதியாகும் என்று சிவபெருமான் அருளினான் என்பதைக் குறிப்பிடுகிறது.

தத்துவ விளக்கம் இறைவனால் தரப்படுவதை வலியுறுத்த, காரணம் கழறல் வேண்டும் என்ற வினா அமைந்து என்றனன் கயிலையோனே என்ற விடையோடு முடிந்திருக்கிறது.

ஆரணம் - வேதம், அமலன் - மலங்கூடாதவன், புற்கலன் - ஆன்மா, சீருணம் - செம்பு, அரைகழல் - சிலம்பொலி, பொறைவளர் - பொறுமையாகிய தவத்தை மேற்கொண்டிருக்கும் உயிர்கள்.

“படிகத்திற்குத் தூய்மையும், செம்புக்குச் களிம்பும் எய்துதற்கு எவ்வாறு காரணம் இல்லையோ அவ்வாறே சிவனும், ஆன்மாவும் மல மற்றதற்கும், மலமுடையதற்கு காரணம் இல்லை. இருவர்க்கும் இரண்டும் அநாதி” என்று கரணாகமம் கூறுகிறது. ஒன்றோடொன்று பொருந்தாத மிருகங்கள் விரோதமின்றிப் பொருந்தி வாழும் கயிலாய மலை என்பதால் பொறை வளர் சாரல் கயிலை எனக் கூறப்பெற்றது.

---

உயிர் மாயா உதரம் மருவுதல்

பாடல் - 10

“கலைமுதலாய நிலைமலி தத்துவத்து
உலைவில் கட்டுஉறல்என் பின்னர்
மா்யா உதரம் மரீஇயோன் எங்கணும்
வீயான் ஆதல்என் வினவின் மற்றுஇஃது
ஆய்வின் வாரா அளவைத்தே எனின்
வீடுறப் பின்னர் விரவிய பந்தம்
கூடாது ஓடின் குலவிய போகம்
துய்த்தல் செல்லான் செல்லா னாக
எய்த்தல் இன்றாம் இருவினை ஆக
அபவர்க்கஉறு மற்று அடையாக உடைமும்
கறைகடிது அகற்றப் பிறகறை பிடித்தப்
பெற்றியின் இவனுக்கு உள்ள வன்பிணி
மற்றதும் அறிகலை முதலாகச் சொல்தரும்
படிகடை யாயவற்று ஒடியாது உலாவலின் ”
நுணங்கிய ஆகனாகி இணங்கு இரி
மாயையின் வயின்இவன் என்ற
தாயாச் சீர்த்தி அருந்தவ அறியே”

இது மல பந்தமுடைய உயிர் மாயா உதரத்தினாதற்கும், யாண்டும் பிறப்பு இறப்பில் சுழலுதற்கும் காரணம் என் எனக்கேட்டு விடை கூறுவதாம்.

பொருள் :

ஆணவமல பந்திப்பு உடைய உயிரானது உடம்பைப் பெற்று நித்தியமாகிய கலை முதலிய தத்துவத்தில் ஒழிவில்லாத பந்திப்பு உற வேண்டுவானேன் என்றும், பின் மாயாகாரியமான உடம்பில் பொருந்துகின்ற உயிர் எவ்விடத்தும் பிறப்பு இறப்பில் உடையனாதல் எவ்வண்ணம் என்றும் வினவினால்,

இதற்குரிய பொருள் ஆராய்ச்சியால் அறியா வொண்ணா அளவினை உடைத்தாம் என்றும் கூறுகின்றாய் என்றால்,

இறுதியில் முத்தி பெறுதற்கே சகலநிலையில் கலை முதலிய தத்துவங்களாகிய உடம்பை ஆன்மா பொருந்துகிறது. அவ்வாறு பொருந்தாவிட்டால் விதிக்கப்பெற்ற கன்மம் அனுபவிப்பதற்கு இல்லை. அவ்வாறு அனுபவிக்கவில்லை என்றால் இருவினை ஒப்பு எய்துதலும் இல்லை. இல்லாததால் முத்தியடைவதற்குரிய வழியும் இல்லை.

உடையில் உள்ள அழுக்கைப் போக்க - உவர்மன் (என்னும் அழுக்கை) பிடித்த தன்மைபோல - உயிருக்கு உடம்பு முதலிய சம்பந்தங்கள் உண்டாகின்றன. எனவே கலை முதலாகச் சொல்லப்பட்ட - பிருதுவி தத்துவம் அந்தமாக உடைய தத்துவங்களோடு கூடி நுண்ணிய உடம்பை உடையனாய், ஒழியாது பிறந்து இறந்து புரிதலால் ஆன்மா மாயை உடையவன் ஆகின்றான். இதனை அழியாத புகழையும், அரிய தவத்தையும் உடையவனே நீ அறிவாயாக (என்றவாறு).

விளக்கவுரை

கேவலத்தில் ஆணவத்தோடு பிணிப்புண்ட உயிர் சகலத்தில் உடம்பைக் கூடி கன்மத்தை அனுபவித்து, இறுதியில் முக்தியடைய முயலுகிறது என்ற கருத்து வெளிப்படுகிறது. நித்தியமாகிய மாயையின்னின்று உடம்பு தோன்றுவதால் கலை முதலாகிய தத்துவத்தை 'நிலை மலி தத்துவம்" என்றார்.

உலைவில் - ஒழிதலில்லாத. மாயாமலம் பெண்மையாக உருவகப்படுத்தப்பெற்றுள்ளது. சிவஞானசித்தியாரும் "மாயா மலத்தை மாயாள் தன் வயிற்று இவற்றால் தொடக்குண்டு வாழும் ஆன்மா" என்பார். (பாடல் 153) சித்தியாரின் உரையில் சிவஞான முனிவர் மாயாள் எனப் பெண்பாலாக் கூறியது வட மொழி மதம் பற்றி என்பார். பிறந்து இறந்து வருதல் மாறி மாறி நிகழ்வது. ஆதலின் வீயான் ஆதல் எனக்கூப்பெற்றது. தத்துவங்கள் முடிந்த முடிபை உடையன அல்ல என்பதால் ஆய்வின் வாரா அளவிற்று எனப்பட்டது. பந்தம் – கூடுதல். இறைவனது அருளால் அனுபவிக்கப் பெறுதலான் கன்ம. மல போகங்களைக் குலவிய போகம் எனப்பட்டது. இருவினை எய்த்தல் – இருவினை ஒப்பு. அபவர்க்கம் – முக்தி. பிறகறை – உவர்மன் ஆடையின் அழுக்கை நீக்க உவர்மன் கலந்து துவைத்தல் உவமையை சிவஞான சித்தியாரும்,

"செழுநவை அறுவை, சாணிஉவர் செறிவித்து அழுக்கை
முழுவதும் கழிப்பன்; மாயை கொடுமலம்
ஒழிப்போன் முன்னோன்" (பா. 142)

என்றும் குறிப்பிடுகிறது.

---

### அனுமானத்தால் உயிர் உண்மை அறிதல்
### பாடல் . 11

"உழிதரல் இயைந்த பழிதரு ஆகத்து
அழியா அறிவன் கழியான் ஒழியாச்
சேதனம் அன்மையில் கடம்போல் ஆகலின்
எய்யாது இயற்றியான் எவன்அவன் பொய்யாப்
புற்கலன் என்க ஒற்கமில் சேதனம்
அறிவு அறிதல் சேதனம் என்ன
நெறியறி புலவர் அறிஅறி வகையே"

இது கலை முதலிய தத்துவங்களில் பந்தப் படுகின்ற உயிருக்குப் பிரமாணம் கூறியதாகும்.

பொருள் :

பிறந்து இறந்து வருவதற்கென இயைந்த பழிக்கப்பட்ட உடம்பில் நித்தியமாய் இருக்கின்ற ஆன்மா உள்ளது. அதற்குக் காரணம் என்னவென்றால் உடம்பு அழிகின்ற பொருளாகும். ஆன்மா அழியாதவன் ஆவான். எதுபோல என்றால் மண் குடத்தைப்போல. குடம் ஒருவன் கொண்டுபோகின்ற பொழுது இயங்கும். அல்லாதபோது இருக்கும். அது போல உடம்பு தானே போக்குவரவு பண்ணாது. எனவே தான் வேறு தன் உடம்பு வேறு என்று அறிந்து கொள்ளாதே அத்தேகத்தைப் போக்கு வரவு பண்ணுகிறவன் யார் என்றால் அழிவில்லாத ஆன்மா ஆவான். ஆதலால் சேதனம் என்பது அறிவுடையது என்றும், அசேதனம் என்பது அறிவில்லாதது என்றும் நெறியறிந்த புலவர்கள் கூறுவார்கள்.

விளக்கவுரை :

உடம்பு இயங்குவதால் அதை இயக்குவதற்குரிய ஒரு சக்தி வேண்டும். அந்தச் சக்தியே ஆன்மாவாகும். எதுபோல என்றால் குடத்தை ஒருவன் கொண்டு சென்றால் எடுத்துச் செல்லப்படும். இல்லையென்றால் அது இருந்த இடத்திலேயே இருக்கும். மேலும் உயிரானது சேதனம் என்ற அறிவுப்பொருள் ஆகும். அசேதனம் என்பது அறிவற்ற பொருளாகும். உடம்பைக் குடமாக உருவகித்தல் சாத்திரங்களின் மரபாகும்.

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய் இறைவனை வேண்டிக்
கொண்டு வந்தான் ஒருதோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி”

என்ற பழம்பாடலில் உடம்பைக் குடமாக உருவகித்திருப்பது நினைவிற்குரியது. ஆன்மாவானது அழிவில்லாதது என்ற தத்துவ உண்மைக்கு ஏற்பப் ‘பொய்யாப் புற்கலன்‘ எனப்பட்டது. தேகத்தை உடையது தேகி என்பதால் புற்கலன் ஆன்மாவைக் குறிக்கிறது. பதி, பசு, பாசம், பகன்றிடும் மூன்றும் அனாதி என்று திருமந்திரம் குறிப்பிடும். ஒற்கம் இல்- சேதனம் , வறுமையில்லாத அறிவு. வறிது அசேதனம் - வறுமையுடைய அறிவில்லாதது. அறிவுடைமைக்கு எல்லாம் உண்டு. அறிவில்லாமைக்கு எவை இருந்தும் இல்லாமையே ஆகும்.

இதையே திருவள்ளுவரும்,

“அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்” (குறள் : 430)

இது உயிர் உண்டு என்பதை அனுமான அளவையால் நிறுவுவதாயிற்று.

---

பாரி சேடத்தால் உயிர் உண்மை துணிதல்
பாடல் . 12

“காரியம் காசினி ஆதி ஏர்இயல்
ஈசன் கத்தா இவற்குஇது போகம்
ஆதல் செல்லாது அகன்று உயர் கருமம்
தானோ நுகர்தல் செல்லாது ஆனாது
என்னை செய்தது என்னின் அன்னோ
கொன்னே செய்யான் தன்னேரில்லான்
பாரிசேடம் அதனிற் பரனுக்கு
ஏரியல் பரன் பசு என்றுஅறி இனிதே”

இது பாரிசேட அனுமானத்தால் உயிர்உண்டு என்பதைக் கூறுகிறது. பாரிசேடம் என்ப்து எஞ்சியதைக் கொண்டு உணர்த்துவது.

பொருள் :

பிருதிவி முதலாக நாதம் ஈறாகச் சொல்லப்பட்ட உலகம் செயப்படு பொருளாகும். அச்செயப்படு பொருளை உருவாக்கிய கர்த்தா அழகிய இயல்பை உடைய பரமசிவன் ஆவான். அவனைச் செயப்படு பொருளால் பெறப்படுகின்ற போகம் பொருந்த மாட்டாது. விரிந்து உயர்ந்த காரியமாகிய தேகாதி தத்துவத்தொகுதிகள் தானே தமக்கும் போகமாக மாட்டாது. எனவே இந்தத் தத்துவங்களை அவன் ஏன் செய்ய வேண்டும் என்றால் தன்னேரில்லாத தகைமையனாகிய அவன் பயனின்றி இதைச் செய்யான். ஆதலால் பாரிசேட அளவையால் இச்செயல்கள் ஆன்மாவின் பொருட்டே செய்தான் என்று அறிதல் வேண்டும்.

விளக்கவுரை :

பாரிசேடம் என்பது அறியப்பட்ட பொருளிலிருந்து அறியப்படாத ஒன்றை அறிவது. மூன்றுபேர் இருந்த இடத்தில் ஒரு

பொருளைக் காட்டி இது யாருடையது என்று கேட்டால் மூவரில் இருவர் தங்களுடையது அல்ல என்று கூறினால், மூன்றாமவருடைய பொருள் என்பது அறியப்படும். இவ்வாறு அறிவதே பாரிசேட அளவையாகும். இப்பாரிசேட அளவையின் மூலம் இப்பாடல் உயிர் உண்டு என்பதை நிறுவுகிறது. அதாவது உடம்பு முதலாகிய உலக அசேதனப் பொருள்கள் இறைவனால் உண்டாக்கப்படுகின்றன. தான் உண்டாக்கிய பொருள்களின் (செயப்படுபொருள்கள்) பயனை இறைவன் அனுபவிப்பதில்லை. எனவே அச்செயப்படு பொருளின் பயனை அனுபவிக்க ஒருவன் வேண்டும். அந்த ஒருவனே ஆன்மா என்பதை இப்பாடல் விளக்குகிறது.

காசினி ஆதி - என்பது உலகம் முதலாகிய செயப்படு பொருளைக் குறிக்கிறது. தனக்குவமை இல்லாத இறைவன் தன்னேரிலான் எனப்பட்டான். இறைவனுடைய ஆற்றல் பயனற்றதாக அமைந்து விடுகிறது என்று கூறுவதைச் சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் அன்னோ என்று உரைக்கப் பெற்றுள்ளது. மேலும் கொன்னே செய்யான் என்று வலியுறுத்தப் பெற்றுள்ளது. கொன்னே என்பது இங்கு பயனற்றது(வீணாக) என்பதைக் குறிக்கிறது. உலகம் உள்ளிட்ட அசேதனப் பொருள்களை உயிர்களின் பொருட்டே இறைவன் படைக்கிறான். என்று கூறி,

“பரன் பசு என்றறி இனிதே” என்பதால் ஆன்மாவைப் பரன் என்று கூறுவது சிறப்புடைத்தாம்.

---

### சேதனம், அசேதனம் கூறுதல்
### பாடல் . 13

“பொன்னினும் மணியினும் குயிற்றி மின்நகும்
அங்கதம் மகுடம் கடிப்பிணை என்ற
பாரம் என்று அறியாதார் ஆரம் என்று அணியும்
மம்மா மாந்தரின் மயங்கா தம்ம
பூட்சிய தலைநீ கேட்டி மோட்ட
தலைவன் தந்த குவைநெல் கொண்ட
முல்லை முகையென மெல்லென் மூரல்
அங்கை தாங்காது ஆற்றுபு மிசைவுழி
அங்கத்து யாவும் அழியாது இங்குஉயிர்
விட்டது என்று சட்டகம் புகழாக்

கட்டிலேற்றிக் கைதொழுஉப் பரவி
இட்டிரை மகளிர் எருக்கச் சட்டென
அழல்பாய்ப் பல்பிணம் அருந்தீ ஈமத்து
முருட்டணை பாயற் குருஉப் புகைமிளிரப்
பாவகன் தழீஇ கொன்னே வேஎம்
இந்தனத்து இயற்கை யாக்கை என்றினி
விழித்தனை காணஇஃது ஒழிப்பரும் பெரும்பொறை
எரிவிருந் தாயவீங்கும் நீண்ட
வரிதரு கண்ணியர் மதனனென் என்று ஆங்கும்
வேற்றுமையுளதேல் சாற்றுக மாற்றுஇரி
ஆடிப்பாவை யோடு அலர்நிழற் பாவை
கைகான் மெய்பிறிது எவையும் பைப்பயத்
தூக்கில் தூக்கி மேக்குயர்பு உயர்தல்
பொறியொடு சிவணல் என்ன
அறிவொடு செறியும் நெறிவரும் உடலோ,

இது அனலை அனுமானமாகக் கொண்டு சேதன, அசேதனங்களை நிறுவுவதாகும்.

பொருள் :

பொன்னாலும், மணியாலும் செய்யப்பெற்ற ஒலி பொருந்திய வாகுவலையம் உள்ளிட்ட தோள் அணிகலன்களும், முடி முதலாக உள்ள தலை அணிகலன்களும், மகரக்குழை முதலாக உள்ள காதணிகளும் ஆகிய இவற்றைச் சுமை என்று அறியாது அணிகலன்கள் என்று அணிந்து மகிழும் மயக்கத்தை உடைய உலகத்தாரைப்போல மயங்காது, தேகத்தின் கண்ணே வாழுகின்ற நீ (உயிர்) உடம்பு இல்லையென்று அறிவாயா?

எவ்வாறென்றால் குவியலாக உள்ள நெல்லிருந்து உண்டாக்கப் பெற்ற அரிசியை மிக்க நெருப்பினாலே (அடுப்பு) ஆக்கப்பெற்ற முல்லை மொட்டுப் போன்ற மெல்லிய சோறும் அழகிய கைக்குப் பொறாது (சூடு) ஆற்றி உண்ணும் பருவத்தில் அவயவங்களில் ஒன்றும் குறைவில்லாத இருக்கும் பொழுதே இப்பொழுது தானே உயிர்போயிற்று என்று வருந்தி உயரற்ற உடம்பைப் பாடையில் ஏற்றி, பெண்கள் தம் மார்பிலும் தலையிலும் அடித்துக் கொண்டு வருந்த, பிணத்தை விரைவா க எடுத்துச் சென்று, சுடுகாட்டில் விறகினால் அடுக்கி எழுப்பப் பெற்ற நெருப்பில்

புகையெழுந்து விளங்க பிணம் வேகும். வேகும்பொழுது உடம்பு விறகைப் போன்ற இயல்பை உடையது என்பதை உணர்ந்து பார்ப்பாயாக.

இப்பொழுது இந்த உடம்பானது அக்கினிக்கு விருந்தாகும் நிலையிலும் அழகுடைய பெண்கள் காமதேவன் என்று கொண்டாடுகின்ற நிலையிலும் ஏதேனும் வேறுபாடு உள்ளதாயின் சொல்லுக.

அழகிய கண்ணாடியில் தோன்றும் பாவையும், சந்திரன் சூரிய ஒளியில் தோன்றும் நிழற்பாவையும் (நிழலாகிய பாவை) கைகால்களையும், மற்ற உறுப்புகளையும் மேலே தூக்கினாலும், கீழே தாழ்த்தினாலும் உயரவும், தாழவும் செய்யும். அதுபோலவும் கயிற்றுப் பொறியில் பாவையை இயக்குகின்றவன் (பொம்மலாட்டம்) செயலுக்கு ஏற்பப் பாவை இயங்குவது போலவும், கன்மவினையை அனுபவிப்பதற்கு ஏற்ப எடுக்கப் பெற்றுள்ள இந்த உடம்பும் ஆன்மாவாகிய சேதனத்தால் (அறிவால்) இயங்கும் (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் மூலம் உடம்பினுடைய அவலநிலை அசேதன (அறிவற்றது) நிலையில் கூறப்பெறுகிறது. பொன்னால் செய்யப்பெற்ற அணிகலன்கள் சுமையே தவிர அவை உடம்பிற்கு எந்த விதத்திலும் பயன்தாராது. மேலும் அணிகலன்களை உடம்பு தாங்கிக் கொள்ளும், ஆனால் அணிகலன்கள் உடம்பு ஆகாது. உடம்பு வேறு, அணிகலன்கள் வேறு. அது உடம்பு, உயிர் தங்குவதற்குரிய இடமாகுமே அன்றி உயிராகாது. உயிர் வேறு, உடம்பு வேறு. உயிர் சேதனம், உடம்பு அசேதனம் என்பதைப் பாடலின் முதற்பகுதி விளக்குகிறது.

உணவின் சூட்டை உணரும் பக்குவத்தை உடைய நல்ல பருவத்தில் வாழுகின்ற பொழுதே உடம்பு அறியாமலே உயிர் போகலாம். அவ்வாறு உயிர் போகிய உடம்பைப் பிணம் என்று பெயரிட்டுச் சுடுகாட்டில் விறகை மூட்டி எரிப்பது வழக்கம். ஈமத்தீயில் எரிகின்ற பொழுதும் வடிவம் மாறாத உடம்பு விறகு போலவே எரிகிறது. அவ்வாறு எரியும் பொழுது அசேதனமாகிய விறகிற்கும், உடம்பிற்கும் வேறுபாடில்லை. உடம்பும் அசேதனமாகவே அமைகிறது. இந்த அசேதனமாகிய உடம்பைப் பொம்மலாட்டத்தில் பொம்மைகளை இயக்கும் பொம்மலாட்டக்காரன் போல உயிரானது

உடம்பை இயக்குகின்றது. அவ்வாறு இயக்கும் பொழுது கண்ணாடியில் தோன்றும் உருவத்திலும், நிழலில் தோன்றும் உருவத்திலும் நாம் கையையும், காலையும் தூக்கும்பொழுது அந்த உருவமும், நிழலும் உறுப்புகளைத் தூக்குவது போன்ற செயல்பாட்டினை உடையதாகும் என்று பாடலில் விளக்கப் பெற்றுள்ளது. உயிர் சேதனம் என்றும், உடம்பு அசேதனம் என்றும் வலியுறுத்தப் பெறுகிறது.

அங்கதம் - தோள்அணிகள், மோலி - சொருகும் அணிகலன்கள். மகரம் - மாட்டும் அணிகலன்கள். மம்மர் - மயக்கம். பூட்சி - உடம்பைக் குறித்தது. மூரல் - சோறு. ("பசுந்திணை மூரல் பாலொடும் பெறுகுவீர், பெரும்பாண் - 168). முல்லை மொட்டுப் போல மென்மையான சோறும் சூடாக இருந்தால் கை தாங்காது. ஆற வைத்துத்தான் உண்ண வேண்டும். அதன் அழகு நோக்கிச் சூட்டோடு சாப்பிட முடியாது என்பதைஉணர்த்துவதற்காக அங்கைதாங்காது எனக் கூறப் பெற்றிருப்பது சிறப்புடையத்தாம். சட்டகம் - பிணம். உயிரில்லாத உடம்பு புகழ்ச்சி பெறமுடியாது என்பதால் புகழாக் கட்டில் எனக் கூறப்பெற்றுள்ளது. எருக்குதல் - பெண்கள் மார்பில் அறைந்து கொள்ளுதலைக் குறிக்கும். உயிரற்ற உடலை நெடுநேரம் வைத்திருக்க இயலாததால் சட்டென என வழக்குச் சொல் பயன்படுத்தப் பெற்றுள்ளது. பிணத்தில் அடுக்கப் பெறுகின்ற விறகுகள் காய்ந்த விறகாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்க முருட்டு அணை எனக் கூறப்பெற்றுள்ளது. கன்மத்தினை அனுபவிக்க உடம்பு எடுக்கப்படுகிறது என்பதை உணர்த்த நெறிவரு உடல் எனக் கூறப்பட்டது. பொறியொடு சிவணல் என - என்ற உவமை கயிற்றுப் பொறியோடு இணைந்து வருகின்ற பொம்மை போல எனக் கொள்ளப் பெற்றுப் பொம்மலாட்டம் உவமையாகக் கொள்ளப் பெற்றது.

---

## தேர் உள்ளிட்ட வாகனங்களின் மூலம் ஆன்மாவை உணர்த்துதல்

### பாடல் . 14

"தமனியந் தரளம் தான யானை
மருமம் பாணி வதன நோக்கம்
பதமுதல் தமவென இசைத்தோர் ஐயமற
ஒருபுடை யன்மை நோக்கி ஒருபுடைத்
தாமென மயங்கி ஏமுற்றார் மற்று

அறுசுவை அமைந்த ஐவகை உண்டி
மூவகை முற்றி அதனில் இருவகை
தாவாது உறப்பின் தங்க மேவா
இழித்தகு மலமா ஒழித்தனர் ஒன்றன்று
இம்மலம் நீமற்று அம்மல நீயேல்
ஆகம் ஆகி மற்றன்று போக
அறிவோர்க்கு அறிவு அந்நியம் என்ப
அறிவோ அறிதி அங்கம் பிறிதுமற்று
இருகால் ஆழிக் கொளுவிடை வீணா
தண்டு என் ஆரின் விண்டு அன்ன
மருமத் தட்டி மயிர்த்தோல் கிடுகின்
சேகரக் கூவிரத் திகிரியூர் வோன்
கொய் யுணக் கொடிஞ்சி குஞ்சரம்
மையுக ஒருநர் செய்தியின் மரியே"

இது உவமை முகத்தான் மேலும் உடம்பை இயக்கும் உயிரது உடம்பிலிருந்து வேறு என்ற நிலையை உணர்த்துகிறது.

பொருள் :

பொன், முத்து, புடவை, யானை முதலிய பொருள்களும், மார்பு கை, முகம், கண், கால் ஆகிய உறுப்புகளும் தம்முடையன என்று கூறுவோர், பொன், முத்து போன்றவை தாம் அல்ல என்பதனை ஐயமறப் பார்த்தும், மார்பு போன்றவற்றைத் தாம் எனப் பார்த்தும் மயங்குகின்றனர். அவர்கள் பித்தேறியவர்கள் ஆவர்.

அறுசுவையாக அமைந்த ஐவகைப்பட்ட உணவுகளை உட்கொள்ளும் பொழுது அவ்வுணவு மூன்று கூறாகப் பிரிந்திடும். அதில் இரு கூறு உடம்பில் தங்கும். மற்றொரு கூறு இழித்தகு மலமாகக் கழியும். அவ்வாறு கழிந்த மலம் நீயாவதில்லை. ஒருகால் அம்மலம் நீயாகும் என்றால் இருகூறாகிய மனமும், உடம்பும் ஆவாய். (அவ்வாறு ஆவதில்லை).

எனவே அறிவுடையவனே, அறிகின்றவர்கட்கு அறியப்படும் பொருள் அந்நியப் பொருளாகும் என்பதை அறிவாயாக. அதன் அடிப்படையில் அறியப்படும் தேகமும் உயிருக்கு அந்நியப் பொருளாகும்.

இரண்டு கால்கள் சக்கரங்களாகவும், விலா எலும்பு செறிந்த முதுகுத்தண்டு அச்சு மரமாகவும், மலை போன்ற மார்பு தேர்த்

தட்டாகவும் மயிர் கொண்ட தோல் தேரின் கிடுகாகவும், சிவதலை என்னும் சிகரமும் கொண்ட உடம்பு என்ற தேரை ஊர்கின்ற (செலுத்துகின்ற ) தேரோட்டி உயிராவான். இவன் குதிரை, தேர், யானை என்று சொல்லப் படுவனவற்றை செலுத்தும் தன்மையன் ஆவான் என்பதை உணர்வாயாக.

விளக்கவுரை :

இப்பாடல் மூன்று கருத்துகளைக் கொண்டது.

1. ஒருவன் தன்னிடமுள்ள பொன், முத்து, புடவை, யானை ஆகியவற்றையும் தன்னுடைய கை, கால், கண் உறுப்புகளையும் தம்முடையன எனக் கொள்கின்றான். அவ்வாறு கொள்கின்ற போது பொன், யானை ஆகியவற்றைத் தம்மிடமிருந்து வேறுபட்டவை என்று உணரும் போது, உடல் அதன் உறுப்புகள் தன்னிடத்திலிருந்து வேறுபட்டவை (பிறிதின்கிழமை) என்பதை அறியாது பித்தேறியவனாக உள்ளான்.

2. உட்கொண்ட உணவு, மனம், உடம்பு, மலம் எனற மூன்றாக (கூறு) பரிணாமம் (வளர்ச்சி) பெறுகிறது. ஒரு கூறு மலம், இழிந்த மலத்தை நான் என்று கூறுவதில்லை. அது போலத் தேகத்தையும் நான் (உயிர்) என்று கூறுதல் தவறு. அது அந்நியமாம்.

3. தேரினைச் செலுத்துகின்ற தேரோட்டி போல உடம்பை இயக்குவது ஆன்மா ஆகும். பொன், முத்து, ஆடைகளோடு பிறிதின் கிழமைப் பொருளுக்கு அஃறிணை ஆகிய யானையும் உடன் கூறப்பெற்றது. தானை – உடைமையைக் குறிக்கும். அயமற– ஐயமற, அறுசுவை – கைப்பு, காரம், புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, இனிப்பு. ஐவகை உண்டி கடித்தல், பருகுதல், விழுங்குதல், நக்குதல், உரிஞ்சுதல். அன்னம் முக்கூற்று உடையதனை,

> "ஒரு கூறு மலமாகும், ஒரு கூறு உடம்பாகும்
> ஒருகூறு மனமாகும் உண்டுஅற்ற அன்னம்"
>
> (சசிவந்ந போதம். பாடல். 43)

என்பர். அறிவான் வேறு, அறிபொருள் வேறு என்பதை உணர்த்த அறிவோர்க்கு அறிவு அந்நியம் எனக் கூறப்பெற்றது. ஆழி – சக்கரம், வீண்தண்டு – முதுகெலும்பு.

"வீண்தண்டாக வன்மார்பு தட்டாக" என்பதும் அது (சசிவந்நபோதம் – பாடல், 41) கிடுகு – கூரை, கொய்புனைக்கொடிஞ்சி – பக்கமயிரை உடைய குதிரை, குஞ்சரம் – யானை.

---

## 2. சம்மிய ஞானம் - பசு தரிசனம்
### பாடல் . 15

"மாதவ நுனித்த கோதறு குணத்தர்
மெய்யுணர் பக்கம் நாடின் பொய்தவ
இருவகைப் படிவம் ஆவ புருவில்
சூக்க தூலமும் அவற்றது தொடர் பாம்
இருவகைப் பஞ்ச விஞ்சதி தெரியின்
உள்நிலை புறநிலை எண்ணுத் தருபவொடு
இன்னும் கேண்மதி பன்னுவ மன்னிய
மூவகைக் குற்றம் முக்குண மும்மல
மூவகை மண்டிலம் முப்பொறி தாவா
ஐவகை நிறனொடு ஐவகைக் கோசமும்
ஐந்தா சையமும் ஆறா தாரமும்
மைந்தரும் மகளிரும் அலியும் வாதமும்
சீலமும் நோன்பும் ஞானமும் பிறவும்
காண்தகு திறத்த தெய்ய ஈண்டிய
அறியா நீயே அறிவனை செறிஇதழ்
கந்தம் கொண்டது களைந்ததைக் கடுப்ப
முந்து கிளந்து எவையும் முறைகழித்து ஒளிபோல்
அறிவொடு வினையின் பிறவகை ஓரீஇ
நின்றதை உணர நின்னொடு
மன்ற கண்டனை மறையது துணிவே."

இது உடம்பு வேறு ஆன்மா வேறு என்று கூறி உடம்பின் தன்மையைப் பகுத்துக் கூறுவதாம்.

பொருள் :

பெருமைக்குரிய சரியை, கிரியை, யோகம் என்ற மாதவத்தால் ஞானத்தைப் பெற்றோர் உடம்பின் தகுதியை ஆராயின் உடம்பு இருவகைப் பட்டிருக்கும். சூட்சுமம், தூலம் என அத்தகைய ஆய்வு முறையில் மேலும் ஆராய்ந்தால் உள்நிலைக்கூறு, புறநிலைக்கூறு என இருவகைப்படும். உள்நிலைக்கூறு இருபத்தைந்து

புறநிலைக்கூறு இருபத்தைந்து. இவற்றோடு இன்னும் ஆராய்ந்தால் கூறுவோம் கேட்பாயாக.

மூவகைக் குற்றம், முக்குணம், மும்மலம், மூவகை மண்டிலம், முப்பொறி, ஐவகை நிறம், ஐவகை கோசம், ஐந்து ஆசயம், ஆறு ஆதாரம், மைந்தர், மகளிர், அலி, தசவாயுக்கள், நல்லொழுக்கம், தவம், காரண அறிவு இத்தகைய வேறுபட்டவைகளுமாகக் கூடியவை எல்லாம் அசேதனங்களே. இவற்றை அறிந்து கொள்ளும் நீ சேதனம் ஆவாய்.

நெருங்கிய இதழ்களைக் கொண்ட பூவில் உள்ள மணத்தை ஏற்று பூவை விட்டுவிடுவதைப் போல முன்னே கூறப்பெற்ற அசேதனப் பதார்த்தங்களை (பொருளை) எல்லாம் அறிந்து அவற்றை முறையாகக் கழித்து - பொருள்களைக் காட்டும் ஒளி போல அறிவனால் பிற கிரியைகளை நீக்கி எஞ்சி நின்ற ஞானத்தை அறிவதால் முடிபையும், முறைமையையும், உன்னையும் அறிந்தவனாவாய் (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் உடம்பின் இருவகையைச் சிறப்பாக விளக்குகிறது. சரியை, கிரியை, யோக வழியில் தான் ஞானம் நிகழும் என்பதை உணர்த்த மாதவ நுனித்த கோதறு குணத்தர் எனக் கூறப்பெற்றது. "மேற் சரியை, கிரியை யோகங்களைச் செய்துழி அல்லது நன்னெறியாகிய ஞானத்தைக் காட்டியல்லது மோட்சத்தைக் கொடா ஆகலான" (சிவ, போதம், சூ. 8, முதல் அதி - ஏது) என்பர் பிறரும். இருவகைப் படிவம் சூட்சும, தூல வடிவங்கள். தூலத்திலும் சூட்சமம் சிறப்புடைத்து என்பதால் "பொருள்வில்சூக்கம்" எனப்பட்டது.

உள்நிலை இருபத்தைந்து, (சூக்கும நிலை).

1. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் - ஐம்பூதம்.
2. சத்தாதியாதிய தன்மாத்திரை ஐந்து.
3. வாக்கு ஆதியாகிய கன்மேந்திரியம் ஐந்து.
4. ஞானேந்திரியம் ஐந்து.
5. அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆக 25.

புறநிலை இருபத்தைந்து : (தூல நிலை)

1. என்பு, தோல், உரோமம், நரம்பு, இறைச்சி

2. உவர்நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரம்
3. பசி, தாகம், உறக்கம், சோம்பல், மைதுனம்.
4. சிரிப்பு, அழுகை, நிற்றல், இருத்தல், போதல்
5. காமம், குரோதம், லோபம், சங்கற்பம், விகற்பம்

| | | |
|---|---|---|
| மூவகைக்குற்றம் | : | காமம், வெகுளி, மயக்கம் |
| முக்குணம் | : | சாத்துவிகம், இராசதம், தாமதம் |
| மும்மலம் | : | ஆணவம், கன்மம், மாயை |
| மும்மண்டிலம் | : | சூரியன், சந்திரன், அக்னி |
| முப்பொறி | : | மனம், வாக்கு, காயம் |
| ஐவகைகோசம் | : | அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம் |
| ஐந்து ஆசயம் | : | ஆமாசயம், பக்குவாசயம், மலாசயம் மூத்திராசயம், கருப்பாசயம் |
| ஆறு ஆதாரம் | : | மூலாதாரம், சுவாட்டானம், மணிபூரகம், அராகம், விசுத்தி, ஆஞ்ஞை. |

இதழ்கள் அதிகம் உள்ள மலர்களில் மணம், தேன் அதிகம் என்பதால் செறியிதழ் எனக் கூறப்பெற்றது.

சூட்சம தேகம் – உணர்தற்குரியது
தூலதேகம் – காண்பதற்குரியது.

---

## பஞ்ச அவத்தை இயல்

### பாடல் . 16

"கால் கொடுத்து இருகைமுட்டி வாழிய
வெந்நில் தண்டுஎன விடங்கத்து இன்னியல்
பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயிறு அசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
ஐம்புலச் சாளரத்து அரும்பெறல் மாடத்து
உம்பரீ மணிக்குடச் சென்னிப் பொங்கிய
கூந்தல் பதாகை நான்குநிலை தழீஇய
ஆங்கினிது அமர்திறன் அறையின் ஆன்ற
சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம்
பிருகுடி நாப்பண் ஒருபெருங் கந்தரம்
மருமத்து ஆதி வலஞ்சுழி உந்தி
ஒருநான் கங்குலி உம்பர் வரன்முறை
செவி மெய்கண் வாய்மூக்கு எனப்பெயரிய

வாயின் மிலேச்சர், சாரணர் தூதர்
சூத மாகதர் புரோகிதர் என்ற
மேதகு புத்தீந்தியமும் தீதுஅறு
வாக்கொடு பதம்கை பாயுரு உபத்தம்என்
இவுளி மறவரும் யானை வீரரும்
திகிரி தூண்டிய தறுகணா ளரும்
வன்கண் மள்ளரும் தந்திரத் தலைவரும்
என் கருமேந்தியத் திறளும் எஞ்சிய
ஓசை பரிசம் உருவம் இரதம்
கந்தம் உரைநடை கொடைபோக்கு இன்பம்என்
விடயப் பல்பரிசனமும் இடையாப்
பிராண, வபான, உதான, வியான
சமான நாக கூர்ம கிருகர
தேவதத்த தனஞ்சயன் என்ற
ஈரைந்து உறுதிச் சுற்றமும் நியதி
சிந்தித்து ஆய்ந்து துணிந்து செயற்படும்
அந்தக் கரண அமைச்சரும் தந்தம்
முறையுளி வழாஅது துறைதோறு ஈண்டிய
சதுரங்கத்து நீதி யாகிப்
பேர் அத்தாணிச் சீர்பெறத் துன்னி
வீசுவ வீசி விரும்புவ விரும்பி
மாசில் காட்சி மன்னன் நீங்கிப்
பல் பரிவாரமும் விள்ளாச் சுற்றமும்
தந்திரம் புணர்ந்த மந்திர மாக்களும்
பலர்புகழ் அறியா அவைபுகும் அரங்கின்
நனைந்துஆய்ந்து துணிந்து செயல்மணந்து
இனிது உணர்ந்து
நனவெனக் கனவின் நன்னடை வழாஅது
உரைத்தனன்; சொப்பனத் தகத்து இனிது இறந்து
மந்திரத் தலைவனும் வன்கடும் பதிபனும்
மந்திர பூமி மருங்கு போகிச்
சிந்தை மாத்திரம் கனவலின் நனவின்
தந்துரை சுழுத்தியின்றே மந்திரத்
தலைவற் றணந்து விலைவரம் பில்லாச்
சிங்கம் சுமந்த ஐம்பேர் அமளிப்
பள்ளி மண்டபத் தானும் தனாது
திகிரி யுருண்ட பெருவனப்பு ஏய்ப்ப

உறுதிச் சுற்றத்து உறுவளி எடுப்ப
ஏற்றம் அழிவு சீற்றம் ஆற்றல்
இழிச்சல், பழிச்சல் இன்ப துன்பம்
ஒழித்தனன் துரியத்து அழித்து இனிதுஅதீதத்து
ஒருவகை எங்கணுமாகி இருள் இரி
சுடர்த் தொழில் சாக்கிரம் தாங்க நான்கின்
இடத்தகை தெரிதனில் தெரியு மாறே"

இது முன் எட்டாம் பாடலில் மூன்று காரண அவத்தை கூறியபின், அவற்றில் நடக்கும் காரிய அவத்தை ஐந்தைக் கூறி - உடம்பில் ஆன்மா நின்று போகிக்கும் படிநிலைகளைக் கூறுவது.

பொருள் :

கால்கள் இரண்டும் கொடுத்து. இரண்டு கையையும் வைத்து, முதுகெலும்பை வீணாதண்டம் என்று முகட்டாகக் கொண்டு, பழு எலும்புகளை (விலா எலும்பு) சுவராக நிரைத்து, நரம்பைக் கயிறாக் கொண்டு கட்டி, தசையை மண்ணாக மேவி, மயிருடைய தோலை கூரையாக வேய்ந்து, ஐம்புலன்களைச் சாளரங்களாக அமைத்து, பெறுதற்கு அரிய மாடத்தில் தலையைப் பொற்குடமாகப் பெற்று, கூந்தலைக் கொடியாக நிறுவி – அவத்தையை நான்கு நிலை (வாசல்) யாகப் பொருந்திய தேகத்தில் (உடம்பில்) இனிதாக இருக்கும் ஆன்மாவாகிய அரசன் அமர்ந்திருக்கும் முறைமையைக் கீழ்க்கண்டவாறு சொல்லுவாம்.

உடம்பில் ஆன்மா புருவ மத்தியில் நின்றால் அது சாக்கிர அவத்தை. ஆன்மா கழுத்தடியில் நின்றால் அது சொப்பன அவத்தை. ஆன்மா நெஞ்சடியில் நின்றால் அது சுழுத்தி அவத்தை, வலமாய் சுழித்திருக்கின்ற நாபிக்கு மேலே நான்கு அங்குலம், கீழ் நான்கு அங்குலம் என எட்டு அங்குலத்தில் நின்றால் அது துரியா அவத்தை எனப்படும். (துரியா தீதத்தில் கருவிகள் கூடாமை பற்றி அது விலக்கி நான்கு நிலையாயிற்று).

இனி சாக்கிர அவத்தை ஆகியவை நிற்கும் முறைமையாவது :செவி எனச் சொல்லப்படும் மிலேச்சர் (புறநாட்டார்) மெய் என்னும் சாரணர் (ஒற்றர்) கண் என்னும் தூதர், வாய் என்னும் சூதமாகதர் (ஏவலர்) மூக்கு என்னும் புரோகிதர், ( ஆன்மா அரசன்என உருவகிக் கப்பட்டதால் ஐம்புலன்கள் அதிகாரிகளாக உருவகப்படுத்தப் பெற்றுள்ளன. ) என்ற ஞானேந்திரிய வர்க்கமும் (5)

தீது அற்ற வாக்கு என்ற குதிரைச்சேவகர், கால்கள் என்ற யானை வீரர், கை என்ற தேரோட்டி, பாயுவாகிய காலாட் படையினர், உபத்தம் என்ற சேனாதிபதி ஆகிய கன்மேந்திரிய வாக்குகளும், (5)

எஞ்சிய சத்தம், பரிசம், உருவம், ரசம், கந்தம், வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் என்று சொல்லப்பெற்ற ஞானேந்திரிய கன்மேந்திரிய விடயங்கள் ஆகிய பரிவாரங்கள் பத்தும் (10)

கெடாத பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்ற பத்து உறுதிச் சுற்றமும் (10).

சித்தம் சிந்தித்து, புத்தி விசாரித்து, ஆங்காரம் துணிந்து, மனம் அதனைச் செய்ய தொழிற்பட்டு வரும் கரணங்கள் ஆகிய அமைச்சரும் (4) தம் தம் துறையில் இந்த முப்பத்தி நான்கு பேரும் குற்றப்படாது இயங்க, சதுரங்க மத்தியில் நீதிமானாக அத்தானி மண்டபமாகிய புருவமத்தியில் ஆன்மாவாகிய மன்னவன் சிறப்பாகப் பொருந்தி, அறிவன அறிந்து செய்வன செய்து இருப்பின் - இது சாக்கிர அவத்தையாம்.

(இந்தச் சாக்கிர அவத்தையில் ஞானேந்திரயமும் கன்மேந்திரியமும் (10) செயல்படாது ஒடுங்க) சத்தம் முதலிய பரிவாரங்கள் பத்து, பிராணன் முதலிய உறுதிச் சுற்றம் பத்து, அந்தக்கரணமாகிய அமைச்சர்கள் நான்கு ஆகிய 24 தத்துவங்கள் மற்ற தத்துவங்கள் புகாது, தாங்களே புகுந்து கண்டம் என்ற கழுத்தடியாம் அரங்கில் சித்தம் நினைந்து, புத்தி ஆய்ந்து, ஆங்காரம் துணிந்து, மனம் அதனைச் செய்து இத்தனையும் நடந்து நனவென்று மயங்கிக் கனவு என்ற அவத்தை (சொப்பன அவத்தை) புருடன் காணும். நனவு போல அனைத்தையும் கூறும்.

இந்த சொப்பன அவத்தையில் இருந்து போந்து மந்திரத் தலைவனாகிய சித்தமும், உறுதிச் சுற்றத்தவனாகிய பிராணவாயும், சுழுத்திதானமாகிய இதயத்தில் புகுந்திட புருடன் இயங்கும். (எனவே சுழூத்தில் மூன்று மட்டும் இயங்கும்) சுழூத்தி அவத்தையில் சாக்கிர அவத்தை போலக் கூடுவதில்லை.

சுழூத்தி அவத்தையில் செயல்பட்ட மந்திரத் தலைவனாம் சித்தம் செயல்படாது நீங்க, பிராணவாயு என்ற உறுதிச் சுற்றம் மட்டும் இயங்கும். அது எது போல என்றால் சிங்கம் சுமந்த படுக்கையில்

அரசன் பள்ளி கொண்ட காலத்திலும் அவனுடைய ஆணைச்சக்கரம் செயல்படுதல் போல். உயர்ச்சி, இழிவு, சீற்றம், பொறுமை, வைதல், வாழ்த்தல், இன்பம், துன்பம் ஆகியவற்றை ஒழிந்து நாபித்தானத்திலே புருடன் நின்று உடம்பிற்குக் காவலாய் துரிய அவத்தையில் நிற்பான்.

துரிய அவத்தையில் பிராணவாயு நிற்க அந்த அவத்தையை ஒழித்து மூலாதாரத்தில் ஒரு படித்தாகிய ஆணவ மலம் மறைக்க எங்கும் வியாபியாகப் புருடன் இருப்பான். இது துரியாதீத அவத்தையாம்.

ஆன்மா அவத்தைப்படும் நான்கு இடத்தும் (துரியாதீதம் நீங்க) இருளைக் கெடுக்கும் முப்பத்தைந்து கருவிகளாகிய விளக்கின் தன்மையால் பொருந்துதலை அறியும் வழி அறிக (என்றவாறு)

விளக்கவுரை :

ஆன்மா அடையும் அவத்தை (செயல்படும்நிலை) காரண அவத்தை, காரிய அவத்தை என இருவகைப்படும். இங்கு காரிய அவத்தை ஐந்தும் பற்றிக் கூறப்படுகிறது. முதல் பகுதியில் உடம்பானது ஒரு மண்டபமாக உருவகிக்கப் பெற்றுள்ளது. கொண்ட உருவகத்திற்கேற்பக் கால்முதல் படிநிலை வரை உறுப்புகள் தரப்பெற்றுள்ளமை சிறப்புடைத்து, இதனையே

"கால் கொடுத் திருகை யேற்றிக்
கழிநிரைத்து இறைச்சி வேய்ந்து
தோல் படுத்து உதிர நீரால் சுவரெடுத்து"

என்பார் திருநாவுக்கரசரும், (33.4) பாயு - குதம் (மலவாய்), உபத்தம்- கருவாய், இவுளி - குதிரை, திகிரி - சக்கரம், மள்ளர் - போர்வீரர். அத்தானி - கொலுமண்டபம். இப்பாடல் கருத்தினைச் சிவஞான சித்தியார்,

"சாக்கிர முப்பத்தைந்து நுதலினிற் கனவு தன்னில்
ஆக்கிய இருபத்தைந்து களத்தினிற் சுழுமுனை மூன்று
நீக்கிய இதயம் தன்னில் துரியத்தில் இரண்டு நாபி
நோக்கிய துரியா தீத நுவலின் மூலத்தில் ஒன்றே"
(சுப. பா. 223)

என்று குறிப்பிடும்.

## ஆன்ம சமாதி
## பாடல். 17

“இந்தியப் பந்தனை இரியக் கண்டிசின்
கடவுட் தன்மை இடைவருதுரியம் என்
மடவோர் காட்சி வாயன்று உடலுநர்
ஓம்பரன் கடந்து வீங்கு செலற் தானை
நாப்பண் அன்றியும் பூக்கேழ் ஓதி
மடவோர் மருட்டு மாவீழ் பள்ளி
இடனுடை வரைப்பும் இறையோன் இறையோன்
பொன்செய் புலவன் புகர்முகக் களிறும்
வெஞ்சின வேங்கையும் எண்கும் யாளிவும்
கண்கவர் பெய்தி மன்பதை மருள
ஐயமின்றி இயற்றிய ஆடகத் தசும்பினும்
வளைவாய் அமையா மணிமருள் குடத்தும்
அவிரொளி விளக்குஒன்று அல்கல் அல்லதை
திரிபு முண்டோ தெரிந்திசி னோர்க்கே
துரியத்து அல்க விரிபுனல் எவையும்
வறிய என்று மருட்கை மருட்டின்
என்னைஇவ் இடத்துஇவற்கு இரண்டே மன்எனத்
தரியானாகி சாக்கிரத் தானும்
துரியத் தன்மையன் என்னிற் தரியா
ஐம்புலம் அசேதனம் அறிவன் அநாகுலன்
நொந்துஇவை நுகர்பவர் யாரே என்றுணர்
அறிவறி சமாதி என்ப பொறிவளர்
ஐம்புலத்து அரசுஅட்டு ஆர்த்துஅவ்
உம்பர் உயர்நிலை உலகு உய்த்தோரே”

இது முன் கூறப்பெற்ற ஐந்தவத்தையில் துரியத்தில் ஆன்மா வேறு கருவிகள் செயல்படாது பிராணவாயு மட்டும் செயல்படுவதால் துரியத்தின் ஆன்மா சுத்தன் ஆவான் என்று கூறும் மாயாவாத சமயத்தாரை மறுப்பதாம்.

பொருள் :

இடையிடை வரும் துரியாவத்தையில் ஐம்புலன்கள் பந்திப்பது கழியக் காண்பதால் ஆன்மா பதியினுடைய தன்மையை எய்துவான் என்று மாயாவாதியாம் மடவோர் கூறுவது மெய்ம்மையன்று.

பகைவர்களாலே காக்கப் படுகின்ற அரணை அழித்து விரைந்து செல்லும் படை நடுவே இருப்பினும், பூக்களைப் பெய்த கூந்தலை உடைய மகளிர் மயக்கும் பஞ்சணையில் இருப்பினும் ஆணை குன்றாமையால் அரசன் அரசன்தான்.

பொற்கொல்லன் (குடத்தின்) முகத்தில் யானை, வேங்கை, கரடி, சிங்கம் என்ற உருவங்களைப் பார்த்தவர் மயங்கக் குற்றமறச் செய்யப் பெற்ற பொற்குடத்திலும், இரத்தினங்களின் ஒளியையே மங்கச் செய்யும் வாய் இல்லாத (குடுக்கை போன்ற – துளைகள் உள்ள) ஊமைக் குடத்தும், ஒளியை உடைய ஒரு விளக்கை இட்டால் அவ்விளக்கு இரு குடத்திலும் ஒரே நிலையில் தோன்றுமே அன்றி வேறுபாடு உண்டாகத் தோன்றாது.

புருடன் துரியா அவத்தை (பேருறக்கம்) அடைந்த பொழுதும், சாக்கிர அவத்தையில் (கனவு) விரிந்து செயல்பட்ட 35 கருவிகளும் அசேதனம் (அறிவற்றது) என்று நிச்சயித்து அஞ்ஞான நிலையை ஒழித்துப் பார்த்தால் துரியத்திலும் – சாக்கிரத்திலும் ஆன்மா இரண்டு தன்மையற்றாம் – (மாயாவாதி இரண்டு தன்மை என்று கூறுவது ஏன்?) என மறுத்தவாறு.

இருவிடத்து இருதன்மையுடைத்தன்று என்பதை ஏற்காது சாக்கிரத்தில் துரியத்தன்மை (சுத்தம்) புருடன் உடையன என்று கூறுவதாயின்,

கெடாத இயந்திரங்கள் அசேதனம், இறைவனோ நின்மலன். எனவே சுகதுக்கங்களுக்கு வருந்தி ஆன்மாவைத் தவிர அவற்றைப் புசிப்பவர் யார்? (மலங்களை அனுபவிப்பது யார்) ஆன்மாவைப் பற்றிய அறிவை அறிவதை ஆன்ம சமாதி என்று கூறுவர். இந்திரியங்களில் வருகின்ற விடயங்களுக்குத் தலைவனான அஞ்ஞானத்தை அழித்து, உம்பர் உலகாம் உயர்நிலை உலகு அடைந்தோர் இதனை நன்கு அறிவோர் ஆவர் (என்றவாறு).

விளக்கவுரை :

தத்துவங்களைக் கூறுவதொடு, பிறசமயத் தத்துவங்களையும் மறுப்பது சமயவாத இயல்பு என்பதை இப்பாடல் நிறுவுகிறது. இதில் மாயாவாத சமயம் மறுக்கப் பெறுகிறது. (மாயாவாதம் – ஏகான்ம வாத புறச் சமயத்தில் ஒரு வகை) மடவோர் –

அறிவில்லாதவர். வீங்குசெலல் - மிகுதியாச் செல்லும் படை. "வீங்குசெல் மண்டிலம்" என்பது சங்க இலக்கியத்தொடர். (புறம். 8). அரசன் அகநிலையிலும், புறநிலையிலும் பாராட்டப்படுவான் என்பதால் இருநிலையும் கூறப்பெற்றது. குடத்தின் புறத்தே சிறப வேலைப்பாடுகள் செய்வது தமிழகத்துக் கலைச்சிறப்பு பண்டையது என்பது பெறப்படுகிறது. ஊமைக்குடம் – வாயில்லாத குடுவைக்குடம், உருண்டை வடிவில் பல துளைகளைப் பெற்றிருக்கும். இதற்குள் விளக்கிட்டால் துளைவழியே ஒளி கிடைக்கும். ஆன்மாவை அறிவும் அறிவு"ஆன்ம சமாதி" எனப்பட்டது. உம்பர் உயர்நிலை உலகு உயர்ந்தோர் ருத்திர புவனமும் 224 உலகத்திற்கும் மேலான உலகு உய்ந்தோர் எனப்படுவதால் உயர்நிலை உலகு எனக் கூறப்பெற்றது.

---

## 3. பாசபந்தம் - மலம் மூவகை எனல்
## பாடம். 18

"யானே இன்னன் ஆயினேன் எற்சேர்
ஆனாப் பாசம் அறியல் விரும்பினென்
அறவ! என்ன; அருளோன் அறையின்
குறையா மும்மலக் கொத்தே முறைதேர்
ஆணவ மாயை கருமம் ஆங்கவை
பேணிற் செம்பிற் பெருகிருந் துகள்என
அறிவினை மறைத்தல் அணிமல மாயை
நெறிதேர் பெய்திய நீள்நிலம் அந்தம்
முற்சொன் மாக்கலை உற்ற காரணங்
கருமம் இருவினை தருமம் அதருமம்
பெரும மலமும் பிறழா மாயையும்
மற்றவற் பிணிப்பே ஆயின் எற்றுஇவை
இரண்டென் இசைத்தல எனினே தெருண்டிசின்
யாண்டும் ஒருவாது ஒளிர்வது மீண்டும்
பிரிந்து புணர்ந்து உறையும் பெற்றியிருந்ததும்
ஒன்றே போலும் நன்று நனியுணர்
மறைத்தற் தொழில்பூண் பதுவும் அதனைக்
குரைத்தற்கு எய்திக் குலவுவதோர் இடை
இரண்டல என்பதுஎன் இருள்இருள் இரிசுடர்
முரண்டா நின்ற முழுமல மாயை
அன்னதாக அறிவோடு ஆணவம்

துன்னியது அனாதித் தொடர்புற்று என்னின்
என்னை புற்கலன் தருமம் இ∴தெனப்
பன்னா மரபு எனின் பகர்வன் அன்னோ.
ஞானமும் அதற்கு எதிராய ஊனமும்
பாரினில் பலவோ ஒன்றோ தானப்
புற்கலன் தருமம் தருமம் இன்மை
சொற்தரின் சித்தாம் மற்றவற் தருமம்
அவண்அன்று எனின்அவன் பரிணாமத் தொடு
சிவனுஞ் சேதன அசேதன மாதல்
ஒன்றுக்கு ஒன்றாது ஆகலின் என்றும்
பரிணாமத் திறம்படி வதுவறி துகாண்
அருள்நேர் அறிவுக்கு அல்லாது ஒல்காது
ஆங்கம் மூன்று மலரும் நீங்கா
ஈங்கிவற்கு இயைந்த இலா ஈங்கிருள்
இறுத்தகாலை மறுப்பிரித்து அகன்ற
தீதறு நெடுங்கண் ஆதன் நாட்டத்து
அயல்ஒன்றின்மை போலவும் முயல்வுழி
நுண்ணூற் பேரில் இழைத்து அகப்படுபு
தன்முதல் கெடுஉம் எண்ணாக் கீடத்து
இறும்பூதி யார்அ∴து அறிந்திசி னோர்அக்
களியிடைக் கலித்தது என்ப
இளிவரும் உரை அவ்இரு வினைத் திறனே”

இது நூலின் மூன்றாம் பகுதி பாசபந்தம். முப்பொருள் உண்மையில் முதற்கண் ஆன்மாவின் உண்மைநிலை அறிந்த மாணவன் பாச உண்மை பற்றி வினவ - அவற்கு பாச பந்தத்தை உணர்த்துவான் தொடங்கி - இதில் மும்மலங்கள் தொகுத்துக் கூறுகிறது.

பொருள் :

அறவோனே! நான் மலசகிதனாயினேன். என்னைச் சேர்ந்து பிரியாதிருக்கும் பாசத்தை அறிதற்கு விரும்பினேன். அது பற்றிக் கூறுவீராக. (என்று மாணவன் விண்ணப்பிக்க) அருட் திருமேனி ஆசிரியன் அருளிச் செய்வான்.

பாசத்தைப் பற்றிச் சொல்லின், அழிவில்லாத மும்மல வர்க்கமாய்க் காண நிற்பது அது. அவை தன்னை முறையே கூறின் ஆணவம், மாயை, கன்மம் என்ப. ஆங்கு அவை பற்றி அறிய

விரும்பினால் அறிந்திடுவாயாக. செம்புடன் கூடிய மிக்க களிம்பு போலச் சகசமாய்க் கூடிப் பொருள்களின் உண்மையை அறியவொட்டாது ஆன்ம ஞானத்தை மறைப்பது ஆணவ மலத்தின் இலக்கணமாகும். மாயை மலத்தின் இயல்பை விசாரிக்கின் முன்னர் சொல்லப் பெற்ற கலாதத்துவ முதல் பிருதிவி வரை பொருந்திய தத்துவங்களுக்கு முதற்காரணமாக இருப்பது மாயை. கன்ம மலமாவது இருவினை எனப்படும். அஃது புண்ணியம் பாவம் என இரண்டாக இருக்கும்.

ஆணவ மலமும், கெடாத மாயையும் ஆன்மாவைப் பந்திக்கும் பந்தணையாயின் இவற்றை இரண்டாகக் கொள்வது எற்றுக்கு எனின் - சொல்வதை அறிந்திடுக. என்றைக்கும் நீங்காது விளங்கி நிற்கும் ஆணவமலமும், கன்மத்துக் கீடாகத் தனுகரண புவன போகங்களுக்கு மூலகாரணமாய், விடுவதும் பற்றுவதுமாகிய முறைமை உடையதாகிய மாயாமலமும் ஒன்றாய் இருக்க இயலுமா? நன்கு ஆராய்ந்து உணர்ந்து கொள்வாயாக.

மறைத்தலையே செயலாக உடைய ஆணவ மலமும், அதனை ஒரு காலத்தில் குறைத்தற்கு வந்து பொருந்தும் மாயாமலமும் இரண்டல்ல என்று சொல்லுவது சரியாகுமா? இருளும், இருளைக் கெடுக்கும் விளக்கும் போல ஆணவமும், மாயையும் மாறுபாட்டோடு கூடி நிற்பதாகும்.

இது இவ்வாறாக, ஆணவமலம் ஆன்மாவோடு கூடியது, அனாதியாகச் செறிந்துள்ளது என்றால் ஆணவமலமும் ஆன்மாவிற்குரிய தருமம் (குணம்) என்று சொல்லாத முறைமை ஏன் என்றால் - பதில் கூறுதும். அறிவையும் - அதற்கு மாறுபாடான அறியாமையைப் பண்ணுவதான ஒன்றையும் ஒன்று என்பதா, பல என்பதா? ஆய்ந்து பார்ப்பாயாக. (ஆன்மா சித்து அறிவுடையது, ஆணவம் - அறிவில்லாதது).

ஆன்மாவுக்குக் குணமும் குணம் இல்லாமையும் ஆக இருக்கும்படியாகச் சொல்லின் ஆன்மா சித்தாக இருப்பது. எனவே ஆன்மாவுக்குக் குணம் அப்படியன்று என்று சொன்னால் ஆன்மாவுக்கு வளர்தல் சுருங்குதல் முதலாகிய பரிணாமத்தோடு கூடியது ஆகிவிடும். திருவருள் போல (பராசக்தி) இச்சை, ஞானம் கிரியா சக்தி உடைய ஆன்மாவுக்குப் பரிணாமம் கூடாது. எனவே ஒதுக்கமற வ்ந்த அம் மும்மலமும் சகலா அவத்தையில்

ஆன்மாவோடு கூடியவாகும்.

பூமியில் இருள்சேர்ந்த இடத்துக் காணும் கண்ணுக்கும், குருட்டுக் கண்ணுக்கும் காணுதலாகிய தொழில் நடவாமை போன்றதாம். (அதாவது ஆன்மா இருள் நீங்கக் காணும் கண் போல, அஞ்ஞானம் நீங்க ஞானம் பெறும். ஆனால் ஆணவம் குருட்டுக் கண்போல அஞ்ஞானத்தையே பெற்றிருக்கும். எனவே ஆன்மாவின் குணமாக ஆணவத்தைக் கூற இயலாது).

மேலும் நுண்ணிய நூலாலே பெரிய கூட்டைக் கட்டி, அதற்குள்ளே அகப்பட்டு தானே கெடும் (குழவி) புழுவைப்போல ஆன்மா இந்த உடம்பிலே நின்று முயலும்போது வேறு சரீரம் எடுத்தற்குரிய மாயையும் (மலத்தையும்) உடையதாம். இது வியப்பிற்குரியதாம்.

கன்ம மலமான புண்ணிய பாவக் கூறுபாடு மலமாயை மயக்கத்தில் வந்ததாம் அதன் தன்மையை யார் தான் அறிவார். ((என்றவாறு)

விளக்கவுரை :

மும்மலங்கள் பற்றிய சுருக்கத்தை இப்பாடல் தருகிறது. ஆசிரியர் மாணவர் உரையாடல் அமைப்பில் இப்பாடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆணவம், மாயை, கன்மம் மூன்று மலமும் கூடும்போது பாசம் எனப்படும். ஆதலால் "பாசம் அறியல் விரும்பினன் எனக் கூறப்பெற்றது. செம்பினுள் களிம்பு - செம்பு தோன்றும்போதே தோன்றி - மறைந்தும் வெளிப்பட்டும் இருப்பது போன்ற பாடலில் பெருகிருந்துகள் எனக் கூறப்பட்டது. தெருண்டிசின் - சொல்ல அறிதல். "மாயை நித்தமாய் வியாபகமாய் ஆன்மாக்களுக்கு எல்லாம் கன்மத்தால் பந்திப்பதாய்த் தன் காரிய முகத்தான் ஞானக்கிரியைகளை விளக்குமாயினும் மயக்குவதாயிருக்கும்" என்று மாயை பற்றிப் பிறரும் கூறுவர். (சிவஞானமுனிவர், மாபாடியம் சூத்திரம்.2) மாயை இருளைக் கெடுக்கும் தன்மை உடையது என்பதால் இருள் இரிசுடர் எனக் கூறப்பெற்றது.

"விழவாம் அளவும் விளக்கு அனைய மாயை" என்பது திருவருட்பயன். (பா. 30) பு ற்கலன் - ஆன்மா, ஆன்மா சித்துப்பொருள் (உணர்வுடையது) ஆணவ்ம் (உணர்வற்றது). எனவே

ஆன்மா சேதனமாக (அறிவு) இருக்க - அசேதனத்துக்குள்ள (ஆணவத்திற்கு) குணம் உடையது என்று கூறுவது ஒரு பொருளுக்கு இருபொருள் தன்மையாகும். எனவே "சேதனா சேதனம் ஆதல்" ஒன்றுக்கு ஒன்றாது எனக் கூறப்பெற்றது. பாடலில் உயிர்க்கு ஆணவம் குணமாகாது என்பது தெளிவாக விளக்கப்பெறுகிறது. (24-38) மூன்று மலமும் கூடுகின்ற நிலைமைக்கு ஏற்புடையது கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்றில் நடுவணதாகிய சகலமே என்பதால் மும்மலம் சகலாவத்தையில் கூடின எனக் கூறப்பெறுகிறது. ஆதன் - அங்கதன்.

---

## ஆணவ மலம்
### பாடம். 19

"ஆருயிர் யாதொன்று அகலின் மாசுஇரீ
பதியது தன்மை படர்ப மதிதர
அன்னது பாசம் அறிய அஃது இன்றெனின்
என்னை பரதந்திரியம் இயல்பெனின்
முன்னோர் ஓதிய முத்தி மன்னா
தாகும் பந்தம் அகன்றோர் போகிய
ஈசத் தன்மை இயைந்தோர் ஆசு அமல
பந்தத்து ஒன்றினர் ஐம்புலன் ஏவலின்
நின்றனர் வீடும் கட்டும் ஈங்குஇது
பரதந்திரியம் கரைகழி பந்தம்
சித்தென நித்தமாயின் மற்றது
முத்தி கூடுதல் முடியாது இத்தகை
பசுநெறி நின்றோர் மதிநனி படரார்
ஏகம் எவ்வுயிர்க் கண்ணும் தீதுஇல்
அநாதி நிபிட அளவொடு படாஅது
உயிர்தொறு நின்றக் கண்ணும் விளிதரு
தன்னுடையக் காலம் துன்னிப் பின்னிடும்
வலியின் தகுதித்து ஒளிதிகழ் அனாதி
அன்று எனின் அதற்கு நின்றது வேறோர்
ஏது வேண்டுமற் பின்னும் ஆசுஇரு
முத்தரைத் தடுக்கும் ஆகலிற் பித்தாம்
மற்றது வேண்டுநர் ஒப்புஇரி வருத்தம்
ஏகம்என அறிபலவாய் ஓவாத்

தோற்றம் உண்மை இன்மையின் மாற்றரும்
வலிபல என்பதை அறி உயிர்க்கு
ஒலிகெழு வீடு ஒருங்கு உணராமையினே".

இது மும்மலங்களில் ஒன்றான ஆணவமல உண்மைக்குப் பிரமாணம் கூறி அதன் தன்மை உணர்த்துகிறது.

பொருள் :

ஆன்மா உடன் இருந்து பரிபாக காலத்தில் யாது ஒன்று நீங்கின் - அதனால் ஆன்மா குற்றமற்ற சிவனுடைய தன்மையைப் பெற்றிடும். ஆன்மா இத்தகைய தன்மையை பெற எது நீங்குகிறதோ அன்னது ஆணவமலம் என்று புத்திமானே அறிவாயாக. ஆணவமலம் என்பதொன்று இல்லையென்று சொல்வாயாயின், அறிவுடன் இருக்கின்ற ஆன்மா இந்திரியங்கட்கு ஏவல் செய்வது என்னை?

ஆன்மா இந்திரியங்கட்கு ஏவல் செய்வது அதற்குரிய முறைமை என்பாயாயின் முன்னோர் ஓதிய முத்தி உண்டாக மாட்டாது. ஆணவமல பந்தம் நீங்கியே மகத்ததாகிய சிவானந்த பூரண அனுபவம் பெற்றவர் ஆவர். ஆணவமலமாம் மூல மலத்துடன் கூடியவர் இந்திரியங்கட்கு ஏவல் செய்வோர் ஆவர். இதனால் முத்தி (வீடு) என்பதும் பந்தமாவதும் முறையே இப்படிப்பட்டது என அறிவாயாக.

ஆன்மாவை இந்திரியங்கட்கு ஏவல் செய்விக்கும் மலபந்தம் சித்துப்போல நித்தமாய் இருக்குமானால் ஆன்மாவுக்கு முத்தி கூடுதல் முடியாது. இத்தகைய பசு தத்துவமுடையோராகிய சகலர் அறிவுரை கூறினாலும் ஞானம் எய்தமாட்டார். இந்த ஆணவமலம் சர்வ ஆன்மாக்களிடத்தும் ஒன்றாய் குற்றமற்ற அநாதியாகச் செறிந்திருக்கும். அதன் வியாபகம் அளவிட முடியாது.

ஆணவம் உயிர்தோறும் நின்றக்கண்ணும் ஓர் ஆன்மாவுக்குப் பாசத்திலினின்று நீங்கும் காலம் தோன்றின் அதனுடைய வலிமைகெடும் தன்மையை உடைத்து. ஆணவமலம் அநாதி அன்று என்று கூறின் அம்மலம் இடையில் வந்து நிற்பதற்கு வேறு ஓர் காரணத்தைக் கூறவேண்டும். மேலும் பாச நீக்கம் வந்த மூத்த ஆன்மாக்களைப் பின்னும் பந்திக்குமாதலாலே முத்தி வேண்டுவோர் செய்யும் தருமம் பித்தாய் முடியும். மேலும் பலவாய்த்

தோன்றும் நிலை அதற்கின்மையால் ஆணவம் ஒன்றே என்று அறிவாயாக. உயிர்கட்கு எல்லாம் முத்திக்கு வேண்டும் ஞானம் ஒரு பக்குவ காலத்தில் உண்டாவதில்லை. ஆதலால் ஆணவமலத்திற்கு உவமையில்லாத சக்திகள் பல என்று ஞானவானிகள் கூறுவதை அறியவேண்டும்.

விளக்கவுரை :

ஆணவம் நீங்கின் உயிர் இறைவனுடைய ஞான ஆனந்த பரிபூரணத்தைப் பெறும் என்பதைக் கூற "பதியது தன்மை" என்று கூறப்பெற்றது. பரதந்திரியம் - பிறர் ஏவின செய்தல், கட்டு - பந்தம், ஆசுஅமல் பந்தம் - மூலமலம்; ஆணவம் - ஆணவத்தினை. இவ்ஆசிரியர் "பரதந்திரியம் கரைகழி பந்தம்" என்று கூறுவதைப் பின்னால் வந்த உரையாசிரியர்கள் பெரிதும் கையாள்வர். (சிவஞானமுனிவர் - மாபாடியம் சூத்திரம். 6. அதிகரணம். 2) ஆணவம் உள்ளபோது மதிநலம் குன்றியிருக்குமாதலின் "மதிநனி படரார்" எனப்பட்டது. ஆணவமலம் ஒன்றாய் இருந்து உயிர்த் தொகைகளை மறைக்கும் அளவிறந்த சக்தி தனை உடையது என்பர். "ஏகமாய்" என்றும் "எண்ணறிய சத்தியாய்" என்றும் சிவப்பிரகாசம் குறிப்பிடும் (பாடல்.20) முத்தான்மக்களையும் ஆணவம் மேலும் மேலும் பந்திக்கும் என்பதைக் குறிக்க "பின்னும் தடுக்குமாதல்" எனக் கூறப்பெற்றது. ஆணவமலம் ஒன்றே - பன்மைத் தன்மை அதற்கு இல்லை என்பதைப் பிறரும் வலியுறுத்துவர். (தத்துவப் பிரகாசம், பாடல்.18ன் உரை) ஒன்றாய் அநேக சத்தி யுடையதாய் என்பார் அருணந்தியார் (சித்தியார் 2, பாடல்.80).

---

## கன்மமலம்

### பாடல் - 20

"கலைநவில் கரும நிலை மலிபு எய்தக்
கேட்டிசின் இன்பம் வேட்டிசி னோரோ
நிரையம் எய்தினர் பலரே பலரே
புரைதீர் போக பூமி மேவினர்
செய்வினை ஒத்தக் கண்ணும் மையறு
சாலி மேவினர் பலரே பலர் அதன்
வாலிய விந்துவும் மருவா தோரே
ஆயிடைக் கருமம் காரணம்
மாசு டைத்து உயர்ந்த மதியினோயே "

இது கன்மமலத்தின் தன்மை கூறுவது.

பொருள் :

வேத ஆகமங்களில் கூறப்பெற்ற கன்ம மலத்தின் இயல்பினை அறிந்து கொள்வாயாக. எல்லா ஆன்மாக்களும் இன்பம் வேண்டினோராயிருக்க - இருப்பினும் ஆன்மாக்களுள் நரகத்தை எய்தியோர் பலராவர். குற்றமற்ற சுவர்க்கம் மேவினோர் பலராவர்.

பலரும் ஒத்த முயற்சியை நிலத்தில் செய்த விடத்தும் செந்நெல்லைப் பெற்றோர் பலர். நிலத்தில் வெளுத்த ஒரு நெல் கூடப் பெறாதவரும் பலர். இத்தகைய இருவேறுபட்ட பலன்களுக்கு அவரவர்களுடைய கன்மமே காரணமாக வேண்டும் என்பதை அறிவாயாக. அஞ்ஞானத்தைக் கெடுத்து உயர்ந்த ஞானத்தை உடையோனே (என்றவாறு).

விளக்கவுரை :

கன்மத்தின் காரணமாக நரகமும், சொர்க்கமும் முயற்சிக்கு நலமும், முயற்சிக்குத் தோல்வியும் அமைகின்றன என்பதை இப்பாடல் வலியுறுத்துகின்றது. கலை என்பதற்கு வேத ஆகமங்கள் என்ற பொருள் தத்துவ உரையாளர்கள் கூறுவதாம். (சிவப்பிரகாச உரை. 13) நிரையம்-நரகம், சாலி-செந்நெல், வாலியவிந்து-விதைநெல்லும் எனப்பொருள் கொள்க. கருமம்-கன்மம். நிலத்தில் உழைத்தாலும் ஒரு மணி நெல்கூடக் கிடைக்காமல் சாவியாகப் போவதற்குக் கன்மம் காரணம். இதனை " பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும் " என்று உலக வழக்கில் கூறுவர்.

---

## மாயா மலம்
## பாடல் - 21

"ஆதி யோதிய மேதகு மாயை
கோதின்று ஏக நாசமது அணையாது
அளவில் வலியிற்று உலகவை பிறக்கும்
யோனி எங்கணும் தான்இனிது அமலும்
கருமத்து அதிகா ரந்தத் தளவும்
விதிமுறை கொடுக்கும் வியப்பிற்று அஃதறி
சகக்கரு மத்தின் மிகத்திகழ் இறையை

ஆராய்பு என்ன அணிகிளர் உலகம்
ஏர்உப தானம் இன்றுஎனின் இன்றுஉடை
நூல் இன்றாயி இன்று என வாலிய
சேதனம் இன்றுஇது தீதறு செயல்கள்
கோதில சேதனம் ஆகலின் அலதேல்
காரண நியமம் என்னும் பேரிசை
எல்லாம் உடைக்கும் பொல்லாத் தோடம்
வல்லே எய்தும் அநித்தமும் நல்ல
காரிய மாவதும் ஆயின் நீரில்
தோற்றுவது யாதின் மாற்றரும் வியாபி
அன்றெனின் வினைமற்று எங்கனும் ஆர்தல்
கூறுதி யாது பலவாய்ச் சேதனம்.
அன்றது தோற்றத்து ஒன்றும் அன்றிது
தோற்ற மாகலின் நேகம் மாப்பட
நூலின் தொகுதி காண்டலின் ஏகம்
அநேகத்து எழுமென அறிஅப் பலவும்
ஒருதனி வித்தின் வருவகை அறிதி
சித்தில் அசித்தின் குற்றமில் தேற்றம்
என்பவர் புனலை வன்புகை அதனின்
மான அளவைத் தாம்அள வின்மை
பூதம் ஆதியாம் உலகம் எவைக்கும்
காரணம் பார்க்கில் ஓர்பர மாணு
என்பவர் அறிவின் உண்மை இன்புற
நாடினம் நிற்க ஓர்உரு அதனில்
ஓர்உரு உதித்தல் அல்லதை யாவும்
நாச மில்லை என்னி ஆசற
ஒன்றுக்கு ஓரிடத்து எய்தியது எங்கனும்
நின்றிடின் அதனை நீக்கும் என்றியர்
யாரே கோடிக்கு ஈறு ஆற்றக்
கண்டால் எவைக்கும் பொன்றுங் காலம்
உண்டே மன்ற ஓது மாயா
காரிய நிற்பது முடிவில் சீரிய
சத்தி வடிவில் பொற்பொடு புணரும்
தொடங்கற் காலை இடம்பட விளங்கும்
ஆருயிர் ஏரிசை போகஞ்
சீரிதின் அருந்தத் திகழ்தறு முதலே ”

இது மாயா மலத் தன்மை கூறுவதாம்.

பொருள் :

இறைவனால் வேதாகமங்களில் அருளிச் செய்யப் பெற்ற மாயையானது குற்றமற்ற ஏகத்துவமாயிருக்கும். ஒருகாலும் அழியாது. அளவிறந்த சக்திகளை உடையது. உலகம் அடங்கலுக்கும் தோன்றுதலுக்கும் உற்பத்தித்தானமாக இருக்கும். எல்லா இடத்தும் வியாபித்து இருக்கும். பூருவ கன்ம மலம் புசித்து அறுமளவும் விதிமுறைப்படி தேகத்தை முறையாகக் கொடுக்கும் ஆச்சிரியத்தை உடைத்து. இதனை நீ அறிவாயாக.

உலகமாகிய காரியத்தைக் கொண்டு இறைவனை நிச்சயித்தாற்போல, உலகம் காரியப் பொருளாய் இருப்பதால் ஒரு முதற்காரணம் இல்லாமல் இவ்வுலகம் இல்லை என்பதை உணர வேண்டும். நூல் இல்லாமல் ஆடை இல்லாதவாறு போல. (எனவே உலக காரியத்திற்கு மாயை காரணம்) மாயை சேதனம் அன்று - ஏனென்றால் அதன் காரியங்கள் ஐயமற்ற அசேதனம் ஆதலால். ஒருக்கால் சேதனத்திலிருந்து அசேதனம் தோன்றலாம் எனக் கூறின் இன்ன காரணத்தால் இன்ன காரியம் தோன்றும் என்ற முறைமை கெட்டுவிடும். நியமம் இல்லாமை என்ற குற்றம் ஏற்படும்.

நித்தியமாய் இருக்கின்ற மாயையை அநித்தம் என்று கொண்டு, ஒன்றின் நல்ல காரியம் தான் மாயை என்று சொன்னால் அந்நீர்மை (தன்மை) எதனால் தோற்றுவிக்கப் பெற்றது என்பதற்கு விடை கூற வேண்டும். (விடை கூற முடியாது.) மாயை வியாபகம் அற்றது என்று கூறின் - உயிர்கள் கன்மத்திற்கு ஏற்றபடி எவ்விடத்திலும் போகம் துய்ப்பதற்கு ஓர் உபாயம் கூற வேண்டும். (கூற இயலாது.) மேலும் ஒரு பொருள் பலவாய்ச் சேதனம் அல்லதோ அது தன் தோற்றத்திற்குரிய முறைமையைக் காட்டும். ஆனால் மாயையோ தோன்றுவதன்று ஏகமாம்.

அவ்வாறு என்றால் ஒன்றாய் இருப்பது பலபொருளில் தோன்றாதே. பல பொருள் வேண்டுமானால் ஒன்றாகலாம். எதுபோல எனின் பலநூல் இழை புடவையாவது போல என்று நீ கூறலாம். நீ அப்படிக் கூறின் நூல் இழைகள் பலவும் ஒரு (பருத்தி) வித்தின் வருகை என்பதை நீ அறியாயோ.

குற்றமற்ற சித்தில் அசித்து தோன்றும் என்று (மாயை சித்து - அதில் உலகம் அசித்து தோன்றும்) கூறுவது புகையைக் கண்ட

ஒருவன் அதன் கீழ் நீர் இருக்கிறது என்று அனுமானிப்பது போன்றதாகும். (நெருப்பு தான் இருக்கும்) இதனால் இது பிரமாணம் இன்மை என்ற குற்றமாகும்.

பூத ஆதியாகக் கொண்ட உலகம் எவைக்கும் காரணம் பரமானு. எது போல என்றால் புடவைக்குப் பலநூல் இழை காரணமாதல் போல என்று கூறுவர் தார்க்கிகர். (மாயை அல்ல என்பது அவர்தம் கூற்று) அதுவும் தவறு. அவரது நுண்ணிய அறிவை அறிந்தோம். அது நிற்க.

ஒரு பொருளில் ஒரு பொருள் தோன்றுவதல்லது யாவும் ஒரே நேரத்தில் அழிவுறுதல் இல்லை என்று கூறின் (அதுவும் தவறு) ஒரு பொருளுக்கு ஓரிடத்தில் தோன்றிய அழிவு எல்லாப் பொருளிலும் ஒரு காலத்தில் ஒன்றாய் அழியப் பக்குவப்பட்டு நிற்கும். அவ்வாறு பக்குவப்பட்டு நிற்பதை அறிந்து அழிப்பது யார் என்ற வினாவிற்கு விடை கூறல் வேண்டும். இப்பொழுதும் கோடி சரீரங்கள் ஒரு சமயத்தில் அழியக் காண முடிகிறது. எனவே எல்லாச் சரீரங்கட்கும் ஒருநாளில் சங்காரம் உண்டு என்பதையும் அறிய வேண்டும். இவை அனைத்தும் மாயையால் நடைபெறுவதாம்.

சங்கார காலத்து மாயை நிற்கும் முறைமையாவது எனின்? சீரிய சத்தி வடிவில் மாயை பொற்பொடு புணரும். அவ்வாறு ஒடுங்கியது மீளவும் தொடங்கற்காலை – ஆன்மா போகத்தைப் புசித்தற்கிடமாகிய –தனு, கரண, புவன, போகங்கள் இடமாகத் தோன்றும். (என்றவாறு).

விளக்கவுரை :

மாயையின் இலக்கணத்தை முதலில் (1–10) கூறி, பின் அதன்அடிப்படையில் எழுந்த பிற மதத்தாரின் வினாக்களை எழுப்பிக்கொண்டு விடை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. மாயையின் இலக்கணத்தை இதே போன்று சிவஞான சித்தியார்

“ நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சத்தியாய் புவனபோகம் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே”
(பாடல்-143)

குறிப்பிடும், பொருள்கட்குத் தோற்றமாய் மாயை முதற்காரணம் என்பதால் மலம் என்றாலும் மேதகு மாயை எனப்பட்டது. யோனி-இடம். மாயை விதிமுறைப்படி உடம்பைத் தோற்றுவித்தல் சிறப்பு பற்றி "வியப்பிற்று" எனக்கூறப்பட்டது. காரியப் பிரபஞ்சத்தைச் சிறப்பிக்க "அணிகினர் உலகம்" எனக்கூறப்பட்டது. உபதானம்-முதற்காரணம், உடை-புடவை, மாயை சேதனம் அன்று, அறிவற்றதாகும். எனவே அதன் காரியங்களும் அசேதனம் எனக் கூறப்பெற்றது. மாயை நித்தியம் என்பதை, அகோர சிவாச்சாரியார் -தத்துவசங்கிரகக் கூற்றுக்கு விளக்க உரை தரும்பொழுது.

"மாயை பரம காரணமாய் இருத்தலால் நித்தியமாய் உள்ளது என்று, அதனைப் பரம காரணமாகக் கொள்ளாவிடில் அதற்கு முதற்காரணம் வேண்டப்படும். வேண்டப்படவே வரம்பின்றிக் கோடல் எனக் குற்றம் வரும் என்க." என்று குறிப்பிடுவார். மாப்படம்-மகத்தாகிய புடவை.

---

சற்காரிய வாதம்

பாடல் - 22

"தந்து முதல் காரகம் மைந்துறக்
கோடல் ஆடையின் மையின் அடை
உளதேல் காரகம் என்னை என்ன
வளையாக் காரகம் அசத்து உற்பத்திக்கு
உண்டே யாக ஆயிடை யாவினும்
தண்டாதி யாவரும் தாம் வேண்டியமன்
கண்டோர் ஆயின் மன்ற கண்டிலம்
அன்னது ஆயின் அதில் அஃது உண்டெனு
என்னை நியமம் இதில்உளது இவ்வலி
என்னின் சித்த சாதனம் அன்னோன்
அன்றெனில் காரகக் குழுவும் வென்றி
தாராது ஓடும் ஓட வேரிசை
எல்லாம் உடையும் உடைய நல்லோய்
சொல்லே யாகும் நிற்க வல்லே
உற்பாதிக்கும் வலி உண்டு இல்லை
சத்தி ரூப மாகிக் கருமம்
என்றிடின் விசேட நின்றது ஒன்றிடை

கண்டிலம் ஒன்றும் வென்றியோடு ஒன்றக்
காரகம் அதற்குப் பேரிசை நியமம்
ஆகத் தோற்று விக்கும் சீரிசை
வலி அந்நுவய எதிரே கத்தும்
ஒலிகெழு உருடியானும் கலி கொள
அறிய லாகும் அவ்வெளிப் படுதல்.
ஒலிகெழு தோற்றம் அதனால் கலிகெழு
தந்து முதல காரகம் வந்திலாமையின்
புடமடி மறைத்த தடமலிந்து அகன்ற
வேமம் முதல தாமினிது உஞற்ற
தூ மடி விளங்கும் யாங்குஎனின் மாமரு
கடமிக மறைத்த படங்கடம் அகற்ற
இடமிக விளங்கி யாங்கு வடிவுற
எல்லாக் காரகமும் உறினும் முயற்கோடு
இல்லது இல்லது ஆதலின் வல்லே
கலைமுதல் மாயையின் இவ்வணம்
நிலைநலி வுடைய நினையும் காலே"

இது சற்காரிய வாதம் என்பதை உணர்த்திற்று. (உற்பத்திக்கு முன்னும் காரியப் பொருள் காரணப் பொருளில் உள்ளது என்னும் கொள்கை)

பொருள் :

நூலை முதற்காரணமாகக் கொண்டு புடவை உண்டாக்க, கருவிகளைக் குறைவறக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளுவது நூலிடத்துப் புடவை இல்லை என்பதனால்தான். நூலிடத்துப்புடவை இருக்குமானால் கருவிகளைக் கொண்டு செய்ய வேண்டியது எதற்கு? என்று கூறுவாயாகில் இது அசற்காரியவாதம்.

அசற்காரியாத்திற்கு வளையா (ஆராய்தல் கொண்ட) காரகம் (கருவிகள்) வேண்டுமல்லவோ. கருவிகளை மட்டும் வைத்துக் கொண்டு தான் வேண்டிய பொருள்களைக் குறைவின்றி உண்டாக்கிக் கொண்டோர் ஆராய்ந்து பார்த்தால் நிச்சயமாகக் கண்டிலோம்.

மேலும் நூலிடத்துப் புடவை உளதாய்த் தோன்றவில்லை ஆயினும் கருவிகளாலே புடவையை உண்டாக்கலாமே என்றால் அதற்கு என்ன நியமம் சொல்லப்படும். மேலும் புடவையை

உண்டாக்கும் சக்தி மற்றொன்றில் பிறவாது நூலிலேதான் உண்டு. அதற்குக் கருவிகள் துணைக் காரணங்களாகின்றன என்பதை உணர வேண்டும்.

நூலில் புடவை இல்லை என்றால் கருவிகள் எல்லாம் கூடிப் புடவையினை உண்டாக்க முடியாது. கருவியும் வெற்றி தராது. வெற்றி தரவில்லை என்றால் அசற்காரியம் பேசியதெல்லாம் கெட்டுப்போகும். அவ்வாறு கெட்டால் அசற் காரியம் சொன்னவரின் சொல்தான் நிற்கும். எனவே அசற்காரியம் பேசுவதை விட்டுவிட வேண்டும்.

நூலிலே புடவையைத் தோற்றுவிக்கின்ற சக்தி உண்டு. சக்தி வடிவாய்ப் புடவை கிடந்ததில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்லுமிடத்தில் வெற்றி (காரியம்) கிடைக்காது. கருவிகள் நூலிலே கிடந்த புடவையை நியமமான முறையிலே உண்டாக்குகின்றன. நூலின் கிடந்த புடவையின் சக்தியை அந்நுவயத்தாலும், வெதிரேகத்தாலும், உருடியானும் காணவேண்டும். அவ்வாறு கண்டால் புடவையின் சக்தி நூலிலே இருப்பதை உணரலாம். நூலைக் கொண்டு புடவை உண்டு என்று நிச்சயிப்பது அந்நுவய அனுமானம் ஆகும். நூலைக் கண்டு இதில் இடமில்லை எனறு நிச்சயிப்பது எதிரேய அனுமானம் ஆகும். புடவையைக் கண்டு இது நூலிலன்றித் தோன்றாது என்று நிச்சயிப்பது உருடியாகும்.

நூலிலுள்ள புடவையின் சக்தி கருவிகள் வாராத அளவில் தோன்றாத வண்ணம் மறைந்திருந்தன. கருவிகள் வந்தவுடன் அதனை நூலிலே நெய்வார் அழகாகத் தொழிற்படுத்தப் புடவை உண்டாகின்றது. எனவே நூலில் புடவையின் சக்தி உண்டு. எவ்வாறென்றால் ஒரு பாண்டத்திற்குள் மறைந்து கிடந்த புடவையை அப்பாண்டத்திலிருந்து வெளியே எடுத்து வைத்தால் தெரிவது போல நூலில் புடவை மறைந்திருக்கிறது.

மேலும் ஒரு நிலையில் இதனை உண்மையாக்கலாம். வடிவு உண்டாக்குவதற்குரிய கருவிகள் எல்லாவற்றையும் கொண்டு இல்லாத கொம்பை முயலுக்கு உண்டாக்க முடியாது. இது போலவே கலை முதலாக உள்ள தத்துவங்கள் நித்தியமாய் உள்ள மாயையிலே சற்காரியமாய் அமைந்து விரிவதும் ஒடுங்குவதுமாக உள்ளன (என்றவாறு).

விளக்கவுரை :

சற்காரியவாதம் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கையாகும். இல்லது தோன்றாது. உள்ளது அழியாது என்பது இதன் அடிப்படையாகும். அதாவது உற்பத்திக்கு முன்னும் காரியப் பொருள் காரணப் பொருளில் இருக்கிறது. இதனை விளக்க இப்பாடலில் புடவை என்ற காரியப் பொருள் நூலாகிய காரணப் பொருளில் இருக்கிறது என்பது படிப்படியாகக் கூறப்பெறுகிறது.

அதாவது நூலாகிய காரணப் பொருளில் புடவையாகிய காரியப் பொருளின் சக்தி இருக்கிறது என்றும், அது முதலில் நூலில் மறைந்திருக்கிறது என்றும், வேமம் போன்ற நெசவுக் கருவிகளால் நெய்வாராகிய கருத்தாவால் பயன்படுத்தப் பெற்று தூயதாகிய புடவை தோன்றும் என்றும், நூலில் புடவையின் சக்தி இல்லை என்றால் வெறும் கருவிகளை வைத்துக்கொண்டு புடவையை உண்டாக்க முடியாது என்றும், அவ்வாறு கருவிகளை வைத்துக்கொண்டு உண்டாக்கியவர்களை உலகில் காணமுடியாது என்றும் கூறப்பெற்றுள்ளது. பாடலின் முதலில் அசற்காரியாவதம் கூறப்பட்டு மறுக்கப்படுகிறது. அசற்காரியவாதம் என்பது காரணப் பொருளில் காரியப் பொருள் இல்லை என்பதாம்.

அதாவது நூலில் புடவையோ, மண்ணில் குடமோ இல்லை, புடவையும் குடமும் கருவிகளால் உருவாக்கப்படுகின்றன என்பதாம். இந்த வாதத்தைப் பாடல் மறுக்கிறது. கருவியால் உருவம் உருவாக்க முடியும் என்றால் முயற்கொம்பு உருவாக்கலாமே என்பது போன்று மறுக்கப்படுகிறது. தந்து - நூல், காரகம் - கருவிகள்.

---

இருவினை ஆக்கம்

பாடல் . 23

“வெருவரும் பூட்சி இருவினை வெறுப்ப
யாங்கு பட்டதை எனினே வீங்கிய
இந்தியப் போரில் இரும்பறைத் தொழுதி
தன்மாத் திரைத்தாய்ப் பன்முறைக் கொழுத
முப்பொறி ஆண்டு செப்புற நிறீஇத்
துன்பப் பண்ணைத் துயர்ப்பிணி உறீஇ
இன்பப் பண்ணைத் தாங்கி ஆங்கது
பொறியின் அல்லதைப் புணர்திறம் படாதென
அறிவினர் ஆக்கத்து அருதொழில் மறீஇ

முயற்சி தழீஇ இயற்றும் காலை
ஊழ்ஊழ் அன்றித் தாழ்திறம் இல் என்ற
ஒப்பின்றி உயர்ந்த இம்மெய்ப்படு பேர்உணர்வு
எய்யா றாகிக் கைதூ வாமை
என்னை செய்யின் என்னையாம் என
ஆசைப் பௌவத்து அளறுபட அழுந்தி
உள்ளம் உரைசெயல் கல்லோ லத்தின்
உந்திட எழுபு மூழ்கி
நொந்துழி யீண்டு நுவரும் சிறிதே"

இது இருவினை பற்றி வந்த முறைமை கூறுவது.

பொருள் :

அஞ்சத் தக்க உடம்பு புண்ணிய, பாவ மிக உண்டாக அமைந்தது. எவ்வண்ணம் என்று வினவின் சொல்லுவாம்.

இந்திரியம் என்னும் இறகினை உடைய பறவைக் கூட்டம் போன்ற ஆன்மா தன்மாத்திரை என்ற பலாதி விஷயங்களில் தாவி, பலமுறை சென்று கோத, அவ்வப் பொருளில் மனம், வாக்கு, கரணங்களைச் செப்பமாக நிறுத்தி துன்பமாகிய நிதானத்தில் ஆசை ஒழித்து இன்பமாகிய திரட்சியில் தாழ்ந்து அவ் இன்பம் தானும் செல்வத்தால் அல்லது கூடாது என்பதை அறிந்து, அச்செல்வம் ஏற்படுதற்கு அறிவுடையோர் கூறிய உழவு, தொழில், வரைவு, (திருமணம்), வாணிகம், வித்தை, சிற்பம் (கலை) என்று எண்ணப்படா நின்ற - ஆறு கருமங்களில் பொருந்தி, முயற்சியை மேற்கொண்டு செய்யுங்கால், இத்தகைய இன்பம், துன்பம் ஊழ் முறையானல்லது, மேவுகின்ற வழி இல்லை என்ற உண்மையாகிய ஞானத்தை அறியாராகி - முயற்சியை ஒழியாராகி என்ன செய்தால் என்ன? (ஒன்றும் நடவாது)

ஆசையாகிய கடலில் சேறுபட மூழ்கி, மனம், வாக்கு, காயம் என்ற திரையாலே தள்ளப்பட்டு, மேலே எழுவதும், மூழ்குவதும் ஆகிய நிகழ்வுகள் நடக்குமிடத்துப் புண்ணிய பாவத்தை நுகர்வது உண்டு. (அதனை அடுத்துக் கூறுவாம் என்றவாறு)

விளக்கவுரை :

எத்துணைதான் முயன்றாலும் ஊழ்வினை அடிப்படையிலே தான் நன்மை, தீமை நிகழும் என்பது இதனால் வலியுறுத்தப் பெற்றது. பூட்சி - உடல். இந்திரியங்கள் பறவையாக உருவகப் படுத்தப்

பெற்றுள்ளன. முப்பொறி - மனம், வாக்கு, காயம் என மூன்றாம். உள்ளத்தை மிகவும் ஆட்படுத்துவதால் (பிணிப்பதால்) ஆசை பிணி என்று கூறப்பட்டது. பொறி - தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள். இங்கு அவள் அருளும் செல்வத்தை உணர்த்திற்று முயற்சியில் முனைந்து நிற்பவர் ஊழினது வலியை உணரார் என்பதால் “எய்யாராகி” எனக் கூறப்பெற்றது. கைதூவாமல் - தாழாது உஞற்றுதல். (குறள். 620).

### வினை வகை
### பாடல் . 24

“பொய்ப்பொறி புணர்க்கு முப்பொறி உள்ளும்
உள்ளச் செய்தி தெள்ளிதின் கிளப்பின்
இருள்தீர் காட்சி அருளொடு புணர்தல்
அரும்பொறை தாங்கல் பிறன்பொருள் விழையாமை
செய்தநன்றி அறிதல் கைதவம் கடிதல்
பால்கோ டாது பகலில் தோன்றல்
மான மதாணிவி ஆணின் தாங்கல்
அழுக்காறு இன்மை அவாவில் தீர்தல்
அருந்துயர் உயிர்கட்கு இருந்த காலை
அழல்தோய் அன்னராகி ஆனாக்
கழலும் நெஞ்சில் கையற்று இணைதல்
பன்னரும் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட்கு
அறிவும் பொறியும் கழிபெரும் கவினும்
பெறற்கரும் துறக்கம் தம்மின் ஊங்கு
இறப்ப வேண்டும்என்று எண்ணரும் பெருங்குணம்
வாக்கொடு சிவனிய நோக்கின் மீக்கொள
அறம்பெரிது கரைதல் புறங் கூறாமை
வாய்மை கல்வி தீமையில் திறம்பல்
இன்மொழி இசைத்தல் வன்மொழி மறத்தல்
அறிவுநூல் விரித்தல் அருமறை ஓதுதல்
அடங்கி யேமொழிதல் கடுஞ்சொல் ஒழிதல்
பயனற்ற படித்தல் படிற்றுரை விடுத்தல்
காயாத் தியைந்த வீயா விழையுள்
அருந்தவம் தொடங்கல் திருந்திய தானம்
கொடைமடம் படுதல் படைமடம் படாமை

அமரர் பேணல் ஆகுதி யருத்தல்
ஒழுக்கம் ஓம்பும் விழுப்பெரும் கிழமை
உடம்பிடி ஏந்தி உடல்தடிந் திடுமார்
அடைந்த காலை அவன்இயல் துயரம்
தேரார் அல்லர் திரிந்தும் ஆருயிர்
பெரும் பிறிதாக இரும்பிணம் இசைஞரின்
ஓராங்கு படாஅ மாசில் காட்சி
ஐம்பெரும் பாதகத்து ஆழி நீந்தல்
இந்தியப் பெரும்படை இரியநூறும்
வன் தறுகண்மை வாளிட் டாஅங்கு
நோவன செய்யினும் ஏவன விளைத்தல்
தவச்சிறி தாயினும் மிகப்பல விருந்து
பாத்தூண் மரீஇய திருவும் இரும்பொழில்
தன்மனைக் கிழத்தி அல்லதைப் பிறர்மனை
அன்னையின் தீரா நன்னர் ஆண்மை
கார்கோள் அன்ன கயம்பல கிளைத்தல்
கூவல் தொட்டல் ஆதுலர் சாலை
அறங்கரை நாவின் ஆன்றோர் பள்ளி
கடவுள் நண்ணிய தடவுநிலைக் கோட்டம்
இணையவை முதல நினைவருந் திறத்த
புறத்தல் அறத்துறை; மறத்துறை இவற்றின்
வழிப்படா எதிர்வன கெழீஇ
முயற்றல் என்ப உணர்ந்திசி னோரே”

இது மனம், வாக்கு, காயம் என்ற மூன்றினாலும் செயல்படுத்தப் படுகின்ற அறச் செயலையும், மறச்செயலையும் குறிப்பிடுகின்றது.

பொருள் :

அநித்தியமாகிய உடம்பொடு கூடிய மனம், வாக்கு, காயங்களில் நடைமுறையில் மனத்தால் செய்யப்படும் கன்மத்தை (செயல்களை)க் கீழ்வருமாறு தெரியச் சொல்லலாம்.

குற்றமற்ற மெய்யுணர்வு, அருளோடு புணர்தல், கோப துன்பங்களில் பொறுமை, பிறர் பொருளை விரும்பாமை, செய்ந்நன்றி அறிதல், மனதில் தீயன சிந்தித்தலை ஒழிதல், என்றைக்கும் ஒரு பக்கம் சாராது நுகத்தடி, பகலாணி போல் நடுநிலை நிற்றல், மானமாகிய

பேரணியை அணியும் வீரம், அழுக்காறின்மை, பொறாமையின்மை, அவாஅறுத்தல், பிராணிகளுக்குத் துயர் உண்டாகிய காலத்தில் நெருப்பில் பட்ட துன்பம் போல் துன்புற்று வருந்தும் நெஞ்சினராய்த் துக்கப்படுதல், இத்தகைய சிறப்போடு ஆன்மவர்க்கத்திற்குரிய ஞானம், செல்வம், அழகு, சுவர்க்கம், பிறருக்குத் தம்மைக் காட்டிலும் மிகுதியாக நலம் பயக்க வேண்டும் என்ற நினைவு ஆகியவை எண்ணுதற்கு அரிய பெரிய குணங்களாகும்.

இனி வாக்கினால் செய்யக்கூடிய புண்ணியத்தைக் கீழ்வருமாறு கூறலாம். மிகுதியான தருமங்களை நாளும் கூறுதல், புறங்கூறாமை, வாய்மை, கல்வி ஞானம் உடையவர் ஆதல், தீய வசனங்களைச் சொல்லாமை, இனியவை கூறல், வன்மொழி மறுத்தல், அறிவு நூல்களை விரித்துரைத்தல், அரிய வேத ஆகமங்களை ஓதுதல், அடங்கிய மந்திரங்களை மொழிதல், கடுஞ்சொல் ஒழித்தல், பயனுடைய நூல்களையே படித்துச்சொல்லுதல், பொய் சொல்லாமை என்ற குணங்களாகும்.

இனி கரணத்தால் (உடம்பினால்) செய்யப்படும் கன்மங்கள் வருமாறு : அரிய தவங்களைத் தொடங்கிச் செய்தல், உயர்ந்த தானங்களைச் செய்தல், கொடை வழங்குதல், புறங்காட்டிச் செல்வார் மேல் ஆயுதம் எடேம் என்று நிச்சயித்தல், தேவர்களாகிய தெய்வங்களைப் போற்றுதல், ஆகுதி வளர்த்தல், ஒழுக்கத்தை ஓம்பும் பெரிய தலைமை ஏற்றல், வாளால் உடலைத் துணித்தற்குப் பலர் கூடி வருத்துகிறபோது அவ்விடத்தே துக்கப்படுதல், உயிரைக் கொன்று அந்த உடம்பாகிய பிணத்தைத் தின்பாருடன் பேசாதிருத்தல், குற்றமற்ற அறிவுடையவராய் நடத்தல், கொலைகள், களவு, குரு நிந்தை, பொய் மொழிதல் ஆகியவை செய்கின்ற பஞ்சமா பாதகரிடமிருந்து விலகி இருத்தல், இந்திரியங்களாகிய யானையைக் கெடுத்து ஓட்டவல்ல வன்கன்மை உடையராய் இருத்தல், தனக்கு நோவன செய்தவர்க்கும் இன்பத்தைச் செய்தல், தான் பெற்ற செல்வம் சிறிதாக இருந்தாலும் பல விருந்தினர்க்கும் பகுத்துக் கொடுத்தல், நந்தவனம் அமைத்தல், தன்மனைக் கிழத்தி அல்லாத பிறருடைய தாரத்தைத் தாயைப் போல நினைக்கும் ஆண்மை, ஏரி, குளம் வெட்டுதல், கிணறுகள் அகழ்தல், வழிக்கரை மடம் கட்டும், அறங் கூறுகின்ற தவத்தவர்க்கு இருப்பிடம் அமைத்தல், தேவாலயங்கள் எழுப்புதல் ஆகிய இத்தகை புண்ணியங்களைச் செய்தல் மனம், வாக்கு காயங்களால் செய்யும் அறத்துறைகளாகும்.

இங்கு சொல்லப்பட்ட புண்ணியச் செயல்களுக்கு மாறுபட்டவற்றைச் செய்தல் மறத்துறையாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் மனம், வாக்கு, காயங்களால் செய்யப்படுகின்ற அறச்செயல்கள் கூறப்பட்டுள்ளன. சமய நூல்கள் சமுதாயத்திற்குரிய பயன்பாட்டைத் தருவன என்பதற்கு இப்பாடல் சான்றாகும். பொய்ப்பொறி - உடல், அழியக்கூடியதால் இவ்வாறு கூறப்பெற்றது. விபரீத ஐயங்களுக்கு ஏதுவாகிய குற்றத்தை இருள் என்றும், அது இல்லாத மெய்யுணர்வு காட்சி என்று கூறப்பட்டது. ஒருபால் கோடாது என்பது பால்கோடாது என நின்றது. மானம் - சிறப்பு நோக்கிப் பேரணிகலனாகக் குறிக்கப்பெற்றது. ஞானமும் செல்வமும் கூடிய அழகு "களிபெறும் கவின்" எனக் கூறப்பட்டது. அறம் தெரிந்தால் அன்றிப் பிறவித் துன்பத்தைக் கடத்தல் அரிது என்பதால் "மீக்கொள் அறம்" எனப்பட்டது. அறிவு நூல் என்பது ஆகமத்தை உணர்த்திற்று. மறைகளில் அடங்கிய மந்திரங்கள் "அடங்கிய மொழி" எனப்பட்டது. கொடை மடம் என்பது வரையாது கொடுத்தலாகும். கூவல் - கிணறு. ஆதுலர்சாலை - வழிக்கரை தங்குமிடமாயிற்று.

---

கன்ம பந்த நிலை

பாடல் . 25

"இசைத்த மூன்றின் அசைப்புற இறந்த
ஆருயிர்க்கு இன்ப துன்பம் நேரிய
துடியிடைப் படாது கடிகொள இயற்றி
எற்பிறர்க்கு பிறர்க்குயான் தப்பறத் தந்தன
மனப்பசை இம்மைய அம்மை வினைத்திறன்
ஆண்டுப் பூட்சி ஈண்டுப்பட இயற்றல்
சார்ந்தவை வதிதல் யாங்கு வீங்காது
ஆடிப் படர்ந்த பேரிருள் புடமடி
கூடிய குற்றம் கோடுஏந்து அல்குல்
மாதோர் பாகர் சேர்வோர் இன்பம்
பாதவக் கண்ணிழல் பனுவல் கேழிப்
பெரும்பனை பொதிந்த சிறுநுண் வித்தின்
இருந்தவை விரியும் இருவினைக்கு இயைந்த
நாற்கதி யாத்தவிழ் நரலைப் புணரி
மூவகைத் துக்கத்து முடியும்
மாவகை வீழ்த்த மன்னுயிர்ப் பரப்பே"

இது முன்னர்க்கூறிய மன, வாக்கு, காய கன்மங்களால் புண்ணிய பாவங்கள் எவ்வாறு பந்தித்தது என்பதை விரித்துக் கூறுகிறது.

பொருள் :

நிறைந்த ஆன்மாவிற்கு முன் பாட்டில் கூறப்பெற்ற மன, வாக்கு, காய கன்மங்களின் அசைவு இல்லாமைகளால் செறிந்த சுக துக்கங்களை நுண்ணிய துடி என்னும் கால அளவும் இடைவிடாது அனுபவித்து – எமக்குப் பிறர் நன்மை செய்தார் என்றும், பிறர்க்கு நான் நன்மை செய்தேன் என்றும், எப்பொழுதும் சிந்தையில் நினைவு கொள்வது – இம்மை சுய கன்மம் ஆகும்.

பூருவ கன்மமாவது முன்பு எடுத்த உடம்புகளிலே இப்பொழுது எடுத்துள்ள தேகத்தில் அனுபவத்துக் கொண்டிருக்கும் கொள்கைக்கு (சுகதுக்கங்கள்) ஏதுவாகிய கன்மம்.

இக்கன்மங்கள் ஒருவனிடத்தில் வதிதல் எங்ஙனம் என்றால் – ஒரு காலத்தே ஒரு முறையில் பரிணமிக்காது, கண்ணாடியில் படிப்படியாக ஏறிப் பெரிய மாசு கூடினாற்போல, சுத்தமான புடவை மாசு ஏறினாற் போல் – உமையொரு பாகத்தானை யோகம் பண்ணினவர்க்கு மேலும் மேலும் பரமானந்த சுகம் கூடினாற் போலவும் ஆம். (எனவே கன்ம இன்ப துன்பங்கள் படிப்படியாக வளரும்)

உச்சிப் பொழுதில் மலையில் (பாதவம்) அடங்கின நிழல் விரியுமாறு போலவும் – கற்ற கல்விப் பரப்பானது அடங்கிக் கிடந்து பின் பரிணமித்தாற் போலவும், ஆலம் சிறுவித்தில் மரம், கிளை விரிந்து பரிணமித்தாற் போலவும், ஆதிக் காரணமான கன்மத்திலே பண்ணிய பாவங்களாகிய கன்மங்கள் காரிய ரூபமாய்க் கிடந்து பக்குவப் பட்டபோது கன்ம மலங்களாகிய துன்பமாய் விளையும்.

தன் உண்மை, கன்ம உண்மை அறியாத நித்தியமான ஆன்மா இருவினையையும் அனுபவிக்கப் பொருந்தினை நான்கு வர்க்கத்துச் சரீரங்களை எடுத்தும், விட்டும் பிறப்பாகிய கடலில் மூவகைத் துக்கங்களை அனுபவிக்கும். (என்றவாறு).

விளக்க உரை :

உயிரானது மன, வாக்கு, காயங்களால் செய்த பாவ புண்ணியங்களை, முன் பிறப்பு வினைகளால் அனுபவிக்கும்

என்பதை இப்பாடல் குறிப்பிடுகிறது. மனப்பசை - மனதிலே அசைபோட்டு; நினைந்து, வீங்காது - பெருகாது, கண்ணாடியில் படியும் மாசு படிப்படியாகப் பெருகி, இறுதியில் அதன் ஒளியை முற்றிலும் மறைத்தலால் - "பேரிருள்" எனக் கூறப்பட்டது. கன்மம் ஆதி என்பதை இந்நூல் கூறுவதுபோல உமாபதி சிவம் "ஆறும் ஆதி" என்பார். (திருவருட்பயன் . 52) அருணந்தி சிவனார் "பிரவாகானாதி" என்பார். நான்கு வர்க்கத்துச் சீரம் - உற்பீசம், அண்டசம், சராயுசம், சவேதம் என்பன. மூவகை துக்கம் - ஆதிதைவிகம், அதிபௌதிகம், ஆதிலாத்தியான்மிகம்.

---

## மூவகை துக்கங்கள்

### பாடல் . 26

"ஆதி தைவிகம் ஆதி பௌதிகம்
ஆதியாத்தி யான்மிகம் என ஓதிய
துக்க மூன்றினுள் ஆத்தி ஆன்மிகம்
மெய்யின் மனத்தின் ஐயமில் இரண்டே
வளியிற் பித்தின் விளியா வீளையின்
ஊனுகு தொழுனையின் உதகக் கொட்டின்
வெப்பில் சூலையின் மக்களின் விலங்கின்
அலகையில் கள்வரின் பறவையின் நிருதரின்
மைந்தர் மகளிர் மணந்திடை தணப்பில்
பேரறம் வளர்ப்பில் பெருந்திரு நுகர்வின்
சீரிய யாக்கை மாதுயர் மாசு
மனத்துறு துயர நினைப்பருஞ் சோகம்
அறிவுரு ஆக்கம் அடையுநர்ப் பொறாமை
மானமாக் கலம் பூணாது மறுத்தல்
இச்சையின் இசைதல் இருஞ்சின மிகுத்தல்
இனையவை முதல நினைவரும் திறந்த
ஆதி பௌதிகம் சீதமா மழை
உருப்பவர் வேனில் உட்குவரு கடுங்கால்
இருள் கடிமின்னும் பெருவிரல் அசனி
ஒலிகடல் உலகின் நிலைமலி புடைய
மன்னுயிர்க்கு உறுகண் துன்னியாங்கு கருத்தல்
ஆதி யாய வீவருந் திறத்த
ஆதி தைவிகம் பேதையார் வயினக்

கருக்குழி அழுங்கல் பிறப்பு இறும்பூது
திரைவரும் தீமை வரைவில் பேதைமை
மடங்கல் ஆருயிர் தொடங்கினன் வவ்வல்
யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து
வீழ்ந்தனர் எழாஅ வான்கழி துன்பம்
இணைய மாலைய துயர்மிடை வினைநகர்
கருங்கைக் கயமைக் களிறுஉகைத்து இரும்புலப்
பெரும்படை விரிந்து சூழத் திருந்தா
நாற்கதிர் பவனி உலாஅய்
ஆர்த்தவிழ் திறம்பிற போற்றுமதி புரிந்தே"

இது முன் பாடலில் கூறப்பெற்ற மூன்று துக்கங்களை விரித்து உரைக்கின்றது.

பொருள் :

ஆதி ஆத்தியான்மிகம் என்றும், ஆதி பௌதிகம் என்றும், ஆதி தைவிகம் என்றும் சொல்லப்பட்ட துக்க நிலைகளிலே ஆதிஆன்மிகமாவது – சந்தேகமற்ற மனத்தையும் உடம்பையும் பற்றி வரும் இருதிறப்படும். வாதத்தால், பித்தத்தால், நீங்காத சிலேட்டுமத்தால், சதை அழுகி ஏற்படும் குட்டத்தால், நீரிழிவால், வெப்பு நோயால், சூலை நோயால், மானிடரால், விலங்கால், பறவையால், பேய்களால், கள்வரால், இராக்கதரால், மணமுரிவால், கருலிங்க சங்கம ஆதியாய தெய்வ சன்மானத்தினும் தவசினும் வருவதால், செல்வ மிகுதியால், தேடலால், காத்தல், அனுபவித்தல் ஆகிய பதினான்கும் உடலால் வரும் துன்பமாகும்.

மனத்தைப் பற்றி வரும் துன்பங்கள் : பொருள்கள், உறவுகள் இழந்ததை நினைப்பதால், ஞானம், தேகம், செல்வஆக்கம் ஆகியவை அடைந்தார் பற்றிக் கேட்டு அதனால் ஏற்படும் பொறாமை, மானமாகிய பெரிய அணிகலம் பூணாதிருப்பதால், இச்சையால், சினமிகுதியால், ஆகிய ஐந்தினாலும், பிற நினைப்பாலும் வரும் துன்பங்கள்.

ஆதி பௌதிகத் துயர் கூறப்படின் மிகுதியான குளிரால், மிகுதியான மழையால், மிகுதியான கோடை, மின்னலால், கடுமையான இடியால், கடல்சூழ்ந்த உலகில் பிராணிகளை கட்டி வைத்துக் கொல்லுதல் ஆகிய வதைப்படுத்தல், அவற்றை உண்ணுதல் ஆகிய ஏழு வகையான துன்பங்களாம்.

ஆதி தைவிகத் துன்பங்கள் கூறப்படின் தாயின் கருவறையில் ஏற்படும் வேதனை, பிரசவ வேதனை, மூப்பால் படும் வேதனை, அளவில்லாத அஞ்ஞானத்தால் வரும் வேதனை, மரண வேதனை, நரக வேதனை ஆகிய ஆறு துன்பங்களாகும்.

இத்தகைய துன்பங்களைத் தன்னிடத்தே கொண்டு பல்வேறு விதனங்களுக்கு இலக்காகிப் பூர்வகன்மத்தைத் துய்க்கும் உடலாகிய நகரிலே பெரிய கையாம் அஞ்ஞானத்தை உடைய கீழ்மை என்னும் யானையின் பிடரியில் ஏறிச்செலுத்தி இந்திரியமாகிய தந்திரம் விரித்து சூழ்ந்துவர நான்குவகை பிறப்பிலே வலம் வந்து, ஒருடலைக் கூடிய பின்பும், வேறொரு உடலைக் கூடுவதற்குப் பிரிந்து செல்லும் ஆன்மா! அதனை அறிவாயாக. (என்றவாறு)

விளக்க உரை :

இப்பாடலில் உயிர்கட்கு வரும் துன்பங்கள் மூன்று வகையாகப் பிரித்துக் காட்டப் பெற்றுள்ளன. உடம்பிற்கு வரும் நோய்களைத் தொகுத்துத் தந்திருப்பது குறிப்பிடத் தக்கது. வளி முதலிய மூன்றானும் நோய் உண்டாதலை,

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலியன மூன்று (குறள் : 941).

என்று திருவள்ளுவர் குறிப்பிடுவார். குட்டநோய் - தொழுநோய்; இதனை "அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோய்" என்பார் நாவுக்கரசர் (திருத்தாண்டகம்.10) நிருதர் - இராக்கதர், செல்வத்தைச் சேர்ப்பது உள்ளிட்ட துன்பங்களை நாலடியாரும் குறிக்கும். (பாடல்.180) மனம் தூய்மையானது. அதில் குற்றங்கள் செயலால் சேர்வது பற்றி "மாசுறுமனம்" எனக் கூறப்பெற்றது. வருடம் - மழை, கருப்ப வேதனையை மாணிக்கவாசகர் போற்றித்திரு அகவலில் சுட்டிக் காட்டுவார். (14 - 25) மடங்கல் - யமன்.

---

### 4. தேகாந்தரம் - ஆர்த்தவிழ் திறம்
### பாடல் . 27

"இருந்துயர் கெழீஇ வருந்தி யாப்புற்ற
முப்பயன் ஈண்டுத் துய்த்தனர் கழிப்பின்
கருங்கயல் இரியப் பெரும்பகடு துறந்தாங்கு
உழவர் ஆக்கிய விளைவயல் செந்நெல்

பிற்பயன் தந்தாங்கு இச்செயல் உதவ
எய்திய குகையின் மையறப் படர்தல்
இருங்கழல் மள்ளர் பதம்படர் திருந்தடி
சாபவான் புழுவில் காளகம் மடிய
கடிபடு புட்டகம் மடிவிடுவு புனைதல்
கண்படைக் கனவில் கடிமதில் பாய்ந்த
தும்பி வன்பிடர்த் தோன்றல் மேலதை
உள்ளமும் நுழையா ஊங்கும் கீழதை
ஏழ்தலம் இறந்த கீழும் புடையதை
நேமி மால்வரைப் புறனும் தாள்தோய்
தடக்கை மாவீழ் மணியினும் அடுக்கிய
சிறுநணித் தானும் பெருஞ்சேய்த் தானும்
வினைமாண் துப்பின் மனமாண் தேறின்
துடிபல வகுத்த விசையில் சேறல்
கார்முகம் கான்ற பூமுக விசிகம்
உள்ளியது கிழித்தலின் பள்ளி நீங்கி
ஒருபெரும் தமியன் விரிவுலன் உடுத்த
பேரத் தாணிப் பெயரினும் துணையின்று
அறிவரும் துரியத்து அல்கினும் தெரிபுஒன்று
இசையாது ஏகி ஆங்கு வசைதபு
கடிகலை முதல்தர வந்த
படியென அறிநெடிது ஒடிவுஉடன் உகவே"

இது முதற்பாடலில் கூறிய ஆர்த்தவிழ் திறம் என்று ஆன்மா ஓர் உடலை அனுபவித்த பின்பு வேறு ஒரு உடலைக் கூடுதற்குப் பிரிந்து செல்லும் வகையினைச் சொல்லுவதாம்.

பொருள் :

முன்னர்க் கூறப்பட்ட மூவகைத் துன்பங்களில் அழுந்தி, வருந்தி, யாப்புற வந்த பூர்வ கன்மமலத்தை இவ்வுடம்பில் நின்று, புசித்துக் கழித்த பின்பு - பெரிய மீன்களெல்லாம் கழிந்து போக, பெரிய எருதினை ஏரில் பூட்டி நிலத்தில் உழுது பயிர் செய்து விதைத்த நெல்லானது பின்பு புசிப்பதற்கு உரியதாகவும், விதையாகவும் அமைவது போல (விதைத்த நெல் - மீண்டும் புசிப்பதற்குரியதாவது போல) இந்த உடம்பில் நின்று பூர்வ கன்மபலத்தைப் புசிக்குமிடத்து முன் சேமித்த கன்மம் தன் பலனை அனுபவிப்பதற்குப் பக்குவப்பட

ஏற்படும் தேகத்தைப் பற்றிச் சொல்லின் கீழ்வருமாறு அமையும்.

வீரக்கழல் பூட்டிய வீரர்கள் அணிவகுத்துச் செல்லுமிடத்து அடியிட்டு அடியெடுத்துச் செல்வது போலவும், சாபவான் புழுப்போலவும், உடுத்த உடை கெட்டதால் புதியதொரு உடையை மடிப்புகளோடு உடுப்பது போலவும், உறக்கத்தில் பகைவரின் மதிலை இடித்த யானையின் வலிய கழுத்தின் மேல் அழகுற இருந்தது போல் காணுகின்ற கனவு போலவும், (கன்மவினைகள் செயல்படும்).

மேல் எல்லாவற்றிற்கும் மேலாகிய மனத்தாலும் நினைக்க முடியாத மேலிடத்தும், கீழ் பாதாளங்களுக்கும் அப்பாற்பட்ட கீழிடத்தும், பக்கமலை (சக்கரவாளமலை)க்கு அப்பாலும், முழந்தாளில் தோயும்படியான நெடிய கையில் தாங்கிய அழகிய மாணிக்கம் எவ்வாறு அண்மையில் இருக்கிறதோ அதைவிட அண்மையிலும், பெருந்தூரத்திலும், வினையாகிய வலிமை உடைய மனம் என்னும் தேரிலே ஏறி, துடி என்னும் காலத்தைப் பலகூறு இட்ட காலத்தில் விரைவாகச் சென்றார் போலவும்,

வில்லினின்று விடுக்கப்பட்ட அம்பு பொருளைக் கிழித்துச் சென்றார் போலவும், துரிய அவத்தையில் பெரிய ஆன்மா உறக்கத்தினின்று நீங்கி,

இந்திரியங்களாலே போகம் துய்க்கும் அத்தானி மண்டபமாகிய சாக்கிராவத்தையில் வந்து, தங்கினாலும் இவை பிறருக்கும் தெரியாமல் போந்தாற் போலவும் ஆன்மா ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தை எடுக்கும்.

குற்றமற்ற கலை முதலாகிய உள்ள தத்துவங்கள் பக்குவப்பட்ட கன்மம் புசித்ததற்கு ஆன்மா ஒரு தேகத்தை விட்டு மற்றொரு தேகத்தை இவ்வாறு எடுக்கிறது எனலாம். இதை நீ அறிவாயாக. (என்றவாறு)

**விளக்க உரை :**

பிறப்பு - இறப்பு - பிறப்பு என்ற நிலையில் அமைகின்ற பிறவிதோறும் எடுக்கின்ற உடம்பின் தொடர்ச்சியைப் பற்றிய கருத்தை இப்பாடல் தருகிறது. நிலத்தில் விதைப்படுகிறது நெல். மீண்டும் பயிரில் நெல்லாக விளைந்து பயன் தருமாப்போல் ஒரு

பிறவி உடம்பு - மறுபிறவி உடம்புக்கு ஏதுவாகிறது என்பதை "செந்நெல் பிற்பயன் தந்தாங்கு" என்று கூறப்பட்டது. இதனை சிவஞான சித்தியார்

"மேலைக்கு வித்து ஆகி விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமா போல" (பாடல். சுப. 102)

என்று குறிப்பிடும். குகை – உடம்பு. மள்ளர் – வீரர்கள். சாபவான்புழு – வில்லூன்றிப்புழு என்பர். காழகம் - உடை; மள்ளர் திருந்தடி வினைகள் இன்பமும் துன்பமும் பயந்து மாறி மாறிப் பெருகுவதற்கும் சாபவான் புழு இடையறவு படாது தொடர்புற்று வருவதற்கும், புதிய ஆடையை மடிப்பு வைத்து உடுப்பது உடம்பின் நீங்குங்கால் உயிரின்பால் செறிந்திருத்தற்கும். கனாக் காண்டல் வினை நிகழ்ச்சியின் விரைவுடைமைக்க உவமைகளாகும். (ஔவை - துரைசாமி உரை) சக்கிர வாளக்கிரி - திக்குப்பாலகர் இருக்கும் இடமாகிய மலை, கையில் உள்ள மாணிக்கம் - இது அண்மைக்கு எடுத்துக்காட்டு. துடி – காலத்தின் சிறிய அளவு.

---

அச்சுமாறிப் பிறத்தல்
பாடல் . 28

"இலங்கு குங்கும மார்பரும் வலம்புரி
ஒருமணி யனன் திருநல மாதரும்
முயக்கிடை அறியா மயக்கின் வயக்குறு
துப்புருக்கு என்ன பழனத்து ஆனா
முத்து உருக்கன்ன வந்துஆர் காலை
யாப்போன் இன்றிஎனின் நீக்குவர் உரையின்
அஃதான்று
முயங்கும் தோறும் முயங்கும் தோறும்
பிறன்கடை பெரிதே அன்றே ஆகம்
ஆருயிர் ஆயின் வீவோ இன்று
தன்னை அன்னைத் தம்மிடைப் பகுப்பின்
பின்னர்க் கான்முளை மன்னுதல் இலரே
கனங்குழை மாதர் கணங்கொள் பீண்டி
அணங்கன் எனாஅ மனம்குழைபு இரங்க
இற்றோர் காண்டிகம் முற்றவும் காண்டிகம்
இவணம் அன்றுஎனின் அதீதா நாகதம்
ஐயம்இன்று உணர்ந்தோர் மையறு பனுவலின்
வருபிறப்பு உணர்ந்த மதியோர்த் தோன்றும்

முதல் நடு இறுதி இளமை மூப்பின்
ஒளிவர நிறைந்தோன் உழிதந்து ஒடுங்கும்
ஆதி யின்மையின் பூத மாநகர்
ஈரிரண்டு எய்தித் தீதர வொரீஇக்
கோபுரங் கூட மாட மாளிகை
விளிம்பு பளிங்கார்த்த பசும்பொன் வேதிகை
அரமிய முதல - விரவும் பெயர் பெறிஇக்
கலங்கியும் கலங்காக் காரணத்து இலங்கியும்
பாடல் சான்ற பல்புகழ் நிறீஇ
வாடாத் துப்பிற் கோடல் ஆ
அருளா பரணன் அறத்தின் வேலி
பொருண்மொழி யோகம் கிரியையில் புணர்த்த
அருள் மொழி திருமொழி போலவும்
என்று மிலிஇயல் நன்றுமன் பெரிதே"

இது ஆன்மா ஒரு தேகத்தை விடுத்து மற்றொரு தேகத்தை எடுப்பது பற்றிப் பிற சமயங்களை மறுத்துச் சாதித்தது.

பொருள்:

குங்குமம் பூசப்பெற்ற மார்பை உடைய ஆண்களும், வலம்புரிச் சங்கின் முத்தை ஒத்த செல்வத்தை உடைய, அழகை உடைய பெண்களும் புணருகின்ற, இடையுறவு அறியாத மயக்கத்தில், பவளம் போன்ற பெண் தடத்தில் (உறுப்பில்) முத்தை உருக்கினாற் போன்ற சுக்கிலம் என்னும் நீர் பொருந்தும் காலத்து போகம் புசிக்கப் பக்குவப் பட்ட ஆன்மா பந்திக்கவில்லை என்றால் பயனற்றதாகும். (சுத்தி பண்ணும் நீரோடு கழிப்பர்) அவ்வாறு இல்லாது சுக்கில சுரோனிதமே பிள்ளையாகும் என்றால் முயங்கும் தோறும் முயங்கும் தோறும் (புணரும்தோறும்) பிள்ளைகள் உண்டாக வேண்டுமே. அவ்வாறு உண்டாவதில்லை. கன்ம வினை இருந்தால் தான் பிள்ளை உருவாகும்.

சரீரமே உயிராம் என்றால் மரணம் இல்லையாக வேண்டும். இப்பகுதி உலகாயதரை மறுத்தலாகும். அன்னை, தந்தை உயிரிலே பகுத்து வந்தது பிள்ளை என்று சொன்னால் ஒரு பிள்ளைக்குப் பின்பு மற்றொரு பிள்ளை உண்டாவதில்லை. இது மீமாம்சை மதத்தை மறுத்தது.

மகரக் குழையை உடைய பெண்கள் எல்லாம் கூட்டமாகக்

கூடி காமதேவனே என்று மனம் அழிந்து கூப்பிட்டு அலற இறந்தோரையும் காண்கின்றோம். (பிறந்தவுடன் குழந்தை இறத்தல்) பிறந்த பிள்ளை நாள்தோறும் வளரவும் காண்கின்றோம். இத்தகைய தேகத்திற்கு ஆன்மா என்று ஒரு கர்த்தா இல்லை என்று கூறுவாரும் உண்டு. அது தவறு. இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் ஐயமற அறிந்து சொல்லுகின்றவராலும், குற்றமற்ற சாத்திரங்களாலே இனி எடுக்கும் சரீரங்களை அறிந்து சொல்லுபவராலும் ஆன்மாவாகிய கருத்தா ஒருவன் உண்டு என்பது அறிவுறுத்துவதை அறிதல் வேண்டும்.

முதல், நடு, இறுதி, இளமை, மூப்பு இல்லாத எங்கும் நிறைந்த பரமசிவன் தனக்கு விரிந்து ஒடுங்கக்கூடிய சரீரத்தை வேண்டாதவனாவான். (இது ஆன்மாவுக்குச் சரீரம் உண்டு என்று கூறும் மாயாவாதத்தை மறுத்தது.)

ஆன்மா பூதங்களாகிய சரீர நகரங்களில் நால்வகையைப் பெற்று, பிறப்பில் தேகங்களைப் பெற்றும் அவற்றை இறப்பில் விட்டுச் செல்வது எங்ஙனம் எனில்

கோபுரம், கூடம், மாடம், மாளிகை, செம்பொன் மேடை, நிலாமுற்றம் ஆகியவையாக உள்ளவை இடிந்த பொழுதும், நிலை குலைந்த பொழுதும், அவற்றைத் தாங்கி நின்ற அழியாத பூமிபோல உடம்பை இயக்கிய உயிரானது காரணமாய் இருக்கும்.

சான்றோர் பாடும் பாட்டுக்களால் அமைந்த பல புகழை நிலையாகக் கொண்டும் கெடாத வலிமையைப் பெற்றும், அருளை ஆபரணமாகக் கொண்டும், தருமத்தை வேலியாகவும், தன்னுடைய பொருளுடை மொழியால் யோக பாதத்தையும் கிரியா பாதத்தையும் எனக்கு அருளிச்செய்த கோடலம்பர் கிழான் ஆகிய அருண்மொழித் தேவருடைய செல்வத்தைக் கொடுக்கும் உபதேசம் போலவும் நிலையாக ஆன்மா உடம்பு விட்டும் உடம்பு கொடுத்தும் இருக்கும் (என்றவாறு).

விளக்கவுரை:

இதில் கன்மத்துக் கீடான உடம்பைப் பெற்ற ஆன்மா ஒரு உடம்பிலிருந்து மற்றோர் உடம்பைக் கன்மத் தொடர்பால் பெறுகிறது என்பதும், உயிரில்லாத உடம்பு தோன்றுவது இல் என்பதும், இறைவனுக்கு உடம்பு தேவையில்லை என்பதும் பிற மத மறுப்புடன் நிறுவப்பெற்றுள்ளது. நற்குடி மகளிரைக் குறிக்கத் திருநலமாதர் என்று

கூறப்பெற்றுள்ளது. ஆண் பெண் கூடுகின்ற போது இடையில்லாமல் முயங்குவதைத் திருவள்ளுவர், " வளியிடை போழப் படாஅ முயக்கு " (குறள் : 1108) என்பார். சுநோநிதம் – பெண்மை உறுப்பு, முத்து உருக்கன்ன வித்து – முத்தை உருக்கினாற்போன்ற சுக்கிரநீர், வீவுதல் – மரணம், கான்முளை – மக்கட்பேறைக் குறித்தது. அதீதம் – அளவுகடந்த இறப்பு, அநாகதம் – எதிர்காலம், உடம்பிற்கு வேறாக ஆன்மா உண்டு என்று சாதித்து, ஆன்மாவின் போக்குவரவிற்கு உடம்பு வேண்டியிருத்தலைக் கூறும்போது இறைவனுக்கும் அவ்வாறு உடம்பு உண்டா? என்ற வினாவிற்கு விடையாக ஆதியின்மை என்று கூறி, வேண்டப்படான் என்பது கூறப்பெற்றுள்ளது.

பூமியில் கட்டப்பெற்ற கட்டிடங்கள் இடிந்து விழுந்தாலும், பூமி பூமிதான். அதுபோல உயிர் இருக்கத் தேவைப்பட்ட உடம்பு அழிந்தாலும் உயிர் உயிர்தான் என்பதும் ( 20 – 25 வரிகள் ) விளக்கப்பெற்றுள்ளது. " கோடல் ஆதி அருள்மொழி " என்பது நூலாசிரியரின் ஆசிரியரான அருண்மொழித்தேவர் என்ற பிள்ளைத் திருநாமத்தை உடைய ஸ்ரீ பரமானந்த முனிகளின் அருள் மொழியைக் குறிக்கிறது. கோடல் என்பது அவருடைய ஊரான கோடலம்பாகையைக் குறிக்கும்.

---

## பாச அனாதித்துவம்
## பாடல் . 29

" கருமம் போகம் தருமென அருளினை
நிருமல இருவினை ஆக்கல் திருமலி
ஆகத்து அல்லதை ஆகாதது முதல்
வேகத் தொடுவரல் வினைவிற் றாயின்
ஆணவ முதல் அன்று அதுபோல் கருமமும்
காண்அலது எனின்அக் கரைகழி ஞானா
விதம்இனிது உயிர்கட்கு உதவுவது எதனால்
அற்றுஅது மாயையும் மற்றுஅறி அவனே
ஓதுவது உளதெனும் ஒருவகை தீதுஉக
ஆகம் போகா தாக வல்வினை
ஏகாது இருவினை ஆகம் போகாது
ஆக ஆயிடை முனாது யாது
பாயின் நின்றது பன்னுங் காலே"

பாயின் நின்றது பன்னுங் காலே”

இதில் ஆணவத்தைப் போலக் கன்மமும் மாயையும் அநாதி என்று கூறப்பெறுகிறது.

பொருள் :

நிருமலனே! கன்மத்தாலே தேகம் எடுத்தது என்பதை அருளினீர்கள். அவ்வாறானால் அந்தக்கன்மமும் ( புண்ணிய பாவங்கள் ) அழகு நிறைந்த தேகத்தில் கூடி இருந்தால் அல்லது அனுபவிக்க உபாயம் இல்லைதானே என்று சீடன் விண்ணப்பித்தான். அக்கன்மம் விரைவுடன் எவ்வாறு வருகிறது என்று கேட்டால் கன்மமும் ஆணவ மல அநாதிபோல அநாதியாகவே உள்ளது. ( எனவே இடையில் வருவதல்ல) அநாதியன்று அக்கன்ம மலம் ஆதி என்னில் உயிர்களுக்கு எல்லையில்லாத நானாவித போகங்களை புசிக்கக் கொடுப்பது எது என்ற கேள்வி எழும் எனவே கன்மமும் மாயையும் அநாதியே.

மேலும் இதனை ஒரு வகையில் சொல்லலாம். குற்றமற்ற உடல் (கெடாது) இருக்கும்போது வலிதான கன்மம் ஒழியாது, புண்ணிய பாவங்கள் ஏற்படுவதினின்றும் நீங்காது. எனவே, கன்மமும் உடம்பும் ஒன்றுக்கொன்று சார்புடையதாகும். இவ்வாறு சொல்வதால் கன்மத்து முன் என்ன? பின் என்ன என்று வரையறுக்க இயலாது. ( கன்மமும் உடலும் காரணகாரியமாய்த் தொன்றுதொட்டு வரக்கூடியது.)

விளக்கவுரை:

கன்மம் மாயை இவை ஆணவம்போல் அநாதியாகும். கன்மத்தில் உடல்தோன்றும், கன்மம் - உடல் காரண காரியமாகும் என்பதை விளக்குகிறது. திருமலி - அழகு, கரைகழி - எல்லையில்லாத

---

பாசற் சேத வேட்கை

பாடல் - 30

“ஐம்புல அரசன் வன்கண் வருஉதினி
பொறையருந் தானையின் இரிய நூறி
வாடா வாகை சூடிய தாபதப்
பேராண் பக்கப் பெரியோய் வாழிய

முடைமலி யாக்கையின் வினைபிணிப்பு ஆனா
வினைப்பொதி எறுழ்த்தோல் தணிப்போ இன்றே
மல்லல் ஆகம் புல்ல எல்லையில்
துன்பம் பகுவாய் ஆனாது பருகும்
வண்டுறை மன்ற மாதோ உண்டு எனல்
மயலோ மற்றது செயல் ஓவாதே
என்னை செய்குவென் கொல்லோ அன்னோ
ஆதி நூலும் ஓதும் வீடே
மாரி இரவின் ஆர்கலி அழுந்தும்
ஆரிய ஊமன் போல
அளியென் காமாதி முனிவர் கோவே"

இது பாசத்தேசம் எனப்படும் முத்தி பெறுவதற்குரிய உபாயத்தை அருள வேண்டுவது.

பொருள்:

ஐம்புலங்கள் என்னும் அரசனுடைய அஞ்ஞானம் என்னும் தூசிப்படையை பொறை என்னும் கெடுத்தற்கரிய படையாலே கெட அழித்து, கெடாத தவ ஒழுக்கமாகிய மாயையைச் சூடிய மிக்க ஆண்தகைமை கொண்ட பெரியோனே, வாழ்வாயாக.

புலால் நாற்றமுடைய உடம்பு உண்டாகிய வழி கன்மவினை ஒழியாது. கன்மவினை உண்டாகிய, மேலும் மேலும் ஏற்படுகின்ற வலிய உடம்பை ஒழிக்க இயலாது. இவ்வாறு உடம்பு எடுப்பதனால் உண்டாகும் துன்பத்தை - இந்திரியம் என்னும் வாயினாலே பருகித்தான் ஆக வேண்டும். இத்தகைய நிலை வளப்பமுடைய துறை போன்றதாகும். (தொண்டு தொட்டு நடந்து வரும் தொழிலாம்.)

எனவே முத்தி என்பது ஒன்று உண்டு என்பது மயக்கமன்றோ. ஏனென்றால் கன்மபந்தம் ஒழியாததன்றோ. ஆனால் இறைவன் அருளிச் செய்த ஆகமங்களும், முத்தி உண்டு என்று சொல்லுகின்றதே. யான் என் செய்குவேன். மழைக்காலத்து இரவில் கடலில் மூழ்கும் ஊமையன் போல வழியறியாது துயருகின்றேன். எனவே எனக்கு அருள்புரிந்து காப்பாயாக.

விளக்கவுரை:

உடலோடு கூடியிருப்பதால் உயிருக்கு வினைத்தொடர்பு நீங்காது என்றும், எனவே தனக்கு முத்தி எய்துதல் அரிது என்றும்,

அதற்கோர் உபாயம் அருள வேண்டும் என்றும் இப்பாடல் குறிப்பிடுகிறது. வரூஉதுஇனி - படை எடுத்துச் செல்லும்பொழுது முதன் முதலாகச் செல்லும் படையாகிய தூசிப்படையைக் குறிக்கிறது. தாபதப்பேராண் - தவ ஒழுக்கம் கொண்ட ஆண்மைத்தன்மை, வாகை - வெற்றி, முடை - புலால் நாற்றம், பிறப்புத்தோறும் கன்மவினை மிகுதியாகப் பிணிக்கப்படுதலால் வினைப் பொதி என்றும், அவ்வாறு வினை உளதாகியவிடத்தும் ஏதாவது ஒரு பிறப்பில் எதனாலோ, எவராலோ (ஆசாரியன்) விலக்குதற்குரிய வலியுடன் உடம்பு வந்து இயையும் என்பதால் எலுழ்த்தோல் என்றும் கூறப் பெற்றுள்ளது. வினைப்பயனை உடம்பின்றி நுகர முடியாது என்பதால் வண்துறை என்றும் கூறப்பெற்றது. துறை என்பது இங்கு தொலை உடைய நிலையைக் குறித்தது.

பிறப்பது - வினையை அனுபவிப்பது என்று இடைவிடாத தொழில் நடக்கும் நிலையில் பிறப்பற்ற முத்தி உண்டு என்று கூறுவது பித்த நிலைமைதானே என்பதைக் குறிக்க மயலோ என்று கூறப்பெற்றுள்ளது. வாய் பேசாத ஊமை மழைக்கால இரவில் கடலில் மூழ்குவது போல என்ற உவமை, ஊமை கையால் தான் தன் எண்ணத்தை வெளிப்படுத்துவான். அப்படியிருக்க அவன் இரவில் அதிலும் மழைக்கால கடலில் மூழ்கினால் தன் துன்பத்தை பிறர் அறிய எவ்வாறு உணர்த்த இயலும். அது போலத் தன்னுடைய நிலை எதுவும் உணர்த்த இயலாநிலையில் உள்ளது என்று மாணவன் ஆசிரியரிடம் கேட்கின்ற நிலையை உணர்த்தியது.

---

### பாசத்தேச உபாய உண்மை

### பாடல் - 31

“நெஞ்சு புண்ணுற்று அஞ்சல் ஓம்பொன
ஆரியன் அருளும் அறிவன் கொண்க
சேதகம் பயந்த செழுநீர் சேதகம்
மாசுக மண்ணிய தென்ன வாசுக
அயம்தீர்பு எய்த அறி மதி
பயந்தோன் வினைவிடல் வியந்தோ அன்றே”

இது பாசதேசம் எனப்படும் முத்திக்கு உபாயம் கூறுகிறது.

பொருள்:

ஞானத்தை ஆளுகின்ற தன்மையுடையவன் ஆதலால்

ஞானமாகிய மகட்குத் தலைவனே! நெஞ்சு புண்ணாகும்படி அஞ்சுவதை ஒழிப்பாயாக என்று கூறி ஆசிரியர் அருளிச் செய்வான்.

சேற்றை உண்டாக்கிய மிகுதியான நீராலே - அச்சேறாகிய மாசு போகும்படி கழுவினாற்போல - முன்வினையாலே ( ஊழ்வினை) இந்த உடம்பைப் பெற்றவன் இவ்வுடம்பால் அந்த முன்வினையைப் பந்தித்துக் கொண்டோன். அக்கன்மத்தை உடம்பால் நீக்குதல் ஆச்சரியமில்லை ( உண்மையாகும்). எனவே பிறவித் துன்பத்தைப் பிறவியாலே அழிப்பதை உணர்வாயாக. ( என்றார் ).

விளக்கவுரை:

அறிவன் கொண்க - மாணவனை விளித்தது. சேதகம் - சேறு, அயம் - ஐயம், வியந்தோ - வியப்பு வியந்தோ என நின்றது. இறைவன் உடல் ஆதிகளை உயிர்க்கு அருளுவது அதனைத் துன்பக் கடலின்றும் எடுத்து அருள் கரையில் சேர்ப்பதற்கு என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது. இதனையே சிவஞான சித்தியாரும்.

" உயிர்க்கு மன்னிய புத்தி வழங்கவும் அருளால் முன்னே
துன்னிய மலங்கள் எல்லாம் துடைப்பவும் சொல்லலாமோ"

எனக்கூறும். ( பாடல் 56 )

---

பாசதேச உபாயத்தைப் பாராட்டல்

பாடல் : 32

"தேனுடன் அமிழ்து கலந்ததது என்ன
அமிழ்தூண் அண்டரும் பெறற்கருந் தகைய
தண்டாப் பிறவிப் பேரிடர் எறிப
உரை உணர்வு கூடா வரகதி உய்ப்ப
மதியோர் ஆனாது பருகுவ பருகியும்
அமையாது நுவலும் அமைதிய பாச
வல்லி வேரற நிமிர்ப எல்லையின்
மறக்குறும்பு அறுப்ப அறத்தின் வேலிய
தனக்குநிகர் இல்லாத் தகைமைய மனத்தின்
மாசுறக் களைவ தேசொடு நிவந்த
துன்னிய வினையுகு நன்னெறி அறிகஎன

உரைத்தனன் என்ப மாதோ.
பொறைக்கு வரம்பாக அறத்தின் கோவே!

இது உடம்பால், உடம்புதந்த கன்ம வினையை அறுக்கலாம் எனக்கூறிய ஆசாரியன் உரையைப் போற்றியது.

பொருள்:

தேனும் அமுதமும் கலந்தது போன்ற சுவையை உடையது, அமிழ்தத்தை உண்ட தேவர்களுக்கும் கிட்டுவதற்கரியது, எல்லை இல்லாத பிறவியாகிய துன்பத்தை நீக்குவது, வாக்கு மனங்களுக்கு எட்டாத மேன்மையாகிய முத்தியில் செலுத்துவது, ஞானிகள் அளவற்ற நிலையில் புசிப்பது, அங்ஙனம் புசித்தும் நிரம்பாமையால் மேலும் மேலும் விருப்பப்படும் தன்மையது, பாசமாகிய பசுமையான கொடி மீண்டும் கிளைத்துப் பந்திக்காதபடி வேறறுப்பது, அளவில்லாத பாவமாகிய குறும்பை ( மலையை ) அறுப்பது, அறத்திற்கு வேலியாவது, தனக்குவமை இல்லாத மேம்பாட்டினை உடையது. மனத்திலுள்ள மாசை முழுமையும் களைவது.

இத்தகைய நன்மை அமைந்த வினையை நீக்குவதற்குரிய உபாயத்தை ( முன்பாடலில் கூறியதை ) அறிவாயாக என்று ஆசிரியன் கூறினான்.

விளக்கவுரை:

கன்மத்தால் விளைந்த உடம்பால் கன்மம் அறுக்கப்பெற்று முத்தி விளையும் என்று ஆசிரியன் கூறிய அருளுரையின் பெருமையை இப்பாடல் போற்றி மகிழுகிறது. எல்லையில்லாத பிறப்பை உணர்த்த தண்டாப்பிறவி எனப்பட்டது. வரகதி – முத்தி ஞானம்பெற்றவர்களை மதியோர் எனக்கூறப்பெற்றது. தெவிட்டாத இன்னமுது என்பதால் பருகியும், அமையாது எனக்கூறப்பெற்றது. பாவ வினை மறக்குறும்பாக உருவகிக்கப்பெற்றது. தேசு – ஒளி பொருந்திய. வினை நிகழ்ச்சிக்கு ஏதுவாகிய மனம், வாக்கு, காயங்களைத் திருவருளுக்கு உரியதாகிய செயல்களில் ஈடுபடுத்தினால் பிறவிக்கு ஏதுவாகிய வினையில்லாது ஒழியும். அத்தகைய ஞான நெறியே வினையுகு நன்னெறி எனக் கூறப்பட்டது. பொறைக்கு வரம்பாகிய அறத்தின்கோ ஆசாரியன் ஆவான்.

## பாசச்சேதம்
## பாடல். 33

"அழுக்காறு அவாஎன்று இழுக்குஇகல் இரிமிளை
மைந்தன் மருமான் மனையோள் மாதுலன்
என்பேர் அகழி எழில் பெற நிவந்த
கற்பனை எழுவினில் யான்எனும் போகியம்
பொற்புடை பருமுள் விலங்கி கைப்புடைச்
சீற்றம் வெகுளி மயக்கொடு சிவணிய
கூற்றத் தானை ஆற்றல் சான்ற
ஐம்புலத் தறுகண் வெந்தொழில் வேழம்
விடையப் ப∴தேர் கடவித் தடையின்
மனப்பேர் அத்திரி உகைத்துப் பேதைமை
அமைச்சன் சூழும் வினைப்பெருஞ் செழுநகர்
வேந்தன் காத்த பூந்தண் தேஎம்
பிறவா யாக்கைப் பெரியோன் பாதக்
கடவுள் மாமணி சுடர்விடப் புனைந்த
ஞான மாமுடி சுமந்த கோமகன்
வல்வினை மறவன் வலையில் சேரா
நல்லோர் யார்என நலங்கிளர் சூழ்ச்சியன்
கற்பனை இ∴தெனக் கடாங்கமழ் பதாகினி
பொறைமான் இரதச் செயல்தீர் குரகதத்
தவாஅறு களிமுகத் துவாவின் முற்றி
அடுமிளை பொடிபட எறிந்து நெடுமதில்
அகழியோடு இடிய நூறிக் கொடுநகர்
எரிவிருந்து ஊட்டி அரிதுபெறு சிறப்பின்
தன்னுடை நாச மன்னன் எய்தப்
பரமா னந்தம் பைதிறம்
வளையாச் செங்கோல் ஓச்சினன் நெடிதே "

இது பாசபந்தமாகிய அஞ்ஞானத்தினை ஞானத்தால் வென்ற செய்தியை வியந்து கூறியது

பொருள்:

அழுக்காறு, அவாவைக் காவல் காடாகவும், மகன், மருகன், மனைவி, மாமன் என்று சொல்லப்பட்ட பந்தத்தைப் பெரிய

அகழிகளாகவும், தன்னைப்பற்றிப் பெருமையாக நினைக்கின்ற கற்பனையை கோட்டையாகவும், போகத்திற்கு ஏதுவாகிய நான் என்னும் தன்மை மிக்க முள்ளை வேலியாகவும், வெறுக்கத்தக்க சீற்றம், அறியாமை ஆகியவற்றோடு கூடிய செயல்களை எமனை ஒத்த வீரராகவும், ஐம்புலன்களாகிய பஞ்சேந்திரியங்களை யானையாகவும், ஐம்புலன்களின் தொழில்களைத் தேராகவும், தடுத்தற்கரிய மனத்தை வாகனமாகவும், அறியாமையை மந்திரியாகவும், புண்ணிய பாவத்தை நகராகவும் கொண்டு அஞ்ஞானமாகிய வேந்தனாலே காக்கப் படுகின்ற பிறப்பாகிய தேகத்தை, பிறவா யாக்கைப் பெரியோன், அருளும் திருவடி என்னும் மணி அழுத்திய, ஞான மாமுடி சூடிய கோமகன் - ( ஆசிரியனாக )

வினையாகிய வலையில் அகப்படாத நல்லோராகிய வீரர்களையும், புத்தியாகிய மந்திரியையும், உடையவனாய், கற்பனை என்னும் கொடியை நாசம் பண்ணுகின்ற விரக்தி என்னும் யானையைச் செலுத்தி, பொறுமை என்னும் அழகிய தேரையும் செலுத்தி, உபதேசமாகிய குதிரையையும் செலுத்தி, அவா அறுத்தலாகிய அங்குசத்தைக் கையில் கொண்டு, துன்பத்திற்குக் காரணமான அவா என்னும் காட்டை அழித்துப் பந்தங்களாகிய நெடுமதிலை இடித்துப் பொடியாக்கி, இருவினையாகிய நகரத்தை எரியூட்டி, மேற்கூறப்பெற்ற அஞ்ஞான வேந்தன் காத்த உடம்பை நாசம் செய்து, பரமானந்த நாடாகிய முத்தி நிலத்தில் இருந்துகொண்டு ஞான வேந்தனாக அழிவில்லாத செங்கோலைச் செலுத்தினான் (என்றவாறு).

**விளக்கவுரை:**

இப்பாடலில் பிறப்பை எதிர்நாடாகவும், இறைவனை அந்நாட்டை அழிக்கின்ற வேந்தனாகவும் உருவகித்து அஞ்ஞானத்தை அழிக்கும் மெய்ஞ்ஞான அருள் கூறப்படுகிறது. தீய குணங்கள் உருவகிக்கப் பெற்றிருப்பதும், ஞானம் வேந்தனின் உறுப்புக்களாக உருவகிக்கப் பெற்றிருப்பதும் இப்பாட்டின் சிறப்புக்களாகும். மிளை - காடு, மாதுலன் - மருமகன், அழுக்காறு, அவா என்னும் காட்டிலுள்ள, உறவுகள் என்னும் அகழி தன்னுள் வீழ்ந்தாரைக் கரையேற முடியாது தடுக்கும் என்பதால் பேரகழி எனப்பட்டது. நான் பெரியன், இன்ன சாதியன், இன்ன ஊரினன் என்று தன்னைப் பற்றி மிகுதியாகக் கூறுவது கற்பனை எனக்கூறுப்பட்டது. நான் என்பது பிறரை வருத்தக் கூடியது. ஆதலால்

முள்ளாக உருவகிப்பட்டது. தொழிற்கருவி – சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், அத்திரி – குதிரை வகையில் ஒன்று – பரிக்கோல் – அங்குசம்.

---

கன்ம சேத உபாயம்

பாடல் . 34

"ஒருவன் தொடுத்த இருவினை மூன்றிடத்து
உறுதல் ஆரணம் அறையும் மற்றவையே
கருப்பாசையம் எனும் இருட்சிறைப் பள்ளி
அச்சிறைக் குறும்புழை அரிது நீங்கி
யாக்கை சுமந்து நோக்கும் காலை
புலம்பல கலங்க வலந்தலை எய்தி
தென்திசை சேரல் என்றிவை மூன்றினும்
காரணத் தன்றிப் பாரணம் இன்றே
அந்தக் காரணம் சேதனா சேதனம்
நன்றும் பேதை ஆகலின் சேதனத்து
ஒன்றிய இன்பத்து உவகையும் அன்ற
துன்பத்து அறந்தையின் கன்றுபு கனலும்
அசேதனத்து இடையின் இடர்நனி படரினும்
அடையா இன்பம் தடையின்றி எய்தினும்
தொல்லைக்கு என்னைகொல் அல்லலே என்னும்
உள்ளத்து உணர்ச்சி உள்ளா ராகிச்
சேதனத்து இயைதல் என்ப
மாதவத்து இறைவன் மாமுது நிதியே!

இது வினைவிடல் எவ்வாறு என்று கேட்ட சீடனுக்கு கன்ம சேத உபாயம் கூறியது.

பொருள் :

ஆன்மா செய்த புண்ணிய பாவங்களை மூன்றிடங்களில் அனுபவிக்க வேண்டும் என்று வேதங்கள் சொல்லுகின்றன. அந்த மூன்றிடங்களாவன : (கீழ்வருமாறு) கருப்பாசையம் எனும் அந்த காரம் (இருள்) நிரம்பிய சிறையாகிய கருவறையும், அந்தக் கருவறையின் சிறிய துவாரத்தை விட்டு அரிதாக நீங்கி உடம்பெடுத்து நிலத்தில் விழுமளவு வரும் பிறப்பும், பின் இந்திரியங்கள் (ஐம்புலங்கள்) யாவும்

நிலைகுலங்கத் துன்பப்பட்டு உடம்பை விடும் பொழுதில் வரும் இறப்பும் ஆகிய மூன்றாகும். இந்த மூன்றிடத்திலும் அனுபவிக்கும் வேதனைக்கு ஏதேனும் ஓர் ஏது உண்டு. ஏது இல்லாமல் அனுபவிக்க இயலாது. அந்த ஏதுதான் சேதனா சேதனம் ஆகும். (அறிவு, அறிவற்றது ஆகும்).

உயிர் மிக்க அறிவில்லாதது ஆதலால் அறிவினால் வந்த இன்பத்திற்கு உவகை கொள்ளவும், துக்கத்திற்குப் பிறரைக் கோபித்துக் கனலவும் செய்யும். அறிவில்லாத காரணத்தால் விடாது துக்கம் ஏற்பட்டாலும் கிடைத்தற்கரிய சுகம் ஏற்பட்டாலும் அதற்குக் காரணம் என்ன என்று உள்ளத்தில் நினைத்துப் பார்க்காது. அறிவிருந்த காலத்தும் ஏற்படுகின்ற இன்ப துன்பங்களுக்கு ஏது என்ன என்று நினையாது இருத்தலும் உண்டு. இவ்வாறு அசேதனத்தால் சேதனத்தால் ஏற்பட்ட இன்ப துன்பங்களுக்கு விருப்புவெறுப்பு இல்லாமல் இரண்டையும் ஒப்பாக உணர்வது மாமுது நிதியாகும். அதாவது உண்மை ஞானமாகும்.

விளக்கவுரை :

இப்பாடலில் உயிரானது கருவறையில், பிறப்பில், இறப்பில் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்குக் காரணம் முன்வினைப் பயனே ஆகும் எனக்கூறப்பெற்றுள்ளது. இந்த வினைப்பயன் சேதன, அசேதனத்தால் நடைபெறும். இந்த சேதன, அசேதனத்தால் நடைபெறுகின்ற இன்ப, துன்பங்கள் இரண்டையும் ஒப்பக் கருதி ஏற்றுக்கொண்டால் அதுவே உண்மை ஞானம் என்று ஞானவான்கள் கூறுவார்கள் என்ற கருத்தைத் தருகிறது. ஆரணம் - வேதங்கள், கருப்பாசையம் - கருவறை, இருட்சிறைப்பள்ளி - கருவறை, குறும்புழை - கருவறையின் துவாரம். பாரணம் - உண்ணுதல் (புசித்தல்) மாமுதுநிதி - உண்மைஞானம்.

---

ஞானசித்தாந்தச் சிறப்பு

பாடல் . 35

"பனுவ லாட்டி தனிமனைக் கிழவர்
நட்பும் பகையும் மெய்ப்பட நாடின்
யாவதும் இல்லை தானே யாயினும்
ஆய்விடை உடையது உளதே அஃதே

ஈன்றோர் பகைஞர் கீண்டோர் நட்பே
அருஞ்சிறை இடுநரின் இருஞ்சிறை விடுநரின்
யார்கொல் உறுதி யோரே கீறி
உடற்சிறை தவிர்த்த நலத்தகை யாளர்
கொடுத்தது நிலமிசை இவர்க்கே உயர்க்கெனை
உருவில் ஒருயிர்க்கு உடலுநர் உழையரென்று
இருவேறு உரைப்பதை எவனோ தெரிதரின்
கோடை தூற்றக்கூடிய ஊழிலை
வாடையின் வீற்றுவீற் றாகி ஆங்கு
செய்தியில் இரண்டு கையற ஒரீஇயர்
ஒக்கல் அல்லதை மற்றும் கேண்மதி
தண்ணணி ஆகமும் அ:.தெனின்
என்னை யோபிற பன்னுங் காலே”

இது ஞானவான்கள் கூறிய மாமுது நிதியாகிய உள்ள ஞானத்தை உடையார்க்கு நட்பும் பகையும் இல்லை என்று ஞானசித்தாந்தச் சிறப்பைக் கூறுகிறது.

பொருள்:

கலைமகளை தன்நாவில் குடியேற்றி உள்ள ஞானவான்களுக்கு ஆய்ந்து பார்த்தால் நட்பும் பகையும் இல்லை என்றாலும். அவை ஒரு சிறிது உண்டாதலும் உண்டு. அத்தகைய நட்பு, பகை யாது என்றால்

ஞானவான்களைப் பெற்ற மாதா, பிதாக்கள் சத்துருக்களாம். இவரது உடலைப் பிளந்து ஞானத்தைத் தந்த ஆசாரியன் நட்பினராம். அது எவ்வாறு என்றால் பிறப்பாகிய சிறையிலிட்ட பெற்றோரை விட யார் பகைவராவார். அப்பிறப்பிலிருந்து ஞானம் தந்து நீக்கி ஆசிரியரைவிட யார் நட்பினராவார். ஒருவருமில்லை.

உடலைப் பிளந்து பிறப்பாகிய சிறையிலிருந்து நீக்கிய ஆசிரியர்கள் ஞானவான்களுக்கு அருளியது நிலங்களுக்கு எல்லாம் மேலாகிய முத்தியாகும். எனவே இவை இரண்டிற்கும் துக்கப்படுதல் இல்லை. அவ்வாறானால் அருவமாக உள்ள ஆன்மாவிற்குச் சத்துரு நட்பினர் என்று இரண்டு வேறுபாடாகச் சொல்லவேண்டியது ஏன்?

ஆராய்ந்து பார்த்தால் கோடைக் காற்று அடிக்கின்ற பொழுது உதிர்ந்த சருகு இலை அக்காற்றினால் சிதைந்தவாறு போல, பக்குவப்பட்ட கன்மபலத்தைப் புசிப்பதற்கு உரிய காலத்தில் புசித்து (பச்சிலையாக இருந்தது) கன்மபலம் அற்ற காலத்து நீங்கி,

போகின்றவர்கள் சுற்றத்தார் ஆவார். இவர்கள் அல்லாத மேற்கூறியவர்கள் (பெற்றோர், ஆசிரியர்) ஞானவான்களுக்குப் பகையும் நட்பும் ஆகின்றார்கள். இன்னும் ஆராய்ந்து பார்த்தால் அழகிய உடம்பும், கன்மபலமும் இரண்டும் கூடியதற்குக் காரணம் அனுபவிப்பதற்கே ஆகும். எனவே அதனால் வேற்றவரைப் பகை, நட்பு எனக் கூறவேண்டியது இல்லை (என்றவாறு)

விளக்கவுரை :

பனுவலாட்டி, கலைமகள். கலைமகளின் கணவன் நான்முகன் என்றாலும் அவரை விடுத்து ஞானவான்களைக் குறிப்பதற்காக - தனிமனைக் கிழவர் எனக் கூறப்பெற்றது. கீண்டோர் - உடலை விட்டு நீக்குதலைச் செய்த ஆசிரியன். ஞானவான்களின் உயிர் தங்குவதற்கு இடமாகிய உடம்பைப் படைத்தலினாலும், அவ்வுடம்பு துன்பங்களைத் தருவதற்குரியது ஆதலினால் பெற்றோர் பகைவர் எனக் கூறப்பெற்றுள்ளது. அருஞ்சிறை - பிறப்பாகிய சிறை. சிறை துன்பத்திற்குரியது என்றாலும் உயிரால் அவ்வுடம்பு காதலிக்கப்பட்டு விரும்பப்படுவதால் அருஞ்சிறை எனப்பட்டது. நிலைமிசை - முத்தியைக் குறித்தது. உடலுநர் - பகைவர். ஊழிலை - உதிர்ந்த சருகு.

---

ஞானத்தை அறியாதார் தாழ்வுநிலை

பாடல் . 36

“தொல்லை ஞாலத்து எல்லை நீங்கிய
இருவகைத் தோற்றத்து ஒருவா உயிர்கட்கு
இருவினை ஒருவ மருவின்று ஆயிடை
நொதுமலர் கவிகை நொதுமலர்க் கவிகை
விதிமுறை மதிமலர் எய்திக் கதுமென
யாமுடைத்து அவருடைத்தாம் என என்றினிது
ஆம்முறை அறியார் மாமதி பிறழ்ந்து
செயலறுபு அறியார் மயலுற் றோரே
அளியரோ அளியர் தாமே தெளியா
இளையோன் எறிந்த குணில்வாய்ச் செல்லாது
இளையோற் சினவும் வளைவாய் ஞமலியின்
அளியரோ அளியர் என்னை
ஒளிகொள் காரணம் உன்னா தோரே”

இது ஞானத்தை அறியாதவரின் தாழ்வு நிலையைக் குறிப்பிடுகிறது.

பொருள் :

தொன்மையான ஞானலத்து அளவில்லாத உயிர்கட்கு இறைவன் சிவலிங்க வடிவம், அடியார் வடிவம் என்ற இரு வடிவில் நின்று - புண்ணிய பாவங்களைப் புசிக்கச் செய்வதால் உயிர்கள் புசிக்கின்றன.

பிறர் நமக்குச் செய்த நன்மையும், பிறருக்கு நாம் செய்த நன்மையும் அறிந்து பார்த்து இவை ஊழ்முறை என்பதை எண்ணிடாது அறநிலைப் பதிவாக நாம் உடையது அவர் தந்தது, அவருடையது நாம் கொடுத்தது என்றும் எண்ணுவது அறிவின்மையாம்.

முன் பாவ - புண்ணியங்களால் இப்பொழுது நிகழ்கிறது என்று எண்ணாமல் மதிகெட்டு, மயக்கமுற்றோர் அறிவில்லாரே ஆவர். இவர்கள் பிரபஞ்சத்தில் ஒருவருக்கொருவர் சுகதுக்கங்களைத் தரஇயலாது என்பதையும் அறியாதவரே ஆவர்.

அறிவில்லாத இளையவன் ஒருவன் எறிந்த குறுந்தடியை நோவாது எறிந்த இளையவனைச் சினக்கும் வளைந்த வாயை உடைய நாயின் அறிவுதானும் இல்லாதவர் ஆவர். ஏனென்றால் செயல்கள் அனைத்திற்கும் பூர்வ கன்மபலன் தான் காரணம் என்பதை அறியாதவர்கள் அவர்கள் (என்றவாறு).

விளக்கவுரை :

ஊழ்வினைதான் இப்பிறப்பின் செயல்கட்குக் காரணம் என்பதை அறியாதவர்கள் - ஞானவான்களின் தன்மை இல்லாதவர்கள் ஆவார்கள். இவர்கள் மிகவும் அறிவில்லாதவர்கள் ஆவர் என்பதை இப்பாடல் சுட்டுகிறது. இருவகைத் தோற்றம் - தாபர சங்கமம், ( நிலத்திணை - சிவலிங்கம், இயங்குதிணை - அடியார் ) கவிகை என்பது நன்மையைக் குறித்தது. நொதுமலர் கவிகை என்பது பிறர் செய்த நன்மையினையும், நொதுமலர்க் கவிகை என்பது பிறருக்குச் செய்த நன்மையையும் குறிக்கும். நாய் தன்னை எறிந்த கம்பை நோக்காது எறிந்தவனைத்தான் சினந்து குறிக்கும். அதுபோல ஆன்மா தன் செயலுக்குரிய பாவபுண்ணியமான ஊழை நினைக்க வேண்டும். அதை விடுத்து இப்பிறவிச் செயலை நினைப்பது அறிவற்ற நிலையாகும். எனவே தான் நாயின் அறிவுகூட இல்லை எனக்கூறப் பெற்றுள்ளது.

## ஞான சித்தாந்தச் சிறப்பிற்குப் பிரமாணம்
## பாடல் . 37

“அயில்அரி அரலை விழுப்புண் எரிபழுத்து
அனல்கால் கோலிற் பன்முறை அடினும்
பேரிடர் நீத்த பெருந்தகை யோன்என்று
ஆர்வ நெஞ்சம் அல்லதை யாரே
வேரங் கொண்டார் வேறோர் மாறுஎழுந்து
உடம்பிடி உடல்துணிப் படுப்பினும் விரையொடு
மலைய சந்தும் வழுத்தும் கொண்டு
தலையில் பாதம் தாங்கினும் முலையாப்
பிறவிப் பிணிதணி அறவளர் இவர்என
விளையா இன்பம் விளையின் அல்லாதை
உளைவதை உடையரோ விளைவு உணர்ந்தோரே”

இது ஞானவான்களின் சிறப்பிற்குப் பிரமாணமாகிய சான்று காட்டுவதாகும்.

பொருள் :

வேலாலே அறுக்கப்பட்ட வருத்தத்தைத் தரும் பெரிய புண்ணை நெருப்பிலே சுடப்பட்ட அனலை உடைய கோலாலே பலகால் சுட்டாலும், சுட்ட மருத்துவனை துயர்தீர்தத பெருந்தகையோன் என்று சிறப்பிப்பது அல்லது அவர் மீது கோபம் கொள்வோர் உண்டோ. (இல்லை) அது போலப் பாவத்தை நீக்கத் துன்பத்தைத் தரும் இறையை வழுத்துவதல்லது ஞானவான்கள் சினப்பது இல்லை.

மாறுபாடாக எழுந்து உடம்பை இருகூறாக வெட்டினாலும், மணம் பொருந்திய பொருள்களோடு சந்தனத்தையும் சாத்தித் துதித்துத் தலையில் பாதம் பொருந்த வணங்கினாலும் இருநிலையரையும் ஆச்சாரியன் இவர்கள் பிராரத்த கன்மம் தொலைத்தற்கு ஏதுவானவர்கள் என்றே கருதுவான். அத்தகைய ஆச்சாரியனாகிய ஞானவான்கள் பிறவித் துக்கத்தை ஒழித்த தர்மவான்கள் ஆவார்கள். இவர்களிடத்து (ஞானவான்களிடத்து) பிரியம் கொள்ளுவதல்லது செற்றம் கொள்ளுதலைச் செய்யார் முத்தி உணர்ந்தோர்.

விளக்கவுரை :

அகில் - வாள், அக்காலத்தில் புண்ணை ஆற்றுவதற்குத் தீக்கரண்டியால் சுடுவர் என்பது தெரியவருகிறது. வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால் - மாளாக் காதல்கொள் நோயாளன் போல் (பெருமாள் திருமொழி: 5.4) என்ற பிறரின் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. வேரம் கொண்டோர் - கோபம் கொண்டோர், கொலை செய்தோரும் வாழ்த்தியோரும் பிராரத்த கன்மத்தைப் புசிப்பவர்களே என்பது குறிக்கப்படுகிறது. (5 - 8) உலையா -கெடாத.

---

ஞானசித்தரின் சிறப்பு

பாடல் . 38

"வையுள் நீங்கப் பயன்பல பெருக்கக்
கைதூ வாத செய்தி யோர்க்கும்
பருவரல் பருவது துருவம் அல்லதை
வருவது நன்னயம் மற்றோ அறிவழிந்து
அரிவல மாக்கடல் அழுந்தல் செயல்அன்று
ஆசற உணர்ந்த தீதி லாளர்
மான்மதம் பளிதம் வானறும் சாந்தம்
தாள்முதல் பழிச்சுநர் தைவந் திடினும்
செவிசுடு தகைய மொழிபல பயிற்றி
மயிரின் தகைத்து வருத்து எரித்து இடிப்பினும்
ஞான மாத்துலை சீர்புகுத்து ஆநாம்
முனைப்பாற் செய்தி நனைப்பாற் பட்டன
மூரல் முறுவல் அல்லதைத் தேரின்
உவகைக் கலுழ்ச்சியோ இலரே இலரே
உரையிடை மறந்தனன் மாதோ உவகை
இவர்க்கிடர் இலமென மனக்களி யோரே
கலுழ்ச்சி தீங்கு செய்தியோர் நீங்கா
நிறையத்து அழுந்துதற்கு ஏது ஆயினும்
எனவே அழிந்த நெஞ்சமொடு இனைபுஆங்கு
ஆனார் பெயர்த்தும் ஒன்று அயர்த்தனென் யானே
தொடுத்த வெவ்வினை எவ்வளவு உடைத்தென

கையற்று இன்னல் எய்தலும் உரியர்
அன்னோ வீடுஇதன் ஊங்கு மற்று
என்னோ நாடரும் கேள்விநெடி யோர்க்கே"

இது தனக்குவரும் நன்மை தீமைகள் ஊழால் வருவன என்பதை அறிந்து அதில் விருப்பு வெறுப்பற்ற ஞானசித்தரின் சிறப்பைக் கூறுவது.

பொருள் :

வறுமைத் துன்பம் நீங்குவதற்குப் பல பயன்களும் ஏற்படுவதற்கு விடாது முயற்சி உடையோர்க்கும் துன்பமே வருவது ஊழினால் ஆகும். நல்ல இன்பம் வருவதும் அந்த ஊழினால் ஆகும். எனவே அறிவு கெட்டுப் பெரிய துக்கமாகிய கடலில் அழுந்தாதே.

முன்செய்த கருமம் அல்லது ஒருவருக்கொருவர் இன்ப துன்பச் செயல்களைச் செய்ய இயலாது என்பதை அறிந்த நல்லோர். நறுமணம் மிக்க கஸ்தூரி, கற்பூரம், சந்தனக்குழம்பு ஆகியவற்றைப் பலகால் துதித்துப் பாதாதி கேசங்களில் பூசினாலும், செவியில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றினாற் போல இழிந்த வசனங்களைச் சொன்னாலும், மயிரைப் போல நுண்ணியதாக அறுத்து ஏற்பட்ட நெருப்பிலே காய்ச்சுப் பெற்ற கோலைக் கொண்டு சுட்டாலும்.

தன்னுடைய ஞானம் என்னும் தராசிலே சீர்தூக்கிப் பார்த்து நாம் முற்பிறவியில் செய்த கன்ம பலம்தான் இந்த நிலைக்கு உரியது என்று எண்ணி முடிவு கொண்டு சிறுமுறுவல் கொள்ளுவார்கள். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் விருப்பு, வெறுப்பு கொள்ள மாட்டார்கள்.

இத்தகைய ஞானமுடையோர் நன்மை தீமையில் விருப்பு வெறுப்பற்ற நிலைமையே தங்களுக்கு மகிழ்ச்சியைத் தருவது என்று எண்ணுவார்கள். தங்களுக்கு யாரேனும் துன்பம் விளைவித்தால் சில நாளில் இவர்கள் நரகத்தில் அழுந்துவதற்குத் தாங்கள் காரணமாகி விட்டோமே என்று மனதில் துயரம் அடைவார்கள். மேலும் தங்களுக்குரிய பிராரத்த கன்மம் இன்னும் எவ்வளவு காலத்திற்கு உடையதோ என்று அடிக்கடி எண்ணிமனம் துன்பப் படுவார்கள். இத்தகைய தன்மை உடையவர்களுக்கு ஒரே நினைவு முத்திநெறியாகும். இந்த எண்ணத்தை விட வேறு உளதோ.

விளக்கவுரை :

இப்பாடல் உயிர்களுக்கு இப்பாடல் ஏற்படுகின்ற இன்ப துன்பங் களுக்குக் காரணம் பிராரத்த கன்மமே என்பதைத் தொகுத்துக் கூறுகிறது. ஞானவான்கள் பிராரத்த கன்மத்தால் ஏற்படும் இன்ப துன்பங்களை ஒன்றாகவே கருதுவர். அதற்காக விருப்பு வெறுப்பு கொள்ள மாட்டார்கள். முயற்சியுடையோர் துன்பப்படுவதும் சில நேரங்களில் இன்புறுவதும் ஊழால் வருவது என்பதனை அறிவுறுத்தப் பாடலின் முதற்பகுதி அமைந்துள்ளது. தீதும் நன்றும் பிறர்தர வாரா (புறம் -192) எனக் கூறியாங்கு முன்பகுதிக் கருத்துக் கூறப்பெற்றுள்ளது. (5 - 6 வரி) மான்மதம் - கஸ்தூரி, பிறர் தருகின்ற துன்பத்தைத் தன்னுடைய பிராரத்த கன்மத்தால் வருவது என்றெண்ணிச் சிறப்புற்றோரின் தன்மையைக் குறிக்க மூரல், முறுவல் எனக் குறிக்கப்பட்டது. தனக்குத் தீங்கு செய்தவருக்கு நரகம் கிடைக்கப் போகிறதே என்று எண்ணி வருந்துதலை அழிந்த நெஞ்சம் என்பது குறிப்பிடுகிறது.

---

நல்வினை நிகழ்ச்சி

பாடல் . 39

“நஞ்சினிது அருத்தினும் நல்வினை மாட்சி
வஞ்சமில் லோர்க்கு அமிழ்தா கற்றே
நஞ்சுஅமல் அயினி நாகம் உயர்த்தோன்
விஞ்சின வீமன் வீட்டி வருத்தி
நாகம் நூக்க நாகரும் பெறாஅ
ஆரமிழ் தன்றி அணங்கொடு நடந்த
பேரிசை யோனே பாரதம் இசைக்கும்
அன்னோன் அவ்வை அருமுனி பணியில்
கண்ணனைப் பயந்து நன்னதி இயக்க
அங்கர் கோனாய் அரசுதனைப் பணித்து
பொங்குதிரை யாடப் புரவு பூண்டிசினே”

இது ஊழ்வலியால் நல்வினை நிகழும் காலத்து வந்த தீமையும் நன்மையாம் என்று கூறுவது.

பொருள் :

நல்வினை வருவதால் அழிவில்லாதவர்க்கு நஞ்சை

உண்டாலும் அது அமிழ்தமாக குடியும். (உதாரணமாக) மிகுந்த சினத்தை உடைய வீமன் இறக்க வேண்டும் என்று நாகக்கொடியை உடைய துரியோதனன் நஞ்சுகலந்த சோற்றை அளித்து நாகலோகத்தில் தள்ளினாலும், வீமன் நாகலோகத்திலுள்ள நிறைந்த அமுதத்தைப் புசித்ததோடு அவர்கள் அளித்த நாக கன்னியையும் திருமணம் செய்து கொண்டு பெரும்புகழ் எய்தினான். (எனவே தீமையும் நன்மையாயிற்று)

வீமனின் தாயாகிய குந்திதேவி துருவாச முனிவன் தந்த மந்திரத்தால் கர்ணனைப் பெற்றுக் கங்கையாற்றிலே பேழையில் வைத்துத் தள்ளி விட்டாலும், அவன் துரியோதனனுக்குத் தோழனாக அமைந்து அங்க தேசத்திற்கு அரசனாகிப் பகையரசர்கள் பணிந்து திரை செலுத்த உலகத்தில் பெரிய உபகாரி என்னும் புகழைப் பெற்றான்.

விளக்கவுரை :

நல்வினை வந்த காலத்துத் தீமையும் நன்மையாகும் என்பதற்கு வீமனுடைய நிகழ்ச்சியையும், கர்ணனுடைய நிகழ்ச்சியையும் ஏதுக்களாகப் பாடல் காட்டுகிறது. பாரதம் இசைக்கும் என்பதை இரண்டு செயல்களுக்கும் கூட்டிக் கொள்ள வேண்டும். அவ்வை - தாய் குந்தி, அடுமுனி - துருவாச முனிவர், அங்கர்கோன் - அங்கதேசத்து அரசன்.

---

## தீவினை நிகழ்ச்சி
## பாடல் . 40

“அறப்பயன் தீரின் அமிழ்தே யானும்
கடுப்பாடு எய்தல் விடுத்தோ இன்று
தக்கன் எடுத்த முத்தீ முற்றத்
தொக்க வானோர் உற்றதை பெரிதே
எயிறும் துண்ட முகனும் கையும்
அந்தியும் வானியும் இந்துவும் எரியும்
இடிப்பத் தக்கன் இருஞ்சிரம் இழந்து
தகர்ச்சிரம் எடுத்துப் பிழைத்ததை அரிதே
வாசவன் கோகிலம் மாயின் கேசவன்

பேயாய் அகன்று தாயினன் கடிதே
இந்திர சித்தோடு யாளி வரருசி
தத்திரம் பயின்றோர் தலைமையின் வழாஅர்
வினைப்பயன் உணர்ந்து வெல்வகை நாடித்
தவத்திறம் படரும் காலை முகைத்தபு
கொம்மை வெம்முலை இளையோள் கூடும்
தன்மையன் அன்றியும் அருந்தினன் தணியல்
அயில்புரை நெடுங்கண் அம்பணைத் திரள்தோள்
மயிலியற் சாயல் குயிலியற் கிளவிக்
கலங்கழி மகளிர் ஐயிரு நூற்றுவர்
மணந்தோன் மன்னன் மணங்க யாளி
கூவல் தூண்டிய காதல் காசனி
ஆதிப் புலைச்சி யாகி மேதினி
இன்னிசை எழுவர்ப் பயந்தோன் ஈண்டே
சிந்து நாடன் செயத்திர தன்முடி
இலங்கிலை வாளியின் அறுத்தோன் நிற்ப
நிலம்புக எறிந்த தன்தலை தவம்புரி
தந்தை தரைசேர் அந்தரம் பெரிதே
பாண்டவர் மரபின் ஆண்டகைக் குரிசில்
தனமயன் வேள்விக் குருமுனி உற்ற
தன்மையும் நன்மைய அன்றே விண்ணோர்
மகுடம் புனைந்த நகுடன் பாந்தள்
படிவங் கொண்டு படிசேர்ந் தனனே
திருமணி வள்ளத்து உயிர்மருந்து உதவில்
தடப்படும் தெண்ணீர் தானும்
உடற்பகை அற்றால் உணருங் காலே”

இது ஊழ்வலியால் தீவினை நிகழுங் காலத்து வந்த நன்மையும் தீமையாம் என்பதைக் கூறுகிறது.

பொருள் :

பூர்வ புண்ணிய கன்மம் அனுபவிக்கின்ற காலத்து அமிழ்தத்தைப் புசிப்பினும் நஞ்சின் தன்மையாதல் விட்டொழிதல் இல்லை. (அதற்குரிய சான்றுகள் வருமாறு )

தக்கன் எடுத்த யாகம் முடித்தற் பொருட்டு ( யாகம் நல்லது)

அங்கு கூடிய தேவர்கள் பட்ட துன்பங்கள் (கெட்டதாயிற்று) பெரிதாகும். ஆதித்தர் பன்னிருவருள் வாணி மூக்கும், சந்திரன் முகமும், அக்கினி கையும் இழந்தார்கள். தக்கன் தனது பெரிய தலையை இழந்து, பின் சிவன் கருணையால் ஆட்டுத்தலை பெற்றுப் பிழைத்தது அரிது. இந்திரன் குயிலாகப் பறந்து திரிந்தான். திருமால் பேயாய் கடிதாகத் தாவித் திரிந்தான்.

மேலும் ஒரு சான்று. இந்திரதத்தர் (இந்திர சித்து ) யாளி, வரருசி என்ற இருடிகள், (முனிவர்கள்) மூவரும் சாத்திரங்கள் பயின்று தலைமைத் தன்மையில் வழுவாதவர்கள். அவர்கள் தங்கட்குப் பூர்வகன்ம பலம் வருவதை முன்பே அறிந்து அதனை வெல்லும் உபாயம் காண்பவராய்த் தேசாந்திரம் திரிகின்ற காலத்தில் (நன்மை) வரருசி கோங்கரும்பு போன்ற முலையை உடைய இளையாளைக் கூடும் தன்மையன் ஆனதோடு மதுவும் (சுராபானம்) அருந்தினான். (தீமை) இந்திரதத்தர் ஒரு அரசன் இறந்த உடலில் புகுந்து அவனுடைய மனைவியர் ஆயிரவரைக் கூடிக் காம இன்பம் கொண்டான். (தீமை) இவ்வண்ணமே யாளி முனிவரும தன் சிநேகத்திற்கு உரிய, தன்னாலே கிணற்றிலே தள்ளப்பட்ட ஆதிப் புலைச்சி ஒருத்தியைக் கூடிப் புழை உடைய யோகாநந்தன் உள்ளிட்ட ஏழு பிள்ளையைப் பெற்றான். (தீமை)

சிந்து என்னும் நாட்டிற்கு மன்னன் செயத்திரதன் தலையைத்தன் அம்பாலே அறுத்த அருச்சுனன் நிற்க, செயத்திரதன் தந்தை விருத்தஷத்திரன் என்பான் தன் மகன் தலையைக் கீழே விட்டார் தலை சின்னாபின்னப்பட்டுப் போகட்டும் என்று சமந்தபஞ்சக மடுவின் கண்ணே தவசு பண்ண (நன்று) மகன் தலையை அறுத்த அருச்சுனன் அம்பால் அத்தலையை விருத்தஷத்திரன் கையில் விழவைக்க அதனைக் கண்டு வெறுப்புற்று அதனைப் பூமியில் எறிய, அதனால் விருத்தஷத்திரன் தலை சிதறித் தரையில் வீழ்ந்தது (தீது) பெரிய கதையாகும்.

பாண்டவர் மரபில் ஒருவனான சனமேசயன் என்னும் பெயரை உடைய அரசன் தான் செய்கின்ற யாகத்தில் (நன்று) ஆசாரியன் ஒருவன் தூங்கிக்கொண்டே ஓமம் செய்வதைப் பார்த்து அவனைத் தர்ப்பையால் தட்ட அவன் வேள்வித் தீயில் விழுந்து இறந்தான். செய்த குற்றம் குருத்துரோகமான தன்மையையும் உண்டன்றோ (தீமை).

இந்திரனால் மகுடம் சூட்டப்பட்ட நகுடன் என்னும் வேந்தன் சத்த முனிவருக்குச் செய்த அவமதிப்பால் பெரும் பாம்பின் வடிவம் பெற்றுப் பூமியில் வீழ்ந்தான். இவ்வாறு பொன் தட்டிலே வைக்கப்பெற்ற உயிருக்கு அருமருந்தான அமிர்தமாகிய தண்ணீர் தந்தாலும் அது உயிர்க்குப் பகையாவதும் உண்டாம் (என்றவாறு)

விளக்கவுரை :

சான்றுகளாகப் பல புராணக் கதைகள் தரப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கனவாம். கடுப்பாடு - தீமை, இங்கு நஞ்சைக் குறித்தது. முத்தீ - யாகம், இந்து - சந்திரன், தகர் - சூடு, கோகிலம் - குயில், கேசவன் - திருமால், இந்திரசித்து என்பவன் விதேசநாட்டு தேவசுவாமியின் மகன். இவனை வடநூல் புராணம் இந்திரதத்து என்றும் அழைக்கிறது. தேவசுவாமியின் உடன்பிறந்த கரம்பகன் மகன் யாளி. இவனை வியாடி என்றும் அழைப்பர். வரருசி - சிவகணங்களில் ஒருவராகிய புயதத்தர் என்றும், இவர் உமையவள் சாபத்தால் கௌசாம்பி நகரில் வரருசியாகப் பிறந்தார் என்றும் கூறுவர். தணியல் -மது. (சுராபாணத்தைக் குறித்தது) கூவல் - கிணறு, ஆதிப்புலைச்சி - சண்டாளப்பெண்.

---

பிராரத்த கன்ம சேதம்
பாடல் . 41

“பழவினை பயின்ற பழுதின் அயின்று
வருவினை தருஉம் வாயில் அறிவென்
கபாடச் செந்தாழ் கடாஅ விடாஅவ
உடைவது ஆயின் ஒழியாப் பாசத்
தொல்லை வல்வினை துகள்தபு காட்சி
செல்லாது உறும்அதற்கு எல்லை யாதெனில்
படைப்புப் பூண்ட ஒருவர்க்கு அவையே
துடைப்புப் பூணா எனைப்பல திறத்த
மண்ணை நல்லான் வயிறுதர வந்த
வெண்ணெய் ஒண்பால் புண்ணியக் குழம்பு
மலைய சந்தின் கலைநவில் இன்துணி
நறுநெய் வெண்தயிர் நலங்கேழ் ஒண்படி
மைந்துஅமல் நறுவிர்ரைச் சந்தின் இன்சேறு

ஆசா வாறு போல ஆங்குப்
போகாது அம்ம புராதன மாக
தொடநனி நிவந்த கொடிநுடங்கு ஆரெயில்
வைவேல் முதல மண்இரும்பு ஆதல்
ஐயம் இல்லாச் செய்தி ஏய்ப்ப
உள்ளத்து உள்ளிய உகுதற்கு
உள்ளத்து உள்ள தள்ளுமதி விரைந்தே”

இது பிராரத்த கன்மம், ஞான உபாயத்தால் கழியாது. அதனை அனுபவித்தே கழிக்கவேண்டும் என்று கூறுகிறது.

பொருள் :

பூர்வ கன்மபலத்தில் பக்குவப்பட்டவற்றை (பழவினை) குற்றத் தீரப்புசிக்க வேண்டியவற்றைப் புசித்து ஆகாமிய வினை வருவதற்குரிய வழிக்குரிய வாயிலை நிறை என்னும் கதவை இட்டு, ஞானம் என்னும் அழகிய தாழாலே அடைக்க வேண்டும். அவ்வாறு அடைத்தால் எதிர்வினை ஐயமறக் கெடும் என்று ஆச்சாரியன் அருளிச் செய்தான்.

அவ்வாறானால் ஆன்மாவோடு பந்தித்துக் கிடக்கின்ற வல்வினைகள் ஞானமில்லாததனால் நீங்காது பல பிறப்புக்களில் தொடர்ந்து வருகின்றன. அவ்வாறு பிறப்பு தோறும் தொடர்ந்து வருகின்ற வல்வினைகளைப் புசித்து, அனுபவிப்பதற்குரிய எல்லை யாது?

பூர்வ கன்மத்தை பிறந்து, புசித்து, அறுத்தல் வேண்டும். அதற்காக அஞ்சுதல் வேண்டா, அவ்வாறு புசிப்பதற்காக வந்த கன்மபலன் ஆன்மாவால் அழிக்கப்படாதவனாய் எத்தனையோ பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வரும். பூர்வபலன் உள்ளவரை புசித்தே ஆக வேண்டும்.

அழகையும், குணத்தையும் உடைய பசுவினிடத்தில் உண்டாகிய நெய் வெண்ணெயாகாதவாறு போலவும், தயிர் இனிய பால் ஆகாதது போலவும், திருநீறு சாணிக்குழம்பு ஆகாதது போலவும், சரீரத்தில் (உடம்பில்) பிராரத்த வினையாக வந்த கன்மபலம் புசித்தல் அல்லது தீராது.

ஆனால் உயர்ந்த கொடியசைகின்ற மதில் ஒருகாலத்தில் மண்ணாவதும், கூர்மையான வேல் ஒருகாலத்தில் இரும்பாவதும் ஐயமில்லை. அதுபோல முற்பிறப்புக்களிலும், இப்பிறப்பிலும் (ஆசாரியன் அருள் பெறுவதற்கு முன்னால்) பந்தித்துக் கிடந்த கன்மம் நீங்குவதற்கு ஆசாரியனை மனதாலே அர்ச்சித்து, உபதேசத்தை ஏற்று, கன்மசேதம் பண்ணிக்கொள்ள முயலவேண்டும் (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் பிராரத்த வினையை அனுபவித்து ஆகவேண்டும். ஏனென்றால் கன்மபலத்தைப் புசிக்கத்தான் உடம்பாய பிறப்பு எடுக்கப்பெற்றது என்பதை வலியுறுத்த நெய் வெண்ணெய் ஆகாது உள்ளிட்ட உவமைகள் எடுத்துக் காட்டப்பெற்று, கன்ம வினைகளைப் புசிக்கின்ற பொழுது பந்தித்துக் கிடந்த கன்ம வினை நீங்குவதற்கு முயற்சிக்கலாம். அம்முயற்சி ஆசாரியனின் உரையைப் பெறுவதாகும் என்று கூறி அதற்கு கோட்டை - மண்ணாவது, வேல் - இரும்பானது கூறப்பெற்றது. வருவினை - ஆகாமிய வினை, பழவினைப்பயன் நுகருங்கால் செய்யப்படும் செயலும் ஏதுவாக அமைந்து இப்பிறப்பில் இணையீட்டப் படுவதனால், வருவினைக்கும் வாயில் எனக் கூறப்பட்டது. எனவே சிவஞான சித்தியாரும், "மேலைக்கு வித்தாகி, விளைந்தமை உணவுமாகி" (பாடல். 102) என்று குறிப்பிடும். கபாடம் - கதவு, செந்தாழ் - தாழ்ப்பாள், துகள்தபு காட்சி - குற்றமற்ற ஞானம், துடைப்பு - அழித்தல், பிராரத்தவினை புசிப்பதற்கே உடம்பெடுத்த ஆன்மா அவ்வுடம்பால் அதனைப் புசிக்க வேண்டும் என்பதை வலியுறுத்த படைப்புப் பூண்ட ஒருவர் எனக் கூறப்பெற்றது. சாணம் - யாகம் போன்றவற்றிற்குப் பயன்படுவதால் புண்ணியக் குழம்பு எனப்பட்டது. புராதனம் - பூர்வகன்மம், எயில் - மதில்.

---

## ஞானவான்களின் அந்தரங்க வேறுபாடு
### பாடல் . 42

"மறைமுறை உணர்ந்த அறிவின் கிழவரும்
மம்மர் எய்திய மடவ மாந்தரும்
கைதொடல் கண்படை வெய்துறு பெரும்பயம்
களிபடு காமத் தளிதலை மயங்கிய

தகுதி அல்லது பகுதி இன்று எனின்
கேளினி வாழி கெடுகநின் அவலம்
கொய்தளி ரன்ன குலக்கோ மளத்தை
மெய்யுற முயங்கி விடனா யினனே
கொம்மை வெம்முலைத் தன்மகள் தழீஇ
அம்முலை நல்கிய தாயென உவந்தனன்
மற்றும் கேண்மதி முள்தாள் தாமலை
நுண்தாது பொதிந்த செந்தோடு அன்ன
செங்கை கொங்கை கருங்கண் தைவர
மைந்தன் என்ன மனமகிழ்பு உருகிப்
பெருவரை கான்ற சிறு வெள் ளருவியின்
சொரிதல் ஆனாப் பாலே அவையே
ஆடவன் வருட அறிவு பிறழ் எய்தி
மெய்புகு அன்ன கைகவர் முயக்கமொடு
இன்ப வெள்ளத்து அன்பு இயைந்து ஆங்கு
அறங்கரை நாவில் நன்றோர் உள்ளம்
சிறந்தன்று மன்னோ தெரியுங் காலே ”

இது ஞானவான்களக்கு இயல்பாக வேறுபாடு இல்லை என்றாலும் அந்தரங்க வேறுபாடு உண்டு என்பதை உணர்த்துகிறது.

பொருள் :

ஆகமத்தில் சொல்லுகின்ற முறைமையை அறிந்த ஞானவான்களும், மயக்கமுற்ற அஞ்ஞானிகளும், உண்ணுதல், உறக்கம், பயம், பெண்களின் போகம் இவற்றில் தலைத்தலை முயங்கும் முறைமை அல்லது இருவருக்கும் வெளிப்படையாக வேறுபாடு இல்லை.

என்றாலும் நல்ல குலத்தில் பிறந்த மாந்தளிரை ஒத்த தன்னுடைய இளமையான மனைவியை மெய்யுற முயங்கிய புருஷன் அவளுக்குரியதே போன்று முலைகளை உடைய மகளைத் தழுவுகின்ற போது தனக்குப் பாலூட்டிய தாயாகவே எண்ணி அணைத்து மகிழ்வான். (ஒரு ஆடவன் மனைவியை அணைப்பதற்கும் அதே உறுப்புகள் உள்ள மகளை அணைப்பதற்கும் அணைப்பு ஒன்றானாலும் எண்ணத்தால் வேறுபாடு உடையது).

தாமரையின் தாது பறந்த செவ்விய இதழ் போன்ற தன் மகனின் கை பாலுண்ணும் போது தன்னுடைய முலையின் கருமையான கண்ணைத் தடவுகின்றபோது தாய் தன் மகனென்று நினைந்து உருகுவதால் முலையிலிருந்து மலையருவி போலப் பால் சொரிகிறது. ஆனால் அதே பெண்ணினுடைய முலைகளை அவளுடைய புருடன் வருட அறிவு மயங்கி, சிற்றின்ப வேட்கையே ஏற்படுகிறது.

எனவே தருமத்தையே சொல்லுகின்ற நாவை உடைய ஞானவான்கள் ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது உள்ளத்தால் வேறுபட்டிருப்பார்கள் (என்றவாறு)

**விளக்கவுரை :**

ஞானவான்களும், அஞ்ஞானிகளும் அன்றாடச் செயல்களைச் செய்யும் பொழுது ஒன்று பட்டவர்களாகக் காணப்பட்டாலும், ஆகமவழி நிற்கின்ற ஞானவான்களின் உள்ளம் அந்தக்கரண சுத்தியால் வேறுபட்டிருக்கும் என்பதை இரு உதாரணங்களால் (புருஷன் - மனைவி - மகள்), (மனைவி - மகன் - புருஷன்) நிரூபிக்கப்பட்டுள்ளது. அறிவின் கிழவர் - ஞானவான்கள், மடவமாந்தர் - அஞ்ஞானிகள், கைதொடல் - உண்ணுதல், கண்படை - தூக்கம், கொய்தளிர் - மாந்தளிர், கோமளம் - இளமை, உள்ளப் புணர்ச்சியிலிருந்து மெய்யுறு புணர்ச்சியை விலக்கிக்காட்ட மெய்யுற முயங்கி எனக் கூறப்பட்டது. தைவர - தடவுதல், குழவியின் செங்கை வருடுகிறபொழுது தாயின் மனம் அறிவு பிறழ்வதில்லை. ஆடவன் வருடும்பொழுது அறிவு மயங்குகிறது. எனவே ஆடவன் கையை அடை கொடுத்துக் கூறாது குழந்தையின் கையை் அடைமொழியோடு கூறப்பெற்றுள்ளது. செங்கை என்று அடைகொடுத்துக் குறிக்கப் பெற்றுள்ளது. நாவிற்கு விளக்கம் அறங்குகூதலே ஆதலால் அறங்கறை நா எனக் கூறப்பெற்றுள்ளது.

---

ஞானவான்களின் அந்தரங்கச் சுத்தியின் சிறப்பு

பாடல் . 43

“அரும்பவிழ் கழுநீர் ஆயிதழ் அன்ன
கருங்கயல் நெடுங்கண் விடங்கிளர் வாளியர்
முடங்குமதி அணிந்த முழுநீர் முத்தின்

நுடங்குநுதல் இளவேர் இடங்கெட அணிய
ஒடுங்குநிமிர் புருவக் கொடுஞ்சிலை துரப்பினும்
சுரும்புதுரந்து அமைத்த திருந்து மலர்அமளிப்
பருந்துபசி தணிக்கும் திருந்திவை நெடுவேல்
மைந்துடை மைந்தன் சிந்தை கனற்றக்
கன்றியது இன்றெனிற் காமம் இன்றே
அதனால் அகாமன்அன்றே நாம வேலோன்
முட்புற முதிர்கனிப் பொற்சுளை மைக்கொள்
கதலித் தீங்கனி இதலூன் பொரியல்
வாளைப் பீலி மீளிக் கயல்துணி
கறிச்சேறு கமழும் மறிகோழ் ஊன்துவை
பீலி முருந்தின் இவந்த சாலி
வெண்சோறு குவைஇய குன்றின் தண்டா
நறுநெய் அருவியின் இரிய வெள்ளயிர்க்
குறுமுறி அடுக்கிய நெடுமாக் கோட்டிலும்
மண்டுஅவர் அட்ட வலிகெடு திணிதோள்
உண்டி விருப்பில் ஒருவ இன்றும்
கண்டன னேனும் கொண்டது என்உளத்தே
உள்ளம் தெள்ளாத் தெள்ளிய காட்சியொடு
உள்ளமும் படுவது உளதோ வள்ளிய
கங்கைப் பேரியாற்றுப் பொங்குதிரைத் தீநீர்
ஒன்றொழிபு இன்றி சென்றுஅளப் பரிய
தேருக் குன்றச் சிகர நீர
மண்கொடு மறலி வடிவாய்க் கணிச்சி
உண்பயன் உதவு காறும் பண்பட
மாசற மண்ணினும் மாசறு நிவந்த
உள்ளமும் உளதுகொல் உரவ ஒள்ளிய
ஞானப் பாணி வானத்து உறைஞரும்
விழையும் விழைவில் என்று துகள்தீர் மாமன்
அறவரல் அவா அச் செறிமல உவர்தீம்
மன்றன் மாசற மண்ணல்
என்றனர் அம்மலம் ஒன்றில் லோரே".

இது ஞானவான்களுக்கு அந்தரங்க வேறுபாடு உண்டு என்று முன்னர் கூறப்பட்டதால் அவர்களுக்கு அந்தக்கரணச் சுத்தியும் உண்டு என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

அரும்பி அலர்ந்த செங்கழுநீர்ப்பூவின் இதழ் போன்ற நிறத்தையும், கயல்மீன் போன்ற பிறழ்ச்சியையும், உடைய கண் என்னும் விடம் தீட்டப் பெற்ற அம்பினையும் உடைய மாதர்கள், இளம்பிறை போன்ற நெற்றியில் முத்தை நெருக்கி அணிந்தாற் போன்று வியர்வைத்துளி நெருங்கிப் பொடிப்ப, புருவமாகிய வளைந்த வில்லால் இந்தக் கண் எனும் அம்பை ஏற்றி எய்தாலும்

பருந்து முதலிய பறவைகளின் பசியைப் போக்குகின்ற நெடிய வேலைக் கையிலே ஏந்திய இராசகுமாரன் ஒருவன், முன்பே காமத்தை அனுபவித்துவிட்டால் இப்பொழுது அந்தப் பெண்களின் காமக் கனலில் மூழ்குவதில்லை. ஆதலால் அவன் அகாமன் ஆகின்றான்.

பலாச்சுளை, கருவாளை, கௌதாரியின் பொரியல், வாளைமீனின் துண்டம், மாமிசம் கலந்து ஊன்துவை, செந்நெல்லினால் ஆகிய சோற்றுக்குவியல், அதிலே அருவியாக ஊற்றப்பட்ட நெய், அதன்மேலே வைக்கப்பட்ட சர்க்கரைக்கட்டி ஆகியவை எதிரே இருந்தாலும், முன்பே நன்கு திருப்தியாக உண்டவன் அதனைப் புசிப்பதில்லை. இவ்வுணவே இன்றி வேறு உணவுப் பதார்த்தங்கள் கண்டாலும் ஆசைப்படுவது இல்லை. இவ்விருவரைப் போல ஞானவான்களும் சிவபோகத்தைப் புசித்துவிட்ட காரணத்தால் உலக போகங்களில் சிறிதும் சிந்திப்பதில்லை. எனவே அவர்களுக்கு அந்தரங்க வேறுபாடு உண்டு.

ஆகாயக் கங்கை போலத் திரையை (அலையை) உடைய இனிய சல சமுத்திர நீரில் (எழுவகைக் கடலில் ஒன்று இனிய கடலாகும். ) மேரு மலையைப் போன்ற அளவிடற்கரிய உவர்மண்ணைக் கொண்டு, காலனுக்கு இரையாக உள்ள உடம்பைப் புற அழுக்குப் போகச் சுத்தம் பண்ணினாலும் உள்ளச் சுத்தம் அஞ்ஞானிகளுக்கு உண்டாகாது.

ஆனால் ஞானவான்கள் ஞானமாகிய நீரைக்கொண்டு அவாவின்மை என்னும் குற்றமற்ற மண்ணை இட்டு அஞ்ஞானமாகிய மலத்தையும் அவாவாகிய மூத்திரம் என்னும் இரண்டு நாற்றத்தையும் மாசறக் கழுவுதலே ஆன்மசுத்தி ஆவது என்று அருளிச் செய்ததை ஏற்றதால் மலமில்லாத பெரியோர் ஆவர்.

விளக்கவுரை :

இப்பாடல் ஞானவான்களின் பெருமை கூறுகிறது. காமத்தை முதலில் துய்த்தவன், துய்த்த பிறகு எத்துணைதான் பெண்கள் ஆசை காட்டினாலும் காமம் உடையவன் ஆதல் இல்லை. திருப்தியாக உண்டவன் எத்தகைய இன்சுவை ஆனாலும், அல்லது பிற பதார்த்தங்கள் ஆனாலும் உண்ண விரும்புவதில்லை. அது போல ஞானம் பெற்ற ஞானவான்கள் உலக போகங்களில் மனம் செலுத்துவதில்லை. அவர்கள் தங்களுடைய ஆன்மாவை அந்தக் கரணங்களால் மாசு ஏற்படாமல் ஆன்ம சுத்தி ஆசாரியின் முறையால் செய்து கொள்வார்கள் என்று இப்பாடல் கூறுகிறது. கழுநீர் - செங்கழுநீர், அகாமன் - காமம் இல்லாதவன், கதலி - வாழை, கயல்துணி - மீன்துண்டம், பகைவர் உடலைக்கொன்று அவர் உடலைப் பருந்து உள்ளிட்ட பறவைகளுக்கு உணவாக்குவதற்கு வேல் உதவுவதால் வேல் பருந்து பசிதணிக்கும் வேல் எனப்பட்டது. "பருந்து பசி தீர்க்கும் நற்போர்த் திருந்துவேல்" என்று புறநானூறும் குறிப்பிடும் (பா. 179) திருப்திவர - திருப்தி உண்டாக, தீநீர் - இனிய நீர். ஏழுகடல்களில் ஒன்று இனிய நீரைக் கொண்டதாகும். எனவே இங்கு தீநீர் எனப்பட்டது. மண் - உவர்மண், அகத்தின் தூய்மையைச் சிறப்பிக்க, "ஆசு அற நிவந்த உள்ளம்" எனக் கூறப்பட்டது. அவாஇன்மை - இங்கு துகள் தீர் மாமன் என உருவகிக்கப் பெற்றது சிறப்புடையதாம்.

---

ஞானவான்களின் போகநிலை

பாடல் . 44

"கறையணல் கட்செவிப் பகுவாய்ப் பாந்தள்
கருவொடுங்கு எயிற்றின் வடுபுறக் கிழித்தும்
கிழியாப் பண்பிற்று அன்றே உறையுடன்
மதியொடு புணர்ந்த மறையி னோர்க்கே.
செழும்பொருள் பொய்கைக் கொழுந்துவிடு புயரிய
முள்தாள் தாமரைக் கொழுமடல் அகலிலை
அப்புல் தொத்தாற் துப்பு மெய்ப்படு
மந்திர மருந்தின் மைந்தின் வெந்திறல்
காரிகை தொடினும் பேரிடர் இன்றே
கரைபாய்ந்து கவித்த பெருநீர் உவரித்

தோன்றிவாழ் தொழில ஆயினும் அயிலை
தீஞ்சுவை உப்பில் சிவணாது ஆங்கு
ஞானமாக் கழல் மாணுற வீக்குநர்
விடைய வேலைத் தடையின்று படியினும்
தீதொடு படியுநர் அல்லர்
மாதுயர் கழியுநர் நீதி யானோ."

இது ஞானவான்கள் உலக போகங்களுடன் கூடியிருந்தார் ஆயினும் தங்கள் அந்தரங்க வேறுபாட்டால் அவற்றில் பற்றிலர் ஆவர் என்பதைக் குறிப்பிடுகிறது.

பொருள் :

அறிவொடு கூடியும் விஷத்தை இரக்கும் மருந்ததை உணர்ந்தோர் கட்செவியும், பெரிய வாயும் கொண்ட பாம்பு பல்லால் கடித்தாலும், பாம்பு தீண்டாத தன்மையராய்க் காணப்படுவர்.

செழும் பெரும் பொய்கையில் படர்ந்திருக்கும், முள்ளைத் தாளிலே உடைய தாமரை இலையில் அந்தப் பொய்கை நீர் ஒட்டாது காணப்படும்.

மந்திர சக்தியைப் பெற்றவர் மிக்க வன்மை உடைய நஞ்சை உண்டாலும் பெரிய துன்பம் உண்டாவதில்லை. அலைகளை உடைய நீரிலே வாழுகின்ற மீன்களுக்கு அந்தக் கடலில் உள்ள உப்போடு கூடுவது இல்லை.

இவைகளைப் போல ஞானமாகிய வீரக்கழலைக் கட்டிய ஞானவான்கள் கரையில்லாத போகமாகிய சமுத்திரத்தில் அழுந்தினாலும் குற்றமற்ற பந்த பாசத்தில் துன்புறுவர் இல்லை. அவர்கள் நித்திய உபாதையைப் புசித்துக் கழித்தலையே உடையவர் ஆவர்.

விளக்கவுரை :

இப்பாடலில் ஞானவான்கள் உலக போகங்களில் வாழ்ந்தாலும் அந்தப் போகங்களால் துன்பப்படுவது இல்லை என்பதை வலியுறுத்த மந்திர சக்தி உடையவர்க்குப் பாம்புக்கடி ஒன்றும் செய்வதில்லை போன்ற உதாரணங்கள் காட்டப்பெற்று,

அவர் தம் பற்றற்ற நிலை கூறப்பெறுகிறது. மதியொடு புணர்ந்த உரை - பாம்புக்கடி மந்திரம், கட்செவி - பாம்புச்செவி, பாந்தள் - பாம்பு, கிழியா - தீண்டாத, பாம்பின் பல்லில் விஷம் இருப்பதால் கடுவொடுங்கு எயிறு எனக் கூறப்பட்டது. காரி - நஞ்சு, "காரி உண்டிக் கடவுளது இயற்கையும்" (மலைபடுகடாம் : 82 - 83) உப்பு உணவுக்குச் சுவை தருதலான் தீஞ்சுவை உப்பு எனப்பட்டது. சிவணாது - கூடாது. மாதுயர் - நித்திய துயரம், இத்துயரம் ஞானவான்களைத் துன்பப்படுத்தாது, எளிதாக அனுபவிப்பர்.

---

ஞானவான்களின் ஞானப் பிரகாசம்

பாடல் . 45

"பூக்கமழ் பாணி நோக்கரு நாரம்
கதிர்வாட் அருந்தியும் கரையொடு படா
அருணன் போலவும் இருள்நிறம் புரையும்
அகமும் ஆரமும் நுகருநர் உவர்பவும்
தீண்டத் தகாஅக் காண்தகு திறத்தவும்
புகைக்கொடி எடுத்து வளைத்துடன் பருகித்
துகள்படக் கடந்தும் துகளற்று ஓங்கும்
அவிரொளி உதாசனல் பொருவியும் இருவினை
விடயத்து அழுந்தியும் சுடர்ப
அறிவனர் கெழீஇய நெறியா னோரே"

இது ஞானவான்களின் பெருமையைக் கூறுவது.

பொருள் :

பூக்களால் வாசனை உடைய நீரையும், காண்பதற்கு இழிவான பள்ளத்தில் உள்ள நீரையும் (சாக்கடை) கதிர் என்னும் வாயாலே அருந்தினாலும், தனக்கு ஒரு கறையில்லாத ஆதித்தனைப் (சூரியனைப்) போலவும்,

இருள் போன்ற கருமை நிறத்தை உடைய அகிலும், நறுமணமிக்க சந்தனமும், உண்டால் இறப்பிக்கும் நச்சுமர வர்க்கமும், கண்ணாலே பார்ப்பதன்றித் தொடமுடியாத முட்செடிகளும், புகையெழும் படியாகச் சுட்டு அம்மரங்களை வளைத்துப் பருகிய அக்கினி தனக்கு ஒரு குற்றமில்லாது விளங்குவது போல்வும்,

பாவ, புண்ணிய கன்மங்களுக்கு ஏதுவாகிய விஷயங்களில் மூழ்கினாலும் ஞானத்தாலே கன்மச்சேதம் பண்ணிய ஞானவான்கள் அவற்றால் பந்திக்கப் படாது ஒளிக்கு இடமாக விளங்குவார்கள்.

**விளக்கவுரை :**

இப்பாடலில் ஞானவான்கள் உலக யோகத்தில் கூடினாலும் அதனால் பந்திக்கப்படவில்லை என்பது இங்கு உதாரணங்களால் விளக்கப்பட்டுள்ளது.

முதல் உதாரணமாகிய சூரிய உவமம் அகக் கருவியால் ஞானவான்கள் குற்றப்பட மாட்டார்கள் என்பதையும், இரண்டாவது உதாரணமாகிய அக்கினி உவமம் தொழிற்கருவியால் குற்றப்படார் என்பதையும் வலியுறுத்துகிறது. நோக்கறு நாறும் - நோக்குவதற்கு இழிவான நாற்றமுடைய நீர், கதிர்வாய் - சூரியனின் கதிர்கள், அகில், முற்றிய சந்தனமும் இரண்டும் கருமையாகக் காட்சி தருவதால் இருள்திறம் பொறையும் எனக் கூறப்பட்டது. முட்செடிகள் காண்பதைத் தவிரத் தீண்ட முடியாது என்பதால் தீண்டத்தகா எனப்பட்டது.

---

### பந்த மோட்ச காரணம்
### பாடல் . 46

“கரைகாண் கல்லாக் கற்பனை அளக்கர்
வரைபொரு திரையின் மடிந்தோர் தகுதியும்
மடியாது உயர்ந்த நெடியோர் பகுதியும்
நொடியக் கேண்மோ ஒடியா வாய்மைப்
பார்ப்பன வாகை சூடித் தீத்தொழில்
ஒருமூன்று வளர்த்த வருமறை நாவின்
வேள்வி எடுத்த கேள்வி யாளன்
மனத்தின் மாண்டன்று மாதோ பிறந்தை
இனத்தின் மாண்டோர் ஈடே வேள்வி
ஆசான் முதலிய அத்தொழி முடிமார்
தேசொடு நிவந்திசின் பெரிதே உள்ள
மாசறக் களைவோர் மாண்பே வேறு

தினகரன் தொழிலும் உண்டவனே தனாது
விரிகதிர் பரப்பி விசும்புசெலல் காலைப்
பெரிதுஉவந் திசினோர் பலரே உவவாது
துனிகூர்ந் திசினோர் நனிமிகப் பலரே
அவரே இன்னராயினும் தம்முறை இதுவென
உன்னா தேகும் அன்னோன் போன்றும்
அரும்பா வியரே மன்ற கரும்பின்
சிலை பொழி கணைபல தைப்ப
நிலைதொலை பெய்திறம் கலைவல் லோரே".

இது ஞானவான்களுக்கு மமதை இல்லாது வாழ்வதற்கு மோட்ச காரணம் பற்றிக் கூறுவது.

பொருள் :

எல்லை காணமுடியாத சங்கற்ப சாகரத்தில் எழுகின்ற அலையில் அழுந்துவோரின் தகைமையும் (பந்தத்தில் அழுந்துவோர்) அதில் அழுந்தாத பெரியோரின் தன்மையும் சொல்லக் கேட்பாயாக.

பிறப்பிற்குக் காரணமான மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்ற மூன்றின் நிலைகளிலே மூழ்கியவரின் (அஞ்ஞானி) செய்தியானது, யாகம் பண்ணுகிற பொழுது பார்ப்பனவாகை சூடி (மாலை) சதுரம், முக்கோணம், அரை வட்டம் என்ற மூன்று குண்டங்களில் அக்கினி வளர்த்து வேதங்களை ஓதும் வேதியன், தனக்கு இந்த யாகத்தினால் பலன் வேண்டாது, அதனால் கிடைக்கும் பொருளை எண்ணி வீற்றிருப்பதைப் போன்றதாகும்.

சித்தத்தில் உண்டாகிய மாசை நீக்கிய பெரியோர்களின் செய்தியானது (ஞானவான்கள்) வேள்வியைச் செய்யும் ஆசாரியன், யாகத்தை முடிக்கும் பணியாட்கள் ஆகிய யாவரும் குற்றமில்லாத யாகத்தைச் செய்கின்ற பொழுது வேள்வியின் பயனைத் தாம் விரும்பாது வேள்வி செய்தார்க்கு அதன் பயன் கிடைக்க வேண்டுவது போலப் பெருமை உடையதாய் இருக்கும். (ஞானவான்கள் செய்கை போகத்தில் கருவிகள் படிந்த வழியும் மனத்தால் தோய்வது இல்லை).

சூரியன் ஆகாயத்தில் இயங்கும் போது அதனைக் கண்டு

விரும்புகின்றவர்கள் பலர். அதனை கண்டு துன்பப்பட்டவர் அவரினும் மிகப் பலர் ஆவர். ஆனால் சூரியனோ இரண்டு திறத்தாரையும் பற்றி எவ்விதமும் நினையாது இயங்குகின்ற தன்மை உடையவன் ஆவான். அதுபோலச் சாத்திரம் கற்ற ஞானவான்கள் காமதேவனுடைய அம்பு தைக்கப்பட்ட நிலையிலும் நிலைகலங்குதல் ஏற்பட்டாலும் அவற்றை வெல்ல அரிய ஞானபாவத்தை உடையராய் இருப்பர்.

விளக்கவுரை :

இப்பாடலில் போகத்தை அனுபவிக்கின்ற அஞ்ஞானிகளையும், போகத்தில் பற்றற்ற ஞானவான்களையும், அவர் தம் செயல்களைப் பற்றியும் உவமைகள் மூலம் விளக்கப் பெற்றுள்ளது.

அஞ்ஞானிகள் போகத்தை அனுபவிக்கும்பொழுது தங்களுக்குரிய இன்பத்தை மனதில் எண்ணுவார்கள். எது போல என்றால் யாகத்தைச் செய்வோர் யாகத்தைப் பற்றி எண்ணாது தன்மனதில் யாகத்தால் வரும் பொருளை நினைப்பது போல, ஞானவான்களோ போகத்தில் தன் கருவிகள் செயல்பட்டாலும் மனத்தால் அப்போகத்தை நினைக்க மாட்டார்கள். மற்றவர் தம் வாழ்வையே எண்ணுவார்கள். எதுபோல என்றால் யாகத்தைச் செய்கின்ற ஆசாரியனும் மற்ற தொழிலாளர்களும் தங்கள் மனதில் யாகம் செய்கின்ற (பிறருக்கு) வர்க்குப் பலன் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவது போல. பார்ப்பன வாகை - வேள்வி செய்யும் பொழுது தலைமை தாங்குபவர் சூடும் மாலை. தீத்தொழில் ஒரு மூன்று - மூன்று குண்டங்கள், தினகரன் - சூரியன். பகலை விரும்புகிறவர் பலர். கள்வர் முதலியோரால் உண்டாகின்ற அச்சத்தினர், இரவில் தூக்கம் வராதவர் ஆகியோர். பகலை வெறுப்போர் மிகப்பலர். உழைப்பு இல்லாதவர், வறுமைத் துயரம் கொண்டவர். இருவகையினரும் மிகப்பலர் என்பதால் உவந்தினோர் பலர் எனப்பட்டது. ஆதித்தன் எவ்வாறு தன்னை விரும்பும், வெறுப்பும் உடையவர்களை எண்ணாது இயங்குபவனாய் உள்ளானோ அது போல ஞானவான்கள் மன்மதன் எவ்வளவு தொல்லை தந்தாலும் அதைப்பற்றிக் கலங்காது ஞானபதத்தைப் பெற்றவராய் விளங்குவார்கள்.

### ஞான சித்தருக்குத் தேகம் பாரம்

### பாடல் . 47

“வாகை வெண்ணெற் றொலிப்பக் கூகை
குழறுகுரல் பல்லியம் துவைப்ப ஓரி
தழங்கு குரல் முரசம் ததும்ப விளிந்தோர்
பிணத்தின் கைவிளக்கெடுப்பக் கூளிக்
கணங்கொள் பேரவை அணங்குநட நவிற்றுக்
காடுபதி கொண்ட ஒருவர் தருஉம்
ஆட்வன் உள்ளம் கடுப்ப நீடிய
மலப்பொதி இரிய நூறி உரைத்தொடக்கு
உணர்வொடு கழிந்த வினையில் இன்பத்து
என்று கொல் எய்தும் ஞான்றே நன்று
நெடிது நினைகுவர் மாதோ
வடுநீங்கு சிறப்பின் வயங்கி யோரே”

இது ஞானசித்தராம் ஞானவான்களுக்கு உடம்பானது பாரம் போன்றிருக்கும், அதை எப்பொழுது நீக்கலாம் என்று அவர்கள் கருதும் தன்மையைக் கூறுவது.

பொருள் :

வாகை மரத்தின் நெற்றுக்கள் பறையாக ஒலிக்க, கூகைகள் பல்லியமாக முழங்க, (வாத்தியம்) நரிகள் முரசு போல் கூக்குரல் எழுப்ப, எரிகின்ற பிணத்தின் கையைச் சிலபேய்கள் வாயில் கவ்விக் கொண்டு ஓடும் நிலை தீப்பந்தம் காட்டுவது போல் இருக்க, பெண் பேய்கள் கூத்தாடுகின்ற இத்தகைய மயானத்தை முடிவிடமாகக் கொண்ட ஒருவனது பிணத்தை கூலிக்காகச் சுமந்து வருகின்றவர் மனமானது, அப்பிணச் சுமையை இறக்கி வைக்க விரும்பும் தன்மை போல,

மும்மலங்களால் ஆன இந்தத் தேகத்தை நூறி மனவாசகங்களின் தொடர்பினைக் கழித்து, பரமானந்தக் கடலாகிய முத்தியில் சென்றடையும் நாள் எந்நாளோ என்று ஞானவான்கள் மிகவும் நினைத்துக் கொண்டிருப்பர்.

விளக்கவுரை :

இப்பாடலில் சுடுகாட்டிற்குப் பிணத்தைச் சுமந்து செல்லும் கூலியாட்கள் மனம், இப்பிணத்தை எப்பொழுது சுடுகாட்டில் இறக்கப்

போகிறோம் என்பது போல, ஞானவான்கள் உடம்பை நீக்கி எப்பொழுது முத்தி அடையப் போகிறோமோ என்று எண்ணுவர் என்பதைக் கூறுகிறது. கூகை - ஆந்தை, ஓரி - நரி, கூளி - பேய், அணங்கு - பேய் உலகத்தில் வாழ்வோரெல்லாம் இறுதியில் சென்று அடையக்கூடிய இடம் சுடுகாடு என்பதனால் அது காடுபதி எனக் கூறப்பட்டது. மலப்பொதி - ஆணவம், கன்மம், மாயை என்று மூன்று மலங்கள் கொண்ட உடம்பு. வடுநீங்கு காப்பு - குற்றமற்ற ஞானசித்தியில் ஏற்பட்ட சிறப்பு. "வடு நீங்கு சிறப்பின் மனையகம் மறந்தனன்", (அரங்கேற்று காதை. பா. 175) என்ற சிலப்பதிகாரப்பகுதி ஒப்பிடத்தக்கது.

---

ஞான சித்தர்க்கு வினையில் பற்றின்மை

பாடல் . 48.

"நஞ்சு வீற்றிருந்த வெஞ்சினப் பகுவாய்
போர்வை நீத்த புயங்கத் தன்ன
ஆசறு படிவத்து ஆன்றோர் நிற்க
நிலஞ்சேறு படுத்த கருங்கை கொண்மூப்
பொரியரை விளவின் புனிறுதீர் பெரும்பழம்
அரிதுபெற்று அயின்றதன் வறுமை போலத்
தெரியாத் தேர்ச்சித் தீரா உள்ளத்துப்
பெரியோர் விட்டனர் பிறழா வினையே
அரியவும் உடையது ஒன்று உளது இரியாது
உடனுறை பழைமை ஊங்கே கடனறி
மண்வினை மாக்கள் தம்வினை முடிமார்
திகிரி உருட்டி ஒருவி யாங்கும்
வருதல் ஓவா மாறும் குவிவாய்த்
தசும்புறை இங்குஆங்கு அசும்பறத் துடைத்தும்
இருங்கடி இகவாப் பெருங்கடன் அல்லதை
உடையதை உடையரோ மற்றே உடையதை
வரையளந்து அறியா திசையருந் தீர்த்தம்
பேரா னந்தப் புணரி
ஓராங்கு படிதல் உடையோர் ஈண்டே"

இது உடம்பைப் பாரமாக எண்ணி அதனை நூறி முத்தியை அடைய விரும்பும் ஞானவான்களுக்குப் பூர்வ கன்மத்தால் அனுபவிப்ப தல்லது அவர் வினையில் பற்றிலர் என்பதைக் கூறுகிறது.

பொருள் :

சினத்தையும், நஞ்சையும், பெரிய வாயையும் கொண்ட தோலுரித்த பாம்பைப்போல, தூய விரதத்தால் புறச்சுத்தி பண்ணுவர் ஞானவான்கள். அவர்கள் மனமானது நிலத்தைத் தன்னுடைய மதநீரால் சேராக்குகின்ற பெரிய கையை உடைய யானை விளா மரத்திலுள்ள பெரிய பழத்தைப் புசித்ததனால் அதனுள்ளே எவ்விதப் பற்றும் இல்லாதது போல, ஞானவான்கள் கன்ம, சேத, உபாயத்தைக் கடைப்பிடித்தலால் அந்தரங்கச் சுத்தி உடையவராய் இருப்பர்.

ஆயினும் அவரை விடுத்தற்கு அரியதாய் இருப்பதும் ஒன்று உண்டு. அது அநாதியாய் வந்த சரீர வாசனையாகும். அது பிராரத்த கன்மம் புசிக்கும் அளவும் அவர்களை விட்டு நீங்காது.

மண்பானை செய்யும் குலாளர் தாங்கள் செய்கின்ற தொழிலை முடிப்பான் வேண்டிச் சக்கரத்தைச் சுழற்றி விடுவர். சக்கரம் சுழலச் சுழலப் பானை உருவாகி முடிந்த் பொழுதும் சிறிது பொழுது தானே சுழன்று பின் ஓயுமாறு போல, ஞானவான்கள் கன்மம் முடியுமளவும் சரீர வாசனையை விட்டு நீங்கார்.

பெருங்காயம் வைத்த குவிந்த வாயை உடைய குடம் பற்றறத் துடைத்தாலும் அதன் நாற்றம் அக்குடத்திலிருந்து ஒழியாத தன்மை போன்றதுமாகும்.

இத்தகைய நிலை தவிர அகப்புறப் பற்றாகிய உயிர்ச்சார்பு. பொருட்சார்பு ஆகிய இரண்டிலும் இவர்கள் இருப்பது பற்றாக அமையாது. அவர்கள் அளத்தற்கரிய பேரானந்தப் பெருவாழ்வில் இடைவிடாது மூழ்குதலையே விரும்புவர்.

விளக்கவுரை :

இப்பாடலில் பூர்வ வாசனையான உடம்பைப் பெற்றுக் கன்ம பலத்தை அனுபவிப்பதன்றி எத்தகைய செயலிலும் ஞானவான்கள் பற்று வைப்பர் அல்லர் என்பதை யானை உண்ட விளாங்கனி மூலமும், குயவன் சுற்றிய சக்கரம் மூலமும் விளக்கப்பட்டுள்ளது.

புறச்சுத்தி பண்ணுவதற்குப் பாம்பு தோல் உரிக்கும் செய்தி கூறுவது சிறப்புடைத்தாம். அகத்தில் பற்றற இருப்பதற்கு யானை உண்ட விளாங்கனி உவமை சிறப்புடைத்தாம். யானையின் மதநீரால் மண் சேறாதலை விளக்க நிலஞ் சேறுபடுத்த எனக் கூறப்பட்டது. கொண்மூ - யானை, மண்வினை மாக்கள் - குயவர்.

வினை தன்னைச் செய்த வினை முதலை (ஆன்மாவை) பற்றிடாது ஒழிவதில்லை. ஆதலின் பிறழாவினை எனக்கூறப்பட்டது. இங்குலியம் வாங்கும் கலம் போல என்ற உவமை பிறாலும் பயன்படுத்தப் பெற்றுள்ளது. (சிவஞான போதம் சூ. 10. அதிகரணம். 2 உதாரணம். 3) நான் எனது என்பது உயிர்ச் சார்பையும், பொருட்சார்பையும் குறிப்பதாகும். இதனை உடையது என்ற சொல் தருகிறது.

---

## உபதேசப் பயன்

### பாடல் . 49

“ நஞ்சே பாம்புண்ட நீர் மாதோ
அஞ்செம் சேதா உண்அறல் அமிழ்தே
விஞ்சை வேந்தர் ஞானம் வீடே
வஞ்சர் ஞானம் வடுவொடு படுமே”

இது ஞானவான்களுக்கும் அஞ்ஞானிகளுக்கும் உபதேசத்தால் வரும் பயன் கூறுகிறது.

பொருள் :

சுவையுடைத்தாகிய தண்ணீரைப் பாம்பு உண்டால் அது நஞ்சாகிறது. அதே நீரைப் பசு உண்டால் அது பாலாக மாறுகிறது. இது போலவே ஞானவான்கள் உபதேசம் பெற்றால் முக்திக்கு ஏதுவாக முடியும். அஞ்ஞானிகள் உபதேசம் பெற்றால் பிறரையும் தங்களையும் கெடுத்து. உபதேசிக்கின்ற ஆச்சாரியனுக்கும் குற்றமாய் முடியும்.

விளக்கவுரை :

உபதேசம் பாத்திரம் அறிந்து உபதேசிக்கப்பட வேண்டும் என்பது இப்பாடல் மூலம் வலியுறுத்தப் படுகிறது. நஞ்சைக்

கொண்ட பாம்பு பிறர் கண்படின் தான் கொலையுண்ணப்படும். அது கடித்தால் பிறரைக் கொலை செய்யும். அது போல அஞ்ஞானிகள் பெறும் உபதேசம் அவருக்கும், சொல்லியவருக்கும் கெடுதலை உண்டாக்கும். பால் உண்டவர்க்கப் பயன்படுவது போல உபதேசம் ஞானவான்களுக்குப் பயன்படும். சேதா - பசு, அமிழ்து - பாலைக்குறித்தது.

---

### மாயாமலப் பந்த வெற்றி
### பாடல் . 50

"ஏற்புக் குப்பையை புட்குலத்து உணவை
நரப்புக் கருவியைத் திரைபெருஞ் சேக்கையை
புன்புல வாரியைத் துன்புக்கு உரையுளை
ஈருட் போர்வையை வேரின் விளைவை
தசைப் பெருந்திரளை நசைக்கு இன்செவிலியை
மூளைச் சேற்றை முழுமலக் குழுவை
ஞாளிக்கு இறையை பூளைப் பொதியை
வெண்இணப் பெருமையை புண்ணின் பொற்பை
கொடுமைக் கோதையை அடுசினது அமலையை
மாசின் தேசை வழும்பின் வைப்பை
தோலின் வேலியைத் துகளின் துப்பை
எரிவரும் கொள்ளையை நரிக்கார் அயினியை
பெருநோய் அறையைக் கருநரைக் கமத்தைக்
குறும்பிக் கொண்டலை இறும்பற்கு உறைவைப்
புழுப்பாசறையை அழுக்கார் உருவை
பஞ்ச இந்திரியப் பாகர்க்கு ஆகா
அஞ்சா மதகரி அடவியை வஞ்ச
அரவுவாழ் அளையை நுரைவாய் அருவியை
வாத வழுவை தீதுக அணைத்த
வெளிலைப் பித்தின் விளிவரும் குறும்பைக்
குரைவிரி இருமல் திரைபிரி புரையைக்
காமச் சும்மையை கவலைக்கு எல்லையை
நாமத்து அரணை தீமைத் திரலை
அழுக்காறு அணையும் விழுப்பெருந் தெருவை
ஏமாப்பு இரலை விலங்கலைத் தீமை

இருஞ்சுரவு கலித்த திருந்திஇரும் பௌவத்தை
மறத்தின் மன்னை வழுக்கின் புக்கிலை
இறப்பின் கேதனம் இதனை மறப்பின்
கொண்டளை யான்எனக் கொளல் ஒழித்துஒண்திறல்
மாய வினையை தான தேயாத்
தனுகரண புவன போகம்
எனும்வகை அறிநனி துனியினி துகவே”

இது மாயா மலத்தால் ஏற்படும் உடம்பின் அவலநிலையை எடுத்துக்கூறி அதன் நிலையாமையை வலியுறுத்துகிறது.

பொருள் :

எலும்புக்கூட்டத்தை, பறவைகள் உண்ணும் உணவை, நரம்பு என்னும் கயிற்றால் கட்டப் பட்டதை, தோல் சுருங்குதற்குரிய சேர்க்கையை, புலால் ஆகிய கடலை, துக்கத்தின் குடியிருப்பை, ஈரல் பொதிந்த போர்வையை, வியர்வைக்கு விளைநிலத்தை, தசைக்கூட்டத்தை, ஆசையாகிய குழவியை வளர்க்கும் செவிலியை, மூளைக்குழம்பை, முழுமலக் குழுவை, நாய்க்குரிய உணவை, பூளைப் பொதியை, வெள்ளி நிணத்தின் மிகுதியை, புண்ணின் பொலிவை, கொடுமை என்னும் நூலால் கட்டப்பட்ட மாலையை, கொல்லுகின்ற சினத்தின் செறிவை, விருப்பு வெறுப்பாகிய குற்றத்தைக் கொண்ட முகத்தை, நிணத்தால் பூசப்பட்ட கூரையை, தோலை வேலியாக உடையதை, குற்றத்திற்குரிய இடத்தை, அக்கினி கொள்ளை கொள்ளுவதை, நரியின் உணவை பெருநோய்க்குரிய அறையை, பெரிய நரையாகிய மேகத்தை, அழுக்கைக் குறும்பியாகக் கொண்ட கொண்டலை, உதிருகின்ற பற்களின் இருப்பிடத்தை, கிருமிகள் புகுந்திருக்கும் படை வீட்டை , அழுக்காறின் உருவை, அந்தக்கரணம் என்னும் பாகரால் அடக்க முடியாத பஞ்சேந்திரியம் என்னும் யானை உலவுகின்ற காட்டை, வஞ்சம் என்னும் பாம்பு வாழும் புற்றை, நுரையை அருவிபோலச் சொரிவதனை, வாதமாகிய யானை கட்டப்பட்ட கம்பத்தை, பித்தம் இருக்கும் அரணை, சிலேத்துமமாகிய கடலில் அலை வீசுவதைத் தாங்கும் மலையை, காமத்தின் சுமையை., கவலைக்கு எல்லையை. அச்சத்தின் இருப்பிடத்தை, அழுக்காறு சேரும் தெருவை. செருக்காகிய மான் வாழும் மலையை, தீமை என்னும் சுறாமீன் வளருகின்ற சமுத்திரத்தை, மறத்திற்கு நிலையான அதனை அஞ்ஞானம் புகுந்திருக்கும் இடத்தை .

இத்தகைய நிலையில் இறப்பதற்குக் கொடிகட்டியிருக்கும் இக்குற்றமுடைய தேகத்தை மறந்து அஞ்ஞானத்தால் நான் எனக் கொண்டாய். அவ்வாறு கொள்ளுதலை ஞானத்தாலே விடுத்து உடம்பு நான் அல்ல என்று கொண்டு, அது மாயா காரியம் என்பதை உணர்ந்து தனு, கரண, புவன போகத்தின் வேறுபாட்டைக் குற்றம் நீங்க அறிவாயாக, (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் உடம்பின் இழிநிலையை எடுத்துக்கூறி உடம்பு வேறு, ஆன்மா வேறு என்பதை உணரவேண்டும் என்று எடுத்துக் காட்டுகிறது. என்பு – எலும்பு, வேர் – வியர்வை. ஆசையை எளிதாக வளர்ப்பதால் உடம்பு செவிலித் தாய் எனப்பட்டது. ஞாழி – நாய். புண்ணால் சீரழிக்கப்படுகின்ற உடம்பின் அழகினை புண்ணின் பொற்பு எனக் கூறப்பட்டுள்ளது. தேசு – இங்கு முகத்தைக் குறித்தது. காமம், வெகுளி முதலியன பெருகுவதற்கு ஆக்கம் தருவதால் உடம்பைத் துகளின் துப்பு எனக் கூறப்பட்டது. பெருநோய் – பிறப்பையும் குறிக்கும். பிள்ளைப் பருவத்தும் முதுமைப் பருவத்தும் பற்கள் உதிர்வது இயல்பாதலால் இறும்பல் எனக் கூறப்பட்டது. நுரை ஒன்பது வாயில்களிலும் சொரிவதால் அருவி எனப்பட்டது. சிறுநோய் ஏற்பட்டாலும் அச்சப்பட்டு உடம்பு காக்கப்படுதலால் நாமத்து அரணை எனக் கூறப்பட்டது. உடம்பு தோன்றுவதற்குக் காரணமான மாயை நிலைபேறு உடையதால் ஒண்திறல் மாயை எனக் குறிக்கப்பட்டது. உயிரிலிருந்து உடம்பு வேறுபட்டது என்பதை உணர்வதே அஞ்ஞானமாகிய குற்றம் நீங்கும் வழியாகும் என்பதை வலியுறுத்த நனி துனி இனிதுக அறி எனக் கூறப்பெற்றது.

---

### ஆணவமல பந்த வெற்றி
### பாடல் . 51

“ஈறு அறிவுக்கு எவன் எவனோ மற்றதன்
மாறு - அறிவுக்கு அறிமற்றே கூறின்
இளைத்தன் மற்றெவன் எவனோ நின்ற
தளித்தன் மற்றுயர்பு இன்மை உளங்கொள
அறிவுரு அதனோடு அநித்தம் அண்மையின்

மறுவற நெறியிவண் நெறிபட நின்ற
பந்தம் போகம் போக நிறுத்தலும்
வந்தது மாயை வினைமலந் தந்தமின்
மாயை பந்தம் வளங்கெழு போகந்
தேயா வல்வினை திகழ்தரு மலத்துப்
போக நிறுத்துவதாம் வினை முறுகிய
போகந் தந்து புறங்கொடுத்து இனிதா
ஏகற்கு ஒல்லா தாகி வேகத்து
யாத்தலைத் துடைத்தலின் நெறியின் இறை உண்மை
பார்த்தலிற் பறிமல அனாதி கூர்த்த
பிறப்பு இறப்பு அறா அச்சிறப்பில் ஆகத்தில்
வாசனை யகலத்து தேசொடு நிவந்த
அமலனைச் சமாதி யமல
விமல செய்ம்மதி விருப்பினை இனிதே”

இது ஆணவ மலத்தின் பரிகரித்தலைக் கூறுவது.

பொருள் :

உயிருக்குச் சாதல் எவ்வண்ணம்? உயிருக்குப் பிறத்தல் எவ்வண்ணம்? உயிருக்கு இளைத்தல் எவ்வண்ணம்? இளையாமல் பருத்தல் எவ்வண்ணம்? முப்பது வயதளவும் வளர்தல் எவ்வண்ணம்? பின் வளராமை எவ்வண்ணம்? எனக் கேட்டால் அதற்குரிய பதிலை உள்ளம் கொள்ளும்படியாக அறிவீராக. (என்று ஆசிரியன் மாணவனுக்கு உரைத்தது).

உயிரானது உடம்புடன் கூடி அநித்தமில்லாததால் (நிலையாமையால்) மேற்குறித்த கேள்விகள் அனைத்தும் உடம்புக்கே அன்றி உயிர்க்கு அல்ல எனக்கொண்டு பதில் கூறப்படுகிறது. உடம்பில் முறையாக நின்று அனுபவிக்கும் துக்கமும் போகமும், சுக துக்கங்களை மறைத்துப் புசிப்பித்தலும், மாய, கன்ம, ஆணவ மலத்தால் ஆகும்.

நித்தியமான மாயையின் காரியமான உடம்பில் முன் பிறவியில் செய்து கொண்ட கெடாத கன்ம மலத்தால் வளப்பமுடைய சுகதுக்கங்களை (மறைத்துப்) புசிப்பித்தல் உண்டு. கன்மமலம் சுக, துக்கங்களைப் புசிப்பித்து உடம்பைவிட்டு நீங்குவதற்கு இசையாது

உடம்போடு பந்தித்து நிற்கும். அத்தகைய பந்தத்தைக் கன்மத்தைக் சேதம் பண்ணும் உபாயத்தால் அறிந்து தவிர்க்க வேண்டும்.

ஆணவ மலத்தைப் பதியின் உண்மை அறிவால் கெடுத்தல் வேண்டும். பிறந்து, இறந்து வருகின்ற உடலில் பிராரத்த கன்மம் புசிக்கின்ற வரையிலும் அநாதியாய் உள்ள பிரகாசமாய் ஓங்கிய நின்மலனை இனிதாகச் சமாதி செய்து அதாவது தவம் செய்து ஆணவமலத்தைக் கெடுக்க அறிந்து கொள்ளவேண்டும். (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் உடம்பின் பிறப்பு, இறப்பு, வளர்ச்சிகள் எதனால் நடைபெறுகின்றன என்ற வினா எழுப்பப்பட்டு அவை மும்மலங்களால் நிகழுகின்றன என்றும் அவ்வாறு நிகழும் பொழுது மாயா மலத்தால் ஏற்பட்ட உடம்பில் கன்மமலத்தை அனுபவித்து, கன்ம மலம் சேதப்படும் வரை அவற்றால் ஏற்பட்ட சுகதுக்கங்களைப் புசிப்பிக்கும் அளவில் ஆணவமலத்தை அழிக்க, தவத்தினாலே அநாதியான நின்மலனை (இறைவனை) த் தேகத்தில் சமாதி செய்து போற்றி, உய்தல் வேண்டும் என்று விடை கூறப்படுகிறது. உடம்போடு உயிர் என்றைக்கும் நிலைத்தல் இல்லை என்பதை விளக்க அதனோடு அநித்தமின்மை என்று கூறப்பெற்றுள்ளது. கன்மமலத்தால் சுகதுக்கங்கள் ஏற்படுகின்றன என்பதை தேயா வல்வினை வளங்கெழு போகம் எனக்கூறப்பட்டது. ஆணவ மலத்தால் மறைப்புண்ட உயிர்க்கு மாயை, கன்ம மலங்கள் - ஆணவ மலத்தைப் போக்குவதற்குத் துணை செய்கின்றன என்பது மலம்பரி என்பதால் அறிவுறுத்தப் படுகிறது.

---

ஞானவான்களைப் பாசம் துன்புறுத்தாமை

பாடல் . 52

“பதி பசு பாசம் ஆதியோர் வரத
உலையா என்பதைத் தலைநனி நிலைஇ
உடையா தாயின் ஒருபெரும் பாசம்
அடையா வீடெனக்கு கடைநனி சுழறின்
தன்னுரை மலைவு முன்பின் மலைவும்

அன்னவை அருளோ யாம்எனின் பன்னிய
உடையா மாண்டவர் அடையா பொடிபட
மாமலை அன்ன மரந்தெறும் கடுங்கனல்
தாமரை அன்ன தளிர்க்கை தாங்கினும்
மந்திர மாக்கட்கு அந்தரம் யாதே
செம்பிது செறிந்த புன்புறக் களங்கமிது
என்றுரை கூடா எழில் வளர் சீருணம்
சிந்துநீர் செறிந்த தொத்தே மிக்க
விடங்கெழு பெருவலி உளம்கொள் மந்திரத்து
அடங்கிய தன்மையும் அற்றே குடங்கர்க்
கலங்குநீர் இல்ல நலங்கிளர் விழுக்காழ்
அணைந்த மாறுஎன இணங்கு இறந்தகன்ற
பாசப் பெருவலி தடுத்தனர்
மாசின் ஞான மன்பெருந் தகையே”

இது ஞானவான்களை நித்தியமாகவும் வியாபித்தும் நிற்கின்ற பாசங்கள் துன்புறுத்தாது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

ஞானவான்களுக்கு அருள்தந்த ஞானசிரியனே! பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் நித்தியம் என்பதை அருளிச் செய்தீர்கள். பின்பு பாசத்தைச் சேதப்படுத்தாத விடத்து முத்தி சித்தியாது என்று அருளிச் செய்துள்ளீர்கள். அப்படியானால் இந்த உரைகள் முன்னுக்குப்பின் முரணாக அமைவதுபோல் உள்ளதே? (பாசம் நித்தியம் என்றால் அதை எப்படி சேதப்படுத்த முடியும்?). இங்ஙனம் கூறப்பட்ட முப்பொருளும் நித்திய வியாபகங்களே ஆகும். அம்மூன்றில் பாசங்கள் மாட்சிமை உடையவரான ஞானவான்களைத் துயரம் செய்யமாட்டா. (ஏனென்றால் ஞானவான்கள் பாசத்தைச் சேதப்படுத்துவதினால்).

எவ்வாறு என்றால் பெரிய மலையைப் போன்ற மரத்தை எரித்து அழிக்கும் நெருப்பை மாந்திரீகர்கள் தாமரை போன்ற தங்கள் கையில் தாங்கினாலும் அவர்களுக்குக் கேடு வராதது போல. அப்படியானால் தீயினுடைய துன்பம் தான் அவர்களுக்கு இருக்காதே தவிர மற்றுமுள்ள துன்பங்கள் உண்டு. அதனால் பாசம் அவர்களைத் துன்புறுத்தாது என்றாலும் பாசமே இல்லாத சித்தராவது எவ்வாறு?

செம்பு இது என்றும் புறத்தே நிற்கும் களிம்பு இது என்றும் பிரித்து அறிய முடியாது. செம்பில் இரதக் குளிகையைச் சொரிந்தால் அச்செம்பு பொன்னாவது போல ஞானவான்களும் சுத்தமாவார்கள். அப்படியானால் ஞானவான்களுக்கு அந்த இரதக் குளிகையைப் போல் சொரிவது எது? உடம்பின் எந்தப் பாகத்தில் சொரியப்படுகிறது? என்றால் உள்ளத்தில் மந்திரங்களைத் தியானிப்பதனால் மாந்திரீகர்களுக்கு வாயின் வழியாகச் செலுத்தப்பட்ட நஞ்சு பாதாதிகேசம் முழுவதும் கலக்காமல் தடுக்கப்படுவது போல ஞானவான்களுக்கு ஆசிரியன் அருளுரை செவி வழியாகச் செய்வதால் உடம்பு முழுமையும் சார்ந்து பாசத்தேசம் செய்கிறது.

உடம்பு நோயுற்ற காலத்தில் மந்திரம் தியானிக்காதபோது உடம்பில் நஞ்சு சேராமல் இருப்பது இல்லை. மந்திரம் செபித்தால்தான் நஞ்சு கெடுதல் செய்யாது. அது போல ஞானவான்களுக்குச் சித்தியாக மாட்டாத காலம் உண்டா?

குடத்தில் உள்ள கலங்கிய நீரில் தேற்றா மரத்தின் விதையை இட்டால் கலங்கியது தெளியும். தெளிந்த பின்பு மீண்டும் கலங்கினால் விதையில்லாமலே தெளிவும். அதுபோலக் குற்றமற்ற ஞானவான்களுக்குப் பாசத்தைச் சேதம் பண்ணிய பிறகு, பிராரத்த கன்மத்தைப் புசிப்பதற்குரிய செயல்கள் நடைபெற்றாலும் அவர்கள் தெளிவுக் காட்சியை உடையவராகவே இருப்பார்கள். (என்றவாறு)

விளக்கவுரை :

வினாவிடை போல இப்பாடல் அமைந்து ஞானவான்களைப் பாசம் துயர்ப்படுத்தாது என்பதை வலியுறுத்துகிறது. பாசம் நித்தியம் என்று கூறினால் ஞானவான்கள் பாசத்தை எவ்வாறு சேதப்படுத்தமுடியும் என்ற வினா முதலில் எழுப்பப்பட்டது. பாசம் நித்தியமானது என்றாலும் ஞானவான்களுக்கு அது துயரம் தாராதபொழுது அதன் பலன் இன்மைதானே. ஆதலால் முத்தி கிடைக்கும்.

மாந்திரிகன் கையில் நெருப்பு இருந்தாலும் அது சுடாத தன்மை போலப் பாசம் இருந்தாலும் ஞானவான்களைச் சுடாது. பாசம் (களிம்பு) இருக்கக்கூடிய செம்பை இரதக் குளிகையினால் பொன்னாக்குவது போல ஆசாரியன் உரை ஞானவான்களைச் சுத்தனாக்குகிறது. (முத்தியுடையவனாக்குகிறது) பாசத்தைச் சேதம்

பண்ணிய பிறகு ஞானவான்களை அந்தப் பாசம் துயர் படுத்தாது. எது போல என்றால் தேற்றாங் கொட்டையால் தெளிவு படுத்தப் பெற்ற தண்ணீரை மறுபடியும் கலக்கினாலும் அது தெளிவாகத்தான் இருக்கும். அதுபோல . உலையா - அழியாது. மலைவு - ஐயம். மாண்டவர் - ஞானவான்கள், மந்திரமாக்கள் - மாந்திரீகர், சித்து நீர் - இரதம், குடங்கர் - குடம், விழுக்காழ் - தேற்றாவிதை. இப்பாடல் கருத்தினைச் சிவஞானசித்தியாரும் குறிப்பிடும்.

“தெரிவுஅரிய மெய்ஞ்ஞானம் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்கும்; இங்கே சீவன்முத்தன் ஆகும்;
உரியமலம் ஔடதத்தால் தடுப்புண்ட விடமும்
ஒள்ளரியின் ஒளிமுன்னர் இருளும், தேற்றின்
வருபரல்சேர் நீர்மரவு கலங்கலும், போல் ஆகி,
மாயாதே தன்சக்தி மாய்ந்து, காயம்
திரியும்அள வும்உளதாய், பின்பு காயம்சேராத
வகைதானும் தேயும் அன்றே” (பாடல். 313)

---

பதி நிச்சயம்

உயிர்களுக்குப் பரமனின் சீர்பாதமே பற்றாகும்

பாடல் . 53

“திருவின் செல்வி ஒருதனிக் கொழுந
புலமை சான்ற கலைமகள் கணவ
வீரிய மடந்தை பேரிசைக் கிழவ
தவத்தின் தலைவ தருமத் துறைவ
அருளோன் அருளோன் என்ப நீயே
அருளோன் ஆவதை எவனோ தெருளக்
கண்ணில் காணார் ஆயினும் கனவின்
நண்ணுங் காலை நல்லுயிர் செகுக்கும்
பேயே யாயினும் பிரியன் இன்பம்
வாயா தென்றே மதியோர் அறைப
மரீஇ நாளு நின்அன்றி யாரும்
அறிய வாராப் பெரும என்னை
அன்ன தாய தொன்முது பிறவி
அறைபோக் கொழியக் குலமுழுதும் வளைஇ
ஞ்ன வொள்வாட் பூமுகம் அழுந்த

கொன்றுசினந் தணியாது அன்றிய சீற்றத்து
மறவனை அல்லையோ மற்றே இறைவ
எவன்பல மொழிவேம் யாமே வனச
நீர்நிலை நின்று தாள்நலம் பெற்ற
தாளோய் நின்தாள் நீழலம் யாம்என்று
இரந்துகுறை யுறினும் பிறந்தை எம்திறம்
மறந்து நோக்காது எவன்புகல் எமக்கென
ஒழிவர நிறைந்த மதிசேர் செஞ்சடை
ஒருவன் பாதம் அல்லதை
பிறிதும் உண்டோ பெறும்புகல் நமக்கே"

இது மாணவனுக்கு இறைவனுடைய சீர்பாதமே பற்றாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

திருவின் செல்வியான இலக்குமிக்கு ஒப்பற்ற நாயகனே என்றும், புலமை சான்ற கலைமகளுக்குக் கணவனே என்றும், வீரமடந்தைக்குப் பெரும்புகழ் நாயகனே என்றும், தவத்தின் தலைவனே என்றும், தருமத்துறைவனே என்றும், அருளோன் என்றும் உன்னைச் சொல்லுவர். நீ அவ்வாறு அருளோனானது எவ்வாறு? (என்றும்) –

மேலும் இன்ன தன்மையாய் இருக்கும் என்று கண்ணால் காண முடியாததும், கனவில் கண்ட காலத்தில் நல்ல உயிரைப் போக்குகின்ற பேயாக இருந்தாலும் அதனோடு கூடியிருந்து பிரிந்தால் துன்பமேயாகும் என அறிவுடையோர் சொல்லுவர். அவ்வாறிருக்க என்னை அநாதி தொட்டு மருவி இருக்கின்றதும், உன்னையன்றி வேறு யாராலும் அறிதற்கு அரியதான (எம்) பிறவியை, முழுவதும் ஒதுக்கமற வளைத்துக் கொண்டு – நீ ஞானமாகிய வாளால் பொலிவு பொருந்திய பாசத்தை அழுத்தக் கொன்றும், இன்னும் பாச்சேதம் பண்ணத் தகுதியுடையாரைத் தேடிக் கோபம் தணியாத மறவனாக உள்ளாய். இறைவனே இவ்வாறு நாங்கள் உன்னைப் பலவாறு துதிக்கின்றோம்.

தாமரையானது தனது தண்டாகிய ஒற்றைக்காலில் நின்று தவசு பண்ணி நின்னுடைய பாதத்தின் அழகைப் பெற்றது. அத்தகைய தாமரை போன்ற சீர் பாதத்தை உடையவனே. அத்தகைய சீர்பாதத்தை

வேண்டிக் கொண்டாலும் பிறவியானது மறந்தும் எங்களின் தன்மையை நோக்காது எங்களிடமே வந்து விடுகின்றது. எனவே எங்கட்குப் புகலிடம் யாது கூறுவாயாக. (இவ்வாறு கேட்கப்பட்ட கேள்விக்கு ஆசாரியன் கீழ்வருமாறு கூறுகிறான்.)

ஒளிவர நிறைந்த மதிசேர் செஞ்சடை இறைவனின் பாதமல்லது தடசித்துக்களுக்கு வேறு புகலிடம் உண்டோ? (எனப் பதில் கூறப்பட்டது). (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் இறைவனின் பெருமைகளாக அனைத்துச் சக்திகளுக்கும் தலைவன் என்றும், ஆன்மாவோடு கூடியிருக்கின்ற பிறரால் அறிதற்கு அரிய பிறவியை அறிந்தவன் என்றும், ஞானம் பெறத்தக்க பிறவியை வளைத்துக் கொண்டு ஞானம் வழங்கியும், ஞானம் வழங்குவதற்குரிய பக்குவம் உடையாரைத் தேடிக் கொண்டிருக்கின்ற மறவன் என்றும் போற்றப்பெற்று, உயிரானது தனக்குரிய புகலிடைத்தைக் கேட்பதாகவும் அமைந்து புகலிடம் இறைவனின் திருவடியே என்று பதில் கூறுவதாகவும் அமைந்துள்ளது. இன்பம் வாயாது - இன்பம் கிடைக்காது. “நீ அருளோ ஆவதை எவன்” என்பது பழிப்பது போலும் புகழ்ச்சி. ஆன்மாக்கட்குரிய பிறவியை அறிபவன் இறைவனே ஆவான். உயிரையும் அது செய்யும் வினையையும் அறிந்து வினைப் பயனைக் கூட்டுவிப்பான் என்பதால் “நின் அன்றி யாரும் அறிய வாரா” எனக் கூறப் பெற்றது.

---

பதி ஞானம்

பாடல் . 54

“வாழிய பெரும வாழி வாழிய
வன்மீன் ஆணைத் தொன்முது கடவுள்
வலம்படு கொற்றம் தொலைச்சி மீளா
தடங்கருஞ் சீற்றத்து இடம்கெடக் கடக்கும்
மடம்பறி ஞான வாழி உடம்பெரி
வெளியென நில்லாது என்னும் மாத்திரந்

தெளிவரத் தெருட்டினை செல்வ அளியேன்
தற்பெரு இறந்த மெய்ப்பரந் தெரியா
எய்த்தனன் ஆயின் இருவினை இன்று
மொய்த்தன வல்லவோ முனிவ மொய்த்துஇடை
எய்துவ உனைப்பல அன்றே இத்திறன்
யான்றின் கிளத்தல சாலும் மானின்
குளம்புறு குழிவாழ் கலங்கல் சின்னீர்
மகரா லயத்தின் மயக்கறற் தெளித்தலில்
கவராது என்றே கண்பனி தூங்க
மெய்ம்மயிர் பொடித்துத் தன்முதல் கலங்கி
இழந்த நெஞ்சமொடு இறைவன் பாதம்
ஓதினன் வீழ அவனை நோக்கித்
தானும் யாதும் ஆகாது இவ்வென
ஒண்ணா நீதிய நீதியால் தனாது
தெய்வ நாட்டந் தைவரும் அளவைக்
குவிவாய் அமையாக் குடநிறை தீநீர்
பகுவாய் அமையாப் பார்ப்பினோடு அஃதோ
தினகரன் ஒளிசேர் சிலைகால் தீயின்
துரியமும் இறந்த தூயோன் தூய்மை
அருளினன் அருள்பெற்று எழுந்தோற்
இளிசேர் தீஞ்சொல் இயம்பினன் இனிதே”

இது பதியின் ஞானத்தை ஆசிரியன் மாணாக்கனுக்குக் கூறியது.

பொருள் :

வாழி பெரும வாழி! தொன்முதுக் கடவுளாம் மன்மதனின் வலியைக் கெடுத்து, அடக்குதற்கு அரிதாகிய சீற்றத்தை இல்லாது வெற்றி கொண்டு அறியாமை நீங்கிய ஞானத்தை உடையவனே! காற்றில் ஏற்றி வைத்த விளக்குப்போல உடம்பு நிலையில்லாததாகும் என்பதனை அறிவித்தீர்கள். நின்னால் அருள்பெற்ற அடியேன் தனக்குவமை இல்லாத ஞானசொரூபியான பதியின் உண்மை தெரியாது தேகத்தை விட்டேனாயின் இன்னமும் பாவ புண்ணியங்கள் என்னைப் பந்திக்கும். எனவே பதியின் உண்மையைக் கூறுவீர்களாக.

மேலும் கன்மங்கள் பந்தித்தவிடத்து எண்ணிறந்த பிறவிகள் என்னைக்கூடும். நான் உன்னிடத்தில் என்னுடைய வேறுபாடுக்ளைச்

சொல்லி விண்ணப்பிப்பது எது போன்றது எனின் மானின் குளம்படி அழுந்தின குழியிலே நின்ற சிறிய கலங்கல் நீரைக்கொண்டு கடலிலே உள்ள உப்பு, நுரை முதலாகிய குறைகள் நீங்கவேண்டும் என்று தெளித்தலை ஒக்கும் என்று கூறிக் கண்ணீர் வர, மெய்ம் மயிர் பொடிப்ப, தன் முதல் கலங்கி, இழந்த நெஞ்சமொடு ஆசிரியரின் சீர்பாதங்களில் மாணவன் வீழ்ந்து வணங்கினான்.

வீழ்ந்த அவனை நோக்கி ஆசாரியனும் இன்ன தன்மையன் என்று சொல்லமுடியாத பரமசிவனுடைய சிவத்துவத்தைப் பாவித்துத் தனது தெய்வீக நயனத்தால் அருளினான். (நயனதீட்சை)

குவிந்த வாயில்லாத ஊமைக்குடத்து நீர் நிறைந்தாற் போலவும், ஆமையாகிய தாய் பார்க்கக் குஞ்சு வளர்ந்தாற் போலவும், சூரியனின் சன்னிதியில் சூரிய காந்தக்கல் தீயை உமிழ்ந்தாற் போலவும் துரியா அவத்தைக்கு அப்பாலாகிய பதி இலக்கணத்தைத் திருவுளம் பற்றினான். அவன் பதி இலக்கணத்தை அறிய ஆசாரியனும் திருவுளம் மலர்ந்து அருளினான். (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடலில் ஆசிரியனை மாணவன் மிகவும் வணங்கி, தான் அறிந்து கொள்ளப் பதி ஞானத்தை வேண்டினான். நயனதீட்சையால் ஆசிரியனும் மாணவனுக்கு அருளி உரைத்தான் எனக் கூறப்பெறுகிறது. "வன்மீன் ஆணை பொன்முது கடவுள்" என்பது காமதேவனைக் குறித்தது. காமத்தை வென்ற ஆசிரியன் என்ற குறிப்பையும் தந்தது. எரிவெளி என்பது வெளிஎரி என்று நின்று காற்றில் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கைக் குறித்தது. "கடுங்கால் நெடுவெளி இடும்சுடர் என்ன ஒருங்குடன் நில்லா உடம்பு" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடும். (10:164 - 165) மெய்ப்பரம் - பதி உண்மை. எய்த்தல் - இறத்தல். மானின் குளம்படி நீரைச் சுத்தி காரியத்திற்கு அக்காலத்தில் பயன்படுத்துவர் என்பதால் அச்செயல் இங்கு கூறப்பட்டது. (12 - 15 வரிகள்).

பதி உண்மை அறிதற்கு ஏற்ப மாணவனிடத்தில் கண்பனி வார மெய்மயிர் பொடித்தது, தன்முதல் கலங்கியது சிறப்புடைத்தாம். ஆசிரியன் அருளும் திறத்தை தானும் யாதுமாகாது என்ற தொடர் உணர்த்திற்று. நயனதீட்சை - சிறப்புடையது என்பதால் தெய்வநாட்டம் எனக் கூறப்பட்டது. வாயில்லாதவனை ஊமையன்

என்று கூறுவதுபோல வாயில்லாத குடம் ஊமைக்குடம் எனக் கூறப்பட்டது. சூரியகாந்தக் கல்லில் சோதி தோன்றுவதைப் பதிஞானம் தோன்றப் பிறரும் காட்டுவர். ( சிவஞான சித்தியார், பா : 280 ).

---

பதி இலக்கணம்

பாடல் . 55

"படியடி அடங்காக் கடிகமழ் தாமரைக்
கண்காண் கடவுளோடு அத்துறை அமலனும்
எண்ணா இயல்பினன் இறையென முழங்கும்
விண்ணோர் அண்ணலை வினவின் மண்முதல்
முப்பது முதலா மூவிரண்டு ஓவா
ஒப்பில் தத்துவம் ஒரீஇய திப்பியன்
ஒழிவற நிறைந்த ஒருவன் பழிதீர்
வண்ண மில்லி அமலன் கண்முதற்
புலனொடு புணரான் இணையிலி யான்என்
மதத்தின் வாராப் பிறப்பிலி தனக்கென
நாமம் இல்லோன் நாதன் அநாமயன்
கால காலன் கணக்கிலி கடையும்
மூலமும் நடுவும் முனிந்தோன் மேலோன்
ஆகுல மில்லி அகோபன் அமோகன்
அபயன் அபங்கன் அகம்பன் அசஞ்சலன்
நித்தன் முத்தன் சுத்தன் சுதந்திரன்
பந்தமும் வீடும் பறைந்தோன் சிந்தையொடு
இன்பமும் துன்பமும் இகந்தோன் இனியாவதும்
புலமின்றி உணர்ந்த புலவன் கலர்எனத்
தணித்தலும் அளித்தலும் தடிந்தோன் தற்பரன்
துரியமும் தொடராத் தூயோன் பெருமை
அண்டன் அணுத்தரன் அணுஅண் டத்துடன்
நின்று நுணங்கிய தண்டாச் சீர்த்தி
உரைதரு புணரிக் கரைகரை யம்பி
காட்சி முதலிய அளவையும் அளவர
சேட்பட அகன்றனன் சிவன் எனச்
சூழ்ச்சியில் நிறைந்தோர் துணிந்தனர் நெடிதே"

இது பதியின் (இறைவன்) இலக்கணம் கூறுவதாகும்.

பொருள் :

மூவுலகும் அடங்காத பாதத்தினையும் தாமரை ஒத்த கண்ணையும் உடைய திருமாலோடு, அத்தாமரைப் பூவில் இருக்கும் பிரம்மாவும், அறிதற்கு அரியவனாகிய தலைவன் என்று வேத ஆகம சாத்திரங்களால் சொல்லப்பெற்ற பரமசிவனை ஆராயின்,

நித்தியமானவன், உவமையில்லாதவன், 36 தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டவன், எல்லா இடத்தும் நிறைந்தவன், குற்றமற்ற வண்ணங்கள் ஒன்றும் இல்லாதவன், நிருமலன், கண் முதலாகிய இந்திரியங்களோடு கூடாதவன், தனக்குவமை இல்லாதவன், யான் என்னும் அகங்காரம் இல்லாத பிறப்பற்றவன், தனக்கென ஒரு நாமம் இல்லாதவன், எல்லோர்க்கும் தலைவனானவன், ஒன்றிலும் பற்றில்லாத காரணத்தால் நோயில்லாதவன், காலகாலன், அளவுபடாதவன், கடையும், முதலும், நடுவும், இல்லாதவன், மேலோன், கலக்கம் இல்லாதவன், கோபம் இல்லாதவன், மோகம் இல்லாதவன், பயம் இல்லாதவன், பங்கிக்கப் படாதவன், நடுக்கமில்லாதவன், சலனமில்லாதவன், நித்தன், முத்தியைத் தருபவன், சுத்தன், சுதந்திரன், பந்தமில்லாதவன், சுகதுக்கம் இல்லாதவன், சர்வ பதார்த்தங்களையும் அறிந்தவன்.

கீழோர் என்றும் நல்லோர் என்றும் பாகுபாடு பாராது வினைக்கேற்ப அருளுபவன், தற்பரன், தூயவன், பெருமைக் குரியவன், அணுவிற்கு அணுவானவன், உலக்தோடு உடனாய் நின்று தேய்ந்து கெடாத பெருமை உடையவன், சாஸ்திரமாகிய கடலின் கரையை அணைதற்குச் சாட்சி முதலிய பிரமாணமாகிய மரக்கலத்திற்கு அப்பாற்பட்டவன் –

இத்தகைய பரமசிவன். (என்றவாறு).

விளக்கவுரை :

இறைவனின் மங்கல குணங்களை வரிசைப்படுத்திக் கூறுகிறது இப்பாடல். மூவுலகும் ஈரடியால் அளந்தமை திருமாலுக்குரிய சிறப்பு என்பதால் இங்கு கூறப்பட்டது. கண்ணால் சிவனை அர்ச்சித்ததால் அதன் பெருமையும் கூறப்பட்டது. தனக்குவமை இல்லாதவன் என்பதை அணையிலி என்ற சொல்

குறிக்கிறது. தனக்குவமை இல்லாதான் என்பது திருக்குறள். (குறள் . 7.) "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமில்லாதவர்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டோமோ" (திருவாசகம் - திருத்தெள்ளேணம் - 1) என்ற மணிவாசகர் வாக்கு நினைவுகூறத் தக்கது. நாதன்தாள் வாழ்க என்று திருவாசகமும் கூறும், ஆகுலம் - கலக்கம், பங்கு - பாகம், அகம்பம் - நடுக்கம் இல்லாதவன், சஞ்சலம் - சலனம் , நூற்கடலை ஓதியுரைத்தே கடத்தல் இயலும் என்பதால் உரைதரு புணரி எனப்பட்டது.

---

## பதியின் வியாபகம்
## பாடல் . 56

"இன்ன தன்மையன் எனையன் என்றுஇனிது
அன்னோன் தேரின் அம்ம மின்அவிர்
பதும ராகப் புதுவெயில் நீழல்செய்
மடநடை நல்லான் வனமுலை வந்த
மதியில் தண்மை ஞெலிகோல் வன்றழல்
பாலில் தீநெய் பழத்தினில் இன்சுவை
பூட்சி யாயுயிர் பொருளுரை எள்நெய்
கடிமலர் கஞலிய ஒடியா வாசம்
விம்மிதம் என்னென்று இசைக்குவ மற்றோ
நிலநீர் தீகால் வெளியுயிர் யாவும்
அவையே தானவை தானே யாகி
விரவியும் விரவா வீரம் விரவிய
தன்வாள் அல்லதை தன்வாள் இழந்த
மதிமாசு உரஒளிகால் பளிங்கின்
பூட்சித் தென்ன புலனொடு புணராது
அருளும் நின்அடிகள் என்றனன்
மருள்கெட விலங்கிய மறை வல்லோனே"

இது பசு, பாசப் பொருள்களை அளவைகளால் அறியலாம். ஆனால் பதிப்பொருளாகிய பரமசிவனை அளந்து அறிய முடியாது என்பதால் பரமசிவனது வியாபக நிலையைக் கூறியது.

பொருள் :

இன்ன தன்மையன் என்று முன்பாடலில் கூறப்பெற்ற சிவபெருமான், எவ்வியல்பாய் நிற்பான் என்பதை ஆராய்ந்தால் –

ஒளியுடைய மாணிக்கமும் அதன் சோதியும் போலவும், சந்திரனும் தட்பமும் போலவும், தீக்கடைக்கோலும் தீயும் போலவும், பசுவின் பாலும் நெய்யும் போலவும், பழமும் இனிய சுவையும் போல்வும், உடலும் உயிரும் போலவும், சொல்லும் பொருளும் போலவும், எள்ளும் எண்ணெயும் போலவும், பூவும் நாற்றமும் போலவும் இறைவன் வியாபித்திருப்பதை வியந்து பேசுவதைவிட இத்தகையன் என்று எவ்வாறு இசைக்க இயலும்?

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களிடத்தும், உயிர்களிடத்தும் அவையே தானே ஆகி, (தன்னை அவையே என்றுமாய்) வியாபித்திருக்கும் வீரம் படைத்தவன். தான் அடுத்த பொருளின் தன்மையைக் காட்டுவது அல்லது தன்ஒளி தோன்றாதிருக்கின்ற –

சந்திரனைக் காட்டிலும் ஒளி மிக்குடைய பளிங்கின் தன்மைபோல எல்லாப் பொருள்களிடத்தும் வியாபித்திருக்கின்றான்.

என்னுடைய மயக்கத்தைத் தீர்க்க வல்ல நாயகனே (தலைவனே). பதியின் தன்மை இப்படியானால் அப்பதியை அறியும் உபாயத்தை அடியேனுக்கு அருள் செய்ய வேண்டும் என மாணவன் கேட்டனன். (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் இறைவன் எல்லாப் பதார்த்தங்களிலும் எவ்வாறு கலந்திருக்கிறான் என்பதை உவமைகள் மூலம் சுட்டிக் காட்டுகிறது. மதியின் தண்மை வைத்தோன், தீயின் வெம்மை செய்தோன் என்றும் திருவாசக திருவண்டப் பகுதி குறிப்பிடும். இங்கு காட்டப்பெற்ற உவமைகள் திருமுறைகளிலும் இடம் பெற்றுள்ளமையை அறிந்து துய்க்கலாம். "அவையே தானே ஆகி இருவினையின் போக்கு வரவும் புரிய ஆணையின் நீக்கமற நிற்குமன்றே" என்று சிவஞான போதமும் குறிப்பிடும். (சிவஞானபோதம் . 2) திங்களுக்கும் மறு உள்ளமையால் மறுவில்லாத பளிங்கின் பெருமையைக் காட்ட "மதி மாசுர ஒளி" எனக் கூறப்பட்டது. "பன்னிறம் கவரும் தொன்மை படிகநீடு ஒழியும் பன்மை" எனச் சிவப்பிரகாசமும் கூறும். (பா. 69).

பதி உண்மை
பாடல் . 57

“பூபூதர ஆதி ஓவற உஞற்றும்
ஒருவனை உடைத்துப் பொருவரி காரியம்
ஆதலின் கடம்போல் என்னில் கோதின்
இருங்கடம் அதனோடு இயற்றிய ஒருவனை
ஒருங்குடன் கண்டோன் ஒழிந்திகல் இரிகடம்
கண்டால் இவையும் அவன்எனக் கொண்டாங்கு
உண்டோ உலகம் உஞற்றுடன் ஒருவற்கு
கண்டு மற்றிதூஉம் உண்டு இவன் எனவெனில்
கண்டதின் மானம் உனக்குக் கொண்டல் கொள்
கிரிவளர் கழைஞெலி தூமம் அதனின்
எரிவளர் அட்டில் புகைஅயல் எனஉணர்ந்து
ஒட்டினை பிறங்கல் ஒள்ளழல் ஒட்டியது
என்னை விசேடம் சமனியத்து யாதின்
பன்னெனில் விசேடம் என்னின் அன்னோ
காட்சியது அலதிலைச் சமனிய மாட்சியது
என்றேல் செயலோடு செய்வோர் கண்டோன்
மன்ற மாண்வினை காணின் என்றாங்கு
ஓதுவன் ஒருவன் தீதுகு செயலென்று
அற்றேன் மாகம் ஆதிய வினையாகு
எற்றேற் பாகம் இயைதலின் கடம்அற்று
இன்னும் ஒண்குணம் அன்னலில் புவிபோல்
ஆதிய வழியும் அழிபவை செயலென்று
ஓதுரு அஃதும் தீதறு செயலே”

இது பதியினது உண்மையை அனுமானப் பிரமாணத்தால் விளக்குகிறது.

பொருள் :

பிருதிவி முதலிய தத்துவங்களும் மலை முதலாய பொருள்களுமாகிய உலகம், செய்வான் ஒருவனை உடைத்து. ஏனென்றால் உலகம் (பிரபஞ்சம்) உவமை இல்லாத காரிய ரூபமாக உள்ளது. எது போல என்றால் செய்யப்பட்ட குடம் போல. இதனை ஏற்கவேண்டும். குற்றம் வாராது. (குடத்தைப் பார்க்கும் பொழுது

அதைச் செய்வான் ஒருவன் இருக்கவேண்டும் என்பதை அனுமானிப்பது போல) காரியப் பிரபஞ்சமாகிய உலகத்தைப் பார்க்கும் பொழுது அதனை உருவாக்கியவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பது பெறப்படும்.

குடத்தையும் அதனைச் செய்தான் ஒருவனையும் ஓரிடத்தில் ஒருசேரக் கண்ட ஒருவன், வேறோரிடத்தில் பல குடங்களைக் கண்டால் இவையும் அங்ஙனம் இயற்றப்பட்டன என நிச்சயிப்பான். அது போல வேறு ஒரு உலகத்தையும் செய்வான் ஒருவனையும் உடன்கண்டு இவ்வுலகும் ஒருவனால் செய்யப்பட்டது என்று நிச்சயித்தல் உண்டோ என்று மாணவன் கேட்க, –

நீ அங்ஙனம் கூறுவாயானால் அவ்வாறு ஒரு உலகத்தை காட்டுவதற்குப் பிரமாணம் இல்லை. நெருப்பும் புகையும் காணப்பட்ட அடுக்களையில் எரியில் வருகின்ற புகையைக் கொண்டு அடுக்களையில் தீ இருக்கிறது என்பதை உணர்தல் உண்டு. புகை அற்பமானதாக இருந்தாலும் அதனை உவமமாகக் கூறுதல் ஒவ்வாது என்று உணர்ந்தாலும் மலையில் புகையைக் கண்டவிடத்து நெருப்புஉண்டு என்று உணரப்படுகிறது. இவ்வாறு உணர்வது சாமான்யத்தால் விசேடத்தை அறிவது போன்றது. சாமான்யம் என்பது பொது அறிவு, விசேடம் என்பது சிறப்பு அறிவு.

இந்த அனுமானத்தைக் கொண்டு (சாமான்யம் – விசேடம்) உலகத்தை இறைவன் படைத்தான் என்பதை எவ்வாறு அறியலாம் என்றால் குடத்தைக் கொண்டு குயவனை அறிந்தது சாமான்யம், உலகத்தை இறைவன் படைத்தான் என்பது விசேடம். அப்படியானால் இது காட்சி அளவையே அன்றி அனுமான அளவை இல்லை என்றால் புகை என்னும் சாதி சாமான்யத்தால் நெருப்பு உண்டு என்று கொள்ளப்பட்டது.

குடத்தைப் பண்ணுகிற செயலோடு பண்ணுகிறவனையும் கண்டு இவ்வாறு ஒரு பதார்த்தம் சிறப்புடைய காரியமாக ஆவதை மனத்தால் எண்ணி அனுமானித்துச் சிறிதோ பெரிதோவாக உள்ள ஒரு பொருள் ஒருவனால் செய்யப்படவேண்டும் என அனுமானிக்கலாம். இத்தகைய அனுமானத்தால் உலகம் காரியப்பட்டதால் படைத்த இறைவன் உண்டு என்று எண்ணுகின்றபோது அங்கே மண், கருவிகள் இருந்தன. ஆனால் உலகிற்கு ஆகாயம் முதலான தத்துவங்கள் அருவமாதலால் அவை தொழிற்பட்டதை எவ்வாறு அறிய முடியும்?

ஆகாயம் பகுக்கப்படக் கூடியது. வாயு, தீ, நீர், நிலம் என நான்காம். அவை உருவமாக இருப்பதால் அதனைச் செய்வோன் ஒருவனை உணரலாம். மேலும் ஆகாயமும் சத்தமாகிய குணத்தை உடையது. ஆதலால் அதுவும் உருவமுடைத்தாம். இந்த ஆகாயம் முதலிய தத்துவங்கள் ஆதியானபடியாலே அழியக்கூடியவை. அழியக்கூடியவை ஒருவனால் ஆக்கப்பட வேண்டும். எனவே உலகம் இறைவனால் ஆக்கப்பட்டது (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் உலகம் காரியப்பொருள் என்பதால் அதனைச் செய்ய ஒருவன் வேண்டும் எனக் கொண்டு, அந்த ஒருவன் இறை என்று நிறுவுகிறது. இப்பாடலின் கருத்தைக் கொண்டு சிவஞான மாபாடித்தில் சிவஞானமுனிவர் பதியின் இலக்கணத்தை நிறுவுகிறார். (சூ. 1, அதிகரணம் . 2)

உலகம் கணந்தோறும் இடையறாத தோற்றத்தையும், நிலையையும், இறுதியையும் கொண்டது ஆதலின் செய்வோனுக்கும் செய்கைக்கும் இடையறாது பற்றி ஓவர முயற்றும் எனக் கூறப்பட்டது. இப்பாடலின் முதற் பகுதிக் கருத்தையே சிவஞானபோதம் முதற் சூத்திரமாகக் கூறுகிறது.

குடத்தையும் குயவனையும் தொழில் நிகழ்கின்றபோது கண்டதால் ஒருங்குடன் கண்டோர் எனக் கூறப்பெற்றது. மானம் - அளவை, அட்டில்புகை சிறியது. மலைப்புகை பெரியது. சாதி அடிப்படையால் மலைப்புகைக்கு அட்டில்புகை உவமையாயிற்று. ஆகாயம் சத்த குணத்தை உடையதால் உருவம் உடைத்து என்று கூறுவது சிறப்புடைத்தாம்.

---

பதி உண்மை

பாடல் . 58

“பதியளவு அளவை மதியோர் வரத
உணர்தல் வேட்கைஎன் அளவையின் உணர்த்த
உணர்வோர்க்கு உணர்வது அனைவகை ஆதலின்
அறிதவ அசத்து உலகஅறி வனைவினா அக்
குறிவரல் போதல் கூடாது உறுதேர்

ஆதிபோல அவைஇனிது உய்க்கும்
நீதியன் எவன்பதியே எற்கோதமல்
அநேகாந்திகம் என்நினை வொடு நின்றது
கன்றுவளர் பாலினும் சென்றின்று ஈன்கோச்
சேதனம் ஆதலின் ஓதிய உயிர்போ ஒஞ்
சுரபி தீம்பால் சொரியின் புரையல்
தீம்பால் வளர்த்தது அன்றெனை ஓம்பாது
உரையாடு நர்எவர் வரையா அறிவன்
செயலெனை இரும்பை அயலற உய்க்கும்
காந்தம் என்றெடுத்துக் கோளும் வாய்ந்தன்று
இரண்டையும் இயைக்கும் முரண்டகு சேதனன்
இன்றெனின் அவைசென்று ஒன்றா ஆகலின்
சேதனன் செய்தியென்று ஓதிடின் உயிர்கட்கு
ஏதுஅளவு அவையே கோதுக அமைக்க
நாதன் என்னை எனில் உயிர் அறியா
ஈசத்தன்மையும் இல்லை யாகியல்
தம்முடையச் செயற்கும் வெம்முரண் கடம்போல்
ஒருவனை இகல்இரி துணையென மருவுவர்
என்றால் இறைமை இவர்க்கெனை இறையே
மன்றார் மாநடம் ஆடி ஒன்றோ
வீடுஅடை பவரே கூடுக செயல் எனின்
ஆதியரோ மற்று அனாதி யரோவேறு
ஏதமில் முத்தியர் என்னின் ஆதி
அன்றெனின் சித்த சாதனம் ஆதி
என்றிடின் முத்தியது ஈவோன் முன்னர்
நின்றனன் ஆக நிகழு மின்றி
என்றும் பந்த மன்றி முத்தி
ஒன்றாது உணர்வோர் உணர்விற் குன்றாது
இருந்திடும் பாசம் செற்ற
பெருந்தகை அருளிற் பொருந்து மற்ற அஃதே".

இது உடன்பாடு மறுத்தல் அனுமானத்தால் பதி உண்மை கூறுவது.

பொருள் :

மதியோர் வரதனே! உணர்வோர் அளவை வகைகளான் உணர்வது ஆதலின் அவ் அளவைகள் முன்பே கூறப்பெற்ற காட்சி

முதலிய ஆறு அளவைகளும் அந்த அளவைகள் மூலமாகப் பதி உண்மையை அறிய விரும்புகிறேன். ( என்று கூறிய மாணவனுக்கு ஆசிரியர் பின் வருமாறு கூறுகிறார்).

பிரபஞ்சம் ( உலகம் ) ஒரு கருத்தாவை உடையது. அவ்வுலகம் அசேதனமாயிருப்பதால் ( அறிவற்றது ) அறிவுடைய ஒருவனால் அன்றி. அவயவங்களோடு காணப்பெறும் உற்பத்தியும் அழிவும் நிகழ்தல் கூடாது என்பது நிச்சயமாகும். சாரதிகளால் உறுப்புகளோடு கூடிய தேர் முதலாகிய வாகனங்கள் செலுத்தப்படுதல் போல. (சாரதி - அறிவுடையவன், தேர் - அறிவற்றது) மேலும்இவ்வுலகங்களை இனிதாகச் செலுத்துகின்றவன் யாவனோ - அவனே பதியாவான்.

இது இவ்வாறு இருக்க - அசேதனமாகிய உலகமே அநேகவிதத்தாலே - பிரவிர்த்தி நிவிர்த்திகளைச் செய்யும். இதற்கொரு முதல்வன் வேண்டாவே என எண்ணத் தோன்றுகிறதே (என மாணவன் கூற) -

கன்றை வளர்ப்பது பால் என உன் நினைவு செல்லாது. (பால் அசேதனம்) ஏனென்றால் கன்றை ஈன்று வளர்ப்பது சேதனமாகிய பசு. அசேதனமாகிய பால்தான் வளர்க்கிறது. என்றால் இறந்த பசுவும் பாலைச் சுரந்ததாயின் இனிய பால் கன்றை வளர்த்தது என்றும் கூறலாம். அவ்வாறு கூறுவார் இலர்.

மேலும் அசேதனமாகிய காந்தம் இரும்பை வலிக்கும் என்று கூறும் அளவையும் பொருளாகாது. ஏனெனின் காந்தக் கல்லையும் இரும்பையும் ஒப்ப வைக்க அறிவுடையவன் வேண்டும். இல்லெனின் அவை தாமே தம்மில் கூடாது. (என்று ஆசிரியர் பதில் கூறுகின்றார்).

அறிவுடைப் பொருள் தான் செய்யும் என்றால், ஆன்மாக்கள் அறிவுடைப் பொருள்தானே - அவையே செயல்களைச் செய்யலாமே. இறைவன் தேவையில்லையே (என்று மாணவன் நினைக்க).

ஆன்மாக்கள் அஞ்ஞானிகள் ஆதலாலே - அவை அறிந்து செய்ய இயலா. அவ் ஆன்மாக்கட்குப் பதித்துவம் இல்லை. குற்றம் நீங்கத் தம் கன்ம பலங்களைப் புசிப்பதற்கும், பக்குவப் படுத்தற்கும் இயலாது. கடத்தை அழகுறச் செய்விப்பானைப்போல் - உவமையில்லாத முதல்வன் ஒருவன் வேண்டும். இத்தகைய

முதல்வன் திருச்சிற்றம்பலத்தில் ஆடுகின்ற பரமசிவன் ஆவான். (என்று ஆசிரியன் கூறுகின்றார்)

ஞானிகளால் தான் (முத்தர்களால்) செயல்கள் செய்யப்படும் (இறைவன் வேண்டா என்றால்) என்றால் முத்தர்கள் பலராவரே. பலர்கூடி ஒரு செயலை நன்கு செய்ய இயலா. மேலும் அந்த முத்தான்மாக்கள் ஆதியா? அநாதியா? அநாதிமுத்தர் என்றால் அதுதான் சைவசித்தாந்தம் கூறும் முதல்வன். ஆதி என்றால் அந்த ஆதி முத்தான்மாக்களுக்கு முன்பே முத்தியைப் பெற்றவர் வேண்டும். எனவே இறைவன் தருவது இன்றி முத்தியை அடைவது இல்லை. அவனும் பதி உண்மை உணர்ந்தோர் உயர்வில் ஒளிமயமாக இருந்து பெருமைக்குரிய அருளாலே முத்தியைத் தருவான் (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் இறைவனின் உண்மை வினா விடை அமைப்பில் வலியுறுத்தப் பெறுகிறது. அறிவுடைய இறைவனே அறிவற்ற உலகை இயக்குவதும், அறிவுடைய ஆன்மாக்கட்கு முத்தி தருவதும் ஆவான் என்பது உதாரணங்களால் விளக்கப் பெற்றுள்ளது. அளவைகள் காட்சி, அனுமானம், ஆகமம், அபாவம், அருத்தா பத்தி, உவமை என ஆறு ஆகும். இதனை சட் பிரமாணம் என்பர். “அளவை, காண்டல், கருதல், உரை, அபாவம், பொருள் ஒப்பு ஆறு என்பர்” (சிவஞான சித்தியார் - அளவையியல் - 1) நீதியன் - இறைவனைக் குறித்தது. அநேகாந்திகம் - அநேகவிதம், ஈன்கோ - ஈன்றபசு, எடுத்துக்கோள் - எடுத்துக்காட்டு.

---

பதி உண்மை

பாடல் . 59

“எல்லாத் தொழிலும் இறைவற் குறித்த
இல்லாச் சேதன மாகி எங்கணும்
நின்றுழி நில்லாத் தகைத்தான் நின்றுழி
நிற்கப் படுவது யாதே அ·.தே.
முற்பட அமைந்தது முயற்சியும் இன்றே.

இதுவும் பதி உண்மையை அனுமான அளவையால் நிறுவுகின்றது.

பொருள் :

எல்லாத்தொழிலும் ஒரு கருத்தாவை நினைவூட்டும். மேலும் தொழில்கள் ஒரே மாதிரியாக இல்லாது வேறு வேறு விதமாய் இருத்தலால் செய்யும் கருத்தாவை நினைவூட்டுகின்றன. எல்லாத் தொழில் இடத்தும் தான் ஒரு படித்தாய் நின்று அநாதியாக இருந்து இறைவன் தொழிற்படுத்துகிறான். அவன் தொழில் ஒருவரால் செய்யப்பட்டதுமன்று.

விளக்கவுரை :

செய்யப்படும் வினை முழுதும் செய்வோன் ஒருவனையன்றி நிகழாமை யாவரும் அறிந்த ஒன்றாகலின் "எல்லாத் தொழிலும் இறை வற்குறித்த" எனக் கூறப்பெற்றது. நின்றுழி நில்லாத் தகைத்தால் என்பது - அசேதனத்தையும் நின்றுழி நிற்றல் சேதனமாம் இறைவனையும் குறித்தது.

---

பதியின் சங்கற்பம்
பாடல் . 60

"விந்து அவத்தை விசேடத்து எந்தை
கவவுசிவ பேதந் தவஅளித்தனை அது
சேதனம் அண்மையிற் கோதறச் செயலின்
அச்செயற்கு அமலன் என்னின் மற்றவற்கு
எய்திடும் விகாரம் எய்த மையுகாஅ
விகா அரத்தைத் தவிரத் தவிராது
என்னை என்னின் பன்னுவ மன்னோ
பொங்கிய வினை இரு வகைத்துச் சங்கற்
பத்தொடு கரணத்தலர் கடங்குலாலன்
எற்படு சங்கற் பத்தின் முற்பட
இயற்றலன் இறைவன் சங்கற் பத்தின்
மயக்கற விந்துவைத் துயக்கரக் கலக்கல்
செய்வன் ஓவான் செய்தற்கு ஐய
காரண மாக எவையும் சேர்தல்
செல்லான் ஆகலானும் நல்லியல்
அமலன் ஆக லானும் விமலம

தாக அம்ம ஆகம் மேவுநர்
போகலர் யாவும் தீதுக இயற்றல்
இல்லோ ராக இயற்ற வல்லோர்
அல்லோர் என்ன லாக எல்லாம்
செய்தியைத் தடுத்தற்கு ஐயம் இன்றது
இன்றேல் எவையும் இயற்றற்கு ஒன்றும்
குன்றாது எவண்எனின் மன்ற தன்தனு
ஆக இயற்றிய அறிவன் போகிய
தேகன் அல்லகொல் சிவன் அகிலத்தைச்
செய்வன் இன்றும் ஐயம் கேண்மோ
மெய்யுடன் இயைவோர்க்கு அல்லதை வினைமற்று
உய்யாது என்னின் உடல் காரியம்அக்
காரியம் செய்வோன் இன்றி வாராது
அவனுடன் முதலிற் சிவணும் மற்றவன்
ஆக அவத்தைத் திறன் அல்லாத
போகாது ஆகலிற் புகல்முதல் தொடக்கிற்
எல்லா ஆகரும் இரித்திணை இறந்த
செல்லா நல்வலி சிறந்த வல்லோன்
ஈசன் ஆகல் இயையும்
ஆசின்று ஆயுநர் ஆயுங் காலே".

இது இறைவன் உலகத்தை உற்பத்தி செய்யும் காலத்தில் எவ்வாறு சிருஷ்டிக்கிறான் எனறு மாணவன் கேட்டமைக்கு இறைவன் நிட்களனாய் (அருவ மூர்த்தியாய்) இருந்து சிருஷ்டிப்பான் என்று ஆசிரியர் கூறுவதை உணர்த்துகிறது.

பொருள் :

எந்தையே! பரமசிவனுடன் கூடியிருக்கிற சக்திதான் சங்கற்பத்தால் சுத்த மாயையினுடைய கலக்கத்திலே பிரபஞ்சம் உண்டானது என்று அருளிச் செய்தீர். இதுபற்றி விளக்கம் தருக. (என்று மாணவன் கேட்கக) -

அந்த சுத்த மாயை தானே அசேதனமாதலால் குற்றமற எதனையும் செய்ய மாட்டாது. (சுத்தமாயை பரமசிவன் சிற்சக்தியால் கலக்கப்பட்டுத் தொழிற் படுவதாகும்). அவ்வாறு இறைவன் செய்வதாயிருந்தால் அவன் விகார்ப்பட வேண்டும். ஆனால்

இறைவனுக்கு விகாரம் ஏற்படாது. அவ்வாறு விகாரப்படாது இறைவன் செய்கிறான் என்றால் எவ்வாறு செய்கின்றான்?

சிருஷ்டிவினை தொழிற்படுவது சங்கற்ப சிருஷ்டி என்றும், கரண சிருஷ்டி என்றும் இருவகைப்படும். குயவன் பானையைச் சிருஷ்டிப்பது கரண சிருஷ்டியாகும். இறைவன் செய்வதோ சங்கற்ப மாத்திரையானே தனக்கு மயக்கமும் வருத்தமும் இல்லாதபடிச் செய்கின்றான். ஆதலால் அவன் விகாரப்படுதல் இல்லை.

இறைவன் எந்தவிதமான உடம்பையும் தான் எடுத்துக் கொள்ளாது உலகத்தைச் சிருஷ்டி செய்கின்றான். மேலும் அவன் சுத்தமான நல்ல இயல்புடைய நிருமலன் ஆவான்.

உடம்பை உடையோர் தொழில் செய்யும் கரணங்களால் (கருவி) செய்வதோடு எதனையும் குற்றமறச் செய்ய மாட்டார்கள். அதே நேரத்தில் சரீரம் இல்லாதோர் எல்லாவற்றையும் செய்வதற்கு வல்லார் அல்லர் என்று சொல்ல வேண்டாம். (செய்வார்கள்) எனவே உடம்பானது ஒன்றைச் சிருஷ்டிக்கும்போது விக்கனமாய் இருக்கும். உடம்பு இல்லையாயின் எல்லாவற்றையும் செய்வதற்குச் சிறிதும் தாழ்வுபடாது உடம்பைக் காரணமாகக் கொண்டு ஒவ்வொரு தொழிலையும் செய்கின்ற அறிவுடைய ஆன்மா அரூபியாக இருக்கிறது. அது போலத் தான் அரூபியாக (உடம்பற்று) இருந்து உலகம் அனைத்தையும் செய்கின்றான் இறைவன்.

உடம்போடு இருந்து தான் எந்தத் தொழிலையும் செய்யலாம். உடம்பு இல்லாதோர் செய்ய முடியாது என்றால் உடம்பு என்பது காரியம். அக்காரியம் தான் செய்வோன் ஒருவனை இன்றி வாராது. எனவே உடம்பே இறைவன் இருப்பதைக் காட்டி விடுகிறது.

உடலைத் தோற்றுவதற்கு உடம்போடு கூடிய ஒருவன் வேண்டுமென்றால் முதற்கு முதல், அதற்கு முதல் என்று வளர்ந்து கொண்டே போகும். மூலத்தை அறிய முடியாது. எனவே விந்து, நாதம் முதலாகச் சொல்லப்பட்ட எல்லாத் தேகத்தையும் விடுத்து, உவமையில்லாத அருட் சக்தியுடனே கூடிப் பரமசிவன் சுத்தமாயையைத் தொழிற்படுத்தி ஐந்தொழிலான ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற பஞ்சகிருத்திகளைச் செய்கின்றான் என்று ஆகமநூல் அறிந்தோர் கூறுவர். (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் இறைவன் தன்னுடைய ஐந்தொழில்களை நிட்களனாக (உருவமில்லாத) இருந்து சங்கற்ப சிருஷ்டியால் (கருவிகள் இல்லாமல்) செய்கின்றான் என்பது விளக்கப்படுகிறது.

மேலும் உலகில் உடம்போடு கூடிய ஒன்றுதானே தொழிற்படுகிறது. அப்படியானால் உடம்பில்லாமல் இறைவன் எப்படி செயல்படுவான்? என்பன போன்ற ஐயங்களை எழுப்பி உடம்பு செய்கின்ற தொழில்கள் கரணத் தொழில்கள் (கருவிகளோடு செய்யும்) உடம்பு காரியம் - அக்காரியத்திற்குத் தோற்றுவித்தவன் ஒருவன் வேண்டும். ஓர் உடம்புக்கு முன்னே மற்றொரு உடம்பு என்றால் முடிவில்லாமல் போகும் என்றெல்லாம் விடைகூறி இறுதியில் இறைவன் சக்தியோடு கலந்து சுத்த மாயையைக் கலக்கித் தொழிற் படுகிறான் என்ற கருத்து விளக்கப்படுகிறது. விந்து அவத்தை - இது சுத்த மாயையைக் குறிக்கும். பிரபஞ்சத் தோற்றத்திற்கு இது காரணம். இறைவன் தொழிற் படுகின்ற பொழுது எவ்வித விகாரத்தையும் அடைய மாட்டான். இதை "தோற்றுவித்து அழித்து பின்னும் துடைத்து அருள் தொழில்கள் மூன்றும் போற்றலே உடையன் ஈசன் புகுந்தது விகாரம் என்னின்" என்று சிவஞான சித்தியார் (பா. 53) குறிப்பிடும்.

குயவன் கரணத்தால் தொழிற் செய்வதன்றிச் சங்கற்ப மாத்திரையால் செய்யான் என்பதனைச் சிவஞான மாபாடியம் குறிப்பிடும். (சு. 1. அதிகரணம். 2) இறைவன் உடம்பு எடுத்துக்கொள்ள மாட்டான் என்று சொல்லாது சேர்தல் செல்லான் என்று கூறியிருப்பது உபசார வழக்கு. சரீரத்தோடு தொழில்களைச் செய்யும்பொழுது உருவங்களால் தீது நடைபெறுவதுண்டு என்பதால் யாவும் தீதுக இயற்றல் போகலர் என்று கூறப்பட்டது. உருவமில்லாத இறைவன் அனைத்தையும் செய்ய வல்லார், அல்லர் என்று கூறல் வேண்டா என்பது வலியுறுத்தப்படுகிறது.

---

ஞான நாட்டம்

பாடல் . 61

"ஏணி போகிய கீழ்நிலைப் படலமும்
உம்பர் போகிய உயர்நிலை உலகமும்

எண்டிசை மூன்று தண்டாக் காலமும்
உளப்படப் பொதிந்து நிலைக்குரி மரபின்
அவத்தை நீங்கிய தவத்தின் சார்வைக்
காண்டல் வலியோர் இன்மையின் மாண்ட
ஞான நாட்டக்கு அன்றி இலகா
யாணர்த் திணையரி நோக்கங் காணான்
இருளற இரிய விரிகதிர் பரப்பிய
ஒரு தேர் நேமிப் பருதி வானோற்
காணா வாறு போலச் சேணென
இடைகடை முதல் இறந்து உடைதர அளவை
ஒழிவற நிறைத்தோன் இன்றுங் குழிகண்
கூளி ஊர்ந்த ஆடவற் திரிந்த
ஆள்வினை காட்சி அலகை கண்டிலதெனக்
காட்சியில் கஞலிய எவற்று மாட்சியின்
நின்றனன் பரம காரணன்
மன்ற நன்றறி ஒன்றினை உணர்ந்தே"

இது உருவமற்ற (அருபியாக) நிலையில் இருந்து அனைத்தையும் செய்கின்ற இறைவன் ஞானநாட்டம் உடையார்க்கு அன்றிக் காண ஒண்ணாதவன் என்று வலியுறுத்துகிறது.

பொருள் :

எல்லையில்லாத கீழுள்ள தலங்களையும், மேலே உள்ளவனாகிய தலங்களையும், திக்குகள் எட்டையும், மூன்று காலங்களையும் தனக்குள் அடக்கிக்கொண்டவன், அவத்தைப் படாத தவசிகட்குப் புகலிடமாக உள்ளவன் ஆகிய பரமசிவனைக் கண்ணால் காண வல்லோர் இல்லை. அவன் மாட்சிமையுடைய ஞானக்கண்ணால் காண அன்றி வணங்கத் தோன்றான். எதுபோல என்றால் கண் தெரியாத குருடன், உலக இருளைப் போக்குகின்ற ஒற்றைச் சக்கரத்தை உடைய விரிந்த கதிர்களை உடைய சூரியனைக் காணாதவாறு போல.

ஆகாயம் போல முதல் நடு இறுதி இன்றி அளவைகளால் அறிகற்கு உரியவனாய், எங்கும் நிறைந்தவனாய் உள்ளவன் இறைவன். குழிந்த கண்களை உடைய பிசாசு பிடிக்கப்பட்டவன் செய்கின்ற முறைமைக்கு மாறுபட்ட செயல்களைக் காண்முடியுமே

தவிர அவனிடத்தில் பேயைக் காணமுடியாதவாறு போல, காணுவதற்குரிய எல்லாப் பொருளிடத்தும் காண முடியாது நிற்பான் என்பதைத் தெளிவாக உணர வேண்டும்.

விளக்கவுரை :

இறைவன் அனைத்துப் பொருளையும் இயக்கினாலும், அவனைத் ஊனக் கண்ணால் காண இயலாது. ஞானக்கண்ணால் தான் காண முடியும் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது. ஏன் - எல்லை, இங்கு எல்லை இல்லாத பாதாள உலகங்களுக்கு அடையாயிற்று. கால தத்துவம் மாயையிலும், மாயை சத்தியிலும், அச்சக்தி இறைவனிடத்திலும் ஒடுங்க ஒடுக்குதலால் மூன்று தண்டாக் காலமும் உளப்படப் பொதிந்து எனக் கூறப்பெற்றது. தண்டா - பிறழாத, அவத்தை - துன்பம், ஞானநாட்டம் - ஞானக்கண், இளையர் - உவமை இயலாத, நேம் - சக்கரம், இறைவனை ஞானக் கண்ணால் தான் காண இயலும் என்பதை, “மிக்க ஞானமூர்த்தியாய வேத விளக்கினை என் - ஞானக்கண்ணாலே கண்டு தழுவுவனே” (திருவாய்மொழி - 4:7:10) என்று பிறரும் கூறுவர்.

---

சக்தி சங்கற்பம்

பாடல் . 62

“இறைசிவன் எனஅருள் உறைபதி அறைதன்
முறையல அன்மையின் மூர்த்தி கறைகடி
கரணம் இன்மையின் முரண்மிகு கடாவிடை
அறிமதி காலம் அமூர்த்தம் உறுபலந்
தருமது போலத் தலைவன் மூர்த்தத்
திரிபின னாலும் இன்தொழில் பொருவிரி
இச்சையில் இயற்றுமெனின் அவ் இச்சை
நற்தொழில் செய்தி நயவாது ஆங்கெனின்
கண்டிசின் யோகக் கலைத்துறை நீந்திய
ஒண்திறல் யோகர் போலத் தண்டா
இச்சை இறைக்கு இவண்எற்றுஎனில் சொல்தகு
சல்லியம் தாள்அற வாங்கிற்று எல்லேய்
புலமின்று ஆயினும் நலமிலி கட்டகம்
அன்ன தானும் அதன்பால் இன்தொழில்

மன்னா தானும் மற்றது வந்த
செய்திகள் காண் பெய்யா உவமையின்
பெருத்து எனைப் பலவாய் உருத்திகழ் தொழில்தான்
இருத்தல் கூடாது இருத்திய கடம்போல
ஆதலின் காரணம் ஒன்று உண்டாமென
ஓதிடின் கருமம் அது மற்றதற்கு
ஏதிடர் எனில்அது கோதில் அசேதனம்
அருமறை அறையும் உருவலி அருவுரு
உரிஅவிர் ஈசன் ஒளிதிகழ் சதாசிவன்
சாந்தன் என்றினிது அம்ம
ஏந்திய கொள்கை இசையி னானே”

இது இறைவன் கரணமின்றி, உருவமின்றி சிருஷ்டி செய்வதால் அவனைக் கர்த்தா எனக்கூறல் முறைமை அல்ல என்பதற்கு அவன் அருவமாய் இருந்தே சத்தியாலே அத்தொழில் செய்வான் என்று வலியுறுத்துகிறது.

பொருள் :

அருள் உரை குருநாதனே! ஐந்தொழிலைச் செய்வதற்குச் சிவன் இறை எனக்கூறல் முறையன்று. ஏனென்றால் அவன் வடிவுடையன் அல்லன். அவனிடத்துக் கரணங்களும் இல்லை. (என்று மாணவன் கூற)

காலமானது வடிவின்றி அவ்வக் காலத்திற்குரிய பயன்களைக் கொடுக்கும். அது போலத் தலைவனாகிய பரமசிவனும் பஞ்சகிருத்தியத்தை இச்சா சத்தியால் செய்வான். (இச்சா சத்தி - உயிர்க்கருள் நேசம்). இச்சத்தி கரணமேயன்றிச் செயற்படாதே என்றால் -

யோக சாத்திரத்தை நன்கு அறிந்த யோகிகட்கு யோகசித்தி அட்டமா சித்திகள் செய்யுமாறு போலத் தலைவனது கெடாத இச்சா சத்தி தொழிலைச் செய்யும். யோகிகளைப் போன்றவன் பரமசிவன் என்றால் யோகிகள் தங்கள் இச்சா சத்தியால் அட்டமா சித்திகளைச் செய்து அச்செய்கையால் விருப்பு வெறுப்பு உடையவராய் விளங்குவர். அது போல இறைவனும் விருப்பு வெறுப்புக்கு ஆளாவானா என்றால் -

தன்னிடத்தில் கரணம் இல்லாதிருந்தாலும் இரும்பைத் தன்பால் சூள இழுக்கின்ற காந்தக்கல் எவ்வாறு வேறொரு செயலைத் தோன்றச் செய்யாதிருக்கிறதோ அதுபோல இறைவனும் எவ்வித இயக்கமும் இல்லாதிருப்பவன்.

கண்ணால் காண்பதற்கு அளவுபடாத உவமையில்லாத பெருமை உடையதாய் பலவித உருவத்துடன் விலங்குகின்ற உலகத் தொழிலானது தானே உண்டாவதில்லை. குடம் எவ்வாறு தானே உண்டாகாதோ அது போன்றதாம். ஆதலால் பிரபஞ்சம் உற்பத்தியாவதற்கு மாயையிடத்தே ஒன்றாகிய சக்தி தோன்ற வேண்டும். அப்படியானால் அந்தச் சக்தியே கருத்தாவாக அமைய முடியாதா? எனில் ஆகமுடியாது. ஏனென்றால் அது அசேதனமாகும்.

சாந்த உருவமுடைய சிவன் நிட்களமாய் இருப்பார். சதாசிவ தேவர் நிட்களசகளமாய் இருப்பார். மகேஸ்வர தேவர் சகளமாய் இருப்பார். இவர் மூவரையும் தனக்குரிய திருமேனியாகக் கொண்ட பரமசிவன் கர்த்தாவாக இருப்பார். (என்றவாறு)

**விளக்கவுரை :**

பரமசிவன் உலகத்தில் ஐந்தொழிலைச் சத்தியால் செய்வான் என்பதை இப்பாடல் காட்டுகிறது. பரமசிவனுக்கு உருவ மின்மையையும், விகாரமின்மையையும் சிவஞான சித்தியார், “அருவுரு வீனாதாகும் விகாரமும் அவ்விகாரத்தின் வருவதுமில்லை” (பாடல் . 48) என்று குறிப்பிடும். அமூர்த்தம் உருவமற்றது. சங்கற்பத்தால் படைப்பு முதலாகிய தொழிலைச் செய்வதற்கு இச்சா சக்தி சிறந்தமையால் பொருவிரி இச்சை என்று கூறப்பட்டது. தான் எண்ணிய வடிவத்தைப் பெறக்கூடிய திறமையால் ஒண்திரள் யோகர் எனக் கூறப்பட்டது.

காந்தக் கல்லில் கரணம் (கருவி) ஏதும் இல்லை. ஆனால் தன் சத்தியால் இரும்பைத் தன்பால் வலிக்கிறது. அதுபோல இறைவன் உருவமின்றித் தொழிலைச் செய்கின்றான். இதனை வலுயுறுத்த அதுவந்த செய்தி எனக் கூறப்பட்டது. நிட்களர் - உருவமற்றவர். நிட்களசகளர் - உருவமும் அருவமும் உடையநிலை (அருவுருவம்) சகளர் - உருவமுடையவர்.

## ஐந்தொழிலுக்கும் அதிகாரி பதி என்பதை உணர்த்துவது

பாடல் . 63

"அடையான் விகாரம் ஆயினும் சுடரவன்
சுடர்வீழ் தாமரைத் தோடுஇனிது அலர்த்தவும்
மற்றவை குவிப்பவும் உலர்த்தவும் கொற்றக்
கிரணத்து அதுவென அரணமில் கூற்றின்
முரண்தொலை ஒருவரும் உரியாச் சத்தியின்
அண்டர் அண்டமற்று எண்தரல் இடைவ
செய்தக் கண்ணும் திரிவிலன் வெய்யோன்
இயலங்குகதிர் ஈரமண் திரளை மெழுகை
நலங்கொளக் கரைத்து நவையற வலித்தற்கு
ஒன்றே போலச் சென்றகல்பு அறியாச்
சத்தியிற் பிணித்தற்கு அப்பிணி அவிழ்த்தற்கு
அன்ன சக்தி அறியிற் பன்னுவம்
பொருவொடு போகா ஒளியொடு பொருந்தி
அளவற அகன்று விளைவதோர் சலனம்
இன்றி என்று நின்றாங்கு ஒன்று
மறைப்பதை இன்றி உறப்பெருத்து அகன்ற
உருவொடு செறியாது வெருவரும் அராகம்
ஆதியா அணையா அலர்ஜம் பூதம்
ஊர்தரு விந்துவன் நேர்தர இயைந்த
செய்தியில் திகழ்ந்தும் பிறிதிற் சிறிதும்
உய்யாது ஆசை ஒளிமுகம் எங்கணும்
ஆகி முதல் இடை கடையிற் போகாது
யாவதோர் பந்தமும் இரிஇப் போவதும்
வருவதும் இறந்து மேலாய் முடிந்த
கிருவாய் எல்லை ஆகி ஒருவா
நுணங்கிய அரனை இணங்கி வணங்கா
விந்துவில் வைகரி ஆதி விருத்தியில்
வந்து ஆணவ ஆன்மாவை மறைப்பது
போல விகாரித்து அதுமற்று அஃது எது
போலும் எனின்கடல் தண்கதிர் வெஞ்சுடர்
ஒட்டிய காலை உருத்தெழு திரையின்
விட்டியர் ஓதை விராவுபு முற்ற
அந்தரம் அறைவது போலப் பொங்கிய

வாறென அமோகன் ஈறல சத்தி
ஒன்றுபல போல நின்றியல்பு எவண்என
வென்றி விரிச்சிகன் விரிகதிர் கோடையில்
கோடலின் ஒன்றே யாகி இச்சை
ஆடா னாகி ஆடு நன் போலப்
பலபோல் தோன்றல அலர்வாள் அமலன்
இச்சைசெய் சத்தி இவணம் மற்றுஅவனே
காரியத்து இசைந்த பேரிசைப் பெருவலி
அறிவின் அறிவதை ஒத்துப் பிறிவன்று
இருந்தொழிலில் அ்்து அருந்தொழில் சிவணல்
அருமறை அகத்தும் உலகத்து எங்கணும்
வருமறி சிந்தாமணி கற்பகம் இவை
வேண்டுநர் வேண்டிய ஆண்டாண்டு உதவல்
அன்ன தாய அளவில் அரனுடைப்
பன்னா ஞானப் படரரு பெருவலி
இலங் கிருங் கிரியையின் விதியின்
நலந்தரு காமம் நல்குமன் நயந்தே”

இது ஐந்தொழிலை இறைவன் செய்யும் பொழுது விகாரமின்றி ஏகசக்தியால் காரியங்களைச் செய்வான் என்று கூறுகிறது.

பொருள் :

சூரியன் தாமரையை மலர்த்தும் பொழுதும், ஆம்பலைக் குவிக்கும் பொழுதும், பறித்த புட்பங்களை உலர்த்தும் போதும் தன் கிரணங்களைக் கொண்டு செய்தாலும் எந்த விகாரமும் அடைவதில்லை. அது போல - கூற்றுவனுடைய வலிமையைக் கெடுத்த பரமசிவனும் செடாத சத்தியினாலே தேவருலகமும் மற்ற அண்டங்களையும் செய்தானே ஆயினும் அவிகாரியாய் இருப்பான்.

சூரியனுடைய ஒளியானது ஈர மண்ணை உலர்த்தவும், மெழுகை உருக்கவும் செய்கின்ற பொழுது தான் ஒன்றேயாய் இருத்தல் போல் (விகாரமில்லாமல்) ஒரு காலத்தும் தன்னைக் கூடுதலும் பிரிதலும் அறியாத ஏக சத்தியாலே ஐந்தொழில்களைப் பரமசிவன் செய்வான். அத்தகைய சத்தி இருப்பதை எவ்வாறு அறியலாம் என்றால் -

உவமை இல்லாத ஒளியொடு பொருந்தி எல்லா இடத்தும் நிறைந்து விகாரமில்லாமல் நித்தியாமாய், எந்தப் பொருளாலும் மறைக்கப் படாதததாய், பெருத்து விரிந்ததாய், உருவமுடையது அன்றாய், விருப்பு வெறுப்புகள் இல்லாததாய், இருப்பதாகும். (சிவசத்தியின் சொரூப இலக்கணம்).

இந்தச் சத்தி பஞ்சபூதங்கள் தோன்றுவதற்குக் காரணமாகிய மாயையை சிவதத்துவத்தில் அழகியதாய்ப் பொருந்தியிருக்கும் ஐந்தொழில்களில் பிரகாசித்திருக்கும். வேறு எந்தத் தொழிலிலும் ஆசையின்றி இருக்கும். எல்லா இடத்திலும் ஒளியாக விளங்கி நிற்கும். முதல், நடு, இறுதி இன்றி இருக்கும். சர்வ பந்தங்களையும் ஒழித்து, போக்கு வரவு இன்றி எல்லாப் பதார்த்தங்களுக்கும் மேலாய், சூட்சுமமாய், பரமசிவன் கூடியிருக்கும் சுத்தமாயையினுடைய வைகரி, மத்திமை, பைசந்தி, சூட்சுமை என்னும் நால்வகை வாக்கையும் தோற்றுவிக்கும் காரணத்தினால் வந்து ஆன்மாவை ஆணவம் மறைப்பது போலச் சிருஷ்டிக் காலத்தில் அந்தச் சுத்தமாயை கலக்கா நிற்கும்.

அந்தச் சத்திதான் சுத்தமாயையில் எதுபோலக் கலக்கும் எனின் சந்திராதித்தர் கூடிய காலத்தில் கடல்னது பயங்கரமாக எழுகின்ற அலைகளினாலே மிக உயர்ந்து ஆரவாரிக்கின்ற ஆரவாரம் ஆகாயத்தின் மேல் கலந்து ஆகாயத்தை முழுதும் மறைத்தாற் போன்ற தன்மையாய் இருக்கும்.

பரமசிவனுடைய முடிவில்லாத சத்தியில் இருக்கும் ஏக சக்தி கிரியா போதத்தில் எவ்வாறு இருக்கும் என்றால் சூரியனுடைய கிரணம் நீரை இழுத்தல், மெழுகை உருக்குதல் என்ற காரிய வேறுபாட்டால் வேறுபாட்டை அடைந்திருக்கின்றதோ, அது போலச் சத்தியும் தான் ஏக சத்தியாய் இருந்து காரிய வேறுபாட்டால் பல போலத் தோன்றும்.

மேலும் பரமசிவனுக்குக் கிரியா சத்தியாகப் பொருந்திய அப்பெரிய சத்தி அறிவின்றி இருந்தும் அறிவுடையோர்போல் பரமசிவனைப் பிரிவின்றி இருக்கும். மிக்க தொழில் இல்லாதாகி அரிய தொழில்களைச் செய்யும் என்பர் சான்றோர்.

சிந்தாமணியும் கற்பகமும் வேண்டினவர்க்கு வேண்டிய பொருளை அவ்வவ்விடத்து உதவினாற் போலச் சத்தி தொழிற்படும்.

அச்சத்தி ஆன்மாக்களின் துக்கத்தைக் கெடுக்கும். சொல்லுதற்கரிய அளவில்லாத பெருமையுடைய ஞான சத்திதான் கிரியா சத்தியினாலே நலந்தரும் காமம் பொருள்களை நயந்து நல்கும். (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடலில் இச்சை, கிரியை, ஞானம் என்ற மூன்று சத்திகளின் சிறப்புக்கள் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. சூரியன் செயல்களை இப்பாடல் கூறுவது போலச் சிவஞான சித்தியாரும், "கதிரோன் நிற்கத் தாமரை அலரும், காந்தம் காட்டிடும், கனலை நீரும் கரந்திடும் காசினிக்கே" (பா. 53) என்று குறிப்பிடும். உடம்பை உடைய உயிர்கள் எத்துணை வலிமை உடையதாக இருந்தாலும் கூற்றுவன் வாங்குதல் முறைமை ஆதலால் அரணமில் கூற்று எனப்பட்டது. ஞான சத்தியையும், கிரியா சத்தியையும் முதல்வன் பிரிவின்றி இயக்குவான் என்பதால் அறிவின்றி அறிவதை ஒத்து பிரிவின்றி எனக் கூறப்பட்டது. துன்ப விளைவிற்றாகிய காமத்தினின்று நீங்கிப் பேரின்பமாகிய காமத்தைத் தருவதால் நலந்தரும் காமம் எனப்பட்டது. ஞானசத்தியும் கிரியா சத்தியும் முதல்வனிடத்தில் சமவாய சம்மந்தமுடையது ஆதலால் இரண்டும் இணைத்துக் கூறப்பட்டது. முதல்வன் – பரமசிவன்.

---

## அனைத்திற்கும் காரணமான சிவன் அவிகாரி
## பாடல் . 64

"நார மேய நல்லுயிர் அனைத்தும்
நார மன்றே நாரமின்று இன்றே
நாரச் செய்தியும் அன்றே நாரம்
ஆருயிர்க்கு அல்லது உயிரதற்கு உதவும்
பேருப காரமும் இன்றே யாயினும்
ஆருயிர்க்கு அபயம் அறன் மற்றுஉள்ளாது
ஆருயிர்க்கு அபயம் ஆற்றும் பேரிசை
வான்மண் தீநீர் வளிஅகம் நிறைதந்து
ஆனாது அப்புறம் படர்ந்தும் தானவை
உடைவிடன் ஊங்கு இனிதளித்தும் இடையும்
தானே ஆகி ஏனைய விளக்கி

இருவேறு இசையாது ஒருவழிச் சிவணி
இன்றியமையாச் சிறப்பிற்று ஆகி
என்றும் தானவை ஒன்றா வாறாம்
பதங்கன் பல்கதிர் பரப்பி விசும்புஇனிது
இயங்கும் காலை எழுந்தினிது இயற்றும்
மன்றுயிர்த் தொடக்கு அம்மார்த் தாண்டற்குஇன்று
அன்னோ தானும் அருவினை அம்ளிப்
பாயல் நீங்கிப் ப∴தொழில் புரிகஎன்று
ஏவும் திறம் படரானேனும் ஏவிய
ஆதபன் இடத்தன்று அருந்தொழில் புரியும்
தீதம் இல்லை நீள்நிலத் தோர்க்கே
இன்னும் கேள்மதி இனமலர் துதைந்த
தாதுபடு கொழுநிழல் பாதவம் அன்றே
மாதர் வண்டொடு சுரும்புஇமிர் தருநிழல்
பாதவம் படைத்ததும் அன்றே பாதவம்
இன்றே நீழல் காண்டலும் இலமே
ஒன்றோ மற்றும் உண்டுமற் பெரிதே
கருந்தாது கொட்டும் இருஞ்சிலை இரும்பை
வருந்தினம் மறுகும் என்னாது ஐயமின்று
இருந்தாது கறங்கற்கு இதனிடத்து அல்லதை
பொருந்தாது என்ன விரிந்தொளி கான்று
மாதிரம் அனைத்தும் ஈரேழ் புடவியும்
அளவிழைத்து அளவா அண்டமும் பலவெனக்
கொட்புறு காலமும் ஒப்பேர் உயிரும்
உறாவரை எய்தி ஒன்றொடும் புணராது
இனைய காக்கும் களைகள் ஆகிக்
களைகள் யான்எனும் விளைவுஅற ஓரிஇப்
பன்னிய எவற்றும் தன்னமோர் குறையின்று
அன்னோன் நின்ற காரணா காரணம்
என்னதென்று இசைக்குவம் யாமே அன்னே
உரையுணர் ஒடுங்கினர் உணர்வின்
விரையுறு கடியின் விரவி யோனே".

இது பரமசிவன் செயல்கள் அனைத்திற்கும் காரணமாகி தான் அவிகாரியாய் இருப்பான் என்பதைக் கூறுகிறது.

பொருள் :

தண்ணீரில் வசிக்கும் உயிர்கள் அனைத்தும் தண்ணீர் அல்ல. தண்ணீரை இன்றி அமையாத காரியமும் அல்ல. தண்ணீர் அவ்வுயிர்களுக்கு உதவுவதும் உயிர்கள் அந்த தண்ணீருக்குச் செய்யும் உபகாரமும் ஒன்றுமில்லை. ஆயினும் அந்த உயிர்களுக்குத் தான் அவயம் என்று தண்ணீர் நினைக்காது. அவ்வாறு நினையவில்லை என்றாலும் அவ்வுயிர்களுக்கு அவயமாகவும் இருக்கும். (தண்ணீர் - இறைவன், உயிர்கள், ஆன்மாக்கள் என்ற நிலையில் மேற்குறித்த உவமையைப் பொருள் கொள்ள வேண்டும்)

பெரிய கீர்த்தியை உடைய ஆகாயமானது மண், நீர், தீ, வளி ஆகியவற்றில் வியாபித்து இருந்தும் அதோடு அமையாது அப்பாலும் வியாபித்தலை உடையதாய், தான் அப்பூதங்களுக்கு இருக்க இடம் கொடுத்தும், இடையும் தானேயாய், அப்பூதங்களை விலக்கி அவை வேறு தான் வேறு என்னும் வேறுபாடு அற்று அவற்றோடு கூடித் தன்னையன்றி அமையாத சிறப்புடைத்தாகும். ஆனால் அதே நேரத்தில் ஒருநாளும் தான் அவையாக அமையாது. (இங்கு ஆகாயம் - இறைவன் எனக் கொண்டு இறைவனின் சிறப்பை உணரவேண்டும்.)

சூரியன் தனது கிரணங்களை விரித்துக்கொண்டு ஆகாயத்தில் இனிதாக இயங்கும் பொழுது இனிதாகத் தொழில் பெறும் உயிர்களின் தொடக்கு அவ்ஆதித்தனுக்கு இருப்பதில்லை. ஆதித்தன் மஞ்சத்தில் சயனித்திருந்த உயிர்களை எழுப்பிப் பல தொழில்களைச் செய்யுங்கள் என்று ஏவுதலைச் செய்யான். ஆயினும் அச்செயலுக்குக் காரணமான சூரியனிடத்தில் அல்லது (அவனால் அல்லது ) உயிர்கள் தொழிலைச் செய்யும் முறைமை பூமியில் உள்ளார்க்கு வேறு எங்கும் இல்லை. (சூரியன் உதவியால் உயிர்கள் பல தொழில்களைச் செய்கின்றன. சூரியன் - இங்கு இறைவன்)

செறிந்த கொத்துக் கொத்தான பூக்களை உடைய மரத்தின் நிழல் மரத்துக்கு உதவுதல் அன்று. காதலிக்கப்பட்ட பெடையும் வண்டும் சந்திக்க அந்நிழல் உதவுகிறது. மரத்தால் நிழல் படைக்கப்பட்டது அன்று ஆயினும் மரமில்லையாயின் நிழல் இல்லை. (இங்கு மரம் - பரமசிவன், நிழல் - ஆன்மா)

(இவை நான்கினாலும் இறைவன் உயிர்களுக்குச் செய்யும் ஐந்தொழில்களுக்குரிய திட்டாந்தம் (ஏது) கூறப்பெற்றது)

மேலும் இரும்புத்தூளை வலிக்கும் பெரிய காந்தக்கல் இரும்பை வருத்திச் சுழற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லை. ஆயினும் இரும்பு சுழல்வதற்குரிய ஏது காந்தத்தில் அல்லது இல்லை. அது போலப் பரமசிவன் உயிர்கள் இயங்குவதற்கு ஏதுவாக அமைந்தான்.

இத்தகைய இறைவன் சர்வ வியாபியாய் விரிந்து, சுயம் பிரகாசம் உடையவனாய் விளங்கி, திக்கு பத்துகளிலும், உலகம் பதினாக்கிலும், அளத்தற்கரிய அண்டங்களிலும், மூன்று காலங்களிலும் எல்லா உயிர்களுக்கும் போகம் புசித்தற்குத் தான் இன்றியமையாத காரணப் பொருளாய் நின்று இவைகள் ஒன்றிலும் தான் பற்றற்று, உயிர்களை இரட்சித்து இரட்சகன், யான் என்னும் அகங்காரம் அற ஒழிந்து, இத்தகைய பொருள் வெற்றிடத்தும் சிறிதேனும் குறைவின்றி, பூவில் காந்தம் போலக் கூடி நின்று இத்தகை தன்மையுடன் விளங்குகிறான் பரமசிவன். இவ்வாறு அகாரணனாய் காரணமாய் நின்ற இயல்பை எவ்வாறு சொல்லுவோம். (என்றவாறு)

விளக்கவுரை :

இறைவன் உயிர்களிடத்தில் எவ்வாறு காரணமாய் இருக்கின்றான் என்பதை இப்பாடல் தண்ணீர், ஆகாயம், சூரியன், மரநிழல், காந்தம் ஆகிய உவமைகள் மூலம் விளக்குகிறது. இவை ஐந்தும் இறைவன் அவிகாரியாக நின்று பிரபஞ்சத்தைக் காரியப் படுத்தற்குக் கூறப்படுகின்ற எடுத்துக் காட்டுகளாகும். நாரம் – தண்ணீர், ஆகாயம் மற்ற நான்கு பூதங்களும் வளர்ந்து உருப்பெறுதற்கு இடமாகும் என்பதனைப் பரிபாடல் குறிப்பாக் காட்டுகிறது. (பா. 2. 5 – 6 வரி) சூரியன் உயிர்களின் தொழில்களுக்குத் தான் காரணமாக இருந்தாலும் உயிர்களோடு தொடர்பில்லாதவன் என்பதை விளக்க, "மன்னுயிர்த் தொடக்கு அம் மார்த்தாண்டர்க்கு இன்று" எனக் கூறப்பெற்றுள்ளது. அமளிப்பாயர் – படுக்கை, ஆதவன் – சூரியன், நீதம் – முறைமை, பாதவம் – மரம், கருந்தாது – இரும்பு, கொட்டும் – சுழற்றும், இருஞ்சிலை – காந்தம், களைகண் – இரட்சகன், தன்னம் – சிறிது.

## அசுத்தாத்துவ கருத்தர்
### பாடல் . 65

"கலைநில வலன்எனில் புலனன் அலன்எனின்
நலமலி புற்கலன் நிலைமலி கலையுடன்
ஒன்றல் ஒன்றா தாகல் என்றும்
ஒன்றிற்கு ஒன்றா என்தனி நாயக
பன்னு நிட்களம் அறிதற்கு உன்னில்
பசுவுக்கு அமலன் சத்தி ஒசியாது
உற்ற உண்மை யானும் மற்றவன்
மந்திர வலியி னானும் அந்தமில்
நிட்களம் அறிதல் ஒக்கதன் வலியின்
நொசிவிட விகார மான வசிபடு
சகல னானுந் துகள் தொகு புற்கலன்
அல்லன் மாயை அவயவம் ஆட்டி
எல்லிய நிமல மாய நல்ல
மந்திரக் கலையின் மரீஇ மைந்துமலி
திருந்து இரும்தியானத்து இருந்தனன் பெருந்தகை
அரும்பெறல் யோகரிற் பொருந்துதல் விடலென
நின்றது விந்து நிட்களம் அலமன்
மன்ற நன்றினிது ஆயின் சென்றுயர்
ஆகற் தன்மையன் ஆயிற் போகிலன்
இருங்கலை இவணம் பெருந்தகை திருந்தியல்
அரும்பெறல் யோகம் பெருந்துறை படியுநர்க்கு
இருந்தோர் இலக்கம் இன்றெனில் பொருந்தாது
ஆதலின் நாத விந்து வாகிய
யோக வாணர்க்கு உறுபயன் புரப்ப
நின்றனன் யாவும் ஒன்றிய அறிவன்
ஆகலின் அமலன் அற்றோ போகிய
ஆருயிர்க்கு அருட்கடன் பூண்டு சீர்மிக
உயர்ந்தனன் பணிந்த வியந்த ஆகத்தை
நயந்தனன் அல்லகொல் நன்றே வியந்தனன்
இச்சை அருளோடு இறைமை நச்சி
இளைய போக அதிகா ரத்து
நிலையினன் நீசன் நிலைஇத் தொலையா
மாயை முதலிய இச்சைக்கு இறையின்
ஏய செய்தியின் நேயத் தூய

அத்துவா அதனுக்கு அதிபன் எத்தகை
அத்தகை அனந்தன் இறைஅசுத் தத்தின்
மிக்க பூபதி தலைமை வைத்தோன்
வைத்த நிருபனோடு ஒத்த வாறுஎனச்
செய்வன் எவையும் சிவன்வலி அவம்அற
ஐயமின்று உணர்த்த அறிந்தினிது எவையும்
தூய ஆகா னாகி ஆயா
ஞானம் எவையும் நலங் கொள
ஊனம் அதுஅகல உறவிரிந்து உயர்ந்தே”.

இது அசுத்தாத்துவாவிற்குக் கருத்தர் அனந்ததேவரே என்று கூறுகிறது.

பொருள் :

அடியேனுக்கு வாய்த்த உவமை இல்லாத கர்த்தாவே! உடம்போடு இறைவன் கூடியிரானாயின் காணப்படாதவன். உடம்போடு கூடியிருப்பானாயின் பந்தத்திற்கு உரியன் ஆவான். தேக்தோடு கூடுதலும், கூடாதலும் ஆகிய இரண்டு இயல்புகள் ஒரு பொருளுக்குப் பொருந்தாதாகும். (இதனை விளக்க வேண்டும் என மாணவன் விண்ணப்பம் செய்ய) -

புலப்படாத நிட்களத்தை (அருவத்தை) அறிதற்கு உபாயம் யாது? என்றால் ஆன்மாவிற்குச் சிவசக்தி குற்றமறப் பதிதலால் முத்தன் ஆனமையாலும் மற்றும் மந்திர வலியினால் குறுகிய விட விகாரம் கண்டவழி விடம் தீண்டிய தன்மையினை நிச்சயித்தாற் போல, சிவசக்தி படிதலால் நிட்களத்தை அறியக்கூடும்.

இறைவன் வசீகரமுடைய ஏகதேசமாகிய சரீரம் கொண்டான் ஆயினும், அவன் குற்றங்கள் கூடிய பந்தம் அல்லாதவனாம். எவ்வாறென்றால் மாயா காரியமான தேகத்தை ஒழித்துத் தன்னுடைய மந்திர சொரூபமாகப் பொருந்தி வலி மிகுந்த தியானத்திலே பக்குவப் பட்டோர்க்குச் சொரூபமாகியதொரு ஒரு குறி வேண்டிப் பரமசிவன் பெறுதற்குரிய யோகிகள் தாங்கள் எண்ணுகின்ற வேடத்தைக் கொண்டாற் போலத் திருமேனி கொண்டான்.

இவ்வாறு கொண்ட நிட்களத்தையும், சகளத்தையும் கொண்ட பிறகு எஞ்சியது சகளநிட்களம் (அருவுருவம்) ஆகும். அது

நிட்களம் அல்ல. (அருவம்) இறைவன் சகளத் திருமேனி கொண்ட தன்மையன் (உருவம்) என்று சொன்னால் இவ்வுருவம் ஆன்மாவைப்போலக் கலை முதலிய தத்துவங்களால் ஆன சரீரம் அல்ல என்பதையும் உணரவேண்டும். (சகளரும் அல்ல).

பெறுதற்கரிய பெரிய யோகமாகிய கடலில் ஆடுவோர்க்கு உண்டாயதோர் சகள, நிட்கள என உணரவேண்டிய இவ்வறிவு இல்லையாயின் மோகத்தை நிர்வகிக்க முடியாது. ஆகையால் விந்து நாத தரிசனம் பெற்ற சிவ யோகியர்களுக்கு மிக்க பலன் கொடுப்பதற்காக அந்த நிகள, சகளத்தைப் பெற்றான் என்று உணர்தல் வேண்டும்.

எப்படி இருப்பினும் எல்லாப் பதார்த்தங்களிலும் இறைவன் ஒருபடித்தான அறிவுடையவன் ஆதலால் அவன் என்றும் நிட்களனவான்.அளவற்ற ஆன்மாக்களுக்கு அருளைக் கொடுக்கின்ற எல்லையில்லாத பெருமை உடையவன், தன் பெருமைக்குத் தாழ்ந்த தேகத்தை விரும்புவான் கொல்லோ? விரும்ப மாட்டான்.

ஆதலால் இச்சையால் ஆன்மாக்களைப் போகம் புசிப்பதற்குக் காரணமாக நிட்கள, சகளத்தைச் சதாசிவ தேவரிடத்தும், இறைமையாலே ஏற்றுக்கொண்ட சகளத்தை மகேசுவரரிடத்தும், அருளாலே நிட்களத்தைச் சிவனிடத்தும் விரும்பி நின்றான் பரமசிவன்.

இங்ஙனம் சுத்த மாயை முதலிய சுத்தாத்துவாவைப் பிரேரித்துச்செய்தலால் அந்தச் சுத்தாத்துவாவுக்குத் தலைவனாகிய பரமசிவன் அசுத்தாத்துவாவுக்கு எவ்வண்ணம் இருப்பான் என்றால் அனந்ததேவருக்குக் கருத்தாவாக இருப்பான்.

அரசன் தன் அருளினாலே ஒருவனுக்குத் தலைமை தந்தான் என்றான் அத்தலைமையன் அவ்வரசனோடு ஒத்த கருத்துவம் செலுத்துவதைப் போலப் பரமசிவன் சத்தி எக்காலத்தும் குற்றமற்று அறிவிக்க, இனிதாக அனைத்தையும் சந்தேகமற அறிந்து சுத்தாத்துவாவாகிய திருமேனி கொண்டு சர்வ ஞானத்தையும் பெற்று ஊனம் ஏதுமில்லாமல் அனந்ததேவர் அசுத்தாத்துவாவிற்கு உள்ளன யாவையும் செய்வார். (என்றவாறு)

விளக்கவுரை :

சுத்தாத்துவாவிற்குத் தலைவனாகிய சிவன் அசுத்தாத்துவாவிற்குத் தலைவனாகிய அனந்த தேவர்க்கும் கருத்தாவாக இருப்பவன். அனந்ததேவன் என்பவர் விஞ்ஞானகலர், பிரளாயகலரில் பசுத்துவம் நீங்கி முத்தராய் அதிகார மல வாசனை மாத்திரம் உடைமையான் முதல்வன் ஏவல் வழி நின்று ஐந்தொழில் நடத்துபவர் ஆவார். பாடலின் முதற்பகுதியில் இறைவன் உருவத்துடனும், உருவமல்லாததும் இருப்பதைப் பற்றிய வினாக்களை எழுப்பி, இறைவன் உருவமில்லாது இருப்பதை ஆன்மா சத்தி பதிந்து முத்தனாகின்ற பொழுது அறிவான் என்றும், இறைவன் உருவம் எடுப்பதற்குக் காரணம் ஞானம் பெறுபவர்க்கு அருள் புரிவதற்காக மந்திர வடிவத்தில் உருவத்தை எடுப்பான் என்றும் கூறி, அருவுருவத்தை யோகத்துறையில் படியுநர்க்கு அதனை நிர்வகிப்பதற்காக எடுப்பான் என்றுகூறி இத்தகைய அருவ, உருவ, அருவுருவ நிலையில் சிவனாக, மகேசுவரவனாக, சதாசிவனாகக் காட்சி தருவான் என்றும் கூறி, பின் அசுத்தாத்துவவிற்கு அனந்த தேவராக இருப்பான் என்றும் கூறி இப்பாடல் இறைவனின் உருவ நிலைகளை விளக்குகிறது எனலாம். கலை - உடம்பைக்குறித்தது, நிலவலன் - தேகத்தோடு கூடாதவன், வசிபடு சகளன் - வசீகரமுடைத்தாகிய உடம்போடு கூடியவன். இது ஆன்மாவின் மாயா காரியமான தேகத்தை ஒழித்து மந்திர உடம்பைக் குறிக்கும். யோகவாணர் - சிவஞானிகள். யோகியர்களுக்கு அருள் செய்வதற்கே இறைவன் உடம்பெடுப்பான் என்பதைத் திருமுறைகளும் குறிப்பிடும். பெரியபுராணத்தில் வரும் சிவவேடம் அனைத்தும் இத்தகையதே. விஞ்ஞானகலர் என்பார் ஆணவ மலம் மட்டும் உடையவர், பிரளாயகலர் என்பவர் ஆணவமும் கன்மமும் உடையவர் ஆவர்.

---

அனந்த தேவர்

பாடல் . 66

“மேவின் ஆகம அனந்தற்கு யாவும்
அறிவொடு படாஅ பொறிபிற புலன்கொளல்
உய்த்தல் செல்லா ஆகலின் அப்புலன்

பொறிகொளப் பிறவால் செறியா வெறிகொள்
ஆக மாயை ஆதலின் அன்றிப்
போகிய நாம விசேடம் எய்தல்
உளதெனின் சிறிது சேய்த்தாய் வளமலி
உரைமுதல் விடயம் உணர்வன் விரைவினொடு
என்னின் மற்றவன் ஆகம் பன்னிய
தூய மேனி வினையுடன் ஏயாது
ஆய் காலை அவனே பாசம்
உடைத்தனன் ஆதலின் அவனது ஞானம்
தடுக்குவர் யாரே உரகம் உடைத்தயல்
அடுவது தன்னை அடலின்று அதுபோல்
விடுமொளி அனந்தனை விரவிய பாசம்
சின்ன மானும் சின்ன உற்பவம்
துன்னிய அதனின் வியோகத் தன்ன
மந்தி ரேசனும் அந்தமில் தான்முதல்
கூடலின் அடம்போல ஆடியல் ஆகம்
மந்திர வலியன் மரும்ம் அந்தமில்
காலம் நீடல் போலவும் ஓடிய
வேண்டிய இயையும் காண்டகு காலம்
கூடினன் ஆயினும் மேனி பீடியல்
ஆண்டகை வலியின் நிலைமை மாண்ட
ஆகம் அவனது அமலம் தாது அமல்
நளினப் பாசடை ஏய்ப்ப ஒளிய
தந்திர வலியன் எவணம் மைந்தமல்
இரதத்து ஆகம் எவணம் புரைதீர்
போதம் ஏதமில் மேதகு பெருவலி
தீதன்று அறிதிகழ் உறையின் நோயுடல்
முன்செயல் முரஞ்சியது எவன் அவன்என்கெட
இறைமிடல் அதனில் குறையிலன் கறையின்
மந்தி ரேசனும் அந்தமில் அமலன்
மைந்தின் மாயை கலக்கி
வெந்திறல் செய்தியின் விரவுவன் விரைந்தே".

இது அசுத்துவாக்களுக்கு உரிய அனந்த தேவரின் தன்மையை எடுத்துக்கூறுவது.

பொருள் :

அனந்த தேவர்க்குத் திருமேனி உண்டாயின் எல்லாப் பொருள்களையும் அறிகின்ற அறிவு இருத்தல் கூடாது. ஒளி கொண்ட மாயையின் காரியமாம் உடம்பு. ஆதலின் அவ்வுடம்பு சம்மந்தமான இந்திரியங்கள் தனக்கு அந்நிய விஷயங்களை அறியாது. புலன்களின் விஷயங்கள் தம்மைத் தம் பொறிகளாலே அறிவதல்லது பிறவகையான் அறியும் தன்மையுடையது அல்ல. (அனந்ததேவர் அறிவொடு படார்)

அவ்வாறின்றி அனந்ததேவர் என்னும் சிவநாம விசேடத்தால் அறிதல் உண்டென்று கொண்டால் சிறிது தூர தரிசனமாய் சத்தம் முதலாக உள்ள விஷயங்களை அறியக் கூடுமல்லது, அனைத்தையும் அறியக்கூடாது. (என்று ஐயத்தை எழுப்பினால்) அனந்ததேவருடைய திருமேனி சுத்தமாயை ஆதலாலே கன்மத்துடன் கூடியிருக்காது. மேலும் அனந்த தேவர் பாசச்சேதம் பண்ணினவர் ஆதலால் அவரது ஞானத்தை யாராலும் தடுக்க முடியாது.

பாம்பிடத்திலே பிறரைக் கொல்வதாகிய நஞ்சு இருந்தாலும் அது பாம்பைக் கொல்லுவதில்லை. அது போல அனந்த தேவருக்கு உண்டாகிய திருமேனியும் (பாசம்) அவரை விகாரிப்பதில்லை. (யோகவடிவு)

சீந்தற்கொடி மிகப் புல்லியதாக இருந்தாலும் தன்னருகே உள்ள மரத்தைப் பற்றி முற்றிலும் படர்ந்து தலைமை கொள்ளும். அதுபோல அனந்ததேவரும் சிவசத்தியாகிய பற்றுக்கோட்டினால் அசுத்தாத்துவாவிற்குக் கருத்தாவாக இருக்கும் தலைமையைப் பெறுகிறார்.

கொட்டைப் பாசியானது நீரில் கிடந்தும் அதில் தோய்வற்றுக் கிடப்பது போல அனந்த தேவரும் திருமேனி கொண்டவராய் இருந்தாலும் அதில் தோய்வில்லாதவராவார். இவரது திருமேனி பரமசிவனுடைய சத்தியாகலே காணத் தக்க காலத்தில் (இப்பொழுது பார்க்க முடிகின்ற காலத்தில் இருப்பினும்) கூடியதாயினும் யோகிகளின் தேகம் மந்திர சக்தியினாலே அளவில்லாத காலம் சென்றிருத்தல் போல நீண்டகாலம் அழியாது இருக்கும்.

சிவசக்தியோடு கூடும் நிலைமையால் பெற்ற இவரது பெருமை மிக்க திருமேனி இறைவனது உருவம்போல மலபந்தம் இல்லாதது. எதுபோல என்றால் தாமரை இலைத் தண்ணீர் போலப் பந்தமுடையது ஆகாது.

வேத ஆகமங்களைக் கற்றோர்க்கு எவ்வாறு உண்மை ஞானம் உண்டாகிறதோ, இரதக் குளிகை புசித்தோர்க்கு எவ்வாறு சரீரசித்தி வருகிறதோ அவ்விதமே அனந்த தேவருக்கு ஒப்பற்ற ஞானமும் மேம்பாடான சத்தியும் அமைவதில் தடையில்லை.

நோயுற்ற உடம்பு ஔடத சத்தியாலே பண்டைய உடம்பை எவ்வண்ணம் பெறுகிறதோ அவ்வண்ணம் பரமசிவனுடைய சத்தியாலே குறைவில்லாது இருப்பர். குற்றமில்லாத அனந்த தேவரும் முடிவில்லாத பரமசிவனுடைய சத்தியாலே சுத்தமாயை கலக்கி ஐந்தொழில்களை விரைந்து செய்வார். (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடல் அசுத்தாத்துவாக்களுக்கு உரிய அனந்ததேவரின் திருமேனியைப் பற்றியும், அவர் பரமசிவன் சத்தியாலே தொழில் புரிவதையும் குறிப்பிடுகிறது. அனந்ததேவருக்குரிய திருமேனி மாயை காரியத் திருமேனி அல்ல என்பதையும், அதற்குப் பாச பந்தங்கள் இல்லை என்பதையும் உவமைகளால் விளக்கி உணர வைக்கின்றது.

பன்னிய அவன் ஆகம் என்பதில் - அவன் என்பது அனந்ததேவரைக் குறிக்கும். உரகம் - பாம்பு. சிந்திற்கொடி இன்றும் காடுகளில் உள்ளது. அது மிகச் சிறய கொடியாக இருந்தாலும் தான் பற்றிப் படரும் மரம் முழுவதையும் பற்றித்தலைமை பூண்டாகத் தெரியும். மந்திரேசன் - அனந்த தேவரைக் குறிக்கும். அடம் - கொட்டைப்பாசி, யோகிகளின் தேகம் மந்திரசக்தியால் நீண்டகாலம் இருப்பதைப் போல அனந்ததேவரின் திருமேனியும் அழயாதிருக்கும். எவ்வண்ணம் என்பது எவணம் என்று நின்றது. நோயால் மெலிந்த உடம்பு மருந்து உண்டால் முன்புபோல வலிமைபெறும். இதுபோல அனந்ததேவரின் உடல் சிவனுடைய அளவிறந்த சக்தியால் குறைவற்று நிற்கும்.

### சிவானுபவம் பெறல்
### பாடல் . 67

“யாணர்க் கோங்கின் குவிமுகை எள்ளிப்
பூணகத்து ஒடுங்கிய முலையும் மான்நிறக்
கயல்மலைப் பன்ன கண்ணும் புயல்எனப்
பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்என
ஆகத்து அரும்பிய சுணங்கும் பாகொத்து
இன்தீங் கிளவுவிம் நிதம்பமும் ஒன்றிக்
கண்ணும் மனமும் கவற்றப் பண்வர
இரங்கு மணிமேகலை இரியச் சுரும்பொடு
வண்டினம் வாய்விட்டு ஆர்ப்பத் தண்டா
நாறும் நிரையும் நடப்பப் பூணெடு
கோதை பரீஇத் தாதுகு பொங்கணை
கலவி விளைந்த காமத் தேறல்
உண்டோர் உணரின் அல்லதை யாவதும்
கொண்டுரை கூடாவாறு தெண்டிரை
அமிழ்துபடு தீஞ்சொல் இமிழ்பெரும் புலனொடு
பனுவல் பவ்வம் படிந்துண்டு நிமிர்ந்த
இருபெரும் புலனும் ஒருங்கினிது இழந்து
மெய்யுரை பெறூஉம் செவ்வி யாளன்
கனாத்திறன் அல்லதை வினாத்திறம் பிறிதோ
பொறைபெருங் கவசம் புக்குச்செருப்பருஞ்
செயல்தீர் அனைகழற் அட்டி மயலொடு
காமம் நீத்த அயந்தலை கடிதூர்ந்து
அச்சம் இன்மையிற் துணையின்று ஆங்கு
வசையல் பேருணர் விசைய மள்ளர்
பூமுக ஞானப் புகர்வாள் ஏந்தி
ஐம்புலன் அடக்கி அறுபகை ஓட்டி
இருவினை வீட்டி ஒருவரிக் கொளிஇய
உள்ளமொடு உணர்வுசூழ் ஒடுக்கி
உள்ளுநர் உணர்வது உணர்வின் பாலே”.

இது சிவானுபவம் அனுபவித்தறியக் கூடியதே அன்றிச் சொல்லித் தெரிவதல்ல என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

கோங்கினது மொட்டை ஒத்த ஆபரணங்கள் பண்ட முறையும், கயல்மீனோடு பொருவது போன்ற மானின் நோக்கத்தை உடைய கண்களும், மேகம் போன்ற பின்னுதலை உடைய கூந்தலும், பொன்னிறம் கொண்ட மார்பில் பரந்த தேமலும், பாகு போன்ற மொழியும், அழகிய அல்குலும் ஆகிய இவையனைத்தும் பொருந்தி, கண்ணும் மனமும் தொழிலிழந்து மயங்க, மேகலை நீங்க, வண்டினம் வாய்விட்டு ஆர்ப்ப, நாணும் நிறையும் நீங்க, மாலைகளும் ஆபரணங்களும் பின்னிக் கொள்ள, மலர்த்தாதுக்கள் உதிர்ந்து கிடக்கும் பஞ்சணையில் போகத்தில் உண்டான காம இன்பம் அனுபவித்தோர் அறிவதல்லது – இன்னபடி இருந்தது என்று சொல்ல முடியுமா? முடியாதாம்.

கடலமுது போன்ற இனிய உரைகளைக் கூறும் வாக்காகிய புலனும், சாத்திரக் கடலில் மூழ்கி அவற்றைக் கேட்கும் செவிப்புலனும் ஆகிய இரு புலன்களும் இழந்து, ஜாடையாய் அறிவிக்க அறியும் ஊமன் கண்ட கனவு பிறர் விளங்க அறியுமாறு உரைக்கவும், கேட்கவும் இயலாததாம்.

இவ்விரண்டினைப் போன்றதுதான் சிவபோகமும், இன்னபடி இருந்தது என்று சொல்லவும், கேட்கவும் கூடிய கூறுபாட்டை உடையது அன்று.

உண்மை ஞானத்தை உடைய ஞானவான்கள் பொறையாகிய கவசத்தை விட்டு, கன்மச்சேத உபாயமான வீரக்கழலைக் கட்டி, காம மயக்கம் ஒழித்தல் என்னும் யானையைச் செலுத்தி, அச்சம் இல்லாது, துணையுமில்லாது – தனியராய் ஞானக் கூர்வாள் ஏந்தி, ஐம்புலன்களை அடக்கி, காமம் உள்ளிட்ட ஆறுபகைகளை ஓட்டி புண்ணிய பாவங்களை வென்று பரமசிவமே பரதத்துவம் என்னும் ஒருநெறிப் பட்டு பிற உணர்வுகளை ஒடுக்கி, அனுபவித்து அறியக்கூடியது அச்சிவானுபவமாம். (என்றவாறு).

விளக்கவுரை :

இது சிவானுபவத்தை அனுபவிக்கும் திறத்தை உவமைகள் வாயிலாக விளக்குகிறது. மேலும் காமத்தை அனுபவித்தவர் அதனை அனுபவித்து அறியலாமே தவிர – பிறர் தெரிந்து கொள்ளக் கூற

இயலாது. அது போல ஞானம் பெற்றுச் சிவானுபவத்தை அனுபவிக்கலாமே தவிர பிறர் அறியக் கூற முடியாது. வாய், செவிப் புலன்களை இழந்த ஊமன் கண்ட கனவைப் பிறர் கேட்க இயலாது. அதுபோலச் சிவானுபவம் கேட்டு அறிய இயலாது என விளக்குகிறது. ஞானம் பெற வேண்டிய திறனையும் இப்பாடல் விளக்குகிறது. மலைப்பு - பொருதல், சண்டை, புயல் - மேகம், பின்றுவிட - தலைப்பின்னல், சுணங்கு - தேமல், நிரம்பல் - அல்குல்.

---

அநந்நிய பாவகம்
பாடல் . 68

"சகளம் கட்காான் தகுதித் தாகத்
துகளில் தியானந் துறவாது அறவ
நிட்களங் கட்காண் தகுதி நீளிடைத்து
உட்க ஓடியது ஓட மிக்கப்
பாவனை படியாது ஆவகை அரிதெனின்
மேவினை உணர்நனி விமலன் ஓவா
நிலைமையன் குணமுக நிவந்தோன் நிலனுரு
அறிவறி யாமை அகன்றோன் பொறிபுனை
யோக வியோகம் ஒழித்தோன் தூமனச்
சங்கற்பத் தோடு சகலங் கலைதீர்பு
எங்கணும் இரிய இருந்தோன் பொங்கிய
மதிஆங் காரம் மடித்தோன் விதியால்
அபாவன் அதனைப் பாவா பாவத்து
உயர்வற அபாவம் ஒழித்துஅரும் பாவத்து
உற்றோன் ஏதுக் காலம் செற்றோன்
தீண்டல் தீண்டாதுஆதல் மாண்ட
ஆகம் அணைதல் அகறல் போகோன்
விகற்ப மேவோன் தரிப்பது தவிர்த்தோன்
இச்சை மற்ற ஆசிரயம் செற்றோன்
எற்றுஇவன் அபாவன் ஆதல் எற்றேற்
கூடான் குறியுடன் அதனால்
வீடா உலகம் அபாவன் என்றறைவே".

இது அருபியாய் இருக்கின்ற இறைவன் ஆன்ம அறிவாலே தரிசிப்பார்க்குத் திருவருளால் அநந்நியமாகப் பாவிக்கப் படுவான் என்று கூறுகிறது.

பொருள் :

தருமவானே! இறைவன் உருவமாக இருந்தால் கண்ணால் காணப்பெறும் முறைமை உடையதாகும். அதனால் தியானம் நீங்காது. அங்ஙனம் இல்லாமல் இறைவன் அருவன் என்றருளிச் செய்தமையால் கண்ணால் காண்பதற்கு அதிதூரமாய் அமைந்து அச்சத்தை உண்டுபண்ணுகிறது. எனவே உருவத்தைப் பாவிக்க முடியாது தியானமும் அரிதாய் உள்ளதே? (என்று மாணவன் கேட்க).

மாணவனே பதில் கூறுவேன், பொருந்த அறிவாயாக. இறைவன் விமலன், மாறுபாடின்றி என்றும் ஒருபடித்தான நிலையை உடையவன். குணங்களை ஒழித்தவன். அருபியாக இருப்பவன். அறிவும் அறியாமையுமாகிய இரண்டும் உடையவன். பொறிபுலன் இன்மையால் ஒரு பதார்த்தத்தில் கூடுவதும், ஒரு பொருளை இழந்திருத்தலும் இல்லாதவன். தூயமனத்தில் உண்டாகிய சகல கேவலங்களும், தேகமும் யாண்டும் விட்டு, அவை நீங்க விளங்கியிருப்பவன். மதி அகங்காரம் கெடுத்திருந்தோன், உருவமற்றவன் ஆதலால் கரண அறிவால் பாவிக்கப் படாதவன். அவன் பாவிக்கப் படுவானா? பாவிக்கப் படாதவனா? என்று ஆய்ந்து அபாவம், பாவம் என்றிவற்றில் அபாவத்தை ஒழித்து பாவிக்கப்படுபவன் என்று உணர்ந்து அதனை அனுட்டிக்கின்றவரின் பாவனையில் நிற்பவன். நிமித்தகாரணம், காலம் இல்லாதவன்.

ஒரு பொருளிலும் பற்றில்லாவதன், சருவ வியாபி என்பதால் பொருள்களை நீங்காதவனுமல்லன். உடம்பில் உண்டாகின் சுகதுக்கம் இல்லாததால் அதனால் பந்திக்கப் படுபவனுமல்லன். அதே வேளையில் உடம்புகள் தன்னால் உண்டாக்குதல், போக்குதல் நடப்பதால் அவற்றை விட்டு நீங்காதவன். அவகாரியமாய் இருப்போன். தன்னைத் தாங்குவது இல்லாதோன். ஒரு பொருளில் ஆசை, ஒருவரை அடுத்திருத்தல் ஆகியவற்றைக் கெடுத்தவன். இத்தயைவனை இத்தகையவற்றால் அறியப்படுபவனைப் பாவிக்கப்படான் எனக் கூறுவது சரியா? (சரியில்லை)

அபாவம் என்பது எவ்வாறு உண்டாயிற்று என்றால் - அவன் அருபி, கரண அறிவால் அறியப்படாதவன் என்பதால் உலகத்தார் அவனை பாவிக்கப்படாதவன் என்று சொல்லுவர். (என்றவாறு)

விளக்கவுரை :

இப்பாடலில் இறைவன் பாவனைக்குரியவன் (மனதில் எண்ணித் தியானிப்பதற்கு உரியவன்) என்பது வலியுறுத்தப்படுகிறது.

இறைவன் உருவமாக இருந்தால் கண்ணால் கண்டு மனதில் இறைவனைத் தியானிப்பதற்கு இயலும் என்பதை துகளில் தியானம் துறவாது என்ற பகுதி குறிப்பிடுகிறது. காணப்பட வேண்டிய உறுதிப்பொருள் காணப்படாததாயின் அச்சம் அவலம் ஏற்படும். இதனை உட்கு ஓடியது என்று கூறப்பெற்றுள்ளது. பாவனைக்கு எட்டாதாயின் - பாவக மாத்திரையாய்ப் பயன்படாது என்பதால் ஆவகை அரிது எனக் கூறப்பட்டது. இதனை "பாவனாதீதம் எனில் பாவகமாம் அன்று என்றிற் பாழதுவாம்" எனச் சிந்தாந்தப் பஃறொடை கூறும் (பாடல். 604) விமலன் - தூய்மையானவன், நிவந்தோன் - நீங்கினோன். தூமனச் சங்கற்பம் - மனத்தில் உண்டாகும் ஆசைத் திரவியங்கள். இதில் இறைவன் ஈடுபடான். பாவாபாவத்து - பாவம் அபாவத்து எனக் கொள்க. பாவனை என்பது மனம் முதலிய கருவி கொண்டு செய்யப்படுதலால் பாவனை ஆயிற்று "பாவகத்தால் பாவிக்க ஒன்னான் என்று பாவிப்பான்" என்கும் சிவப்பிரகாசம். பாடல். 86) முக்காலத்திற்கும் அப்பாற்பட்டவன் என்பதால் காலம் செற்றோன் எனக் கூறப்பட்டது. பிரவிருத்தி - தோற்றம். நிவிருத்தி - போக்குதல், ஆசிரியம் - ஒன்றை அடுத்திருத்தல். அத்துவித பாவனை தானும் அவன் திருவருளினானேலே பெற வேண்டும், தாமே செய்து கோடற்கு அமையாது என்பதால் "அபாவன் என்ற அறைவு வீடா" எனக் கூறப்பெற்றது.

---

## கன்மமல சமத்து சத்திநிபாதம்
## பாடல் . 69

"அந்தமில் அமலன் சத்தி எங்கணும்
நந்தும் நன்னெறி நல்லறிவு எவர்க்கும்
உந்தாது ஒழிதல்என் உரவோர்க்கு அல்லதை
பிறவாகு எனின் அதற்கு இறவா தாரகம்
அனைத்துஎனின் பதங்கள் அலர்கதிர் பங்கயம்
அனைந்து மலர்த்தா இயல்பில் கவற்றின்
உண்டுகொல் உரைசினம் உரைமோ கண்டிசின்
கண்டன மாவலி அற்றாக் கோடி
சத்தி பதிப்பில் சம்பிர தாயம்
தொத்துவது என்பது துகள்அச் சத்தி
எங்கணும் நிறைதலின் எனின்மற்று ஆங்கதற்கு

அறிவுடை உரைஉப சாரத்து அல்கல்
புற்கலன் நித்தன் நிறைந்தோன் அவனை
மிக்க போக்கின் நிற்றோன் என்றும்
இறைபா சத்தை இறுத்தோன் என்றும்
அறையுரை அற்றச் சத்திநி பாத
நிபாதம் என்றது யாவன் ஒருவன்
இடைக்கடிது ஒருபொருள் அடுத்துற வீழின்
வெரீஇ அந்நிலை யொரீஇ வேறிடம்
மருவு மற்றென நிருமலன் பெருவலி
பதிப்ப அறிவன் பவபயம் கதுவ
மதித்தனன் தேசிகன் மலரடி அடையும்
மோக அனந்தர் முயல்வோர்க்கு அமோகன்
சத்தியின் அவனை உணர்த்தன் மற்றது
கருமத்து ஒப்பின் அல்லதை
வருமாறு ஆங்கின்று மதிக்கும் காலே".

இது ஆன்மாக்களிடத்தும் சிவசத்தி வியாபித்திருக்க, எல்லோருக்கும் ஞானம் கிடைத்திலவே காரணம் என் என்று வினவ, கன்ம சமத்துவம் உண்டாகவில்லை என்றால் ஞானம் கிட்டாது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

அந்தமில்லானாகிய பரமசிவனுடைய சத்தி எவ்விடத்தும் வியாபகம் என்றால், உண்மை ஞானம் யாவருக்கும் உண்டாகாது ஒழிதல் என்னைமோ? அறிவுடையோர்க்கு அல்லது உண்டாகாது என்றால் - அச்சத்திக்கு அனுக்கிரக நிக்கிரகங்கள் ஒழியாதிருந்தன ஏன்? (மாணவன் கேட்க)

இத்தகைய வினா இருக்குமாயின் விடை கூறுவாம். சூரிய கிரணங்கள் பக்குவடைந்த தாமரை மொட்டைத்தான் அலர்த்துமே தவிர - பக்குவமையாத தாமரை மொட்டை அலர்த்தாது. அதனால் சூரியனுக்குக் கோபம் என்று கூறலாமோ. இவ்வாறு பரமசிவனின் கண் உள்ள சத்திகளுக்கும் ஆதித்தனின் நிலையே என்று அறிவாயாக. சத்தி பதிவது என்பது குருபரன் அருளால் தீக்கை கூடும் என்பதாகும். அப்படியானால் அதுவும் தவறாகும். ஏனென்றால் சத்தி எல்லாவிடத்தும் வியாபித்திருப்பதால் ( என்று மாணவன் கேட்க)

இதற்கும் விடை கூறுவாம். இவ்வாறு தொன்று தொட்டுக் கூறும் உரை உபசாரமாய் அமைவதாம். எதுபோல என்றால் ஆன்மா நித்தியப் பொருள். ஆனால் அவனை இறந்தான் என்று கூறுகிறோம். மேலும் வியாபியாக இருக்கும் அவனை சொக்காதி போனான் என்கிறோம். மேலும் சிவன் அவிகாரியாக இருந்தும், பாசத் தேசம் பண்ணினோன் என்றும் கூறுகிறோம். இவ்வாறு கூறுவதெல்லாம் உபசார உரையாகும். இதுபோலத்தான் அதுவும்.

இனி சத்திநிபாதம் பற்றிக் கூறுவாம். யாவன் ஒருவன் இருந்த இடத்தில் ஒரு பொருள் கடிதுற வீழ்ந்தால் அது என்னவோ என்று அச்சப்பட்டு, அவ்விடத்தினின்று நீங்கி வேறொரு இடம் மருவுவது போலவே பரமசிவனுடைய பெரிய சத்திநிபாதத்தாலே ஆன்மாவிற்குப் பிறவிப் பயன் ஏற்பட்டதால், அப்பிறவிப் பயம் தீர்த்தற்கு ஞான ஆசிரியனுடைய சீர்பாத கமலத்தைச் சென்றடைவான். சம்சார உறக்கத்தில் வீழ்ந்தோரைச் சத்திநிபாதத்தாலே தன்னை அறிவித்த ஞானம்தான் கன்ம சமத்துவத்தில் வரும். வேறு இடங்களில் தோன்றாது.

விளக்கவுரை :

சிவசத்தி எல்லா இடத்துலும் பரவியிருத்தலால் ஞானமுடையோர்க்கே சத்திநிபாதம் கிடைக்கும் என்பது பொருந்துமோ என வினா எழுப்பி - சூரிய கிரணத்தின் செயலைப் பதிலாகக் கூறிப் பின், சத்திநிபாதத்திற்குத் தொன்று தொட்டு வரும் சம்பிரதாயத்தை வினாவாகக் கூறி, அது உபசார முறை என்னும் பதிலையும் கூறி, சத்தினிபாதம் என்பது பரமசிவன் அருளால் ஆன்மா பிறப்பின் துன்பத்தை உணர்ந்து, ஞானாசிரியனை அடைய, கன்ம சமத்துவம் நிகழ்ந்து சத்திநிபாதம் கிடைக்கிறது என்ற பதிலையும் கூறி விளக்குவதாம்.

அந்தமில் - நித்தியன், அமலன்சத்தி - பரமசிவன் சத்தி, முதல்வன் வியாபகப் பொருள் என்பதால் அவனோடு ஒன்றிய சத்தியும் வியாபகப் பொருள் என்பதைக் குறிக்க "எங்கணும் நந்தும்" என்று கூறப்பெற்றது. தாரகம் - ஆதாரம். இங்கு சத்தியின் குணத்தை நிக்கிரக அனுக்கிரகங்களைக் குறித்தது. பதங்கன் -

சூரியன். பக்குவம் உடையார்க்கே சத்தியின் பதிவுண்டு என்பது சித்தாந்தக் கொள்கை. பக்குவம் - இருவினை ஒப்பு, மலபரிபாகம் ஆகும். இதனை "வல்வினை செல்லாக் காலத்து - ஒல்லென ஒப்ப உயர் பெருஞ் சிவனது சத்திநிபாதம் தழைப்ப" என்று முன்னர் கூறப்பெற்றது. (ஞானா. 8) தொத்துவது – தொகுத்துக் கூறுவது. அல்கல் – சத்திநிபாதம் – சத்தியின் வீழ்ச்சி. இவற்றைச் சிவஞான முனிவர் சிவஞான மாபாடியத்துள் விரித்துரைப்பர். (சூ. 8. அதி. 1) கன்ம சமத்துவத்தில் சத்திநிபாதம் நிகழும் என்பதைத் திருமந்திரம்,

"இருவினை நேரொப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணப்பல நீக்கித்தரும்" (1527)

எனக் கூறும்.

---

## தீக்கை விசேடம்
## பாடல் . 70

"எந்தை ஞானம் இன்மை பந்த
காரணம் என்ன ஆரண வாரி
அருளினை மருளை அடுவது ஞானமென்று
இருதீர் பெய்த இசைத்தோய் தெருளில்
தோற்றம் அசத்துக்கு இல்லை ஆற்றவும்
சத்துக் கேஉள என்னின் பொற்புடை
விருத்தமது அணையும் திருத்தகவு என்றும்
முரண்தரல் எய்வ இரண்டொரு வழியின்
அடையா ஆதபம் சாயை போல
கடாவிடை பொடியாப் புடைபட உயர்ந்த
இந்தனக் குழுவை அடுஉம் செந்தணல்
கூட நின்றும் பீடுதரு உபாயம்
செல்லாக் காலை மெல்லென விளங்கல்
ஒல்லா வல்லழல் போல நல்லோய்
ஞானமும் இன்மையும் நலமிக்கு
ஆனா உயிர்கட்கு உணர்வனை வகையே".

இது தீக்கையாகிய உபாயத்தால் அல்லது ஞானம் இல்லை என்பதைக் கூறுவது.

பொருள் :

எந்தையே வேதக்கடலே! ஞானம் கிட்டாமைக்குப் பந்தம் காரணம் என அருளினை. மேலும் அஞ்ஞானத்தைக் கெடுப்பது ஞானமே என்று மயக்கம் தீரஅருளிச் செய்தீர். அதன்படி அறிவற்ற அசத்தினிடத்தில் ஞானம் தோன்றுவதில்லை. சத்துக்கே ஞானம் தோன்றும் என்றும், முன்பே ஆன்மா சத்தாக இருந்தான் ஆதலினால் அஞ்ஞானமும் இவன் பக்கம் இருந்தது என்பதால் முரண்பாடு ஏற்படுகிறதே. மாறுபாடாக உள்ள இரண்டு ஒரு பொருளில் இருப்பதில்லை. வெயிலும் நிழலும் ஒரு பொருளில் ஒரு நேரத்தில் இருப்பதில்லை அது போல. ஆதலால் இவ்ஐயத்தை நீக்குவீராக. (என மாணவன் கேட்க)

பரந்துயர்ந்த விறகை சிவந்த அக்கினியாவது தூளியாகத் தகிக்கும் தன்மை உடையது. ஆயினும் அந்த விறகில் தீயானது தான் ஒக்க வியாபித்திருந்தும் கடையாதவழி தீ தன்னைத் தோற்றுவிக்காது. அது போல - அமையாத உயிர்கட்கு ஞானமும், அஞ்ஞானமும் நலமிகக் கூட உண்டு என்றாலும் தீக்கை உபாயம் கூடின் அல்லது ஞானம் பிரகாசியாது. (என்றவாறு)

விளக்கவுரை :

உயிர் சத்தும் அசத்துமாக இருப்பது. எனவே ஞானமும் அஞ்ஞானமுமான இரு பொருள் அதனிடத்தில் இருப்பது முரண்பாடாகிறது. இதனை விளக்க விறகு - தீ உவமையைக் காட்டி தீக்கையால் ஞானம் உயிர்க்குக் கிடைக்கும் என்பதை வலியுறுத்துகிறது. ஆரணவாரி - வேதக்கடல். முன்பு 46வது பாடலில் ஞானம் அஞ்ஞானத்தைக் கெடுத்து, வீடு பேற்றுக்குக் காரணமாகும் எனக் கூறப்பெற்றதை "அருளினை" எனக் கூறப்பெற்றது. அசத்தினிடத்தில் ஞானம் தோன்றாது என்பதை "உணர்வது அசத்தாதல் ஒன்று உணராது ஒன்று" என்று சிவஞானபோதம் (சூ. 6, அதி. 2. வெண்பா. 2) குறிப்பிடும்.

விருத்தம் - முரண்பாடு. முரண்படுதலும் பிறபொருள் களோடு இயைந்து நிற்றலுமாகிய இருவகை இயல்புடைமையின் அறிவு அறியாமைகளை "முரண்தரல் இயைப இரண்டாகும்" என்றார். ஆதபம் - வெயில், சாயைநிழல் - இருள் என்றும் பொருள்படும். புடைப்பட உயர்ந்த - பரந்துயர்ந்த, இந்தனம் - விறகு.

தூளி - சாம்பர், கடைதலாய உபாயம் - உபாயம் எனப்பட்டது. கடைதலாய உபாயம் விறகில் உள்ள தீயினை வெளிப்படுத்தி ஒளியையும், வன்மையையும் காட்டும் என்பதால் "பீடு தரு உபாயம்" எனக் கூறப்பெற்றது. "விறகில் தீயினன் பாலில் படு நெய்போல" என்பதும் இது (திருநாவுக்கரசர்). ஞானப் பேற்றுக்குத் தீக்கை இன்றியமையாதது என்பதைச் சிவஞானசித்தியார்,

"அடிசேர் ஞானம் ஆசான் அருளால் வந்திடும்
மற்றொன்றால் வாராதாகும்" (பா. 327)

எனக் குறிப்பிடும். இப்பாட்டின் கருத்தோடு கொடிக்கவி முதற்பாடலை ஒப்பிட்டு நோக்கின் தெளிவுறும்.

---

ஞான அஞ்ஞான விருப்பு
பாடல் . 71

"இரும்பிர தானத்து எழும்மனத் தத்துவம்
பொருந்தாது அப்பிர தானம் மிகுந்துயர்
தத்துவ நெறியில் பொறப்பொடு புணர்தல்
செல்லாது ஒழியத் திகழதிரு தியானம்
நில்லாது என்ன நிழல் அவி மணிகால்
எரியின் ஊங்கு விரிதரல் மாறென
தன்னினும் உயர்ந்த பன்னரும் தத்துவத்து
அன்னது ஆதல் அறிமன் மன்னிய
யோக மாக்கலை உணர்வோர் போகிய
இந்தனத்து எரிபோல் பொங்கிய தத்துவம்
காண்டகு தகுதியர் அம்ம
மாண்டகு தியான மாட்சி யோரே".

இது ஞானமும் அஞ்ஞானமும் ஓரிடத்தில் நிற்குமெனக் கூறப்பெற்றதால் மனத்தத்துவத்திற்கும் மேலான தத்துவங்களிலும் செல்லுமோ என்ற ஐயத்திற்கு அவற்றிலும் செல்லும் என்பதைச் சாதிக்கிறது.

பொருள் :

மனதத்துவத்திற்கு முதலாக விளங்கும் மூலப்பகுதியில் மனத்தத்துவமாகிய அருபம் பொருந்தாது. அந்த மூலப் பகுதியான

பிரகிருதி தத்துவம் தனக்கு மேலான சுத்த தத்துவத்திற்கும் அதன் உச்சிக் கண்ணதாகிய சிவத்துவத்திற்கும் செல்லமுடியாது. எனவே பிரகாசமான தியானம் கூடாதே. (என மாணவன் கேட்க)

சூரிய காந்தக் கல்லில் உண்டான தீ, சூரியனைக் காணத் தோன்றினாற் போல மனத்தத்துமும். தனக்கு மேலான தத்துவங்களில் பிரகாசம் அடையும். ஆதலால் தியானம் கைகூடும். ஆகமங்களை நன்கு உணர்ந்தோராகிய ஞானவான்கள் தியானத்தைக் கொள்ளும்போது விறகில் தீ போல, விந்து ஞானங்களை மனத்தத்துவத்திலே தியானித்துக் காண்பர். (என்றவாறு).

விளக்கவுரை :

இதில் மூலப்பகுதியில் இருந்து குணத்தத்துவமும், அதிலிருந்து புத்தியும், அதனின்று ஆங்காரமும், அதனின்று மனமும் தோன்றும் என்பதும், மனம் தோன்றுவதற்கு முதல் மூலப்பகுதி என்று கொண்டு அதில் மனத்தத்துவம் பொருந்தாதே. அதனால் தியானம் கைகூடாதே என்ற ஐயத்தை எழுப்பி, சூரியன் முன் காந்தக்கல்லில் தீ தோன்றுவது போல, மனத்தத்துவமும் மேலான தத்துவங்களின் முன் தோன்றும். அதனால் தியானம் கைகூடும் என்பதனை விளக்குகிறது.

பிரதானம் - மூலப்பிரகிருதித் தத்துவம், மணிசால் - சூரியகாந்தக் கல்லை உணர்த்திற்று. ஆதித்தனைக் கண்ட அளவில் அந்தக்கல் தீயை உமிழும் என்பதை

"சூரியகாந்தக் கல்லினிடத்தே செய்ய சுடர் தோன்றிடச்
சோதி தோன்றுமா போல்" (பாடல். 280)

எனச் சிவஞான சித்தியார் கூறும். யோகமாக்கலை - யோகத்தைக் கூறும் ஆகமம். சூரியன் திருமுன் சூரியகாந்தக்கல் கனன்று ஒளி விளங்கித் தோன்றுமாதலின் ஞானம் கைகூடும் என்பது உவமையால் பெறப்படுகிறது. மாண்தகு தியானம் என்பதால் - மனமே தியானத்திற்குக் கருவி என்பதும், அத்தியானத்தின் கண்ணே விந்து நாதங்களைக் கண்டு இன்புறுவது தியானத்தின் பயன் என்பதும் பெற்றாம்.

ஞானபாதச் சிறப்பு
பாடல் . 72

“கழிபெருந் துன்பம் கஞல வழிவழி
ஓவாச் செய்தித் தாவா நோன்பின்
அவர்க்கே மிக்க தகைப்பரும் பலம்எனின்
கல்தாங்கு ணர்க்கு கழிகவின் துதைந்த
எற்படு மணிதாங் குநரின் பொற்பொடு
வருபலம் வருஉம் பொருவிரி வன்சிலை
தாங்குநர் மிகவும் தளர்தலொடு ஓம்பிய
உயிருடல் உடைதல் அடைய கடிபயில்
பலமோ பகரின் நலமோ இன்றே
மோதிரம் அணைந்த தீதரு திருமணி
தாங்கும் காலும் ஓங்கிய அணியாய்
உளமலி உவகை யாமீக் கூர்ந்தன்
தரும்பொருள் பயக்கும் காலை திருந்திய
கோடி எல்லை கூடாது ஆடியல்
அந்த ரங்கம் புறவங் கத்தின்
மைந்து அமல்பு எய்தும் வெந்திறல் நிருபர்
அகத்துறை பவரே புறத்துரை பவரில்
போகம் மேவுதல் ஆவார் காண்டிகும்
அற்றோ ஆடவர் அரிவையர் தம்மின்
மிக்க அந்தரங் கத்தவர் பெற்ற
இன்பமும் உரையில அதனால்
அந்த ரங்கமன் மைந்துபு - அமல்பு அறியே”.

இது நால்வகை பாதங்களில் ஞானபாதம் சிறந்தது என்பதை வலியுறுத்துகிறது.

பொருள் :

அளவில்லாத துக்கங்கள் அகல, மேன்மேலும் ஒழியாது சரியை, கிரியை யோகங்களைச் செய்து தவத்தை உடையோர்க்குத் தடுத்தற்கரிய பலனாகிய முத்தி சித்திக்கும் என்றால் –

கருங்கல்லைச் சுமந்தோர்க்கு அக்கல்லிலிருந்து பிறந்த மாணிக்கக் கல்லும், கல்லான் தன்மை ஒத்தலால் அம்மாணிக்கம்

அவர்களுக்கே பயன்பட வேண்டும் அல்லவோ. இவ்வுவமை பொருந்தாது. ஏனென்றால் அவ்வலிய கல்லைச் சுமந்தோர் மிகவும் இளைப்பதோடு உயிர் உடலைவிட்டு நீங்கவும் பெறுவர். பயனைச் சொன்னால் எவ்வித நன்மையும் கிடைப்பதில்லை.

அழகிய மாணிக்கத்தை மோதிரமாகக் கொண்டு அணியாக அணிந்தால் அதனால் உள்ளத்தே உண்டாகிய மகிழ்வு புறத்தே விளங்கும். அதனுடைய பலத்தை இத்தகைய கோடிப் பொன் என்று நிச்சயிக்கமுடியாது. அதுபோலப் புறக்கரணத்தால் சரியை, கிரியை யோகம் என்னும் நெறியின் நின்றவரினும் வெற்றி உடையவராய் இருக்கின்ற, உட்கரணத்தால் பதி, பசு, பாசங்களின் உண்மையை உணர்ந்து ஞான அறிவினால் சிவத்தை வழிபடும் ஞானவான்கள் பெறுவதாகிய சக்தி அதிகம்.

அரசர்கள் இருக்குமிடத்தில் உறையும் மந்திரிகள், புறத்தே உலாவும் மந்திரிகளைக் காட்டிலும் அனுபோகம் அதிகம் அனுபவிப்பர். அதுபோல அந்தரங்கத்தே இருக்கின்ற நாயகனும் நாயகியும் தம்மில் கூடிப்பெற்ற இன்பம் வரையறை அற்றது ஆதலால் ஞானிகள் அந்தரங்கத்தில் பெற்ற அனுபோகம் வலியுடைத்தாகிய மோட்ச சித்தியாகும். (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் புற உறுப்புக்களால் சரியை, கிரியை, யோகங்களைச் செய்தவர்கள் பெறுகின்ற முத்தியைக் காட்டிலும், உணர்வில் அகவழிபட்டு ஞானம் பெற்றோர்க்கே மோட்ச சித்தி அதிகம் என்பது உவமைகளால் விளக்கப்படுகிறது. புறநிலையில் செய்யப்படுகின்ற சரியை, கிரியைகள் அத்துணை சிறப்பைத் தாராது என்பதற்குக் கல்லைச் சுமந்தவன் உவமையாக்கப் படுகிறான். கருங்கல்லைச் சுமந்தவன் அக்கல்லிலிருந்து உருவாகின்ற மாணிக்கக்கல்லுக்கு உரியவனாக வேண்டும். அவ்வாறு ஆவதில்லை. அதுபோலத்தான் புறச்செயல் வீட்டைத் தாராது.

ஆனால் உள்ளத்தில் தியானம் செய்வது ஞானத்தைத் தரும் என்பதற்கு மோதிரம் அணிந்தோர் கூறப்படுகின்றனர். வெளியே விரலில் கல்வைத்த மோதிரத்தை அணிந்தவர்கள் மனதால் பெரிதும் மகிழ்ச்சி அடைவர். அந்த மகிழ்ச்சி மோதிரத்தில் வைக்கப்பெற்ற மாணிக்கக் கல்லைவிட எத்தனை கோடிப்பொன் என்று நிச்சயிக்க முடியாத அளவு சிறப்புடையது.

மேலும் புறச் சரியை, கிரியைகளில் நின்றவர்களைக் காட்டிலும் உட்கரணத்தால் பதி, பசு, பாசங்களின் உண்மையை உணர்ந்து புறக்கரணங்களை வலுவிழக்கச் செய்து சிவத்தை வழிபடும் ஞானவான்கள் அதிகமான சிவசத்தியைப் பெறுவர். எதுபோல என்றால் ஓர் அரசன் புறமந்திரிகள் பெறுவதைவிட அக மந்திரிகள் பெறும் சுகஅனுபவம் அதிகமாகும். நோன்பு - தவம், அழகுபெற்ற ஒளி பொருந்திய கல்லில் மாணிக்கம் தோன்றும். இதனைச் சீவகசிந்தாமணியும், "கற்பால் உமிழ்ந்த மணி" என்று குறிப்பிடும். (பா. 4) உடல் உடைதல் - இறப்பு, மணிகள் போன்றவற்றை மோதிரத்தில் வைக்கும்போது குறை நீங்க வைக்கவேண்டும் என்பதால் தீதறு திருமணி எனப்பட்டது. புறஅங்கம் - புறக்கரணங்கள்.

---

## 4. பாசமோசனம் - அத்துவித பதித்துவம்

### பாடல் . 73

"உள்ள முதலிய உருபகை உடற்றி
தெள்ளுநர்க்கு அல்லதைத் தெளிவரும்சிவனைத்
தெளிந்தோர் செய்தி சினம்செலச் சிதைத்து
வல்வினை கெடுக்கு நல்வினை யாளர்
அருளல் வேண்டுவல் அத்த மருள்கெட
நாவொடு நவிலா கேள்வித்துறை போகிய
தேவ தேவனைச் சேர்ந்தவர் அவனை
ஆவகை அல்லது உளதோ மோதும்
முறிதிரை முந்நீர் விரிதரு காயல்
வித்தாது விளைத்த வெண்திரள் பழனத்து
உற்றவை எவனோ உரவ துப்புவளர்
உவரி உற்ற தீநீர் அல்லதை
கவர்பும் உண்டோ கற்றோய் கவர்புக
மண்புனை மதில்பெய் தொன்சிறை பரப்பி
ஊதுவண்டு உணர்ந்த பேதை வான்புழு
மாதர் வண்டு ஆவதை அறிதி கோதற்ற
அமலனை ஆசற உணர்ந்த
அமலர் செய்தியும் அற்றான் மற்றே".

இது பதி உண்மை உணர்ந்த ஞானவான்களின் இயல்பினைக் கூறுவதாகும்.

பொருள் :

கோபத்தைத் துறந்து, கன்ம சேதம் செய்யும் தீக்கை உடையவனாகிய என் தலைவனே! சித்து முதலிய கரணங்களும், காமம் முதலிய குற்றங்களுமாகிய பகையை அறக்கெடுத்து தெளிந்த ஞானத்தை உடையோர்க்கு அல்லது அறிதற்கு அரிய பரமசிவனின் உண்மையை அறிந்தோராம் ஞானவான்களின் பெருமையை அருளிச் செய்வீராக.

நாவொடு நவிலாத கேள்வித் துறைக்கு அகப்படாத பரமசிவனை, அஞ்ஞானம் கெடச் சிறந்தவர், சிவத்துவம் தவிர வேறு பெறுவதில்லை. எதுபோல என்றால் –

கரையில் வந்து மோதுகின்ற அலைகளை உடைய கடலைச் சார்ந்த உப்பங்கழியில் விதைத்திடாது விளைந்த, உப்பு விளையும் உப்பங்கழியில் பட்டவை எல்லாம் உப்பாவது அல்லது வேறு உண்டோ.

பவளக்கொடி படர்ந்த கடலில் வந்த சேர்ந்த இனிய தண்ணீர் உப்புச் சுவை அடையுமாறு அல்லது வேறு சுவை உடைத்தாதல் உண்டோ. இல்லை. மண்ணால் செய்யப்பட்ட கூட்டிலே அடைத்த அறிவில்லாத புழுவானது குளவியையே நினைத்து அக்குளவியாக மாறுவதை அறிவாயாக. ஆதலால் குற்றமில்லாத பரமசிவனை ஐயமற உணர்ந்த ஞானவான்களின் இயல்பும் அச்சிவமாம் தன்மையல்லது வேறுபாடு அடையாது. (என்றவாறு).

விளக்கவுரை :

இப்பாடலில் சிவமாம் தன்மை எய்தும் திறத்தை விளக்குவதற்கு உப்பளத்துப் பட்டவை உப்பாதலும், கடலில் சேர்ந்த நன்னீர் உப்பாதலும், புழு வேட்டுவன் (குளவி) ஆதலும் ஆகிய மூன்று உவமைகள் கூறப்பட்டன. உப்பளத்துப் பட்ட சிறுமணல் தனது இயல்பு கெடாது உப்பாதல் போல உயிர் சிவமாம் தன்மை எய்திய வழி தான் சத்தாய் நிற்கும். நல்லநீர் தன்மை இழந்து உப்புநீர் ஆனதுபோல உயிர் அறிவின் சிறுமை நீங்கிச் சிவத்தின் பேரறிவு கொள்ளும். புழு தன் வடிவை நீங்கிக் குளவி ஆனாற் போலச் சிவானந்தம் துய்க்கும் உயிரும் ஞானவடிவம் பெறும் எனக் கூறப்பெற்றுள்ளது.

வினைகெடுத்தல் - ஆன்மச்சேதம் பண்ணுதல், மருள் - அஞ்ஞானம், சிவத்துவம் - சிவானந்த ஞானவடிவம், காயல் - உப்பங்கழி, உப்புவிளைவதை வித்தாது விளைத்தவெண்திறல் என்று உப்பு சிறப்பிக்கப் பெற்றுள்ளது. நன்னீர் உப்பு நீராவதை "அமலன் அப்பணைந்த உப்பே போல் அணைந்து" என்று சிவஞான சித்தியார் கூறும். (பா. 321) புழு குளவியாவதை "வேட்டுவனாம் அப்புழுப்போல் வேண்டுருவைத் தான் கொடுத்துக் கூட்டானேன்" என்று சிவஞானபோதம் குறிப்பிடும். (சூ. 1. அதிகரணம். 2. பாடல். 4)

---

## அணையும் தன்மை
## பாடல் . 74

"பசுபதி ஆகப் பண்ணிய பனுவன்
மதியோர் பெரும வாயன்றது எனின்
ஒன்றொன்று ஆயின் அல்லதை இரண்டொன்று
ஒன்றும் ஆகாது வெண்ணில் ஆவது
கெட்டது ஆதல் அதுவாய்க் கெடலலது
ஒட்டுவது இவணோ இன்றே கெட்டது
ஆதல் தானே அமரர்க்கு ஆயினும்
மேவாது ஆகும் அதுவாய்க் கெடுமெனின்
ஆகிய பின்னர் கெடுவது யாதுஎன்று
ஏவிய கடாவுக்கு இடையீடு ஆவது
அழிந்தாய்ந்து அன்றுஆய் அழிந்ததும் அன்றே
மொழிந்தவை இரண்டும் ஓராமை யத்தே
எழுந்தது யாவகை எண்ணின் செழுந்திரள்
காரிருள் இரிய நூறிக் கனல்வாள்
ஏரொழி விளக்கம் எய்திற்று அன்றாஅங்கு
எய்திய பின்னர் இருளற விரித்த
செய்தி செப்பின் இல்லை மையறத்
தெளிமதி இவணம் சிவணியது அளிகிளர்
தடவுநிலைப் புண்ணை மடலவிழ் வாசம்
புலவுக்கடல் அதற்றும் கானல் அலவன்
வன்பெடை தழீஇ இன்புறு காயல்
உப்புவிளை பழனத்து உற்ற பொற்கோட்டு
உலவையின் அறிக மாதோ
கலவ லாளர் நிலைபுணர் பண்பே".

இது தேவதேவனைச் சேர்ந்தவர்கள் பசுத்துவம் போவதையும் பதித்துவம் ஆவதையும் ஒரே காலத்தில் பெறுவர் என்று கூறுகிறது.

பொருள் :

மதியோர் பெரும! பசுத்துவமான ஆன்மா பதியாம் என்று சாதித்த சாஸ்திரம் பொருந்துவதாகத் தெரியவில்லை.

ஒரு ஆன்மா முன்னே பதித்துவம் உடைத்தாயினல்லது அல்லது அசுத்தமான அவ் ஆன்மா சுத்தமான பதியாம் என்னும் நிலை எக்காலத்தும் பொருந்தாது. மேலும் பசுத்துவம் கெட்டுப் பதியாகுதல், பதியாகிப் பின்பு பசுத்துவம் கெட்டதாக ஆகும். இவ்விடத்தில் கூறிய பொருள் பொருந்துவதாயில்லை.

மேலும் யாதொரு பொருள் கெட்டாலும் பின்னே நல்லது ஆதல் தேவர்களே முயன்றாலும் முடியாது. பதியாகிப் பின்பு பசுத்துவம் கெடும் எனில் பதியான பின்பு கெடும் அது யாதாகும்? இத்தகைய வினாக்களுக்கு விடை கூறுவீராக.

பசுத்துவம் கெட்டுப் பின்பு பதித்துவம் ஆவது இல்லை. பதித்துவம் ஆகிப் பின்பு பசுத்துவம் கெட்டதும் இல்லை. சொல்லப்பட்ட இரண்டும் ஒரே காலத்தில் நடப்பதாகும். அஃது எவ்வாறு என்றால் –

பெரிய இருளைப் போக்கி பின்பு மிக்க ஒளியை உடைய விளக்கு பிரகாசிப்பதில்லை. அல்லது விளக்கு புகுந்த பின்பு இருளை அறவே போக்கின செய்தியும் இல்லை. (விளக்கு புகும் போதே இருளும் அகலும்) இந்த முறையில் பதித்துவம் பெறுதலும் பசுத்துவம் போதலும் குற்றமற உணர்தல் வேண்டும்.

வண்டுகள் ஒலிக்கின்ற புன்னைப் பூவின் இதழ் விரிந்து நறுநாற்றம் வீசிக் கடலில் உண்டாகிய புலால் நாற்றத்தைக் கெடுக்கும் கானச்சோலையில் தன் பெடையோடு கூடி வண்டு போகம் புசிக்கும் சிறப்பினை உடைய உப்பங்கழியில் உப்பு விளைவிக்கும் பாத்தியில் விழுந்த அழகிய மலர்க்கொம்பு வடிவு வேறுபடாது உப்பாகினாற்போல – ஞானவான்கள் தங்கள் வடிவோடு பதித்துவம் பெறுவார்கள். இதனை அறிவாயாக. (என்றவாறு).

விளக்கவுரை :

பாசநீக்கமும் (பசுத்துவம்) , அருள் விளக்கமும் (பதித்தத்துவம்) உடன் நிகழப் பெற்ற முத்தர்கள் ஞானவான்க்ள்

ஆவார்கள். அவர்கள் வடிவு வேறுபடாதே சிவஞானச் செல்வராய் சிவமாம் தன்மை எய்துவார்கள் என்பதை உவமைகள் மூலமாக இப்பாடல் விளக்குகிறது.

வாயன்று - பொருந்துவதன்று. ஒன்றாய் இருப்பதொரு பொருள் தன்னுள் பிரிந்து மறுபடியும் கூடின் ஒன்றாம். ஒன்றின் ஒன்று வேறாய் இரண்டாய் இருப்பவை, தம்மில் கூடினும் ஒன்றாவதில்லை என்பது. ஒன்றி ஒன்றாயினல்லது இரண்டு ஒன்று என்றும் ஆகாது என்பதால் பெறப்படுகிறது. இதன் விளக்கம்.

ஆன்மாவும் சிவமும் ஒன்றாய் இருந்து, பின்னர் ஆன்மா, சிவம் என்று பிரிந்து நின்று, மீண்டும் அப்பிரிவு நீங்கிக் கூடின் ஒன்றாக அமையும். ஆனால் சிவனும் ஆன்மாவும் என இரண்டாய் அநாதியாய் இருப்பன ஆதலின் இவை ஒன்றாகக் கூடாதே என்பது இங்கு எழுப்பப்பட்ட வினா. இது மாயாவாதிகளின் வினாவாகும். இருள் நீக்கமும் ஒளி விளக்கமும் உடன் நிகழ்ச்சி ஆமாறு போலப் பசுத்துவ நீக்கமும், சிவத்துவ விளக்கமும் இடையீடு இன்றி உடன் நிகழ்வதுவாம் என்பதைச் சிவஞான முனிவர் குறிப்பிடுவார். (சிவஞான மாபாடியம். சூ. 11). இதனையே சிவஞான சித்தியாரும் 11 ஆம் சூத்திரத்தில் குறிப்பிடும்.

---

## அணைந்தோர் தன்மை
## பாடல் . 75

"ஆறாக் கூறிய அத்துவா அமற்
ஈறோடு இயையா இறைவற்கு இயையா
சேதனற் செரியா வியாபகத்து உறழ்தனின்
என்னிற் புற்கலற்கு எய்தும் பன்னிய
பாசம் பசுவுக்கு ஆசில் வான்பிணி
அந்தப் பந்தஞ் சம்பிர தாயத்து
உந்தியே பெறு முறைமையின் உந்திய
காசினி யாதி ஆசில் தத்துவம்
போக பூமி யாக அமர்ந்தோர்க்கு
அற்றா கலின்மற் றதுமுத லாக
பற்றும் பற்றறுத்து அதனூங்கு உற்ற
உம்பர் உம்பரின் உய்த்து வம்பரு
சிவனிடத்து இலயம் செய்க செய்தல்
அவமில் போக்குஆங்கு அதுமற்று அவண்எனில்

சுற்பம் பூரி சந்திரம் பொருவல்
எற்று அற்று இறையுறல் இவனுமற்று
தருமா தருமம் தாமும் வரிமடி
வருண முதலிய பொருணனி புரக்கும்
உயர்ந்தோர் என்றல் வியந்தினது எங்கணும்
நின்ற இறைக்கு நினைமோ விறகின்
எங்கணும் ஆயினும் இகல்மேல் அல்லதை
அங்குளரி காணா வாறும் பொங்கிய
குணத்தின் மிக்கோன் குழுவில் உயர்ந்தோன்
எனத்தகும் உரையினும் இயையும் அனைத்தால்
ஆய காலை அத்துவாவா
மேய மாநெறி அயையமற்று இ.:.து."

இது அணைந்தோரின் தன்மையை விளக்குகிறது.

பொருள் :

பசு, பதித்துவம் பெறுதலால் அநாதியான பரமசிவனுக்கு ஜடத்துவாக்களால் உபகாரம் இல்லை. ஆன்மாவும் வியாபக உடைமையால் அவனுக்கு உபகாரம் இல்லை. எனவே இது ஏன்?

சொல்லப்பட்ட பாசமானது ஆன்மாக்களுக்கப் பற்றுக்கோடு ஆகாத பெரிய பந்தமாகும். அந்தப் பந்தம் தீக்கையால் சேதித்து, முற்றிய பெரும் முறைமையால் மலபரிபாகம் ஏற்படுகிறது. அதனால் சிவஞானம் உண்டாகிறது. எவ்வாறு என்றால் முன்னர் கூறப்பட்ட பிருதிவி தத்துவம் முதலாக உள்ள குற்றமற்ற தத்துவங்கள் உடம்பெடுத்தோர்க்குப் போகம் புசித்தோர்க்கு இடமாகும். ஆதலால் பிருதிவி தத்துவம் முதலாகத் தத்துவங்கள் தோறும் போகம் புசித்து அதற்கு அடைந்த கன்மங்களை அனுபவித்து, பாவித்து, சேதித்து மேன்மேலும் ஏற்படுகின்ற தத்துவங்களில் ஆன்மாவைச் செலுத்தி உவமையில்லாத பரமசிவனை ஒத்து நின்மலனாக விளங்க வேண்டும். இதுவே பாசச்சேதமாம்.

இத்தகைய இடத்தில் தீக்கை எவ்வண்ணம் என்றால் செம்பினது குளிகையிலே வேதிக்க பொன்னாகியது எத்தன்மைத்தோ அத்தன்மைத்தே தீக்கையால் சிவத்துவம் அடைந்தது.

மேலும் புடவை போன்ற பொருள்கள் வேற்று வண்ணம் பற்றினால் தன் நிறம் கெட்டு அவ்வேற்று வண்ணம் பெறும் தன்மைத்துமாகும். இவ்வாறு பதித்துவம் பெற்ற ஞானவான்களும்,

பரமசிவனும் சர்வ வியாபகமாக இருந்தாலும் பரமசிவனை மட்டும் உயர்ந்தோன் என்று கூறுதலை அறிதல் வேண்டும்.

விறகின் முழுவதும் அக்கினி வியாபித்து இருந்தாலும் விறகின் மேலல்லது அக்கினி பிரகாசிக்காது. எனவே குணத்தால் மிக்கோனை, இறைவனை, உயர்ந்தோன் எனக் கூறுவது பொருந்தும். இத்தகைய நிலையைத் தருவது தீக்கை என அறிய வேண்டும். அத்தன்மையான இடத்து அத்துவா மார்க்கமாகப் பொருந்திய தீட்சைக்கும் முறைமை இதுவாகும்.

விளக்கவுரை :

இறைவனிடத்தில் ஆறாகக் கூறிய அத்துவா இயையாது என்பது இறைவனின் குணமாகும். அத்துவா ஆறாவன : வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்பனவாம். இவை ஒவ்வொன்றாகக் கழித்துக்கொண்டு சிவபதத்தில் சேர்தற்கு வழியாதலின் அத்துவா எனப்பட்டன. இந்த அத்துவாக்கள் ஜடசத்துவாக இருப்பதால் இறைவனுக்கு உபகாரமில்லை. ஆன்மாவுக்கு இவை தேவை.

பாசம் பற்றுக்கோடு ஆகாது. அது வான்பிணியாகும் என்று கூறியிருப்பது பசுவின் இலக்கணமாகும். சம்பிரதாயம் - ஈண்டு தீக்கையைக் குறிக்கிறது. கலை முதலாய ஐந்தில் (நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை) ஆன்மா தேகம் எடுத்து, ஆங்காங்குள்ள புவனங்களில் போகம் புசித்தாகப் பாவித்து முடிவில் சிவாந்தன்மை எய்தும் நிலையில் அதனை எய்தியதாகப் பாவித்துச் செய்யும் கிரியை வகை தீக்கையாகும். தீக்கடை கொண்டு கடையுமிடத்துக் கடையப்படும் இடத்தில் அல்லது பிறவிடத்து தீப்பிறவாமையின் இகல் மேல் அல்லதை அங்கு எரிகாணாவாறும் என்று கூறப்பெற்றது. முத்தான் மாக்களின் நடுவில் முத்திநிலையில் இறைவன் தலைவன் ஆவான் என்பது - " குருவின் உயர்ந்தோன்" என்பதால் அறிவுறுத்தப் பெறுகிறது.

ஞானாமிர்த மூலமும் விளக்கவுரையும்
முற்றும்.

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பக்க எண் |
|---|---|
| அடையான் | 135 |
| அத்தமில் | 153 |
| அயிலறி | 81 |
| அரும்பவிழ் | 92 |
| அருளும் அறி | 6 |
| அழுக்காறு | 74 |
| அறப்பயன் | 85 |
| ஆதிஓதிய | 46 |
| ஆதிதைவிக | 60 |
| ஆருயிர் | 43 |
| ஆறாக் | 166 |
| இசைத்த | 58 |
| இந்திய | 37 |
| இருந்துயர் | 62 |
| இரும்பிர | 158 |
| இலங்கு | 65 |
| இறைசிவன் | 132 |
| இன்ன | 119 |
| ஈரறிவு | 107 |
| உரைசால் | 8 |
| உள்ளம் | 162 |
| உழிதரல் | 21 |
| எந்தை | 156 |
| எல்லா | 126 |
| எற்பு | 105 |
| ஏணி | 130 |
| ஐம்புல | 69 |
| ஒருவன் | 76 |
| கண்ணுதல் | 12 |
| கருமம் | 68 |
| கரைகாண் | 98 |
| கலை | 19 |
| கலைநவில் | 45 |
| கலைநிலவு | 142 |
| கழிபெருந் | 160 |
| கறையணல் | 75 |
| காரணம் | 18 |
| காரியம் | 23 |

| | பக்க எண் |
|---|---|
| கால்கொடுத்து | 32 |
| சகளம் | 151 |
| தந்துமுதல் | 50 |
| தமனியம் | 27 |
| திங்கள் | 4 |
| திருவின் | 112 |
| தேனுடன் | 72 |
| தொல்லை | 79 |
| நஞ்சு | 102 |
| நஞ்சுஇனிது | 84 |
| நஞ்சே | 104 |
| நார | 138 |
| நெஞ்சு | 71 |
| பசுபதி | 164 |
| படியடி | 117 |
| பதிபசு | 109 |
| பதியளவு | 123 |
| பழவினை | 88 |
| பனுவல் | 77 |
| பிறழா | 14 |
| பூக்கமழ் | 97 |
| பூபூத | 121 |
| பொய்ப்பொறி | 55 |
| பொன்னினும் | 24 |
| மந்தர | 10 |
| மறைமுறை | 90 |
| மாதவ | 30 |
| மேவின் | 145 |
| யானே | 39 |
| யாணர்க் | 149 |
| வாகை | 101 |
| வாழிய | 114 |
| விந்து | 127 |
| விரிகதிர் | 5 |
| வையுள் | 82 |
| வெருவரும் | 23 |
| வெண்திரை | 2 |

உ
சிவமயம்

## ஸ்ரீ அகோர சிவாச்சார்ய டிரஸ்ட்


கௌரவத்தலைவர்: சிவஸ்ரீ கி. பிச்சை சிவாச்சாரியார் பிள்ளையார்பட்டி.
கௌரவத்தலைவர்: சிவஸ்ரீ க. ராஜா சிவாச்சாரியார் திருப்பரங்குன்றம்.
தலைவர் : சிவஸ்ரீ ரா. கங்காதர சிவாச்சாரியார் சென்னை.
செயலாளர் : சிவஸ்ரீ தெ. ராஜேஷ் (எ) சோமசுப்ரம்மண்ய சிவாச்சாரியார் மானாமதுரை.
பொருளாளர் : சிவஸ்ரீ க. கல்யாணசுந்தர சிவாச்சாரியார் சென்னை.
ஆலோசகர் : சிவஸ்ரீ இராம. முத்துச்சாமி சிவாச்சாரியார் திருமலை.
ஆலோசகர் : சிவஸ்ரீ அ.ம.அருணாசல சிவாச்சாரியார் பாதூர்.
ஆலோசகர் : சிவஸ்ரீ சே. அருணசுந்தர சிவாச்சாரியார் சென்னை.
ஆலோசகர் : சிவஸ்ரீ ந. கல்யாணராம சிவாச்சாரியார் விருத்தாசலம்.
ஆலோசகர் : சிவஸ்ரீ ரவிசுவாமிநாத சிவாச்சாரியார் மயிலாடுதுறை.
ஆலோசகர் : சிவஸ்ரீ பாலகணபதி சிவாச்சாரியார் தென்சேரிமலை.
உறுப்பினர் : சிவஸ்ரீ ரா. குமாரசாமி சிவாச்சாரியார் மதுரை.
உறுப்பினர் : சிவஸ்ரீ போடிகணேசசிவாச்சாரியார்பிள்ளையார்பட்டி.
உறுப்பினர் : சிவஸ்ரீ கோமதிசங்கர சிவாச்சாரியார் திருநெல்வேலி.
உறுப்பினர் : சிவஸ்ரீ வெங்கடேச சிவாச்சாரியார் திருப்பனந்தாள்.
உறுப்பினர் : சிவஸ்ரீபா.உமாபதிசிவாச்சாரியார்திருக்காட்டுப்பள்ளி.
உறுப்பினர் : சிவஸ்ரீ பா. சந்திரசேகரசிவாச்சாரியார்திருநெல்வேலி.
உறுப்பினர் : திருமதி அருணா சிவமூர்த்தி சென்னை.
உறுப்பினர் : சிவஸ்ரீரா. பரணீதரசிவாச்சாரியார்மத்தூர்.
உறுப்பினர் : சிவஸ்ரீஅ.பாலசுப்ரமண்யசிவாச்சாரியார்வில்லியனூர்.
உறுதுணையாளர் : ரா. செல்வகுமார் சிங்கப்பூர்.
உறுதுணையாளர் : ச. சபரிகிரி சிங்கப்பூர்.
உறுதுணையாளர் : லேரிப் பிரசாத் அமெரிக்கா.
உறுதுணையாளர் : ந. ஸ்ரீஸ் கந்தராஜா லண்டன்.
புரவலர் : சிவஸ்ரீ க. கார்த்திகேய சிவம் சென்னை.


### சங்கத்தின் முக்கிய கொள்கைகள்

1. சைவ சமய சாத்திர நூல்களை வெளியிடுதல். 2. கிடைத்தற்கு அரிதான சிவாகம நூல்கள் மற்றும் ஓலைச் சுவடிகளை நூல்வடிவில் வெளியிடுதல். 3. சிவாகம நூல் நிலையம் அமைத்தல். 4. சிவாகமம், வேதம், சைவ சித்தாந்தம், ஜோதிடம், சங்கீதம், நாதஸ்வரம், தவில், சொற்பொழிவு இவைகளில் சிறந்து விளங்கும் அறிஞர்களை கௌரவித்தல். 5. வேதசிவாகம கல்வி நிலையம் அமைத்தல் 6. சிவாலய திருப்பணி செய்தல் 7. வசதியற்ற குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அமைத்தல். 8. சிவாகமக் கருத்தரங்கு நடத்துதல் 9. சிவாகமங்களில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் 10. இலவச மருத்துவ முகாம்கள் நடத்துதல்.

Sree Vinayaga,Mdu-10.Ph:600300